உ


காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில்

# ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்



# சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர்

10.01.2006



திரு. பொ. சண்முகநாதன் அவர்களுக்கு அன்பளிப்பு
க. வைத்தீஸ்வரக் குருக்கள்

உ
சிவமயம்

க. வைத்தீஸ்வரக் குருக்கள்
காரைநகர்

### காரைநகர் திண்ணபுரம்

## ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்



# சிறப்புத்தேர் வெள்ளோட்ட மலர்

## 10.01.2006

உ
சிவமயம்





## கூத்தப் பிரான் திருவடிகளுக்கு இம்மலர்

# சமர்ப்பணம்

# ஈழத்துச் சிதம்பர ஆனந்தக் கூத்தன்

ஈழத்துச் சிதம்பரம் என்னுஞ்சிறப்புப் பெயருக்குக் காரணமான ஆடல் வல்லான் ஆனந்தக் கூத்தன்கலையழகு மிளிர்வது அவன் திருவுருவம். இம் மூர்த்தியின் திருவாசியில் ஐம்பத்தொருசுடர்கள் இருப்பது தனிச்சிறப்பாகும். இவை ஐம்பத்தொரு அட்சரங்களைக் குறிப்பதாகக் கூறுவார்கள். தமிழ் நாட்டுப் பேரறிஞர்களான அமுத மொழிக் கொண்டல் திருமுருக கிருபானந்தவாரியார், சித்தாந்தச் செல்வர் க. வச்சிரவேலு முதலியார், செஞ்சொற் கொண்டல் வித்துவான், சிங்காரவேலன் முதலானோர் இம்மூர்த்தியின் அழகை வாயாரப் போற்றியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள சகல ஆலயங்களுக்குஞ் சென்று அவை பற்றிய வரலாறுகளை இனிய தமிழில் வேங்கடம் முதல் குமரி வரை என்ற தலைப்பில் வெளியிட்ட பேரறிஞர் திரு. தொ. பாஸ்கரத்தொண்டமான் அவர்கள் இம்மூர்த்தியின்சிறப்பைக் கேள்விப்பட்டு தரிசனஞ் செய்வதற்காகவே தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்தார். "தமிழ் நாட்டிலேயே ஒரு சில இடங்களில் தான் இத்தகைய, அழகிய – பதஞ்சலி வியாக்கிரபாதரோடு கூடிய மூர்த்தியைக் கண்டிருக்கிறேன். இவ்விதமான ஆனந்தக் கூத்தனின் ஆலயத்தைப் பெற்ற இவ்வூர் மக்கள், ஏன் ஈழத்திலுள்ள பெருமக்கள் அனைவருமே பெரும் பாக்கியசாலிகள்" என்று கூறிச் சென்றதை இப்பொழுது நினைவு கூர்தல் பொருத்தமானதே.

திருவாவடுதுறை ஆதினம் 23வது குருமகாசன்னிதானம் 26–08–2003 ஈழத்துச் சிதம்பரம் எழுந்தருளி அருள்மிகு ஆடல்வல்லான் அருட்கோலம் கண்டு வழிபாடு செய்தார்கள். இத்திருக்கோயிலில் நடராஜப் பெருமான் திருமுடி திரி சடையாக அல்லாமல் உச்சிக் கொண்டையாக அமையப் பெற்றது தனிச்சிறப்பு

# எடுத்த பாதம்

மகாவித்துவான் சிவத்திரு சி. அருணைவடிவேலு முதலியார்
( அன்பளிப்பு ஈழத்துச் சிதம்பரம் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள்)

இறைவன் கொள்ளும் திருமேனிகள், 'அருவம், உருவம், அருவுருவம்' என மூன்று வகைப்படும். அருவத் திருமேனி அறிவுக்கு அறிவாய் நின்று பொருள்களை அறியச்செய்வது. அது புறக் கண்ணிற்குப் புலனாகாது. யோகியரது அகக் கண்ணிற்குப் புலனாவதாம். உருவத் திருமேனியும் தவத்தோர்க்கே புலனாவதாயினும், அதனைத் தவத்தோர்கள் கண்ட காட்சியின் வழி அவர்களது அருள் மொழிகளைக் கொண்டு படிமத்தில் யாவரும் கண்டு வணங்குதல் கூடும்.

அருவுருவத் திருமேனி ஒளிவடிவாகிய சிவலிங்க மூர்த்தமே. இது கண்ணுக்குப் புலனாவதாயினும் முகம், கை, கால் முதலிய உறுப்புக்கள் இன்றிப் பிழம்பளவாய் இருத்தலின், அருவுருவமாகின்றது. மேலும், ஒளி ஒருகாற் புலனாகியும், மற்றொருகாற் புலனாகாமலும் இருத்தலின், ஒளிவடிவம் அருவுருவத் திருமேனியாகின்றது. எனவே, முகம், கை, கால் முதலிய உறுப்புக்களுடன் இனிய காட்சியை வழங்கி நிற்பது உருவத் திருமேனியேயாம்.

உருவத் திருமேனிகளில் கூத்தப்பெருமான் வடிவம் சிறப்புடையதொன்று. சைவ சமயத்தில், 'கோயில்' எனப்படும் தில்லையில் கூத்தப் பெருமானது திருநடனக் காட்சியே சிறந்து விளங்குகின்றது. இக் காட்சியைக் கண்ட அருட்பெருமக்கள் அளவிலா ஆனந்தம் உற்ற அனுபவ நிலையைக் கூறும் வரலாறுகள் பல.

அப்பர் பெருமான் தில்லையில் கூத்தப் பெருமானை வணங்கிப் பெற்ற அனுபவத்தின் பயனாக அவரது திருவாய் மலரினின்றும் வெளிப்பட்ட திருப்பாடல்கள் பல. ஒரு திருப்பதிகத்தில் அம்பலவாணனது அருட்டிரு மேனியில் ஒவ்வோர் உறுப்பிலும் ஈடுபட்டு எய்திய இன்பத்தினை முறையாக எடுத்தருளிச் செய்துள்ளார்.

நடராசப் பெருமானது வடிவத்தில் தூக்கிய திருவடியே முதன்மையாகக் குறிப்பிடப்படுவது. இஃது இடப் பக்கத்தினின்றும் வலப்பக்கம் சென்று வளைந்து நிற்பதால், குஞ்சிதபாதம் எனப் போற்றப்படுகின்றது. 'உண்மை விளக்கம்' என்னும் சாத்திரச் செய்யுள் 'தூக்கிய திருவடியே ஆன்மாக்களுக்கு அருளலைச் செய்வது, அவைகளை ஆனந்தத்தில் அழுத்துவது' எனக் கூறுகின்றது. அப்பர் பெருமான் அத் திருவடியின் சிறப்பைக் கூறும் முறை இது:

சாட எடுத்தது தக்கன்றன் வேள்வியில் சந்திரனை;
வீட எடுத்தது காலனை; நான்முகன் நாரணனும்
தேட எடுத்தது; தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே.

இதில், 'இறைவன் தில்லைத் திருத்தலத்துள் திருச்சிற்றம்பலமாகிய ஞானவெளியில் உருவத் திருமேனி கொண்டு நடனமாடுதற்கு எடுத்திட்ட பாதம் – தூக்கிய திருவடி, நடனம் ஆடுதற்கு மட்டும் தூக்கவில்லை; மற்றும் எத்தனையோ காரியங்கட்காக உயர்த்தப்பட்டது' என்கின்றார் நாவுக்கரசர்.


அத்திருவடி ஒருமுறை தன்னை மதியாது தக்கன் செய்த யாகத்தில் அவனது அதிகாரத்திற்கு அஞ்சி அங்கு சென்றிருந்த அமரர் பலரையும் ஒறுத்தபொழுது, சந்திரனைக் கீழே இட்டு மிதித்துத் துவைத்துத் தேய்த்தற்காகத் தூக்கப்பட்டது. (தக்கன்றன் வேள்வியில் சந்திரனைச் சாட எடுத்தது). மற்றொருமுறை தன்னை வழிபட்டு நிற்கும் அந்தணச் சிறுவனிடத்தில் தனது அதிகாரத்தைச் செலுத்தி அவனைப் பாசத்தாற் கட்டி இழுத்த கூற்றுவனை உதைத்துத்தள்ளி உருட்டுவதற்காக எடுக்கப்பட்டது. (காலன் ஐ வீட எடுத்தது. ஐ – தலைமை; அதிகாரம். வீட – அழிய). இன்னொருமுறை, உலகிற்குத் தாங்களே தலைவர் என்று செருக்கிப் போர் புரிந்த மாலும் பிரமனும் அச்செருக்கு நீங்கி அமைதியுறுதற் பொருட்டு வாங்கப்பட்டது. (நாரணன் நான்முகனும் தேட எடுத்தது. எடுத்தது – வாங்கிக்கொண்டது.)

'எடுத்தபாதம் இங்ஙனம், சந்திரனையும் காலனையும், மால் அயன் என்பவரையும் முன்னர் ஒறுத்ததாயினும், பின்னர், அவர்கட்கு அருள்புரிந்தே ஆட்கொண்டது. ஆகவே, நம்மை (நாவுக்கரசரை) முதலில் சூலைநோயைத் தந்து, பின்பு தனக்கு உரிமையாக ஆண்டுகொண்டதும் அந்தத் திருவடியேயன்றோ' (ஆட எடுத்திட்ட பாதம், சாட எடுத்தது; வீட எடுத்தது; தேட எடுத்தது. அதனால் நம்மை ஆட்கொண்டது அதுவேயன்றோ) என்று, "அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனை" அடைந்து அவனது எடுத்த திருப்பாதத்தைக் கும்பிட்டு அதனது அருள் நிலையில் ஈடுபட்ட அப்பர் பெருமான் அருளிச் செய்கின்றார்.

இறைவனது ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் இரு சக்திகளே அவனது இரண்டு திருவடிகளாதலானும், அவற்றுள் ஞானசக்தி வலத் திருவடியும், கிரியாசத்தி இடத் திருவடியும் ஆதலானும், 'ஞானச்சத்தியாகிய வலத் திருவடி அஞ்ஞானமாகிய ஆணவத்தை – முயலகனை மேல் எழ ஒட்டாமல் ஊன்றி நிற்க, கிரியா சத்தியாகிய இடத் திருவடி ஆன்மாக்களை அவ்வாணவத்தின் பிடிப்பினின்றும் எடுத்து ஆட்கொள்ளுகின்றது' எனக் கூறுகின்றது உண்மை விளக்க நூல். அங்ஙனம் ஆணவ பந்தத்தினின்றும் ஆன்மாக்களை எடுக்கும் முறையையே அப்பர் பெருமான் இவ்வாறு விரித்தருளிச் செய்தார். இதில் நாவுக்கரசர், "என்னை" என்னாமல், "நம்மை" என, எல்லோரையும் தம்மோடு சேர்த்துக்கொண்டு கூறியிருத்தலால், நம் அனைவரையும் ஏதேனும் ஒருமுறையில் ஆட்கொள்வது அவ்வெடுத்த திருப்பாதமேயாகும். அதனால், அதனை அனைவரும் அடைந்து உய்வோமாக.











தேர்வேலைகளில் ஈடுபடும் சிற்பியர்



அமைச்சர் தி. மகேஸ்வரன் சிற்ப வேலைகளைப் பார்வையிடுகிறார்.



தேர்வேலைகளில் ஈடுபடும் சிற்பி




சித்திரத்தேர்ச் சிற்பங்கள் கொண்ட ஒரு தொகுதியை
கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள்
ஆலய ஆதீன கர்த்தரிடம் கையளிக்கிறார்.



கரு ஜெயசூரிய (பா. உ.) முன்னிலையில்
சித்திரத்தேர்ச் சிற்பங்களை
ஆதீன கர்த்தரிடம் கையளித்தல்.

ஈழத்துச் சிதம்பரத்தில் தைப்பூசத்தன்று கால்கோள் விழா நிகழ்வு (25.01.2005)













சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள் ஆசியுடன் ஆரம்ப நிகழ்வு



← திருவாவடுதுறை குருமகாசன்னிதானம் திரு. தி. மகேஸ்வன் (பா.உ.) அவர்களைக் கௌரவித்தல்.



→ காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன் (பாலபெரியவாழ்) காஞ்சிபுரத்தில்....



← அமைச்சர், தருமையாதீனம் சுவாமிகளுடன் தருமபுரத்தில்...



→ ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாவடுதுறை குருமகாசன்னிதானம் அமைச்சர் மகேஸ்வரனுக்குப் பொன்னாடை போர்த்தி, பட்டம் வழங்கல்.

# பொருளடக்கம்....


அருளுரை

1. காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள்
2. திருவாவடுதுறை சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
3. நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
4. தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
5. திருப்பனந்தாள் திருவளர் திரு. காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
6. நாமானந்தகிரி சுவாமிகள்
7. சுவாமி ஆத்மகனானந்தா சுவாமிகள்
8. சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள்
9. சிவப்பிரம ஸ்ரீ. வி. ஈஸ்வரக்குருக்கள்
10. ஆதீனகர்த்தாக்கள்
11. கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P
12. கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் பா.உ
13. திரு. டி. எம் சுவாமிநாதன்
14. திரு. வ. செல்லத்துரை
15. நா. சீவரத்தினம்
16. க. தில்லையம்பலம்
17. க. சிவபாலன்
18. செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்
19. சரவணமுத்து ஜெயகாந்தன்
20. N. சபாரட்ணம்
21. சி. சரவணபவன்
22. வை. கா. சிற்றம்பலவாணர்
23. கே. எஸ். சிவஞானராஜா,

கட்டுரைகள்

திருத்தலம்

1. அன்றொருநாள் ஈழத்து சிதம்பரத்தில்.
2. கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் வழிபட்ட தலம் ஈழத்துச் சிதம்பரம்
3. வீடுபேறு தரும் ஈழத்து சிதம்பரம்
4. ஓட்டிப்பிறவா இரட்டையர்கள்

## திருத்தேர்


5. ஈழத்து சிதம்பரம்
6. தேர்த்திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம்
7. மாநகரமும் கோவிலும் ரதத்தின் மகத்துவமும்
8. இரதோற்சவம்
9. சிவாலயக்கிரியை மரபில் ரதப்பிரதிஷ்டை உத்தரகாரணாகமத்தை அடிப்படையாக கொண்ட குறிப்புக்கள்.
10. நல்விழாப் பொலிவு காணல்
11. சித்திரத்தேரேறி திருவீதிவலம் வரும் திண்ணபுரத்தாள் பாதம் போற்றி
12. காரை ஈழத்து சிதம்பர மார்கழி திருவாதிரை இரதோற்சவம்.
13. ஆடல் வல்லானுக்கு அணியுடை ஆதிரை தேர்
14. ஈழவளநாட்டின் இணையற்ற திருவிழா
15. சைவ உலகில் வேறு ஒரு சைவ ஆலயங்களிலும் இல்லாதவாறு எல்லாம் அமைந்த சிரேஸ்தபதி – ஓர் நேர்காணல்
16. செல்வசந்நிதி ஆலய சித்திரதேர்கள் தோன்றிய வரலாறு


## திருநெறி


17. ஆடல் வல்லானின் சப்த தாண்டவங்கள் நவ தாண்டவங்கள்.
18. 63 மூவர் திரு நட்சத்திரங்களும் தொண்டுகளும்
19. மார்கழி நீராடல்
20. மார்கழித் திருவெம்பா மகிமை
21. தவநெறி
22. ஒன்றியிருந்த நின்மீன்கள்
23. இந்து மதம் – சனாதன தர்மம்
24. கோமாதா குலங் காப்போம்
25. மார்கழித் திருவாதிரை
26. திருத்தேர்த் திருப்பணிக்கு உதவியளித்த உதவியாளர்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்





# அருளுரை

Phone : (04112) 222115 Email:- skmkanci @md3.vsnl.net.in.
Fax : 224305

Sri Chandramouleeswaraya Namaha:

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

**His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi**

# JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

**Srimatam Samsthanam**

**No.1, Salai Street, Kancheepuram - 631 502.**

ஸ்ரீ முகம். Date: 16. 12. 05.



# புண்ணியப் பெருவிழா

ஈழத் திருநாடு தொன்று தொட்டு பக்தி நெறியிற் சிறந்து விளங்கும் பெருமைக்குரியது. பக்தி நலமும், பண்பாடும், சமய மேம்பாடும், வரலாற்றுச் சிறப்பும் உடைய இத்திருநாட்டில் தவத்திரு. ஆறுமுக நாவலர் பெருமான் இறை நலத்தை மேலோங்கச் செய்தார். கதிர்காமத்துக் கந்தன் அருள் இந்நாட்டைக் காத்து வருகிறது.

தமிழகத்துத் தில்லைப் பெருமானை நினைவிலிருத்தி வழிபடத் தக்க வகையில் அமைந்துள்ள, ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப் பெறும் 'காரை நகரில்' எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு உலா வருவதற்காகச் சித்திரத் தேர் உருவாக்கப்பட்டிருப்பது அறிந்து மிக்க மகிழ்கின்றோம்.

"நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனாம்" சிவபரம் பொருளுக்குத் தேர் உலா எடுப்பது அருமையான செயல். சித்திரத் தேரில் ஆடல் வல்ல அம்பலவாணரின் அரிய தாண்டவ வகைகளும், மகேஸ்வர மூர்த்தங்கள் மற்றும் அறுபத்து மூவர் வரலாற்றுச் சிற்பங்களும் கலைவளமிக்க சிற்ப வல்லுநர்களால் உருவாக்கப்பட்டிருப்பது அத்தேருக்குப் பொலிவை மிகுதிப்படுத்துவதாகும். இத் தேர் உலாவைத் தரிசிப்பதே பெரும் புண்ணியம்.

இச் சித்திரத் தேர் திருவருள் துணையால் எதிர்வரும் 10. 01. 2006 அன்று வெள்ளோட்டம் நடைபெறவிருப்பது அறிந்து உள்ளம் பெரிதும் பூரிக்கின்றோம்.

இவ்விழாவையொட்டி ஞானதானமாக விழா மலர் ஒன்று வெளிவருவது சாலப் பொருத்தமே.

ஞான மா நடராசப் பெருமான் அருளால் தேர் உலா சிறப்பாக நடைபெறவும், விழா மலர், ஞான மலராக வெளிவரவும், ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மௌலீச்வரரைப் பிரார்த்தித்து வாழ்த்தி, ஆசீர்வதிக்கின்றோம்.

– நாராயணஸ்ம்ருதி



His Holiness Thirukaiyilaya Parambarai
23rd Guru Maha Sannidhanam Sri-La-Sri
**Sivaprakasa Desika Paramacharya Swamigal**
Aadheenakarthar, Thiruvavaduthurai Aadheenam
**THIRUVAVADUTHURAI - 609 803, NAGAI DISTRICT ✆ 04364 - 232021**



# மன்றாடும் மலர்ப்பாதம் மறவாமை

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமசாரிய சுவாமிகள்
திருவாவடுதுறை ஆதீனம்

*திங்களஞ் சடையோன் சினகரம் செய்தோர்திருவிழா வினிதினி னமைத்தோர்*
*அங்கவன் தடந்தேர் பண்ணுவித் தோர்கள் சாறயர் மறுகமைத் திட்டோர்*
*கொங்கவிழ் தருவி னீழலிற் பன்னாட் குலிசன் வாழ்த்தெடுப்பவீற் றிருந்து*
*மங்கையோர் பாக னுலகினி னடைந்து மலரடி நீழல்வீற் றிருப்பர்*

– கூர்ம புராணம்

*ஆயிரஞ் சனனம் எடுத்துமுன் தருமம் அருந்தவ மாற்றுநர்க் கன்றோ*
*பாயுமால் விடையோற் கற்புத மாகப் பகர் சிவபுண்ணியம் பலிக்கும்*

*என்று கடம்பவனபுராணம் குறிப்பிடுவது போன்று பூர்வ புண்ணியப் பேற்றால், பெருமானுக்குத் திருத்தேர் செய்திடும் சிவபுண்ணியச் செயலில் பங்கு கொண்டுள்ள நல்லன்பர்கள் யாவரும் இருமைப் பயன்களை எய்துவர் என்பது திண்ணம். தன்னடைந்தார்க்கு இன்பங்கள் நல்கும் தத்துவனாக விளங்கும் ஈழத்துச் சிதம்பரத்தில் கொலுவீற்றிருக்கும் பரம்பொருளுக்கு உருவாகும் ஐந்து தளங்களைக் கொண்ட சித்திரத்தேரில் 108 ஆடல் வல்லானின் சிவதாண்டவமும் 63 நாயன்மார்களின் வரலாறுகளும் 25 மகேஸ்வர மூர்த்திகளும் சிற்பமாகஇடம் பெறுவது மகிழ்ச்சிக்குரியது.*

*மண்ணி னில்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்*
*அண்ண லார் அடியார் தமை அமுதுசெய் வித்தல்*
*கண்ணி னால்அவர்நல்விழாப் பொலிவு கண்டார்தல்*

*என்று பெரியபுராணம் எடுத்துரைப்பது போன்றுஎல்லாம் வல்ல சிவபெருமான் திருவிழா கண்டு மகிழ்தல் பெரும்பேற்றை விளைவிக்கும்.*

*நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்*
*மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்*
*மன்றாடும் மலர்ப்பாதம் ஒருக்காலும் மறவாமை*
*குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்*

*என்னும் சேக்கிழார் வாக்கிற்கேற்ப இறைத் தொண்டாற்றும் தூய உள்ளங்கள் ஒன்று சேர்ந்து செய்திடும் திருத்தேர் திருப்பணி விரைவில் நிறைவேறி திருத்தேரோட்டம் நடைபெற, காரைநகர் பெருமான் திருவிழா இனிதுற நடைபெற நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.*

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2370

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**



## ஞான ஒளி ஏற்றும் நல்விழா

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

அடியார்களுக்கு

யாழ்ப்பாணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம். எம்பெருமானுடைய ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனித வாழ்வில் உயர்நிலையை தரக்கூடியது இறைவழிபாடாகும். அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்களாகும். ஆலயத்தில் நடைபெறும் பூசைகளும் விழாக்களும் மனிதனை சிந்தித்து செயற்பட வைக்கின்றன. அதற்காகவே ஆலயம் தொழுவது சாலவும் நன்று. "நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு" என்றும் எடுத்து இயம்பி உள்ளனர். இதனை உணர்ந்த காரைநகர் வாழ் மக்கள் சிவனுக்கு ஆலயம் அமைத்து ஆலய வழிபாட்டில் தனித்துவமான தேர்த்திருவிழாவைச் சிறப்பாக கொண்டாடப் பல லட்சரூபாய் செலவில் புதியதொரு தேரை உருவாக்கி உள்ளனர். தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாலும் ஆன்மாக்களைப் பற்றி இருக்கும் மாயை இதனை அகற்றி ஞான ஒளியை ஏற்றுவதாகும். அதனாலே தேர் வடம் பிடித்தால் வானத்தில் இடம் பிடிக்கலாம் என முன்னோர் இயம்பினர். தேரினுடைய அமைப்பு பாதாளத்தையும், பூலோகத்தையும், மேலோகத்தையும் காட்டுவதாகும். உடம்பை மூன்றாகப் பிரித்தனர். கால் , உடம்பு, தலை என்று தேருக்கும் மூன்று பாகங்கள் உள்ளன. இறைவன் தேரில் எழுந்தருளச் செய்வது மனிதனின் மனதில் இறைவனை எழுந்தருளச் செய்வதாகும். இதனாலே தேர்த்திருவிழா சிறப்புடையதாகும். இத்தேரை உருவாக்கிய சிற்பக் கலைஞரை வாழ்த்துகின்றோம். இத்தேருக்கு நிதி வழங்கியவரையும் ஆலய பரிபாலன சபையினரையும் இறைவன் ஆசிர்வதிப்பாராக இவ் வெள்ளோட்டத்தை நிதர்சனமாக்க வெளிவரும் மலர் சிறப்பாக அமைந்து எல்லோரும் பயன்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்பஅன்பு"

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை ( அஞ்சல் ) 609 001

23 - - 12 - 2005

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே "



# ஏற்றதாழ்வின்றி எல்லோரும் இழுக்கும் தேர்

எல்லாம்வல்ல சிவபரம்பொருள் திரிபுர சம்ஹாரத்திற்குத் திருத்தேரில் ஏறிச்சென்று தம் புன்னகையால் திரிபுரங்களை எரித்தழித்தார் என்பது புராண வரலாறு. இதனைத் தோத்திர நூல்கள் பலவும் சுவைபடக் கூறுகின்றன.

திருஞானசம்பந்தர் திருவீழிமிழலைத் தேவாரத்தில் இவ்வரலாற்றை

*கல்லால் நிழற் கீழாயிடர் காவாயென வானோர்*
*எல்லாம் ஒரு தேராய் அயன் மறைபூட்டி நின்றுய்ப்ப*
*வல்லாய் எரி காற்றீர்க்கரி கோல் வாசுகி நாண் கல்*
*வில்லால் எயில் எய்தானிடம் வீழிம் மிழலையே*

எனக்கூறுகிறார். மணிவாசகர் திருவாசகத்தில்

*வளைந்தது வில்லு விளைந்தது பூசல்*
*உளைந்தன முப்புரம் உந்தீ பற*
*ஒருங்குடன் வெந்தவா றுந்தீ பற*

எனக்கூறுகிறார். திருக்கோயில் திருவிழாக்களில் ஒருநாள் மகாரதம் எனப்படும் இத்திருத்தேர் விழா நிகழக் காணலாம்.

*"பொருப்புச் சிலையில் வாசுகி நாண் பூட்டி அரிகோல் வளியீர்க்கு*
*நெருப்புக் கூராம் படை தொடுத்து பிரம வலவன் நெடுமறை மா*
*விருப்பிற் செலுத்தும் நிலைத் தேர்மேல் நின்று தெவ்வூர் வெந்தவிய*
*அருப்புக் குறுவெண் ணகை முகிழ்த்த அந்தணாளன் திருவுருவம்"*

எனக் காஞ்சிப்புராணம் கூறுகிறது. உலகமே தேர் வடிவமாக விளங்க அத்தேரில் எழுதருளியுள்ளதை விளக்கும் இத்தேர் சிவாலயங்களில் சிவபிரான் எழுந்தருளிவரும் வாகனமாக விளங்குகிறது. இத்தேரை ஏற்றத்தாழ்வு கருதாமல் எல்லோரும் இழுத்து வருவதால் மக்களிடையே சமத்துவம் மலர்வதைக் காணலாம்.

இத்தகைய திருத்தேரை ஈழத்துச் சிதம்பரமாக விளங்கும் காரைநகர்த் திருக்கோயிலில் அன்பர்கள் சித்திரத் திருத்தேராகத் திருப்பணி செய்து வெள்ளோட்டம் விடுவதும் இறைவனுக்கு மகாரதமாக உருவாக்குவதும் மகிழ்வைத் தருகின்றன.

ஆண்டுதோறும் திருவாசகவிழா முதலிய பெருவிழாக்களை நிகழ்த்தி மக்களை மகிழ்விக்கும். காரைநகர் அன்பர்கள் எல்லா நலங்களோடும் இனிது வாழவும் திருத்தேர்த்திருப்பணி விரைவில் நிறைவெய்தவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவ சிவ

Ph: 56655

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர். காசித்திருமடம்.

திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)

தேதி 13.11.05



# பாராட்டுக்குரிய திருப்பணி

ஈழத்துச் சிதம்பரம் ஐந்துநிலை கொண்ட சித்திரத் திருத்தேர் திருப்பணி சிறப்பாக நிறைவுற்று 10. 01. 06ல் வெள்ளோட்டம் நிகழவிருப்பது அறியலாயிற்று. மகிழ்ச்சி.

திருத்தேர் வீதியுலா திருக்கோயிலுக்கும், திருவீதிகட்கும் பெருஞ்சிறப்பு தருவதாகும். வேறுபாடுகள் நீங்கி மக்கள் பலரும் ஒருங்கிணைந்து திருத்தேர் வீதி உலாவில் பங்கேற்பது பெரும் புண்ணியப்பேறாகும்.

நலம் பலநல்கும் திருத்தேர் திருப்பணியில் ஈடுபட்டுப் பணியாற்றுவோர் பாராட்டிற்குரியர். இத்திருத்தேர்வீதியுலாவை ஒட்டி மலர் ஒன்று வெளியிடவிருப்பது சிறப்பு.

மலர் ஆன்மிக ஒளியும், பக்தி மணமும் வீசிச் சிறப்பாக மலரத் திருவருள் துணைநிற்பதாக. பணியில் பங்கேற்போரும், பயன்பெறும் அடியாரும் சிவஞானமும், தீர்க்காயுளும் பெற்று வாழத் திருவருள் புரியுமாறு செந்திலாண்டவன் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்
சிவ சிவ

2

ௐ

*Swami Namaananda Giri*

Sri Gnanananda Nama
Sankeerthana Mandali
31, Sadayappan Street
Chennai - 600 028
Phone 2495 2498
15-10-2005.



# பக்தர்கள் யாவரும் பாக்கியசாலிகள்

சுவாமி நாமானந்த கிரி சுவாமிகள்
ஸ்ரீ ஞானானந்தகிரி பீடம் தென்னாங்கூர்
ஸ்ரீ ஞானானந்த நாம சங்கீர்த்தன மண்டலீ

அன்புடையீர்!
ராதே கிருஷ்ணா

எல்லாம் வல்ல ஸ்ரீசத்குருநாதரின் திருவருட் கருணை எல்லோருக்கும் கிடைக்கப் பெற்று எப்பொழுதும் இன்புற்றிருக்க வேண்டி எழுதும் கடிதம்

அகண்ட மண்டலாகாரமாக இந்த ப்ரபஞ்சம் முழுவதும் வியாபித்து இருக்கும் சிவனை காணமுடியாது. ஆனால் மன உறுதியுடன், திடமான வைராக்யத்துடன் மனதைக் கட்டுப்படுத்தி வழிபட்டு வந்தோமானால் குருநாதரின் திருவருள் சிவனை உணர வைக்கும். காணமுடியாத அந்தப் பரம்பொருளை பஞ்ச பூதங்களின் வடிவினைக் கொண்டு உணரமுடியும். பஞ்சபூதங்களின் செயல்பாடுகள் சக்தியுடன் இணைந்து சிவனின் சேர்க்கையினால் ஏற்படும் விளைவுகள் என்ற தத்துவத்தை விளக்கும் வகையில்தான் நடராஜபெருமான் நம் போன்ற பாமர ஜனங்கள் உணர்ந்து வழிபடவேண்டியும் அஞ்ஞான இருள்விலகி - உள்ள தெல்லாம் உள்ளதில்லை, உள்ளதற்கு நாசமில்லை; நாசமுள்ளது உள்ளதில்லை என்ற மெய்யறிவை உணர்ந்து வழிபடும் வகையில் அருள் பாலிக்கிறார். அந்த வகையில் ஈழத்து சிதம்பரமாக காரைநகரில் குடி கொண்டுள்ள சிவபெருமானும், அந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களோடு அல்லாமல், நம்பிக்கை உள்ள அனைவருக்கும் அருள் பாலித்து வருகிறார். அப் பெருமானை சித்திரத்தேரில் எழுந்தருளச் செய்து வீதி உலா வரும் அழகினை காணும் பக்தர்கள் யாவரும் பாக்யசாலிகள் ஆவார்கள். இத்திருவிழாவினை காணவரும் பக்தர்கள் அனைவரும் ஒன்றுகூடி செய்யும் பிரார்த்தனையின் மூலமாக இலங்கையிலும், உலகெங்கிலும் சமாதானம் நிலவி பக்தர்கள் அனைவரும் மகிழ்வுடன் வாழ வழிவகுக்க வேண்டி ஸ்ரீ சத்குருநாதரின் அருள் பிரசாதம் அனுப்பியுள்ளோம்.

ராதே கிருஷ்ணா!

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

Phone - 2588253 & 551380!
Email - rkmcey@eureka.lk



# தமிழ்கூறு நல்லுலகம் போற்றும் தலம்

**சுவாமி ஆத்மகனானந்தா சுவாமிகள்**
**இராமகிருஷ்ண மடம், கொழும்பு.**

*ஈழத்துச்சிதம்பரம் என்று தமிழ்கூறும் நல்லுலகம் போற்றி வணங்கும் காரை நகர் சிவன் கோவிலுக்கு 39 அடி உயரத்தில், 5 தளங்களுடன் கூடிய அழகிய சித்திரத்தேர் ஒன்றுஉருவாகி வருகிறது என அறிகிறோம். ஈழநாட்டின் தலைசிறந்த சிற்பக் கலைஞர்களுடன், தமிழகக் கலைஞர்களும் இணைந்து வடிவமைத்து வருகின்றனர். ஆடல்வல்லானின் 108 சிவதாண்டவ வடிவங்களும், 63 நாயன்மார்களின் வரலாற்றுச் சிற்பங்களும், 25 மகேஸ்வர வடிவங்களும் இத்தேரில் இடம் பெற உள்ளதாகவும் அறிகிறோம். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான திரு மகேஸ்வரன் அவர்களது தலைமையில் இத்திருப்பணி நடைபெற்று வருவதாகவும் அறிகிறோம்.*

*இத்தருணத்தில், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் காரைநகர் சிவன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டியமையைக் குறித்து இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதே. திரு மகேஸ்வரன் அவர்கள் இந்து கலாசார அமைச்சராக இருந்த காலப்பகுதி அது. அவ்வமயம் அவர் நல்லூர் முருகன் கோயிலுக்கருகில் உள்ள ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தைத் திருத்தியமைத்தார். அதைத் திறந்து வைப்பதற்காக அவர், அதே காலப்பகுதியில் எங்கள் கொழும்பு மிஷனிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த சுவாமி ஆத்மப்ரியானந்தாஜி மகராஜ் அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்திருந்தார். அந்த சுவாமிகளோடு நானும் அங்கு சென்றிருந்தேன். ஆறுமுக நாவலர் மணிமண்டபத் திறப்பு விழா முடிவுற்ற பின்னர், அடுத்த நாள் நாங்கள் காரைநகர் சிவன் கோயிலுக்குச் சென்று வழிபடவும் திரு மகேஸ்வரன்அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். எங்களுக்குத் துணையாக, அவரது உறவினரும், எல்லோரும் நன்கறிந்த சமூக சேவையாளருமாகிய திரு கே. கே. சுப்பிரமணியம் அவர்களை அனுப்பியிருந்தார். மிக அமைதியான*

சுற்றாடலில் அமைந்திருந்த அக்கோயிலை தரிசித்து நாங்கள் மிகவும் அகமகிழ்ந்தோம். அங்கு இறைவனை வழிபட்ட பின்னர் சிவபுராணம் ஓதி மனநிறைவு பெற்றது இன்றும் நினைவில் உள்ளது. பிறகு அங்கிருந்து மணக்காடு முத்துமாரியம்மன்ஆலயத்திற்கும் சென்று அன்னையை வழிபட்டு மகிழ்ந்தோம். இந்த நல்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக திரு. மகேஸ்வரன் மற்றும் திரு சுப்பிரமணியம் அவர்கள் இருவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆலயம், மனித உடல் அமைப்பில் நிர்மாணிக்கப்படுவதன் காரணம், ஆலயம் செல்பவர், தமது உடலும் ஆலயம் போன்றதே என்பதையும், இவ்வுடலில் இறைவன் வசிக்கிறார் என்பதையும் உணர வேண்டும் என்பதற்காகவே. அதே போல, இறைவனைத் தேரில் அமரச் செய்து வீதிகளில் பவனி வருவதன் நோக்கம், எல்லா உயிர்களிலும் உறைந்து இறைவன் உலகை பவனி வருகிறார் என்பதை உணர்த்தவே. அதன்மூலம் அனைத்து உயிர்களுக்கும் மதிப்பையும், மரியாதையையும்வழங்கத் தெரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய சிந்தனைப் பயிற்சி வலுப்பெறும் அளவிற்கு, மக்களிடையேயான உறவு, அன்பும், நட்பும் கொண்டதாக அமையும். இறைவனைக் கோயிலில் உள்ள விக்கிரகத்தில் மட்டும் கண்டால் போதாது. எல்லா உயிர்களிலும் காண முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை வளம் பெறும், மனித உறவுகள் மேம்படும், சமுதாயத்தில் அமைதியும் , சமாதானமும் நிலவும்.

ஈழத்துச் சிதம்பர ஆலயத்தேரின் நிர்மாணம் விரைவில் நிறைவு பெற்று, அதில் இறைவன் பவனிவரும் காட்சியை பக்தர்கள் கண்டு களிக்க எல்லாம் வல்ல சௌதராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானது திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். இத்தெய்வத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் அன்பர் அனைவருக்கும் எம்பெருமான் திருவருள்புரியப் பிரார்த்திக்கிறோம்.

சுவாமி ஆத்மகனானந்த

உ



# வேறுபாடு நீக்கும் விழா


சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள்

ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்


மகோற்சவம் எனப்படும் பெருந் திருவிழா, ஆலயங்களில் ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. மகோற்சவ காலத்தில் நிகழும் திருவிழாக்களுள் தனிச்சிறப்புடையது தேர்த்திருவிழா.

தேர் அமைப்பைப்பற்றி ஆகமங்களும் சிற்ப நூல்களும் எடுத்துக் கூறுகின்றன. தேரை, அசைந்து பவனிவரும் அமைப்பைக் கொண்ட கோயில் என்று கூறலாம். தேர், கோயிற் கருவறைபோல விமானம், தூபி முதலியவற்றைத் தாங்கி, எழில் மிகுந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பிரசித்தமான ஆலயங்களில் தேர், அடித்தளத்திலிருந்து இறைவனை வீற்றிருக்கச் செய்யும் பீடம் வரை, மரத்தினால் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு, அதன் மேற்பகுதி, ஆண்டுதோறும் விழாக் காலங்களில், வண்ணத் துணிகளையும், நுட்பமான பல பொருள்களையும் கொண்டு அமைக்கப்படுவதையும் காணலாம். இவ்வாறு அமைக்கப்பட்ட இதனைத் 'தேர்' என்று சொல்வது மரபு. தேரின் மேற்பகுதி வேலைகளும் மரத்தினாற் செய்யப்பட்டு நிரந்தரமாக விளங்கும் அமைப்பைக் கொண்ட தேரை 'இரதம்' என்று சொல்வதும் மரபாகும்.

தேர்த் திருவிழா, இறைவனுக்குச் செய்யும் உபசாரங்களுள் ஒன்றாகும். தேரில் வீற்றிருந்து சகல உபசாரங்களுடன் பவனிவரும் தெய்வத்தைத் தரிசித்தால் பெரும்பயன் உண்டாகுமென நூல்கள் கூறுகின்றன.

தேர்த்திருவிழாவின்போது மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தேரை இழுக்கின்றனர். இதனால் அவ்விழா, மக்களிடையேயுள்ள வேறுபாடுகள் நீங்கி, அவர்கள் அனைவரும் அன்பினால் ஒன்றுபட்டு வாழ்வதற்குத் துணைபுரிகின்றது.

ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருந்து அருள்புரிந்து கொண்டிருக்கும் கூத்தப்பிரான் பவனி வருவதற்குச் சித்திரத்தேர் உருவாகிவருவது குறித்துச் சைவ உலகம் பெருமகிழ்ச்சி அடைகிறது. தேர் உருவாவதற்கு மூலகாரணராக விளங்கும் திரு. தியாகராசா மகேஸ்வரன் அவர்களும், அன்னாருக்கு உதவியாக இருந்து செயலாற்றி வரும் திரு. கே.கே. சுப்பிரமணியம் முதலானவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

தேர் வெள்ளோட்டத்தை முன்னிட்டு வெளிவரவிருக்கும் மலர், சிறப்புற வேண்டுமெனக் கூத்தப்பிரானைப் பிரார்த்தித்து, எனது வாழ்த்தைத் தெரிவிப்பதுடன் பெரியார்களான ஆண்டி முனிவரையும், அம்பலவி முருகரையும் நினைவுகூர்ந்து அமைகின்றேன்.

உ
சிவமயம்

# காரை நகர் சிவன் கோவில்
ஈழத்துச் சிதம்பரம்
# KARAINAGAR SIVAN TEMPLE
EELATHU CHITHAMPARAM

காரைநகர்.
KARAINAGAR.
Sri Lanka.

-------------1999



## முழுமுதற் கடவுளுக்கு முதன்மைத் தேர்

சிவப்பிரம ஸ்ரீ வி. ஈஸ்வரக்குருக்கள்
பிரதம சிவாசாரியார், ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது மூதறிஞர் வாக்கு. வேதமும் நெறியும் தழைத்தோங்க, சைவமும் அதுசார் துறையும் வளர்ச்சியடைய ஆலயங்கள் உதவுகின்றன. இவ்வகையில் ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவிலுக்கு சிற்ப ரதம் நாகர வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் பிறந்ததையிட்டு நாம் அனைவரும் பெருமையடைய வேண்டும். சைவ சமயம் சிவபெருமான்ஒருவரையே முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது."ஏகபராத்மா பகுதேக வர்த்தி" பராத்மா ஒருவர் வடிவங்களோ பலவாகும்.

மகோற்சவ காலத்தில் அழித்தல் தொழிலை உணர்த்துவதே ரதோற்சவம் ஆகும். இவ் ஆலயத்தின் சிறப்பில் திருவாதிரை உற்சவத்தில் காலையும் மாலையும் திருவெம்பாவை ஓதப்படுவது இக்கோவிலின் சிறப்பாகும். ரத உற்சவத்தின் உண்மைப் பொருளை உணர்த்த, தெளிவுபடுத்த ஆகம முறைப்படி அமையப்பெற்ற இவ் ரதம் ரத உற்சவத்தில் முக்கியம் பெறுகின்றது.

ரத வெள்ளோட்டத்தை நிறைவு செய்ய வரும் இம்மலர் சிறப்பாக அமைய வாழ்த்துவதுடன் இன்னும் இக்கோவிலின் திருப்பணிகள் சிறப்பாகத் தொடர வாழ்த்துகின்றேன்.

"நல் ஆற்றன் நாடி அருள் ஆள்கபல் ஆற்றான்
தேரினும் அஃதே துணை"
திருக்குறள்

"லோகா சமஸ்தா சுஹினோ பவந்து"

உ
சிவமயம்

காரை நகர் சிவன் கோவில்
ஈழத்துச் சிதம்பரம்
KARAINAGAR SIVAN TEMPLE
EELATHU CHITHAMPARAM

காரைநகர்,
KARAINAGAR.
Sri Lanka.

.................1999

# சிதம்பரம் போன்ற திருத்தேர்

ஆ. அம்பலவி முருகன், மு. சுந்தரலிங்கம்
ஆதீனகர்த்தாக்கள்
ஈழத்துச் சிதம்பரம் , திண்ணபுரம்.

*முனிவர்கள் தவம் செய்த புண்ணிய பூமியான காரைநகரிலே காலத்திற்குக் காலம் பெரியோர்கள் வாழ்ந்து முத்திரை பதித்துப் போயிருக்கிறார்கள். அந்த வரிசையில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனும் (முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர்) அடங்குவர். ஆண்டிக்கேணி ஐயனாரிலும் சிவனிலும் மிகுந்த பக்தி உடைய மகேஸ்வரன் உள்ளத்தில் கூத்தப்பிரானின் திருவருள் புகுந்து இவருக்குத் தேர் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டியது. அவருடைய பக்தியும் செயல்படுதிறனும் ஒரு வருடத்திற்குள் நடராசரின் 108 தாண்டவம் அடங்கிய அழகிய சிற்பக்கலையுடன் கூடிய சிதம்பரத் தேரைப் போன்று அமைத்து அழகுடன் வந்ததைக் காட்டுகின்றது. அவர் மேற்கொண்ட திருப்பணியின் போது தோன்றாத் துணையாய் இருந்து எம்மை வழி நடத்திப் பேரருள் பாலிக்கின்ற ஆண்டிக்கேணி ஐயனாரையும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் மனம் மொழி மெய்களால் வாழ்த்தி அவரின்திருப்பணித் தொண்டுகள் மேலும் மேலும் வளர வணங்குகின்றோம்.*

உ



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

**தெல்லிப்பழை, இலங்கை.**

# Sri Durgadevi Devasthanam

**Tellippalai, SriLanka.**

*தலைவர்:*
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**

**President:**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P.**



## அருள் நிறைந்த ஆலயம்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

*காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் எமது மண்ணின் தலை சிறந்த ஒரு சிவ ஆலயமாகும். தமிழகத்துக்கு சிதம்பரம் முதன்மையாக விளங்குகிறது. அதேபோன்று எமது மண்ணில் ஈழத்துச் சிதம்பரம் சிறப்பாக மிளிர்கிறது. இங்கு சென்று பல வருடங்களாக திருவெம்பாவை நாட்களில் தொடர்ந்து உரையாற்றி "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டத்தையும் 1970ம் ஆண்டில் பெற்றவள் யான். இன்று உடல் நலம் குன்றியிருந்தாலும் மனநலம் குன்றாது இங்கு எழுந்தருளி இருக்கும் சுந்தரேஸ்வரப் பெருமானை மனம், மொழி, மெய்யினால் வணங்கிக் கொண்டே இருக்கிறேன்.*

*புத்தாண்டில் திருவெம்பாவை நாட்களில் இங்கு இடம்பெற இருக்கும் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எமக்கெல்லாம் அம்பலவாணனின் அருளைத் அள்ளித் தருவதாகும். எனவே அம்பலக் கூத்தனை வாழ்த்துவோம், வணங்குவோம். அனைத்து நிகழ்வுகளும் பக்தி பூர்வமாக இடம்பெற வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வோம்.*



# காரைநகரின் கனவு நனவாகிறது

கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் பா.உ.

தமிழ்நாட்டின் தில்லையம்பதியிலே சிதம்பரத்திலே வீற்றிருந்து அருளாட்சி புரியும் ஆனந்தக் கூத்தனாகிய நடராஜப் பெருமானை நினைவுகூரு முகமாக காரைநகரில் அமைக்கப்பட்ட ஆலயமே ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் காரைநகர்ச் சிவன் கோயில் ஆகும். ஈழமணித்திருநாட்டைச் சிவபூமி எனத் தவயோகி திருமூலநாயனார் அழைத்தார். ஈழத்தின் நான்கு எல்லைகளிலும் சிவாலயங்கள் இருந்து அருளாட்சி புரிந்த தர்ம துவீபமாகிய எங்கள் நாட்டின் சிவத்தலங்களாகிய திருக்கேதீஸ்வரத்தின் மீது சம்பந்தரும் சுந்தரரும் பதிகம் பாடியுள்ளார்கள். திருக்கோணேஸ்வரத்தின் மீது சம்பந்தரும் அருணகிரிநாதரும் திருப்பாடல்களை அருளியுள்ளார்கள்.

காரைநகர் மக்கள் கோலத்தாலும், சீலத்தாலும் சைவப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணி வாழ்ந்து வருபவர்கள்; சிவனை மறவாச் சிந்தையுடையவர்கள்; பஞ்சாட்சர மந்திரத்தை தமது நாவால் ஓதுபவர்கள்; சமய அனுஷ்டானங்களை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்கள்; கனவிலும் நனவிலும் ஈழத்து சிதம்பரேஸ்வரப் பெருமானைத் தியானிப்பவர்கள்; பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி நியமம் தவறாது சிவசின்னங்களை அணிபவர்கள்.

தங்களுடைய குல தெய்வமாகிய சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு சிற்பங்கள் நிறைந்த சித்திரத் தேர் ஒன்றினை உருவாக்க வேண்டும் என்று காரைநகர்ப் பதியில் வாழும் சிவனடியார்கள் அனைவரும் விரும்பினார்கள். அடியார்கள் அனைவரினதும் ஒருமித்த விருப்பம் இன்று சிற்பங்கள் நிறைந்த சித்திரத் தேராக வடிவம் பெற்றுத் திகழ்கிறது.


நடராஜப் பெருமானிடமிருந்தே நாட்டியக் கலை தோற்றம் பெற்றது. நடராஜப் பெருமானுடைய நாட்டிய கரணங்கள் நூற்றெட்டும் இத்தேரிலே அழகான சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலோ, இலங்கையிலோ இவ்வாறு நூற்றெட்டு நாட்டிய கரணங்களும் செதுக்கப்பட்ட சிற்பங்கள் உடைய தேர் எதுவுமே இல்லை. முதன் முதலாக நூற்றெட்டுத் தாண்டவங்களுடனும் அமைக்கப்பட்ட சித்திரத்தேர் இதுவே ஆகும்.

நாகர வடிவில் இத்தேர் அமைக்கப்பட்டுள்ளது. முப்பத்தொன்பது அடி உயரத்தில் உருவாக்கப்பட்டுள்ள இத்தேருக்கு ஆறுஅடி உயரம் கொண்ட நான்கு சில்லுகளும் ஐந்து அடி உயரம் கொண்ட இரண்டு சில்லுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அடித்தளத்தில் ஐந்து வரிசைகளில் விக்கிரகக் கட்டைகள் பொருத்தப்பட்டுள்ளன. சிவனுடைய இருபத்தைந்து மூர்த்தங்களும், சிவனை மறவாச் சிந்தையாளர்களாகிய அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளும் சிவனின் நூற்றெட்டுத் தாண்டவங்களும், ஈழத்துச் சிதம்பரேஸ்வரப் பெருமானின் ஆலய வரலாறுகளும், சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் யாளிச் சிற்பங்கள், குதிரைச் சிற்பங்கள், அன்னப் பறவைகள், மகரப் பட்சிகள் ஆகிய சிற்பங்களால் தேரின் அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இருபத்தெட்டுப் பவளக் கால்கள் தேரின் மேல் விமானத்தை தாங்கி நிற்கின்றன. இவற்றின் முன்பாக எட்டு அடி உயரம் கொண்ட யாளிகள் பொருத்தப்பட்டுள்ளன.

பஞ்ச கிருத்தியத்தில் தேர்த் திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதால் மேல் விமானம் துணி வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்படல் வேண்டும் என்பதே ஆகம விதியாகும். இத் தேரில் அமைந்திருக்கும் கொடிகள், அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைந்த தேர்ச்சீலைகள் என்பன தமிழ் நாட்டின் கும்பகோணத்தில் இருந்து தருவிக்கப்பட்டன. தேரின் உச்சியிலே மூன்று அடி உயரம் கொண்ட கலசம் பொருத்தப்பட்டுள்ளது. தேரின்முன் பக்கத்தில் பிரம்மாவின் உருவத்துடன் நான்கு பெரிய குதிரைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

எழுபத்தைந்து இலட்சம் ரூபா செலவில் பூரணத்துவம் பெற்ற மிகச் சிறப்பு மிக்க வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இத்தேரானது சிறந்ததோர் கலைப் பொக்கிஷமாக மிளிர்கிறது. ஆனந்தக்கூத்தப் பெருமானை சித்திரத் தேரிலே கண்டு வழிபடும் அடியார்கள் அனைவருக்கும் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு கிடைக்கவும், தகமை சிவஞான முத்தி பெறவும் எங்கள் குலதெய்வமாகிய ஈழத்து சிதம்பரேஸ்வரப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டுமென்று இதயபூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன்.



தி. மகேஸ்வரன், பா. உ.,
கொழும்பு மாவட்டம்

30-09-2005

ஓம் நமசிவாய

**ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்**
**SRI PONNAMBALAVANESWARAR DEVASTHANAM**

38, Sri Ramanathan Mawatha,
Colombo-13,
Sri Lanka.
Telephone: 2431252

# சிறப்புமிகு சிற்பத் தேர்

திரு. டி. எம். சுவாமிநாதன்
அறங்காவலர்
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம், கொழும்பு

சிவபூமி எனப் புகழ்பெற்ற ஈழத்தின் வடபால் வடமுனையில் காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் என வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயத்தில் சிவகாம சுந்தரி சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் அருள்பாலித்து வருகிறார்.

எம்பெருமான் திருவருளினால் சித்திரத்தேர் திருப்பணி ஆரம்ப விழாவில் கலந்து கொள்ளும் பெரும்பேறு பெற்றேன். இன்று இப்பணி இறைவனின் திருவருளினால் நிறைவெய்தியுள்ளது.

இவ்வாலயம் மூன்று வீதிகளைக் கொண்டும் மூர்த்தி , தலம், தீர்த்தம் முதலிய சிறப்புக்களைக் கொண்டும் அமைந்துள்ளது. மேலும், வருடத்தில் மூன்று மகோற்சவங்கள் நடைபெறுவதும் தில்லைச் சிதம்பரத்தை நினைவூட்டுவதாகவுள்ளது.

பெருங்கோயில், கீர்த்தியுடைய மூர்த்தி, அவருக்கு முப்பத்தொன்பது அடி உயரமும் ஐந்து தளங்களில் 108 சிவதாண்டவங்களும் சிற்பங்களும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வடிவமைப்பும் கொண்டமைந்துள்ள இச் சித்திரத்தேர் வழிபடுவோர் உள்ளங்களையும் மெய்சிலிர்க்க வைக்கிறது.

தேர்த்திருவிழா என்பது பலரின் உழைப்பும் அவர்களின் கலை நுட்ப ஆற்றலும் சேர ஊர் கூடி, உட்பூசல் மறந்து, சாதி, குல வேறுபாடின்றி எல்லோரும் சங்கமிக்கும் ஒரு நிகழ்வாக அமைகிறது.இறைவன் ஆன்மாக்களின் ஆணவத்தை சங்காரம் செய்யும் தத்துவ விளக்கத்தை தேர்த்திருவிழா உணர்த்துகின்றது.

சித்திர வேலைப்பாடுகள் அமைந்த சித்திரத் தேரினை வடிவமைத்துள்ள திரு. சரவணமுத்து ஜெயகாந்தன் குழுவினர் பாராட்டுக்குரியவர்களாவர். இப் பெரும்பணியைச் செய்வதற்கு தனிமனித உள்ளத்தை வழிநடாத்திய எம்பெருமான் திருவருளை வியக்கின்றேன். இப்பணியில் நின்ற பேராளர்களுக்கும் தோன்றாத் துணையாக நின்ற ஏனையோருக்கும் எம்பெருமான் திருவருள் கிட்டுவதாக.

**BRITTANIA HINDU (SHIVA) TEMPLE TRUST**
ESTABLISHED 1974, *Registered Charity No : 269067*
***HIGHGATEHILL MURUGAN TEMPLE***
200A, Archway Road, London N6 5BA, England, U.K.Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508
email bhtt @btinternet.com; / websit: http://www.highgatemurugan.com.
Board of Trustees:
Chairman-Trustee: MR V. Sellathurai. Secretary - Trustee: MR K. Ranganathan. Treasurer - Trustee: MR V. Selvanayagam.
Trustees :DR V.P. Narayanarao, MR A. Vairavamoorthy, MR S.M. Srikantha, MR N. Vamadevan.
Advisory Council
Chairman: MR V. Sellathurai. Secretary: MR C. Krishnamoorthy

# மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் அமைந்த தலம்

திரு. வ. செல்லத்துரை
உயர்வாசற் குன்று முருகன் கோவில்,
இலண்டன்

"ஈழத்துச் சிதம்பரம்" எனப் போற்றப்படும் காரைநகரில் கோயில் கொண்டு அருள் புரியும் சிவபெருமானுக்கு 39அடி உயர சித்திரத்தேர் - சிற்பக்கலைஞர் ஸ்ரீ ச. ஜெயகாந்தன் அவர்களால் உருவாக்கப்படுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. ஊருக்கு ஈசான மூலையில் சிவன்கோயில் அமைந்தமையும் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக இறைவன் அருளால் சிவன் கோயிலுக்கு உள்ள சூழ்நிலையுடன் அமைக்கப்பட்ட தன்நிகரில்லாத் தனிப் பெருங்கோயிலும் மக்களும் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்து ஆன்மிக சாதனை புரிந்த தலம் - ஈழத்துச் சிவன் கோயிலும் காரைநகர் மக்களும்.

1935 ஆம் ஆண்டில் வேதாரணியத்தில் இருந்து வந்த இசை வல்லுனர்கள் பண் இசை நடாத்தியமை, அதனால் ஏற்பட்ட பண்இசை நாட்டம், அதே ஆண்டில் சைவப் பிரசங்கம் செய்ய வந்த பிரமுகர்கள் சிலர் பஞ்சவஸ்திரமும், மேலங்கியுடனும் கோயிலுக்குள் நுழைய ஆசாரம் , ஒழுக்கம் கூறி நிர்வாகம் அவர்களைத் தடுத்தமையும், சைவ பெரியார் சிவபாதசுந்தரனார் கோயில்களில் செய்யத்தகாதனவற்றை முறை, முறையாக பல நெறிகளிலும் சொல்லிச் சைவ மக்களின் கோயில் ஆசாரங்களை விளக்கி மேன்மைப் படுத்தியமை என்பன எல்லாம் கோயில் நிர்வாக வரலாற்றின் பசுமையான நினைவுகள்.

இந்தக் கோயிலை நடாத்தி வந்த ஆண்டிஐயா முருகேசு அவர்களையும் அவர்கள் முன்னோர்களையும் எந்தவிதமான புற நாகரிகமும் அவர்கள் ஒழுக்கங்களையும் நேர்மைத்திறனையும், சைவ வாழ்க்கையையும் பாதிக்க முடியவில்லை. இவ்வகையான

சீர்பூத்த புண்ணியர்கள் வழிநடாத்தி வந்த கோயிலில் பண்ணும் பூசையினால் பலன் உண்டாகும் என்ற உண்மை சிவாசாரியர் என்ற சொல்லுக்கு இலக்கணம் கூறி வாழ்ந்து செயலாற்றிய ஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள், மகன் ஸ்ரீ க. தியாகராசா குருக்கள் அவர்களுடைய கல்வி, திறன், ஒழுக்க மேம்பாடு, ஆசாரம், வேதாகமவித்துவம் எல்லாம் சைவத்துக்கும் சமயத்திற்கும் மிகவும் ஒளிமயமானவை. இந்த ஆசாரம் ஒழுக்கம் என்பனவற்றால் ஈர்க்கப்பட்டு கோயிலுடன் ஒட்டி இருந்து வாழ்க்கையில் நல்லவர்களாக வந்த Dr. இ. கனகசுந்தரம், Dr. ப. சிவசோதி, Dr. கு. தெண்டாயுதபாணி, விதானையார் R.V. பொன்னம்பலம் என்பவர்களுடன் கோயிலை நினைக்கும் போது என் எண்ண அலையில் வரும் பழைய தெவிட்டாத சிந்தனைகள் இறைவனே நீ என் உடல் இடங்கொண்டாய் என்றபண்பட்ட வாழ்க்கை கண்ட பல சகோதரர்களை ஆக்கிய பெருமையும் இந்தக் கோயிலின் சாந்நித்திய பலனே. அவர்கள் பெற்ற இறை இன்பம் மேலும்பல சகோதரர்களை ஈர்த்து நல்லவர்களாக வாழச் செய்தமை நாம் அறிந்தோம். ஈற்றில் கல்வியும், செல்வமும் ஒழுக்கமும் மிக்க நல்லவர்களாய் வாழவழிகாட்டி சிந்தை மகிழ்ந்து சிவபுராணம் ஓதி முந்தை வினை முழுவதும் ஓயப்பண்ணிய வாழ்க்கைக்கு இந்தப் புண்ணிய ஸ்தலம் சாதனமாய் அமைந்தமை நினைக்க நினைக்கப் பரவசமூட்டும்.

1971 ஆம்ஆண்டு திருவாதிரை நாளில் தமிழ்நாடு பிரபல நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாதஸ்வர இசையை கேட்டுநாள் முழுவதும் கோயிலிலிருந்து வணங்கி இலண்டன் செல்ல அனுமதி தந்த பெருமானே நன்றி நன்றி. 1975 ஆம் ஆண்டில் லண்டனில் சைவக் கோயில் ஆக்கும் பணியில் என்னையும் இணைத்து உருவான உயர்வாசல்குன்று முருகன் கோயில் நிர்வாகத் தலைவனாகச் சென்ற ஏழு ஆண்டுகள் இருந்து ஸ்ரீ ச. ஜெயகாந்தன் அவர்களால் உருவாக்கப்பட்ட 21 அடி உயரமான சித்திரத்தேரை ஆர்ச்வே ரஸ்தாவில் ஓடவைத்தமையும், 2002ஆம் ஆண்டு மேன்மை தங்கிய இரண்டாம் எலிசபெத் மகாராணியை கோயிலுக்கு வரவழைத்து வரவேற்றமையும் இறைவா உன் நினைவொடு வாழ்ந்த வாழ்க்கையின் பலனே.

காலத்தால் எண்ணங்கள் மாறினாலும் "கோயில் வழிபாட்டுக்கே" என்ற ஸ்திரமான நிலை மாறாமல் கோயில் நடைபெறத் திருவருளை வேண்டிக் கொண்டு ஆன்மிகச் சேவை தடையில்லாமல் இருக்கவும் சித்திரத்தேரில் தாண்டவம் ஆடும் திருவருளைக் கண்டு சித்தம் மகிழ்ந்து நாட்டில் தமிழ் இனம் சிந்தை கலங்காது வாழும் நாளை எதிர்பார்த்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் திரு. தி. மகேஸ்வரன் பா.உ அவர்கட்கு நன்றி கூறி மகிழ்கின்றேன்.




# SIVAYOGAM

(A Charity Registered in England & Wales- Reg. No: 1050398)

180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ

Tel: 020 8767 9881 Fax: 020 8767 2337

Email: info@sivayogam.plus.com Web: www.sivayogam.co.uk




# பெருமையும் பேரருளும் மிக்க தலம்


**நா. சீவரத்தினம்**

**தலைவர் அறங்காவலர் சபை**


*ஈழவளநாட்டில் காரைநகர் பதியில் பக்தர்களின் துயர்துடைக்க ஈழத்துச் சிதம்பரம் எனும் சிறப்பு பெயர் தாங்கி அருள் பாலித்து வரும் அருள்மிகு சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு நடைபெறும் மார்கழி திருவாதிரை திருவெம்பாவை திருவிழாவிலே புதிய அழகிய, அதி உயர் சித்திரத் தேர் பவனி வர இருப்பதை அறிந்து நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். தேர் பண்டைக்காலம் முதல் தமிழர் பண்பாட்டுடன் குறிப்பிடத்தக்க தொடர்பு பெற்றுள்ளது. முல்லைக்கு தேர் கொடுத்த பாரியை பண்டைய சான்றோர் போற்றி புகழ்ந்துள்ளனர். பத்து திசைகளிலும் தேரோட்டியதால் பேர் பெற்றவன் தசரதன். இவ்வாறு உலகியலில் பயன்பட்ட தேர் இறைவனுக்கும் ஊர்தியாக மாறுகின்றது. தேரிலே அவனை அமர்த்தி அலங்கரித்து ஆண்டுவிழா எனும் மகோற்சவத்திலே தேர் வீதிகளிலே பவனிவருவது தேர்த்திருவிழா எனப்படும். அதி முக்கியத்துவம் வாய்ந்ததும், பிரபல்லியம் வாய்ந்ததுமான இத்தேர் திருவிழா தமிழரின்கலை கலாசார வளர்ச்சியை பறைசாற்றுகின்றதென்றால் மிகையல்ல. தேரின் மேற்பகுதி ஆகாயத்தையும் , நடுப்பகுதி அண்ட வெளியையும், கீழ்ப் பகுதி கீழ் ஏழு உலகத்தையும், நான்கு சக்கரங்களும் நால் வேதத்தையும் வாசுகி எனும் பாம்பு வடத்தையும் குறித்து நிற்கின்றன.*

*சைவ நூல்களும், ஆகமமும் தேர் உற்சவம் பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் தொழிலை உணர்த்துவதாக கூறுகின்றன. அதாவது பக்தர்களின் மனதின்கண் உள்ள ஆணவம், கன்மம், மாயை எனும் தீய குணங்களை அழிப்பதை குறிக்கும். கோயிலுக்கு செல்ல இயலாத நோயாளிகள், கர்ப்பிணிகள் முதலியோர் தேரிலே வீதிவலம் வரும் உற்சவ மூர்த்தியை தரிசித்து பலன்பெறும் வாய்ப்பினையும் இத்திருவிழா வழங்குகிறது. இதனை ஆகமங்கள் சாம்பவ தீட்சை என்று விதந்து கூறுகின்றன. அத்துடன் ஞானிகள், மற்றும் மனிதர்களைச் சுற்றி இயற்கையாகவே ஒரு ஒளி வட்டம்*

காணப்படுகின்றது. இதேபோல் இறைமூர்த்தங்கட்கும் ஒளிவட்டம் ஒன்று காணப்படுகின்றது. இவ் ஒளி வட்டமானது அந்தந்த மூர்த்தங்களின் அருளின் தன்மைக்கு ஏற்ப பரந்து, விரிந்து அதனால் ஆகர்சிக்கப்படும் இடப்பரப்பு விரிவடைந்து காணப்படும். இவ்வாறு தேரிலே இறைவனை அமர்த்தி நகர்வலமாக வலம் வரும் பொழுது இவ்ஒளி வட்டத்தின் ஒளியால் அவ்விடங்களும், அங்குவாழும் மனிதர்கள் மட்டுமன்றி சிறு புழு, பூண்டு, வண்டு, ஈ போன்ற சிறிய உயிரினங்களும் கூட மூர்த்தியின் ஒளிவட்டத்தின் ஆகர்சிக்கும் தெய்வீக சக்தியினால் பயன் பெற்று செழிப்படைகின்றன என விஞ்ஞானரீதியாகவும் கருதப்படுகிறது.

எமது கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் பயன்படுத்தப்படும் தேர், மற்றும் வாகனங்களை சிறந்த முறையில் வடிவமைத்து, வர்ணம் தீட்டி, அவற்றுக்கு மெருகூட்டுவதில் பெரும் புகழும், சிறப்பும் பெற்று விளங்கும் யாழ்ப்பாணம், மயிலிட்டியை பிறப்பிடமாக கொண்ட உயர்திரு சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்களால் இந்த அதி உயர் சித்திரத்தேர் வடிவமைக்கப்பட்டுள்ளது மேலும் சிறப்பைத்தரும் அம்சமாகும். இவரால் வடிவமைக்கப்பட்ட வாகனங்கள் தேர் என்பன யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் உள்ள ஆலயத்தில் திருவிழா காலங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதை நாமறிவோம். இலண்டனில் உள்ள அனைத்து ஆலயங்களுக்கும் தேர் மற்றும் வாகனங்களை அமைத்துக் கொடுத்த பெருமைக்குரியவர் இவர். இவ்வளவு பெருமை பொருந்திய இவருடைய சேவை மேலும் சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல ஆடல்வல்லானைப் பிரார்த்திக்கின்றோம்.

சிறப்பும், பெருமையும், பேரருளும் பொருந்திய ஈழத்து சிதம்பரம் சௌந்தராம் பிகா சமேத சுந்தரேசப் பெருமானின் ஆதிரைத் தேர் விழா சிறப்புடன் நடைபெற்று பக்தர்கள் புத்திபலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சு, ஆரோக்கியம், விழிப்பு , வாக்கு வன்மை, ரூபலாவண்யம், சித்தத் தெளிவு, விவேகம், யோக ஞானம் என்பன பெற்று நிறைவுடன் வாழ எல்லாம்வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் அறங்காவலர்கள், சிவாசாரியார்கள், அடியார்கள் யாவரும் அம்பிகையின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

அம்பிகையின் பணியில்,

நா. சிவரத்தினம்

தலைவர், அறங்காவலர்சபை
19.12.2005

அறம் செய்ய விரும்பு, அன்பே சிவம்

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"



காரைநகர்

# மணிவாசகர் சபை

ஆரம்பம்: 01 - 01 - 1940

**Karainagar Manivasagar Sabai**

# 'மகேசன் சேவை'

க. தில்லையம்பலம்
மணிவாசகர் சபை, காரைநகர்.

பார்த்திப வருடம் மார்கழித் திங்கள் 28ந் திகதி (12-01-2006) வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. தியாகராசா மகேஸ்வரன் அவர்களது விடாமுயற்சியால் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்துக்கென பலலட்சம் ரூபா செலவில் ஒரு புதிய சித்திரத்தேர் அண்மையில் அமைக்கப்பட்டு அத் தேரில் காரைநகர் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பரம் ஸ்ரீ சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் வீதியுலா வருவதற்கு ஆயத்தமாகின்றார் என்பதை அறிந்தும், நேரில் தேவஸ்தானத்திற்குச் சென்று தேர்த் திருப்பணி வேலைகள் ஐம்பதுக்கு மேற்பட்ட சிற்பாசிரியர்களால் சிறப்பாகவும், துரிதமா கவும் நடைபெறுவதைக் கண்டும் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. தி. மகேஸ்வரன் அவர்கள் செய்யும் தொண்டு "மகேசன் சேவை" எனக் கூறலாம் தொண்டு என்பது கைம்மாறு எதுவும் கருதாமல் செய்யும் சேவையாகும். அத்தொண்டு செய்வதற்கு எல்லோருக்கும் வாய்ப்புக் கிடையாது. திரு. மகேஸ்வரன் அவர்கள் முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பலனாகவே இப்பேறு அவருக்குக் கிடைத்துள்ளது. பொருள் இருந்தால் மட்டும் போதாது. இறை தொண்டு செய்வதற்கு மனமும் இறையருளும் வேண்டும். "பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும், நற்றவவானினும் நனி சிறந்ததே" என்ற பாரதியார் கூற்றுக் கிசைய திரு. தி. மகேஸ்வரன் அவர்கள் பல சமயத்தொண்டுகளையும் ஆலயத் தொண்டுகளையும், சமூகத் தொண்டுகளையும் ஆற்றி வருவது யாவரும் பாராட்டத்தக்கது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக தொண்டை மானாறு "செல்வச்சந்நிதி" கோவிலுக்கும் பலலட்சம் ரூபா செலவில் ஒரு சித்திரத் தேர் குறுகிய காலத்தில் அமைத்துக் கொடுத்து அதன் வெள்ளோட்ட நிகழ்விலும் கலந்து கொண்டமையை நான் கண்ணாரக் கண்டு பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்தேன்.

அவர் சைவத்திற்கும் தமிழுக்கும் அரும் பாடுபட்டு உழைத்து வருவதை மணிவாசகர் சபை பெரிதும் பாராட்டுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் காரணம் அவரிடம் குடிகொண்டுள்ள இறை பக்தியும், சமயப்பற்றுமேயாகும். .

அவரது தொண்டு மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் அருள் புரிய வேண்டும் என்று வணங்கி. ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

உ
சிவமயம்

காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை
காரைநகர் சிவன் கோவில் - ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானம்
KARAINAGAR MANIKKAVASAGAR MADALAYA
ANNATHANA SABAI
KARAINAGAR SIVAN TEMPLE - EELATHU CHITHAMPARA DEVASTHANAM

# தில்லைக் கூத்தன் திருத்தேர்

க. சிவபாலன்
மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை
காரைநகர்.

ஈழமணித் திருநாட்டின் எந்தப் பகுதியைப் பார்க்கிலும் வடபகுதியில் தான் புராதனப் பெருமை வாய்ந்த சிவாலயங்களும், விநாயக கோட்டங்களும் சக்தி பீடங்களும், குமார கோட்டங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் உள்ள ஈழத்துச் சிதம்பரமெனும் பெருமை பெற்ற சிவாலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற நடைபெறப் பிரார்த்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஆலய மகோற்சவத்தில் ரதாரோகணம் என்று சொல்லப்படுகின்ற தேர்த்திருவிழா அழித்தலையே சுட்டி நிற்கின்றது. ஆர்த்தெழுந்து எரியும் அக்கினிச் சுவாலையை ஒத்தவடிவில் ரதத்தின் தோற்றம் அமைத்திருப்பதை நீங்கள் அவதானிக்கலாம். அந்தந்த ஆலயத்தின் கர்ப்பக் கிருகத்தின் அளவுக்குச் சிற்ப சாஸ்திரம் விதித்தப் பிரமாணப்படியே ரதங்கள் செய்யப்படுகின்றது இரதத்தைச் செய்யும் சிற்பிகள் போற்றுதற்குரியவர்கள். தேர் கலை, கலாச்சார, புராண, இதிகாச, நிகழ்ச்சிகளைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கும்.

தில்லைக் கூத்தன் சித்திரத் தேரை உருவாக்க உளங்கொண்ட பேரன்பர்கள், அறங்காவலர்கள், தொண்டர்கள், பக்தர்கள், யாபேருக்கும் தில்லைக் கூத்தன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

உ
சிவமயம்
அன்பே சிவம்

*Aru. Thirumurugan,* B.A., Dip. IN. Ed.,
Vice Principal
Skandavarodaya College
Chunnakam, Sri Lanka

செஞ்சொற் செல்வர்
**ஆறு. திருமுருகன்**
28, கையிலாச பிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.




# சிற்பம் நிறைந்த திருத்தேர்

செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்

ஈழத்திருநாட்டில் புதுமையும் பெருமையும் மிக்க புண்ணிய தலங்களிலொன்றாக விளங்குவது காரைநகர் ஈழத்துச் சிதம்பரம். இத்திருக்கோவில் வேத சிவாச்சாரியார்களின் மேன்மையாலும், மீளா அடியார்களின் பக்தியாலும், அறங்காவலர்களின் அர்ப்பணிப்பாலும் பெரு வளர்ச்சி கண்டு வருகிறது. இத்திருக்கோவிலில் ஆண்டு தோறும் நடைபெறும் மார்கழிப் பெருவிழா காணப் பல ஊர் மக்களும் பக்தியோடு கூடுவர். திருவாசகத்துக்கு உயர்மதிப்புக் கொடுக்கும் காரைநகர் மக்களின் மணிவாசகர் சபையின் சிறப்பும் விழாக் காலங்களில் வியந்து போற்றப்படுவது வழக்கம். அடையா வாயிலாக அன்னதானப்பணி இங்கு அற்புதமாக நடைபெறும். இத்தனை சிறப்புமிக்க இத்தலத்தில் புதிய மரபுத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெறுவது அறிந்து மிக ஆனந்தமடைகிறேன். சிற்பம் நிறைந்த சிவதத்துவம் மிக்க திருத்தேர் உருவாக வித்திட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. தி. மகேஸ்வரன் அவர்களின் முயற்சியை வாழ்த்துகிறேன். இத்திருத்தேரை உருவாக்க பல்வேறு வழிகளிலும் உழைத்த அன்பர்களையும் சிற்பக்கலைஞர்களையும் வாழ்த்துகிறேன். இந்தியாவில் சிதம்பரத்தில் எவ்வாறு மரபுத்தேரில் எம்பெருமான் தில்லை நடராசன் பவனி வருவது போல் ஈழத்திலும் தில்லை நடராசன் இன்று முதல் இப்புதிய தேரில் பவனி வரவிருப்பது நாம் செய்த புண்ணியம். இப்புண்ணிய கைங்கரியம் என்றும் போற்றுதலுக்குரியது எனப் பிரார்த்தனை செய்து அமைகிறேன்.

ஆறு. திருமுருகன்

உ



# ஜெனா சிற்பக் கலைக்கூடம்
# JENA HANDICRAFT

WOODEN HANDICRAFTS - MANUFACTURERS AND EXPORTERS
APPROVED BY SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

E.D.B.No.: 216683 T.D/2362(N) Col Rgd. No.: WA25656

S.Jeyakanthan
Proprietor
Tel.: 011-2522956
Fax: 011-2527820
Factory:284-285, Modera Street, Colombo-15, Sri Lanka
Residence:265, Modera Street, Colombo-15, Sri Lanka

## அவன் அருளாலே அவன்தாள் வணங்கி

சரவணமுத்து ஜெயகாந்தன்
(சிற்பத்தேர் நிர்மாணித்த பிரதமஸ்தபதி)

எல்லாம் வல்ல சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப்பெருமானின்பாத கமலங்களுக்கு எனது வணக்கங்கள். இன்று வெள்ளோட்டம் விடப்பட இருக்கின்ற இப்பெரும் சிற்ப ரதத்தை நிர்மாணித்த ஸ்தபதி என்கின்ற வகையில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் இப்படி ஒரு பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்று மாணிக்கவாசகப் பெருமான் மனமுருகிப் பாடியிருக்கின்றார். அதாவது எல்லாம் வல்ல அந்தப் பரம்பொருளை வசப்படுதற்கும் ஒரு அருள், ஒரு கொடுப்பனவு இருக்க வேண்டும். அது போல அப்பரம் பொருள் உலா வர இருக்கின்ற ஒரு பெரும் ரதத்தை வடிவமைப்பதற்கும் அவனது அருள் நிச்சயமாக இருக்க வேண்டும். அப்படி ஒரு பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது உண்மையிலேயே என் தாயும் தந்தையும் முன்பிறப்பில் செய்த தவப் பயனாகும்.

செல்வச் சந்நிதி முருகப் பெருமானுக்கு எமது இந்துக் கலாச்சார அமைச்சர் திரு.தி. மகேஸ்வரன் அவர்களின் ஏற்பாட்டில் ஒரு பெரும் சித்திரத் தேரை குறுகிய கால அவகாசத்தில் அமைத்துக் கொடுத்ததன் பேரில், அப்போதே ஈழத்துச் சிதம்பரத்துக்கும் ஒரு தேர் அமைத்துத் தர வேண்டும் என்று திரு- மகேஸ்வரன் அவர்கள் கேட்டுக் கொண்டார். இவற்றுக்குக் காரணமாக இருந்தவர் சைவப் பெரியார் திரு. கே. கே. சுப்பிரமணியம் ஐயா அவர்களாகும். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் பல உரித்தாகட்டும்.

எமது பாராளுமன்ற உறுப்பினர் திரு. தி. மகேஸ்வரன் அவர்களின் மனதில், ஈழத்துச் சிதம்பரத்துக்கு உருவாக்கப்படும் தேர் தனித்தன்மை மிக்கதாகவும் ஏராளமான

சிற்ப வேலைப்பாடுகள் கொண்டதாகவும் அமைக்கப்பட வேண்டும் என்ற ஆவல் குடி கொண்டிருந்தது. அந்த மன விருப்பம், வயதில் மிகவும் சிறியவனாகிய என்னில் அவர் வைத்த நம்பிக்கை என்பன கொஞ்சம் கூட மாசுபடாத வகையில் இத்தேரை அமைப்பதில், எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவை திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம் அருள்மிகு சீர்வளர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்களின் ஆசியாகும். தேர்த்திரு பணி ஆரம்பிக்கும் முன்பதாக சிதம்பரம் சென்று ஆடல் வல்லானின் அற்புதமான ஆனந்தத் தாண்டவத்தை கண்குளிரக் கண்டு, அதன்பின் திருவாவடுதுறை ஆதீனம் சென்று சுவாமிஅவர்களின் ஆசியும் பெற்று வந்தது பெறுதற்கரிய பேறாகும்.

இத்திருத்தேர் பஞ்ச தளங்களிலும் சிற்பங்களைக் கொண்டு விளங்குவது தனிச்சிறப்பாகும். மகேசுவர வடிவங்கள் இருபத்து ஐந்தும், சிவதாண்டவங்கள் 108ம் , நாயன்மார்களின் வரலாறு கொண்ட 63 சிற்பங்களும் ஆலய வரலாறும், மிகவும் தத்ருபமாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. 108 சிவதாண்டவங்கள் பொறிக்கப்பட்ட திருத்தேர் வேறு எங்கும் காணக் கிடைக்காதது என்பது அடியேனுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

இத்திருத்தேர் பவனிவருகின்ற இந்தப் பொன்னான நாளில், இப் பெரும் சிவப்பணியில் பங்கு கொண்ட அனைத்து அடியார்களுக்கும், எமது சிற்பக்கலைக்கூடத்தின் சிற்பக்கலைஞர்களாகிய தமிழக, இலங்கைக் கலைஞர்களுக்கும், அடியார்களுக்கும் எம்பெருமானின் பரிபூரணமான திருவருள் கிடைக்க வேண்டுமென்று மனம் உருகி வேண்டுகின்றேன். வேண்டுவார்க்கு வேண்டுவதை அருளும் அப்பரம்பொருள் எமது வேண்டுதலையும் ஏற்று அருள் புரிவார் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன்.

பிரதம ஸ்தபதி - சரவணமுத்து ஜெயகாந்தன்
ஜெனா சிற்பக் கலைக்கூடம்
கொழும்பு

Thinnapura Anthathy by

# Late N. Sabaratnam (B. Sc.Lond.)

## Emeritus Principal, Jaffna Hindu College

Anthathy Release - Karainagar on Thinnapura
9 - 3 - 1970 in Colombo

Having been nurtured to full manhood under the fostering care of the Lord of "Thinnapuram" at Karainagar I feel it a great privilege to send this message to the historic event in the metropolis the release of a rare volume Thinnapura Anthathy by the renowned poet Karainagar Karthigeya Pulavar, an illustrious contemporary of Sri La Sri Arumuga Navalar along with a commentary by learned Prof. C. Singaravelan of Dharmapura Adeenam, Tamil Nadu.

It is fitting that such an event in the capital city should be patronised by the Hon. Minister S. Thondaman and Hon. P. P. Devaraj, whose influence will be a stimulus for the Hindus in the South to be acquainted with ancient lore of a renowned sharing - now called. Eelathu Chidambaram. I am proud that Mr. K. K. Subramaniam son of Karainagar soil is presiding the function.

May I also add that the temple with the famed shrine of Lord Natarajah owes its present grandeur chiefly to the unbroken line of devoted priesthood that for more than four generations has been intimately connected with the author poet - A para of Brahminic wisdom.

The people of Karainagar are a really blessed people and on their behalf I wish the function success.

09.03.1990

# திண்ணைக் களியான் திரு

சி. சிவசரவணபவன் (சிற்பி)

தில்லை நடராசன் தேரிடத்தே யாடிவரும்
நல்ல திருக்கோலமதை நாம் பார்ப்போம் - தொல்புகழ்சேர்
ஈழச் சிதம்பரத்தில் ஈசன் இவர்ந்தெம்மை
ஆளவருந் தேரின் அகம்

ஆண்டியென்னு ம்பே ரடியா ரகக்கண்ணில்
தோன்றிவெளிப் பட்டிருந்த தூச்சிலைகள் - தூண்டியநல்
எண்ணமெலா மீழச் சிதம்பரமாய் இன்றிலங்கும்
வண்ணமெலாங் காட்டும் வனப்பு.

அற்புதங்கள் தத்துவத்தோ டாண்டவனின் கோலமெலாம்
சிற்பமெனச் சேர்ந்திருக்கும் சித்திரத்தேர்- முற்றிலுமாய்க்
கண்ணைக் கவர்ந்திழுத்துக் கைகளையும் கூப்புவித்து
திண்ணைக் களியான் திரு.

ஆடும் அரசனுடன் அம்பாள் சிவகாமி
கூடித் திருத்தேரிற் கொண்டிருக்கும் - பீடுடைய
வண்ணத் திருக்கோலம் மாண்பார் அடியவரின்
எண்ணத்தை ஏற்றும் இதம்.

மாணிக்க வாசகரின் மாண்புடைய வாசகத்தைக்
காணிக்கை யாய்ப்பாடிக் கைதொழுவோம் - ஆணிப்பொன்
அம்பலத்தி லாடுகின்ற ஐயனவன் தேரூர்ந்து
எம்மையெல்லாங் காப்பான் இவன்.

உ

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

# புதிய சித்திரத்தேர்

முதுபெரும்புலவர், கலாபூஷணம்
ஆசிரியர் வை. க. சிற்றம்பலவனார்

திருநிறைந்த காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்
திருக்கோயில் மூலத்தானம்
தேவியோடுடனாக சிதம்பரேஸ் வரப் பெருமான்
சிங்கார முடனமர்ந்தே
பொருவரும் பாற்குடம் தேன் குடம் செவ்விளநீர்
சேரத்திரு மஞ்சன மாடி
சித்திரப் பட்டாடை சீரணி மாலையுடன்
திருநீறு திலக மிலங்க
மருவுமுப் பழமமுதம் பலகார அவியேற்று
மருவு தூப தீப மகிழ்ந்து
மன்னுபண் தோத்திரம் சோடோப சாரங்கள்
மகிழ்ந்தேற்று மறையு மோத
ஒருமையுறு சங்குடன் மங்கலம் முழங்கிட
ஒப்பில்மலர் மாரியிடையே
உரியமுறை எழுந்தருளி குடைகொடி சகிதமாய்
உயர் கோயில் வாசல் வந்தார்.

◆◆◆

செல்வமலி யீழத்துச் சிதம்பரத் திருக்கோயில்
எழுந்தருள் சிவற்குத் தில்லை
சிதம்பரந் திருக்கோயில் அமைந்த திருத் தேர் போல
சிறப்புடைய தாய் விளங்க
வல்லவொரு புதுத்தேரையடித்தளம் கீழுலகாய்
மதிகதிர் சக்கரமாக
வான்தொடும் பண்டிகை மேலுலகாய் யதிற்கலை சேர்
வண்ணச் சிற்பம் கதைகள் சொல்ல

சொல்லரும் நடுத்தளம் பூலோகம் காட்டவதில்
பொருந்து பொற் பீடம் விளங்க
புரியட்ட பாலகரும் திசையெட்டு யானைகளும்
உடன் வாகை மாலை யசையவும்
நல்லவலங் காரமாம் அத்தேரில் நான்முகன்
நால் வேதப் புரவி பூட்டி
நன்கமர அமைந்திடும் அத்தேரின் கர்ட்சியை
நன்றுவந்து பார்த்து மகிழ்வீர்.

◆◆◆

இடது பதம் தூக்கியே நடராச னுடனாடும்
இனியசிவ காமி யாட
இணையில்பா தச்சிலம்பு கிண்சிணி கலந்தாட
இன்முகப்புன் னகையாடவும்
வடரத்ன ஆரங்கள் மணமாலை யாடிட
மங்கலம் முழங்கி யாட
வட்டமுறு குடைகொடி யாலவட் டம்மாட
மக்கள்பண் ணிசைத்துப் பாட
திடமுடன் மலர் தூவி தேரினைச் சுற்றியே
சிறுவர் முதியோர்க ளாட
சிறப்பு மிளிர் ஈழத்துச் சிதம்பரப் புதுத்தேரை
செய் தவர்கள் மகிழ்ந்தாட வும்
நடமிட்டுப் பொருள் குவித்து நாடிச்செயற் பட்டோர்கள்
நயந்தாடி வடம்பற்றியே
நம்மிறைவற் காகுந்திருத் தேரிழுத் தாடு முயர்
நயங்கண்டு ஆடி மகிழ்வீரே

# "ஆதிரையில் சித்திரத்தேர்"

கே. எஸ். சிவஞானராஜா, ஆசிரியர்,
*யாழ்/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.*

### பல்லவி


சிதம்பர மகிமையை வந்து பாரீர் – ஈழச்
சிதம்பரத் தேர்மகிமை கண்டு சொல்வீர்

### அனுபல்லவி

விதம் விதமான கவின் வேலைப்பாடுடன் திகழும்
விஞ்சு பஞ்ச தளங்கொண்ட கொஞ்சும் அழகான தேர்

### சரணம்

நிதம் பார்க்கும் கண்ணிரண்டும் போதாதையா – அதில்
நூற்றெட்டுத் தாண்டவத்தின் அற்புதமோ அழகையா
பதம் போற்றும் அறுபத்து மூவரின் பாதமையா
பாலிக்கும் சித்திரத்தேர் ஆதிரையில் ஓடுமையா



காரைநகர், திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் கோயிலின்
தற்போதைய முன்வாசல் கோபுரத் தோற்றம்.









• ஈழத்துச்சிதம்பர அறப்பணி நிலையம் • அம்பிகை நடராசர் எழுந்தருளும் காட்சி • கால்கோள் விழாவின் ஆரம்பமும் வீதிவலமும் • அன்னதான நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் • 2004 தேர்த்திருவிழா வின்போது தர்மபுர குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் அமைச்சருக்கு ஆசி வழங்கல்









• சௌந்தராம்பிகை சமேதர சுந்தரேசப் பெருமான் திருக்காட்சி • 2004 தேர்த்திருவிழா • எம்பெருமான் தேருக்கு எழுந்தருளுதல் • சித்திரத்தேர் வடிவமைப்பு • கால்கோள் விழா • 4. 11. 2005 சித்திரத்தேர் உதிரிப்பாகங்களை தி. மகேஸ்வரன் (பா. உ) கையளித்தல்













• தேர்த்திருவிழாவிற்கு எழுந்தருளும் சௌந்தராம்பிகை, சுந்தரேச பெருமான் • அன்னதான நிகழ்வு
• திருவாவடுதுறை ஆதீன சுவாமிகளுடன் நல்லைஆதீன முதல்வர் மற்றும் தி. மகேஸ்வரன் (பா. உ) அவர்களும் ஈழத்துச் சிதம்பரத்தினை வலம் வருதல் • கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வர ஆலயத்தில் திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு ஆசி வழங்கல்

# திருத்தலம்

# ஈழத்துச் சிதம்பரம்

1. சுவாமி பெயர் : சுந்தரேசுவரர்
2. அம்பாள்பெயர் : சௌந்தராம்பிகை
3. தலவிருட்சங்கள் : அரசு, வன்னி, இருப்பை
4. தீர்த்தங்கள் : பரமானந்தகூபம், சித்தாமிர்தவாவி, தூர்வாசசாகரம்

## கும்பாபிஷேகம்

5. சுந்தரேசுவரர் மற்றும்

| | |
|---|---|
| பரிவார மூர்த்திகள் | : 1848 , 19-03-1903, 26-01-1934, 16-11-1950, 10-07-1970, 07-06-1998, 08-12-2003 (இக் கும்பாபிஷேகங்கள் நாவாலி சிவஸ்ரீசாமி விஸ்வநாதக்குருக்கள் தலைமையில் நிகழ்ந்தது) |
| ஐயனார் | : 1825, 06-09-1929 ( இரண்டாவது கும்பாபிஷேகம் ) |
| நடராஜர் | : 23-4-1908 |
| நவக்கிரகங்கள் | : 27-11-1931 |

# ஈழத்துச் சிதம்பரம் தொடர்பான நூல்கள்

1. திண்ணபுர அந்தாதி
   நூலாசிரியர் : கார்த்திகேயப் புலவர் (1819 – 1898)
   உரையாசிரியர் : கலாநிதி சொ. சிங்காரவேலன்
2. திண்ணபுரத் திருப்பதிகம் : த. நாகமுத்துப் புலவர்
3. திண்ணபுர ஊஞ்சல் : த. நாகமுத்துப் புலவர்
4. திண்ணபுர வெண்பா
   நூலாசிரியர் : ச. பஞ்சாக்ஷரக் குருக்கள்
   உரையாசிரியர் : பண்டிதர் க. மயில்வாகனனார்
5. திண்ணபுர ஊஞ்சல் : ஆசிரியர் வித்துவான் மு. சபாரத்தின ஐயர்
6. திண்ணபுர சுந்தரேசுவரர் பதிகம் : ஆசிரியர் அருட்கவி சீ.விநாசித்தம்பி
7. ஈழத்துச் சிதம்பர புராணம்
   நூலாசிரியர் : கவிசிந்தாமணி, புலவர்மணி, பண்டிதர் சோ. இளமுருகனார்
   உரையாசிரியர் : பேருரையரசி, பண்டிதை இ. பரமேசுவரி
   பதிப்பாசிரியர் : சிவஸ்ரீ புலவர்மணி Dr. க. வைத்தீஸ்வரக் குருக்கள்
8. திருமுறை மலர்கள்
9. கும்பாபிஷேக மலர்கள்
10. திண்ணபுரத் திருச்சதகம் : ஆசிரியர் சி. பொன்னம்பலம் B.A.
11. திண்ணபுரச் சுந்தரேசுவரர் வரலாறு
    : ஆசிரியர் திரு. சு. முருகேசு (திருப்பணிச் சபைத் தலைவர்)
12. ஈழத்துச் சிதம்பரம்
    வரலாற்றுச் சுருக்கம் : திரு. கே.கே. சுப்பிரமணியம் (ஜே.பி)
13. காரைநகர் திண்ணபுர மான்மியம்: திரு. இ. வைத்திலிங்கம்– 1960
14. ஈழத்துச் சிதம்பரம் : சிவஸ்ரீ ச.கணபதீசுவரக் குருக்கள்
15. ஈழத்துச் சிதம்பர குறவஞ்சி : சிவஸ்ரீ ச. வீரமணி ஐயர்
16. ஆண்டிகேணி ஐயனாரின் அற்புத வரலாறும்
    ஆண்டி முனிவர் புராணமும் : சி. பொன்னம்பலம் B.A.
17. திண்ணபுரத்திருக்கூத்தன் திருவிளையாடல்
    : கே. கே. சுப்பிரமணியம் – ஜே.பி

# அன்றொருநாள் ஈழத்துச் சிதம்பரத்தில்!

*சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள்*
*ஈழத்துச் சிதம்பரம்*

"செயற்கரிய செய்வார் பெரியர்" என்பது திருவள்ளுவர் திருவாக்கு.

ஈழத்துச்சிதம்பர ஸ்தாபகராகிய அம்பலவி முருகர் பெரியார் வரிசையில் முன்னிற்பவர்.

அவரின் சம்மதத்துடன், பார்வதி என்ற பெண், கோயிலுக்குச் சொந்தமான தோட்டத்திற் புல்லுச் செதுக்கிக் கொண்டிருக்கிறாள்.

தேங்காயொன்று தென்னை மரத்திலிருந்து அவளுக்கு அண்மையில் விழுகிறது. பார்வதி எழுந்து நின்று நான்கு பக்கமும் மிகக் கவனமாகப் பார்க்கிறாள்.

எவரையும் காணவில்லை.

தேங்காயை எடுத்துப் புல்லுக் கடகத்துள் வைத்து, அதன்மேல் புல்லைப் போட்டுத் தேங்காயை மறைத்துவிடுகிறாள்.

பின்னரும் புல்லுச் செதுக்குகிறாள். செதுக்கிய புல்லையும் எடுத்துக் கடகத்துள்ளே போட்டுக்கொண்டு வீட்டிற்குப் போக எழுந்து வருகிறாள்.

கோயில்மணி "டாண், டாண்" என்று கேட்கிறது.

உடனே, புல்லுக் கடகத்தை ஓர் இடத்தில் வைத்து விட்டுச் சுவாமி தரிசனஞ் செய்யக் கோயிலுக்குள்ளே செல்லுகிறாள்.

அவள் போனபின்பு, அம்பலவி முருகரின் ஆப்த நண்பனும், கோயிற் பாதுகாவலனுமாகிய 'கூழையன்' என்ற நாகபாம்பு புல்லுக்குமேலே ஏறிச் சுருண்டு கொண்டு உல்லாசமாகப் படுத்துக்கொண்டது.

பூசை முடிந்ததும், விபூதி வாங்கிப் பூசி, சந்தனப் பொட்டு இட்டுக் கொண்டு மிகுந்த குதூகலத்தோடு புல்லுக்கடகத்தடிக்கு வருகிறாள் பார்வதி.

புல்லுக்கு மேலே பாம்பு படுத்திருப்பதைக் கண்டதும் திடுக்குறுகிறாள்.

அவள்சத்தம் செய்கிறாள்; மணலை அள்ளிப் பாம்பின் மேலே வீசுகிறாள்; தடியொன்றினாற் கடகத்திலே தட்டுகிறாள்

பாம்போ அசையவில்லை.

சிறிது தூரத்துக்கப்பால் அம்பலவி முருகர், தம்மையே மறந்த நிலையில் திருவாசகத்தைப் பாடிக் கொண்டிருக்கிறார்.

"ஐயா, புல்லுக்கடகத்திற் பாம்பு படுத்திருக்கிறது; துரத்திவிடுங்கள்."

திருவாசகத்தில் ஈடுபட்டிருந்த அம்பலவி முருகருக்குப் பார்வதியின் சொற்கள் காதுகளில் ஏறவில்லை.

பின்னர் அம்பலவி முருகருக்குக் கிட்டச் செல்லுகிறாள் பார்வதி.

"ஐயா, பாம்பு புல்லுக்கடகத்திற் கிடக்கிறது......"

பழைய நிலைதான்.

இரண்டு நாழிகைகள்வரை கழிந்துவிட்டன.

அம்பலவிமுருகரின் திருவாசகப்படிப்பு முடிந்து விட்டது.

"ஐயா, நான் நீண்ட நேரமாக இங்கே நிற்கிறேன்."

"என்ன சமாச்சாரம்?"

"கடகத்திலுள்ள புல்லுக்குமேலே பாம்பு படுத்திருக்கிறது. துரத்திவிடுங்கள்."

"நீ ஏதோ பிழை செய்துவிட்டாய்!"

"நான் ஒரேஒரு தேங்காய்தான் எடுத்துப் புல்லால் மறைத்து வைத்திருக்கிறேன்."

"தேங்காயை மெல்ல எடுத்து வெளியே போடு."

"கடகத்துக்குள்ளே தேங்காய்; தேங்காய்க்கு மேலே புல்லு; புல்லுக்கு மேலே பாம்பு. எப்படி ஐயா தேங்காயை எடுப்பது?"

"கூழையா, இறங்கிக் கீழேவா."

கூழையன் புல்லுக் கடகத்தைவிட்டுக் கீழே இறங்கி ஊர்ந்து அப்பாற் செல்லுகிறது.

பார்வதி தேங்காயை எடுத்துச் சுவாமி வாயிலில் வைத்துவிட்டுப் புல்லுக்கடகத்துடன் வீட்டுக்குப் போகிறாள்.

❀ ❀ ❀ ❀

உ

# ஈழத்துச் சிதம்பர சிவாச்சாரியார் பரம்பரை

*சிவஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள்*

**1864**ஆம் ஆண்டில் ஜனனமான சிவஸ்ரீ சு. சரவணபவக் குருக்கள் வியாவில் ஐயனார் கோவில், மணற்காடு முத்துமாரி அம்பாள் கோவிலும், பின்னர் ஈழத்துச் சிதம்பர நித்திய நைமித்திய பூஜையிலும் கடமையாற்றி வந்தார். இவருடைய மகன் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் (10/03/1988) 64 ஆண்டுகள் பிரதம சிவாச்சாரியாராக அல்லும் பகலும் பணிபுரிந்தவர். இவர் திருக்கேதீஸ்வர குருகுல பஞ்சாயத்து உறுப்பினரும், பிராமணகுரு சமூகசேவா சங்கபோசகரும், ஈழத்துச் சிதம்பர நூல் ஆசிரியரும் ஆவார்.

இவருடைய மகன் சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் 17-7-1911ல் பிறந்தவர் 58 ஆண்டுகள் பிரதம சிவாச்சாரியாராக மகத்தான சேவை புரிந்தவர். இவர் காலத்திலேயே இவருடைய மருமகன் சிவஸ்ரீ வி. ஈஸ்வரக்குருக்களை பிரதம சிவாச்சாரியார் ஆக்கி கோவில் பாரம்பரியத்தை தொடர்ந்து காப்பாற்ற வழி செய்தார். இவருடன் இப்பொழுது மருமகன் சிவஸ்ரீ கு. காண்டீபக்குருக்கள் உறுதுணையாக இருந்து ஆலயத்தின் கிரியைகளைச் சிறப்பாக நடாத்தி வருகிறார்கள்.

# கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் வழிபட்ட தலம்
# ஈழத்துச் சிதம்பரம்



எங்கள் யோகர் சுவாமிகள் பல முறை 1924 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பிரசித்தி பெற்ற ஈழத்துச் சிதம்பரம் எனும் இத்தலத்துக்கு வருகை தந்து தரிசித்து உள்ளார்.

1924இல் காரைநகர் அஞ்சல் அலுவலக அதிபராக பணியாற்றியவர், சுவாமியின் பெரும் பக்தர் அங்கும் வந்து தங்கிச் செல்வதும் வழக்கம். சிவஸ்ரீ சு. சரவணபவக் குருக்கள் (செல்லக் குருக்கள்) சிவன் கோவில் வடக்கு வீதியில் வசித்தவர். காலையில் சுவாமிகள் எழுந்தருளி திருவாசகம் படிப்பார்கள். சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக் குருக்கள், மகன்மார்கள் சிவஸ்ரீ க. மங்களேசுவரக் குருக்கள், சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து திருவாசகம் பாராயணத்தில் ஈடுபடுவார்கள்.

சுவாமிகள் வழிபடச் சென்றபொழுது அங்கு ஈழத்துச் சிதம்பர கோயில் எஜமானாகிய திரு.சி.துரையப்பா அவர்களிடம் கோயிலை சுட்டிக் காட்டி இவ் ஆலயம் ஒரு பிரபல்யமான ஆலயம் இதனைக் கூத்துக் கொட்டகை ஆக்கிவிடாதீர்கள் என்று ஆணையிட்டார். சுவாமிகளின் ஆணை இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருவது உளத்திற்கு உவகை அளிக்கிறது.

## சீஷர்கள்



சற்குரு சிவசுப்பிரமணிய சுவாமி 1927 – 2001
சற்குரு போதிநாத வேலன் சுவாமி [ஹவாய்]

# வீடுபேறு தரும் ஈழத்துச் சிதம்பரம்

வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள்
(திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா)

**கா**ரை ஊரில் ஆறுகள் இல்லாத குறையைப் போக்கி நிற்பது அந்நாட்டு மக்களின் காரை நாட்டு மக்களின் ஒழுக்காறு என்றால் அது மிகையாகாது. ஆம் ஆறுமுக நாவலர் என்ற மலை அவரிடத்து இருந்து எழுந்த ஊற்றாம் சைவ ஒழுக்கம் என்ற ஆறு தமிழகம் தொட்டு ஈழம் வரை பாய்ந்து ஒரு கிளை காரை நாட்டுக்கு வருகிறது. அம்மக்கள் அந்த சைவநெறி என்ற ஒழுக்காற்றினைக் கடைப்பிடிக்கின்றார்கள் – இப்படிக்கூறும் ஈழத்துச் சிதம்பர புராணம் இதோ அப் பாடல் :–

*நல்லை நாவலன் நன்மலை ஊற்றெழுந்து*
*தொல்லையில் பதியெங்கணும் பாய்ந்து*
*இல்ல மென்கிளை யுள்ளொன்றிச் சீர்ப்பதி*
*புல்லி யெங்கும் புகுந்தது பேசுவாம்.*

இத்தகைய சிறப்புடைக் காரை நாட்டில் எழுந்தருளியுள்ள ஆடல் வல்லானைச் சிதம்பரத்து நடராசனாக வழிபடுவர். நம்மக்கள் தில்லை நடராசனை நினைந்து வழிபாடு செய்யும் இடம் இதுவென்பதால் இது ஈழத்துச் சிதம்பரம் ஆயிற்று. பனித்த சடை, அங்கே வேகங்கெடுத்து ஆண்டகங்கை. மறுபுறம் அவன் பாதுகாப்புக் கொடுத்த பிறை வளைத்து நெரித்த புருவம் பவளம் போன்று சிவந்த மேனி அம்மேனியில் பால் போன்ற வெண்ணீறு நெற்றிக்கண் நீலகண்டம்.

படைத்தல் தொழிலைக் குறிக்கும் உடுக்கை. அவன் கையில் அழித்தல் தொழிலைக் குறிக்கும் நெருப்பு. காத்தல் தொழிலைக் குறிக்கும் அபயகரம் அருளல் தொழிலைக் குறிக்கும். தூக்கிய திருவடி மறைத்தல் தொழிலைக் குறிக்கும், ஊன்றிய திருவடி ஐந்தொழிலைக் குறிக்கும் சிவநடனம் சிவகாம சுந்தரி அம்மையை நோக்கியவாறு தென்திசை பார்த்து ஆடும் கூத்தனின் வாயிலோ புன்சிரிப்பு. இதுவே ஆனந்தக் கூத்து.

*குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல்*
*மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்த*
*பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே*
*இந்த மாநிலத்தே*

தில்லை நடனத்துக்கு உள்ள இதே சிறப்பினை ஈழத்துச் சிதம்பர நடராசரின் நடனத்துக்கும் இருப்பதாக ஒரு பாடல்.

*ஓங்காரமே நல்திருவாசி உற்றனில் நீங்கா*
*எழுத்தே நிறைசுடராம் – ஆங்காரம்*
*அற்றார் அறிவர் அணியம்பலத் தான் ஆடல் இது*
*பெற்றார் பிறப்பற்றார் பின்.*

மக்களுக்கு வீடுபேறு தருவது சிதம்பரம் என்பர். அவ்வாறே தன்னை வழிபடும் அடியார்கள் பிறவிப் பெருங்கடல் கடக்க உதவுவது, அவர்கட்கு வீடுபேறு தருவது ஈழத்துச் சிதம்பர நடராசர் வடிவம்.

ஈழத்துச் சிதம்பரத்தில் ஆனி உத்தரம் மார்கழித் திருவாதிரை விசேட வழிபாடு நடைபெறுவதுண்டு. ஆடிப் பூரத்தில் தீர்த்தமும் அதற்கேற்ற திருவிழாவும் அம்பிகைக்கு இடம்பெறும். நடராசப் பெருமானுக்கு ஆறு அபிடேகங்களும் சிறப்பாக நடைபெறும்.

ஈழத்துச் சிதம்பர ஆலய நிர்மாணப் பணிகளில் இரு எருதுகளும், இரு நாகங்களும் பெரும்பணியாற்றியதாக அறிகிறோம். இரு எருதுகள் பொருட்களைச் சுமக்க இரு நாகங்கள் கோயில் கட்டடப் பொருட்களைக் காவல் காத்த அதிசயம் அறிகிறோம்.

*பெரியார் தமது திருப்பணிக்கே*
*பெரிதுந் துணையாம் படியிருக்கத்*
*திருவாயிரண்டு காளைகளைச்*
*சேடன்போல வளர்த்தனரால்*
*உருவார் கந்தன் சங்கரனென்று*
*உயர்ந்த பெயரால் அழைத்தவழி*
*மருவா நின்று பணிகேட்டு*
*மைந்தர்போல் வந்தணையும்.*

*நீலகண்ட நாராயணனையி ளித்தலும்*
*வாலன் கூழையன் என்றிரு நாகம்*
*கோலம் கோயில் பொருட்குறு காவலாய்ச்*
*சால நின்று சரித்திடும் என்பரால்*

இவ்வாறு சிதம்பர புராணப் பாடல்கள் கூறும்.

அதுமட்டுமா, இத் தலத்தின் சிறப்பினை எடுத்துக் கூறும் அழகிய, பொருள் பொதிந்த இரு பாடல்களைப் பாருங்கள்.

*மண்ணவரும் விண்ணவரும்*
*மகப்பேறு வேண்டி நின்றார்*
*கண்ணுதலும் தானும் இளம் காதலுமாய்க்*
*கலந்து நின்ற*
*எண்ணும் இந்த வடிவத்தை இறைஞ்சுக*
*என்றும் இமயவல்லி*
*கண்ணுக்கு வாய்மலர்ந்த கட்டுரையும்*
*உண்டு அன்றோ!*

*சக்தியுமை அருள்வடிவம்*
*சார்சிவமும் அவ்வடிவம்*
*சித்திரவேல் இளமுருகன் அருள்வடிவம்*
*சித்தத்தால்*
*எத்திசையும் எவ்வுலகும்*
*இயங்கிவரும் மன்னுயிர்க்கு*
*முத்தியின்பம் தந்தருளும்*
*மூர்த்தியென முடிந்திடுமால்.*

இக் கோயிலில் ஆண்டுதோறும் மார்கழி, பங்குனி, ஆடி ஆகிய மூன்று மாதங்களில் தேரோட்டம் நிகழும் மகோற்சவத்தில் தேரோட்டம் ஒடுக்கத்தைக் குறிப்பது. தேர்த்திருவிழா.

ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் தேர் வெள்ளோட்டம் 10/01/2006 ஓடுவது பெரு மகிழ்வைத் தருகிறது. தேரோட்டம் ஊர் மக்களுக்கும், சைவத் தமிழ் மக்களுக்கும் ஒரு புதிய நம்பிக்கையைத் தருவதுடன் அவர்கள் வாழ்வில் அமைதியும் ஆனந்தமும் ஏற்பட வழிவகுக்க திருகோணமலை பத்திரகாளி அம்பாளின் அருளைப் பிரார்த்திக்கிறேன்.

இத் தேர்த் திருப்பணிக்குப் பலவழிகளிலும் பணியாற்றிய ஸ்தபதி உட்பட அனைவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. த. மகேஸ்வரன் உட்படச் சகல சைவத் தொண்டர்களுக்கும் எனது ஆசிகள்.

*அக்காலத்தில் இவ்வாலயத்தில் இரண்டு நாகங்களும் வாழ்ந்து வந்தன. அம்பலவி முருகர் அவற்றினை "கூழையன்" "வாலன்" என்று அழைத்து வந்தார். அவை கோவிலில் சர்வசாதாரணமாய் உலாவி வந்தன. பிறருக்கு எவ்வித இடையூறும் விளையாமல், களவு முதலியன நடைபெறாமல் அவை பாதுகாத்து வந்தன. இவையெல்லாம் அம்பலவி முருகரிடம் விளங்கிய திருவருளின் சாயலாக மக்கள் கருதி வந்தார்கள்.*

# காரைநகரில்
# ஒட்டிப்பிறவா இரட்டையர்கள்

வித்துவான் F. X. C. நடராசா

**கா**ரை நகரையோ அல்லது அங்குவாழும் மக்களையோ வாசகர்களுக்கு அறிமுகஞ்செய்து வைத்தல் கொல்லதெருவில் ஊசி விற்பதை ஒக்கும். காரை நகரைப் பற்றியும் அங்கு வாழும் மக்களைப் பற்றியும் யாவரும் அறிவர் எனினும் சம்பிரதாய முறைக்கு எடுத்தியம்புதல் ஆவசியகமாகின்றது.

காரைநகரில் வாழும் மக்கள் யாவரும் சமயத் தாற் சைவர்களே. சைவாசார சீலராய், பத்தி நெறியிற் திளைத்தவராய், விடாப் பிடியாகத் தூய சைவ நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுபவராய் மக்கள் வாழ்ந்து வருவதைக் காண்டல் கூடும். வடபால் காரை நகர் முழுவதற்கும் சொந்தமான சிவன் கோவில் பெருந்தலமாக ஈழத்துச் சிதம்பரமெனச் சைவநன் மக்களாற் போற்றப்படத்தக்க வண்ணம் அமைந்து கிடக்க தீவின் பாகங்களாகிய குறிச்சிகள் தோறும் கோயில்கள், தெருக்கள் தோறும் கோயில்கள், வீடுகள் தோறும் கோயில்கள் என்ற பாங்கரில் திரும்புமிட மெல்லாங் கோயில்கள் காட்சியளிப்பதைக் காண்டல் கூடும். பேரும் புகழும் வாய்ந்த சிவன் கோவில் ஒரு புறமிருக்க, சிவகாமியம்மன், பிள்ளையார், முருகன் முதலானோர்க்குத் திருக்கோயில்கள் பல எழுப்பப்பட் டிருக்கின்றன. காளி, வைரவர், ஐயனார், கண்ணகை முதலிமார், அம்மன், நாச்சிமார் முதலாந் தெய்வங் களுக்குங் கோயில்கள் உள. ஆகவே காரைநகர் திருக் கோயில் இல்லாத் திருவில்லூருமல்ல; திருவெண்ணீ றணியாத் திருவில்லூருமல்ல. வீடுகள் தோறும் தேவார திருவாசங்கள் ஓதுவதைத் தெருநீளங் கேட்கலாம். கொட்டு மத்தளம் முழங்க, இன்னிசைச் சல்லரி தாளமிட சங்குநாதம் ஒலிக்கப் பாட்டுக் கச்சேரிகள் நடைபெறுவதைக் கோவில் வீதிகளெங்குங் கேட்கலாம்.

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படுகின்ற சிவன் கோவில் காரைநகரின் ஈசானத்தில் பரந்தகன்ற பெரு வெளியில் அமைந்துகிடந்து ஊருக்குப் பெருந் திருவாக விளங்குகின்றது. இங்குள்ள கோயில்களிற் காலத்தாற் பழமையானது; நீள அகலத்தாற் பென்னம் பெரியது. கோயிலின் மூன்றாம் வீதிபோற் பெருத்த வீதி யாமெங்கணுங் கண்டதில்லை.

இக்கோயில் ஆதியில் ஐயனார் கோயில் என்றே அழைக்கப்பட்டது. ஏனெனில் ஐயனார் கோயிலே முதலிற் தோன்றியதாகும். இப்பொழுதுங் கோயிலுக்குட் பிரவேசிக்கும்போது ஐயனார் வாசல் வழியாகச் சென்று முதலில் ஐயனாரை வணங்கிப் பின்னர் சிவனை வணங்கி வலம்வந்து சிவன் வாசலால் வெளிவர வேண்டுமென்ற விதி பண்டுதொட்டு இருந்து வரு கின்றது. திருவிழாக் காலங்களில் ஏறுபடி மேளங்கள் வந்தால் அவர்கள் முதலில் ஐயனார் வாசல் வழிச் சென்று அவர் வாசலிற் சேவித்த பின்னரே தங்கள் சேவிப்பினைத் தொடங்குவர். ஐயனார் கோயில் தனித் திருந்த காலத்தே அவரை வணங்கித் திரும்பி முதுகு காட்டி வருதல் வழக்கமில்லையென்று பெரியோர்கள் சொல்லக் கேள்வி. ஐயனாரின் அட்டகாசம் அக்காலத்தி லதிகமென்றுஞ் சிவனுக்கு ஆலயம் எடுத்தபின் அடக்கம் என்றுங் கூறியுள்ளார். இதில் உண்மையுண்டு. ஆகவே முதலில் ஐயனார் கோவில் வரலாற்றை முன்னர்க் கூறுவாம்.

ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தே சேதுபதி இராச்சியமும் இராமேசுவரமும் யாழ்ப்பாண அரசுடன் தொடர்புற்றிருந்தமைக்குச் சான்றுகள் பல உள. ஆரியச் சக்கரவர்த்திகள் நாணயத்தில் "சேது" என்ற சொல் பொறிக்கப்பட்டிருந்தது. இதனை அவ்வகைக் காசுகளிற் பார்க்கலாம். இத்தொடர்பு காரணமாக அங்குள்ளார். இங்கு ஈழம் வருதலும் இங்குள்ளார் அங்கு தென்னகத் தமிழகஞ் சேறலும் பெரு வழக்கமாயிற்று. சேதுக் கரையினைக் காவல் புரிந்த வம்மிசத்தின் வழித் தோன்றலாகிய "ஆண்டி" * என்னும் பெயரிய பெரியார் ஒருவர் காரை நகருக்கு வருவாராயினார். இவர் வியாவில் ஐயனார் கோயிலை வந்தடைந்து அங்குக் கோயில் அருச்சகராயிருந்த தாமோதர ஐயர் அக்கிர காரத்திற் தங்கியிருந்தார். இருவரும் அதாவது ஆண்டியும் தாமோதர ஐயரும் ஒட்டிப்பிறவா இரட்டைய ரானார்கள்.

ஆண்டி இங்குற்ற காலத்தில்[2] ஐயனார் கோயில் சீரற்ற நிலையிலிருந்தது. இக்கோயிலை வெடியரசன்[3] சந்ததியினர் கட்டியெழுப்பி பூசிந்து வந்தனர் என்ற ஐதிகக் கதையுண்டு. வெடியரசன் சந்ததியினராகிய முற்குகர் "பத்தினித் தெய்வமாகிய கண்ணகியை வணங்கவே மாட்டோம்" என்று மீகாமனுக்குக் கூறிய சூளுரைக்கு இணங்க ஐயனார் அன்பர்களானார்கள்.

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் கட்டப்பட்ட இக்கோயிலை முதலிற் போர்த்துக்கீசர் இடிக்க முயன்றனர். கோயிலின் சில பாகங்களை இடித்துப் பாழாக்கினர் எனினும் முற்றாக இடித்தார் களல்லர். ஆனால் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இடிக்கப்படலாயிற்று. போர்த்துக்கீசரிடமிருந்து கைப் பற்றிய கோட்டைகளைத் திருத்தவும் புதுப்பிக்கவும் விரும்பிய ஒல்லாந்தர் பல சைவக் கோயில்களை இடித்துக் கல்லுகளை எடுத்துச் சென்று தங்களுக்கு வேண்டிய கட்டிடங்களைக் கட்டலாயினார். ஆமன்கீல் எனுங் கடற்கோட்டையைக் கட்ட பொன்னாலைத் திருமால் கோயிலும் வியாவில் ஐயனார் ஆலயமும் அழிக்கப்பட்டதாகச் சரித்திராசிரியர் கூறுவர். அவ்வாறு ஐயனார் கோயில் அழிக்கப்பட்டபோது அங்குவதிந்த ஆண்டி ஐயனார் விக்கிரகத்தை எடுத்துப் போய் திண்ணைப்பிட்டி என வழங்கும் தினகரன் பிட்டி[4] யண்மையிலிருந்த கேணிக்குள் மறைத்து வைத்தனர். அங்கு ஆண்டி இருக்கவுந் தொடங்கினர். பாங்கரில் ஓர் அரசமரமுமிருந்தது. அந்தக் காலத்தில் அரசமரங்கள் தோறும் வைரவ சூலம் வைப்பது பெரு வழக்கா யிருந்தது. கி. பி. ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் இந்தியத் தென்னகத்தில் சைவ நாயன்மாரின் ஆதிக்கம் பெருகிய காலத்திற் சமயகலாபனைகள் ஏற்படப் புத்தர் சமணர் ஆதிக்கம் வீழ்ச்சியடையலாயிற்று. மக்கள் சைவ சமயத்தைத் தழுவலாயினர். அதே காலங்களில் இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் சமய கலாபனை ஏற்படப் புத்த சமயத்தவர்களாயிருந்த தமிழர்கள் சைவசமயத்தினர்களானார்கள். அதன் பின்னர் அரசமரங்களினடியில் வைரவ சூலங்கள் வைத்து வணங்கலாயினர். இதே பிரகாரம் இங்குற்ற ஆண்டி வைரவ சூலம் ஒன்றினை அரசமரத்தடியிற் தாபித்தனர், பூசை வழிபாடுகளும் இயற்றுவாராயினர், ஐயனார் விக்கிரகம் வெளியே எடுக்கப்பட்டு வைரவ சூலத்தின் பாங்கர் வைக்கப்பட்டு வணங்கப்படலாயிற்று. இதனால் கேணி ஆண்டி கேணியானதுபோல் ஐயனாரும் ஆண்டி கேணி ஐயனாரானார். இன்னும் இந்த அரசமரம் சிவன் கோவில் இரண்டாம் வீதியிலே அக்கினி திசையிலிருப்பதைக் காணலாம். இதனால் வைரவ சூலமும் ஐயனார் விக்கிரகமும் ஒட்டிப்பிறவா இரட்டையரானார்கள்.

---

*ஆண்டி என்பது இவரது இயற்பெயரல்ல. ஆடிக்கோலங் கொண்டமையால் ஏற்பட்டது போலும். மணற்காட்டு மாரியம்மன்கோயிற் பூசிக்கும் மணியமொலியதாமோதர ஐயர் காலத்தவர். (1749)

ஆண்டி கேணி ஐயனாருஞ் சூலமும் மக்களின் பூசை வழிபாடுகளுக்கும் இலக்காகக் கோயில் பிரசித்தமாயிற்று. இஃதிவ்வாறு இருக்கின்ற காலத்தே அம்பலவி முருகர்[5] என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். பத்தியிற் சிறந்தவர்; சைவாசாரத்தில் கதித்தவர்; அடக்க ஒடுக்கம் நிறைந்தவர்; தரும சிந்தனையாளர். மரபாலுயர்ந்தவர்; களபூமியை வசிப்பிடமாகக் கொண் டவர்; மானா முதலியார் வம்மிசத்தில் வந்தவர். வாய்மை தூய்மை மெய்யன்புமிக்க அம்பலவி முருகர், இந்த ஐயனார் விக்கிரகத்திற்குத் தனியாகக் கோயில் கட்டி எழுப்பி நித்திய நைமித்திய வழிபாடுகளியற்ற விருப்பங் கொண்டு தமது பேரவாவினை நிறைவேற்றினர். இதனால் "அம்பலவி முருகன் வைத்தகல் மெய் யென்றால்" என்று மக்கள் இன்றும் சூளுரை கூறுவதைக் கேட்கலாம். சிலகாலஞ் சென்றபின் அம்பலவி முருகர் ஐயனார் உற்சவமூர்த்தியையும் கோயிலிற் பிரதிட்டை செய்வித்தனர். இதனால் ஆண்டியும் அம்பலவி முருகரும் ஒட்டிப்பிறவா இரட்டையரானார்கள்.

கோயிற் திருப்பணிக்காகவும் பூசைக்காகவும் கமக்காரரிடம் நெல்லுத் தண்டியும் வந்தார் அம்பலவி முருகர். கமக்காரர் சிலர் இவரைக்கண்டு சலிப்பது முண்டு. "அம்பலவி முருகனும் வயிறு வளர்க்க வந்து விட்டான்" என்று வாயார வாழ்த்தியும் விட்டார்கள். இதனைக் கேட்ட அம்பலவி முருகர் அன்று தொடக்கம் சோறு சாப்பிடுவதை விட்டனர். உப்பின்றிச் சமைத்த இலைக்கறிகளையே உண்டுவந்தார். இதனால் கோயில் வளவில் முசுட்டை முல்லை அதிகமாக வளர்ந்தன. முசுட்டைதான் அம்பலவி முருகரின் பிரதான உணவாயிற்று. உப்பின்றித்தானுஞ் சாப்பிடக் கோயில் நிவேதனமும் அவ்வாறாயிற்று.

இஃதிவ்வாறிருக்கையில் சிவாலயம் ஒன்றினை எழுப்பவும் அம்பலவி முருகர் உளங் கொண்டனர்; கட்டினார்; சிவலிங்கமும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. பிரதிட்டா கும்பாபிசேகமும் நடைபெற்றது. இதனால் ஐயனார் கோயிலுஞ் சிவன் கோவிலும் ஒட்டிப்பிறவா இரட்டையரானார்கள். சோமாஸ் கந்த மூர்த்தியையும்[6] தாபிக்க நினைத்து தன் மகன் சண்முகத்தாருடன் இந்தியாசென்று தமது பொற் கடுக்கன்களையும் உருக்குவித்து வார்ப்பித்தனர். செவ்விதாக வார்ப்பு முடிந்தது. அம்பலவி முருகரின் ஆருயிரும் நீங்கியது. மகன் சண்முகத்தார்? சோமாஸ் கந்த மூர்த்தியைக் கொண்டுவந்து பிரதிட்டை செய்தனர். பின்னர் சண்முகத்தாரால் பரிவாரமூர்த்திகளாகிய விநாயகர் சுப்பிரமணியர் இவர்களுக்குங் கோயில் கட்டப் பட்டன. நடேசர் கோயிலும் சனீசுவரன் கோயிலும் இவர் காலத்திலேயே கட்டப்பட்டன. நடேசர் கோயில் கீலக வருடங்கட்டப்பட்டது. இது சம்பவத்தால் அம்பலவி முருகரும் சண்முகத்தாரும் ஒட்டிப்பிறவா இரட்டை யரானார்கள்.

நடராசா திருவுருவம் சிவன் கோவிலிலேயே வார்க்கப்பட்டது. இதனை வார்க்க உபகாரியாக இருந் தவர் மீசைக்காரன் சண்முகம் எனப்படுபவர். பேய்க்காசி வம்மிசத்தவர். இவருந் தமது கடுக்கனை உருக்கி நடேசர் உருவத்தை வார்ப்பித்தவர். சோழ புரத்துக் குருசாமி ஆசாரியர் இதனை வார்த்தபின் உருவ ஊர்வலம் 1907 ஆம் ஆண்டு நடைபெற்றும் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை. கும்பாபிஷேகத்திற்கான பொருள் சேரவில்லை. இது கண்ட மீசைக்காரன் சண்முகம் ஆறுமாத காலமாக அரிகண்டம் இட்டுக் கொண்டனர் என்பர். நடேசர் உருவம் ஏழெட்டு ஆண்டுகளாக அபிசேகம் செய்யும் வரை நெல்லுக்குள் வைக்கப் பட்டதாகவுங் கூறுவர். இக்காலத்தில் கோயில் மணிய மாக இருந்த மாசிலாமணி அவர்கள் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தனர்.

இவ்வகையில் விருத்தியடைந்த சிவன் கோவிலில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. அற்புதமாகத் தோன்றிப் பென்னம்பெரியதோர் கோயிலாக விளங்கிக் கொண்டி ருக்கும் இத்திவ்விய தலம் உருப்பெற உதவியாக இருந்தவர்கள் யாவரும் ஒட்டிப் பிறவா இரட்டையர்களாக

இருந்துள்ளார்களென்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்விரட்டையர்களை வரிசைப் படுத்திக் காட்டுவோம்.

ஆண்டியும் தாமோதர ஐயரும்.

வைரவசூலமும் ஐயனார் விக்கிரகமும்

ஆண்டியும் அம்பலவி முருகரும்[8]

கந்தன் சங்கரன் என்ற எருதுகள்

கூழையன், வாலன் என்ற நாக பாம்புகள்

அம்பலவி முருகர் சண்முகத்தார் – மணியம்

சண்முகத்தார் சின்னத்தம்பி – மணியம்

சின்னத்தம்பி மாசிலாமணி – மணியம்

மாசிலாமணி துரையப்பா – மணியம்


சரவணபவக்குருக்கள், கணபதீஸ்வரக் குருக்கள் [பெரிய குருக்கள், சின்னக்குருக்கள்]

சுப்பன் முருகன் –திருப்பணிக்காரர்

துரையப்பா முருகேசு – மணியம்

முருகேசு ஆண்டிஐயா – மணியம்.

அம்பலவி முருகன் – சுந்தரலிங்கம் [மணியம்]




10 – 07 – 1970 கும்பாபிஷேக மலரில் இருந்து........

# திருத்தேர்

# ஈழத்துச் சிதம்பரம்

பேராசிரியர் வேலுப்பிள்ளை இராமகிருஷ்ணன்
- அவுஸ்திரேலியா -

"கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே" எனும் மணிவாசகப் பெருமானது அமுத வாக்கை நினைவுறுத்துமுகமாகவே மார்கழித் திங்கள் இறுதிக் கட்டத்தில் தேர் உலா வெள்ளோட்டமும் நிகழ இருக்கின்றது.

"*அவம்*" என்பது ஆசாபாசங்களுக்கும் பலியாகி நம்மை அர்த்தமற்ற வாழ்க்கைக்குரியவராக்கி காலம் தரும் சந்தர்ப்பங்களைப் பொருட்படுத்தாது வீணாக்கி வைக்கும் அவமானத்துக்குரியதாய் இருக்கும். அவம் எனும் வாழ்க்கை முறைக்கு எதிர்மறை நிலையே "*சிவம்*" ஆகும். முத்தி நெறி அறியாத மூர்க்கரோடு வாழ விரும்பும் எம்மை விடுபட வைத்து (சித்த மலம் அறுவித்து) சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் என்பார் மணிவாசகர். இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் எனும் வைராக்கிய நிலையின் சுகம் கண்டதும், நன்றி உணர்வுடன் அவன் "*தாள் வாழ்க*" எனப் போற்றிய வண்ணமே வாழ முற்பட்டார். கண்காணிப்புத் தவறினால் சறுக்குவது நிச்சயம். பாடுதலும் பாடுபடுதலும் ஒரே பொருளைச் சுட்டும் சகல முயற்சிகளும் அவன் மீது வாழ்த்திப் பாடுவதாய் இருக்கும். சமூகமாய் வாழும் போது தன்னலம் அற்றதாய் கண்ணும் கருத்துமாக நிகழ்த்தப்படும் போது இறை பணியாய் செயல் திறன் கொண்டதாயும் பொது நலம் கொண்டதாயும் இருப்பதனால் சமூக வாழ்க்கை அர்த்தமுள்ள நிறைவுடையதாயும் பெரும் இன்பம் தருவதாயும் இருக்கும்.

சமூக வாழ்க்கை என்பதும் பல வகை உறவுகளைக் கொண்டது. தாய் தந்தை சுற்றத்தார், நண்பர்கள், தொழில் துறையில் அக்கறை, வாழ்க்கைத் துணைவியோடு இன்பமாய் வாழ்வதையே குறிக்கும் – அத்துவிதம் அல்லது இரண்டறக் கலந்த நிலை இதனையே ஞானி "*பற்றுக பற்றானை*" என்றார். இதனையே "*அன்பே சிவம்*" என்றனர் எமது மெய்கண்ட ஞானிகள்.

வாழ்க்கைக்குரிய சொத்தும் நம்பிக்கைச் சொத்தாக மதிக்கப்பட்டு குடும்பம் நடத்த இருக்கும் பெண்ணுக்குச் சீதனமாக வழங்கப்பட்டது. "*.......... உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம், உன் அடியார் தாள் பணிவோம், ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம் கணவராவார்........*" என நிபந்தனைக்குட்பட்ட மாப்பிள்ளை (ஏலம் போடப்பட்டவரல்ல) இதனால் பெண்ணுக்கே மனையை ஆட்சி செய்யும் உரிமை (மனை ஆள், இல் ஆள்). அச் சொத்தைக் கொண்டு தேடிய தேட்டமே குடும்பத்துக்குரியது. பக்குவமாக பாதுகாத்து எதிர் வரும் தலைமுறைகளிடம் ஒப்படைக்கும் கடமைக்குரியதாய் இருந்தது. சமூகம் இவ்வித இலட்சியங்களுக்கேற்ப நிறுவனங்களையும் அமைத்து மனித உறவுகளை புனிதமாக்கின, இவ்விதமாக வளர்த்தெடுத்த வழமைகளே சமூக வாழ்க்கையில் ஒழுக்கத்துக்கு உறுதி தருவதாய் இருந்தது. மன்னனும் மக்கள் கடைப்பிடிக்கும் வழமைகளை மதித்து நீதி பரிபாலனஞ் செய்தான். (இவ்வித சமூக ஒழுங்கு முறைகளை அழித்து ஒழிக்க ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் பெரும் முயற்சி எடுத்திருந்தார்கள். இதற்குப் பெருந்தடையாய் இருந்தது எமது கோயில்களும் வழமைகளும் என்றே கூறிவிடலாம்.

கோயில்கள் வாயிலாகவே சமூகமும் வாழ்க்கை வழமைகளும் பேணிப் பாதுகாக்கப்பட்டனவாக இருந்தன. விதிகளுக்கேற்ப பூசை முறைகள், பண் இசை, விரதங்கள், பொங்கல், கலை நிகழ்ச்சிகள் என பயம் கலந்த பக்தி. இறைவனுக்குப் படைத்ததையே இரு கைகளால் பிரசாதமாக ஏற்கப்படும். இதே கண்ணியம் வாழும் வீடுகளிலும், தொழில் துறைகளிலும்

கையாளப்படும். கருங்கக் கூறின் குல தெய்வமே சமூகப் பேரவையின் சபாநாயகராக இருந்தார் எனலாம். சமூகத்தில் ஒழுக்கத்தை நிலைநாட்ட குண்டாந்தடியோ துப்பாக்கியோ தேவைப்படாது. தலைவர்களுக்குத் தரப்பட்ட மதிப்பும் எத்தகைய ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து காட்டினார்கள் என்பதையே பொறுத்திருந்தது. இவ்விதமாக சமூக வாழ்க்கையை நெறிப்படுத்து வதனாலேயே கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என நாவலர் பெருமான் வலியுறுத்துவதாய் இருந்தது போலும்.

காரைநகர் கிராமம் ஒரு பெருந் தீவு. குறிச்சிக்குக் குறிச்சி குல தெய்வங்களுக்குக் கோயில்கள். ஆனால் இவற்றுக்கும் மேலால் சிவன் கோயில் சகலரையும் ஈர்த்து இணைத்து ஒன்று படவைத்த சக்தி வாய்ந்த திருத்தலமாக விளங்கி நிற்கின்றது. உலகிலுள்ள சைவ மக்களை சிதம்பரம் எவ்வாறு ஈர்த்து இணைப்பதாக இருக்கின்றதோ எமது சிவாலயமும் கிராம மக்களை அபிமானத்தோடு இணைய வைப்பதனால் பக்தர்கள் அதனை ஈழத்துச் சிதம்பரம் என அழைக்க முற்பட்டனர்.

குறுகிய மனப்பான்மை என்பதற்கில்லை. யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள புனித தலங்களை இணைத்துத் தரும் தனித்துவத்துள் அடங்கும் தனித்துவம் இது. வட இலங்கையிலுள்ள ஈசுவர ஆலயங்களால் வகுக்கப்படும் எல்லைக்குட்பட்டதே யாழ் குடாநாட்டினது ஆன்மீக வாழ்க்கை மேலும் விரிவடையும்போது செல்வச்சந்நதி தொட்டு கதிர்காமம்வரை முருகனுக்கு ஆலயங்கள், வல்லிபுரம் தொட்டு தேவேந்தர முனை வரை விஷ்ணு ஆலயங்கள், மத்திய மலைநாட்டில் கண்டி நகரத்தில் சிவாலயம் (நாத தேவாலே), அம்மன் ஆலயம் (பத்தினி தேவாலே), கதிர்காமக் கந்தனுக்கு (கதிர்காம தேவாலே), விஷ்ணு தேவாலே என்றும் நாடு முழுவதும் பிள்ளையாருக்கு விக்கிரகங்கள் முழு நாட்டையே புனிதப்படுத்துவதாக இருக்கின்றது. இறுதி நிலையே இமயந் தொட்டு கதிர்காமம் வரையுள்ள ஆலயங்கள் தீர்த்தங்கள் என யோக மார்க்கத்தையும் (Mysticism) பக்தி மார்க்கத்தையும் (Devotionalism) கொண்ட இணைப்பைக் காட்டுகின்றன. இப்பரந்த புவி எல்லைக்குள் பல்லாயிரக்கணக்கான வருடகாலமாக விஞ்ஞானம், தத்துவ சாஸ்திரங்கள், நுண்கலைகளென வைதீக அவைதீக ஆன்மீகப் படைப்புகள் ஒரு தனித்துவமுள்ள சிறப்பான கலாச்சார உலகையே காட்டுவதாக இருக்கின்றது.

முன்னர் குறிப்பிட்ட பரந்த கலாச்சார பின்னணியிலேயே ஈழத்துச் சிதம்பரமும் தன் ஆன்மீகச் சிறப்பைப் பெறுகின்றது. ஈர்க்கும் சக்தியோ அன்னை பராசக்தியினூடாக பரம்பொருள் தன் திருவிளையாடல்களை நிகழ்த்துவதாக இருக்கும். குழந்தைப் பருவத்தில் தாயார் அன்புடன் வளர்த்தெடுத்த தியாகச் செயல்கள் சக்தியினூடாக அவனது திருவிளையாடல்களை உணர்த்த வைக்கும். இதுவே சிவதாண்டவம் (The Dance of Siva). தில்லை கூத்தன் நிகழ்த்துவதே படைப்பு. "யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்தனால்......" என்றார் அருணகிரிநாதர். "தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு" என்றார் திருமூலர் பெருமான் இதுவே தமிழ் தேசியம்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் அம்மனின் அகோர நிலையைத் தணிக்க ஒரு மாதம் விரதம் இருந்து இடைவிடாது அவள் புகழ் பாடும் "குளுர்த்தி விழா" நடைபெறும்.

எமது கிராமத்திலும் மார்கழி மாதத்தில் பக்தர்கள் விரதம் இருந்து சிவபிரானுக்கு விழா நடத்துவார்கள். இறுதிக் கட்டத்தில் நடராச அபிஷேகம். கனக சபையின் சாயலில் பக்தர்களும் திருக்குளத்தில் தீர்த்தமாடி தில்லைக் கூத்தனை குளிர வைக்கும் கிரியை நிகழ்ச்சியை காட்சியாய் நின்று கண்டுகளிப்பர். சாட்சி நிலையே அறிவின் உச்ச கட்டம் ஆவேசங்களுக்குப் பணியாது இறை பணியென கடமை புரிவது. இதுவே தமிழ் தேசியம்.

சிறு சிறு சமூகங்களால் வாழ்ந்து பெரியார்கள் உருவாக்கித் தந்த வழமைகளால் நெறிப்படுத்தப் பட்டதனாலேயே காவு கொண்ட உள்ளங்கள் அன்பால் இணைந்து மதிக்கத்தக்கவராய் வாழ்ந்து

காட்டியதனாலேயே பின் தொடரும் தலைமுறையினரும் பாரம்பரியத்துக்கு ஏற்ப சமூகமாய் வாழ முற்பட்டனர். இதனால் பிறந்ததுவே மண் அபிமானம். அயல் சமூகங்களோடு தொடர்பு கொண்டு பெருகியதே பெருஞ் சமூகம். ஆனால் சிறு சமூகங்களாய் வாழ்ந்து பெற்ற கட்டுப்பாட்டை இழக்காத நிலை. உழைப்பும் மண் தந்து உதவிய வளத்தைப் பொறுத்தது. உழைத்ததை பகிர்ந்து உண்டார்கள். வளமும் மண்ணுக்குரியது என்பதை உணர்ந்ததனால் தேவைக்கு மிஞ்சியதை திருப்பணிக்கு என ஒதுக்கிவைத்தார்கள். இறை பணியெனச் செய்யும் போது சகலரும் நன்மை அடையக் கூடியதாக இருக்கும். பணியும் நிறைவுள்ளதாகவே காட்சிக்கு விடயமாய் அமையும் நன்றி கூறி வாழ்த்தச் செய்யும்.

இக்கட்டுரை, நான் வாழ்ந்த என்னையும் ஒரு மனிதனாக ஆக்கித் தந்த சமூகம் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்றது எனும் வேதனை தரும் மன நிலையில் வரையப்படுகின்றது. உடன் நின்று உழைக்க முடியாத குற்ற உணர்வு மட்டுமல்ல, வசதியான அந்நிய நாடொன்றில் வாழ்ந்துகொண்டு கருத்துக் கூற முற்படுவது கோழைத்தனம் கலந்த போலித்தனம் என்பதையும் உணர்வேன்.

துன்பம் வரவேற்கத்தக்கது என்றார் யோகர் சுவாமிகள். துன்பம் ஏற்படுவது ஒரு வகை சோதனை. அகம் நோக்கிக் காண வைக்கும். மன வைராக்கியத்தை உறுதிப்படுத்தும் இத்தகைய விசாரணைத் துணிவு இதுவரை ஏற்படாத குறை.



# தேர்த் திருவிழா – இறைவனுக்குரிய ராஜோபசாரம்

அமரர் கா. கைலாசநாதக் குருக்கள்,
முன்னாள் இந்துநாகரிகப் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்.

இறைவனின் உறைவிடம் கோவில் எனப் பிரசித்தமான பெயர் பெற்றது. கோ என்பதற்கு அரசன் என்று பொருள் உண்டு. இல் என்றால் வீடு என்று பொருள்படும். கோவில் என்பது அரசன் வசிக்கும் மாளிகை. அரசனைத் தெய்வமாகப்போற்றும் பாரம்பரியம் நெடுங்காலமாக இந்துப்பண்பாட்டில் நிலவிவருவது. எல்லாத் தெய்வங்களின் அம்சங்கள் திரண்டு உருப் பெற்றதன் விளைவு அரசன் என மூல நூல்கள் கூறும், அரசன் தெய்வம் என்ற இரு நிலைகளும் வேறுபாடு இன்றி நெருங்கி ஒற்றுமை பெற்றதன் விளைவை கோயில் என்றபிரயோகம் தெளிவாகக் காட்டுகின்றது.

உபசாரங்கள் பெரியவர்களுக்குச் செய்யும் உயரிய மரியாதையாகும். அவரவர் அந்தஸ்துக்கு ஏற்ப மரியாதை செலுத்தும் மரபு இன்றும் எம்மிடை நிலவி வருகின்றது. தெய்வத்திற்குச் செய்யும் உபசாரம் தேவோபசாரம் அரசருக்குச் செய்யும் உபசாரம் ராஜோபசாரம். சந்தனம், மலர், தூபம், தீபம், நைவேத்தியம் என்ற ஐந்தும் அடிப்படைகளான தேவோபசாரங்கள். இவை 16 ஆக விரிந்து ஷோடசோபசாரங்கள் எனப்படுகின்றன.

அரசனுக்குச் செய்யும் உபசாரங்கள் பல. இவற்றை அரசன் கொலுவீற்றிருக்கும்வேளை நிகழ்ந்த தாக நூல்கள் வருணிக்கின்றன. ஆஸ்தான மண்டபத்தில் அரசன் சிங்காசனத்தில் கொலு வீற்றிருப்பது அரச மரியாதைகளில் முதன்மையானது. அவனைச் சுற்றிப் பணியாளர் பலர் பலவகை உபசாரங்களைச் சமர்ப்பிப்பர். இவற்றுள் முக்கியமானவை சாமரை இரட்டல்; குடை பிடித்தல், ஆலவட்டம் ஏந்தி நிற்றல் முதலியன. அரசன் பவனிவருதல், வரும்பொழுது நெற்பொரி, மலர் தூவுதல், குதிரை ரத கஜ பதாதி அணி வகுப்புகள், யானை, ஒட்டகம் முதலியன முன் செல்ல அரசன் பவனிவருதல் தனிச் சிறப்பு வாய்ந்து அரசனின் பெருமதிப்பை வெளிப்படுத்தி நிற்பன. இவ்வகை உபசாரங்களில் முக்கியமானது அரசன் தேரில் பவனி வருதல். போருக்குப் புறப்படும் வேளையும் வேட்டையாடும் வேளைகளிலும் அரசனுக்கு தேர், குதிரை ஆகியன ஊர்திகளாக அமைந்தன. இன்று இதுவரை கூறப்பட்ட ராஜோப சாரங்கள் தேரில் பவனி வருதல் உட்பட கோயிலில் எழுந் தருளியிருக்கும் கோவாகிய இறைவனுக்கு நிகழக் காண்கின்றோம். கோயில்களில் நிகழும் ஆடம்பரமான நிகழ்ச்சிகள் யாவுமே ராஜோபசாரமாக அமையக் காண் கின்றோம். மாலைகளால் வகை வகையான அணிகலங் களால் தங்க வைர கிரீடங்களால் அணி செய்தல், பலவகை ஊர்திகளில் – வாகனங்களில் – பவனி வரும் படி எழுந்தருளச் செய்தல் யாவுமே ராஜோபசாரங்கள். மரபு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு விரியலாயின. இவ்வாறு நிகழும் ராஜோபசாரங்கள் இம் மரபை விபரித்துக் கூறுவன ஆகமங்கள்.

இவ்வகை உபசார வரிசைகளுள் ஒன்றாய மைவதும், தலை சிறந்ததும் தேர்த்திரு விழாவாகும். பிரமோற்சவம் எனப்படும் பெருந்திருவிழா ஆலயங்களில் நடைபெறும். பிரமோற்சவத்தில் நிகழும் விழாக்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது தேர்த்திருவிழா. தேர் அரசர் களால் போரில் பெரிதும் உபயோகிக்கப்பட்டதைப் பழைய காலத்துப் போர்முறைகளின் வருணனைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். குதிரைகளால் இழுத்துச் செல்லப் படும் பெரும் ஊர்தியாகிய இரு பொருத்தமான சில்லுகள் இரதத்தை இயங்க வைப்பன. குதிரைகளைச் செலுத்தும் சாரதி தனக்குரிய ஆசனத்தில் அமர்ந்திருப்பான். அரசன் தேரின் நடுவில் கம்பீரமாக இருந்து போர் நிகழ்த்துவான். போரே அரசனின் வீரத்தைப் பிரகடனம் செய்யும் நிகழ்ச்சி. போரில் ஈட்டும் வெற்றியே அரசன் வீரத்தை, பெருமை, புகழை உயர்த்திக்காட்டும்.

அரசனே கண்கண்ட தெய்வம். தெய்வம் அரசனெனப் போற்றற்குரியது என்று அரசனுக்கும்

தெய்வத்திற்கும் உயர்ச்சி கற்பித்த அடிப்படை நிலையில் கோயில் வழிபாட்டு முறை இராஜோபசாரங்களை கோயில்களில் இடம் பெறச் செய்தது. வீரத்தினால் சிறப்புமிகும் அரசனைப்போன்று தெய்வமும் வீரம்மிக்க தோற்றமும் பொலிவும் பெற உருவானதில் வியப்பெதுவு மில்லை. அட்டவீரட்டங்கள் இறைவனின் எட்டு வீரச் செயல்கள் நிகழ்ந்த இடங்கள், முப்புரங்களை எரித்தது, காமனைக் காய்ந்தது, காலனை உதைத்தது, அந்தகனை அழித்தது முதலான எட்டுவீர நிகழ்ச்சிகள் நிகழ்ந்த எட்டுப் பெருந்தலங்கள் சிவ பிரானைத் தலைசிறந்த வீரனாகச் சித்திரிக்கக் காண்கின்றோம். சிவபிரானினின்றும் அபின்னமான முருகன் ஆறுமுகங்களும் பன்னிருகரங்களும் கொண்டு தோற்றும் பொழுது அவன் பன்னிரு திருக்கரங்களும் தலைசிறந்த வீரனுக்குரிய சின்னங்களையும் படைக் கலங்களையும் தாங்கி நிற்கக் காண்கின்றோம்.

இதுவரை கூறிய கருத்துக்களை முக்கிய அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது தேரில் இறைவனை எழுந்தருளுவித்து விழா எடுப்பதன் காரணம் தெளிவாகும். முன்னர் கூறியவாறு தேரமைப் பிலும் மரபு, வழிகளை வகுத்து வரையறை செய்கின்றது. தேர் இவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஆகமங் களும் சிற்ப நூல்களும் வரைவு காண்கின்றன. தேர் அசைந்து பவனிவரும் அமைப்பைக் கொண்ட கோயில் என்றே சொல்லலாம். கோயில் கருவறைபோல் விமானம் தூபி முதலிய அம்சங்களைத் தாங்கி எழில் மிகுந்து விளங்குவது கவனிக்கற்பாலது. இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கும் பொழுது கோவில்கள் கூட தேரின் அமைப்பை ஏற்று இருபாகங்களிலும் பெரும் சில்லுகள் பொருந்தி யதாக குதிரைகளால் இழுக்கப்படும் நிலையில் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கோயில்களில் விமானங்களில் இறைவனின் வீரச் செயல்களையும், கோலங்களையும் சித்திரங்களையும் இடம்பெறச் செய்திருப்பது போன்று, தேரின் அடித்தளம் அதாவது சில்லிலிருந்து பீடம் வரையுள்ள பகுதிகளை,3 தளங்களாகவோ, 5 தளங்களாகவோ வசதிக்கேற்ப ப் பிரித்து ஒவ்வொரு தளத்திலும், இறைவன் திருவருட்கோலங்களையும், பெருமைகளும், வீரச் செயல்களும் சித்தரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

சிவபிரான் நிகழ்ச்சிய அட்ட வீரட்டங்களில் முப்புரங்களையெரித்த நிகழ்ச்சி திரிபுர தகனமெனப் படும். இத்திரிபுரதகனத்திற்காக இறைவன் புறப்பட்ட கோலாகலமான வைபவத்தை புராணங்கள் வருணிக்கக் காணலாம். உலகமே தேர்; வாசுகி நாண்; சூரிய சந்தி ரர்கள் இரு சில்லுகள்; நான்கு வேதங்களும் நான்கு குதிரைகள்; பிரமன் சாரதி; மேரு வில்; விஷ்ணு வில்லி லிருந்து விடுபட்டு அரக்கர்களை அழிக்கும் அம்பு தன்னிலே தான் அரக்கர்களின் அழிவு நிகழப் போவதை யிட்டு விஷ்ணு இறுமாப்பெய்தினார். இவ்விறுமாப்பு இறைவனுக்குப் பெரும் சிரிப்பை ஊட்டியது. இச்சிரிப்பு அட்ட ஹாஸம் எனப்படும். இச்சிரிப்பின் வலிமை முப்புரங் களையும் சாம்பராக்கியது. இங்கு இறைவன் தேரில் போருக்காக இவர்ந்ததும் தேரின் அமைப்புபற்றிய வருணனையும் தெளிவாகக் காணலாம்.

தேர்ச் சில்லிலிருந்து இறைவனை வீற்றி ருக்கச் செய்யும் பீடம் வரை மரத்தினால் சிற்ப நுட்பங்கள் பொலியும் வண்ணம் செய்வது மரபு. அதன் மேற்பகுதி சிகரம் வரை ஆண்டுதோறும் விழாவின் போது தடி, கம்பு முதலியவற்றாலும் பல கலைநுட்பம் வாய்ந்த பொருட் களாலும் கட்டிக் கோயில் அமைப்பினைக் கொண்ட விமானம் தூபி முதலியன விளங்கச் செய்வதும் மரபு, திருவாரூர்த் தேரழகு என்ற மொழி பிரசித்தமானது. இந்தியாவில் பிரசித்தமான ஆலயங்களில் எல்லாம் தேர் இவ்வாறே பீடம் வரை சித்திரவேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு மேல்வேலை, மேற்கூறியவாறு பல வண்ணத் துணிகளாலும் பலநுட்பமான பொருட்களாலும் அமைக்கப்படுவதை அங்கு காணலாம். இதைத் தேர் என்று சொல்வது மரபு மேல்வேலையையும், வருடந் தோறும் கட்டி அமைக்காது நிரந்தரமாகச் சிற்பநுட்பங் களுடன் செய்யும் வழக்கத்தை இலங்கையில் உள்ள கோயில்களில் பெரும்பாலும் காணலாம். சிலகோயில் களில் கூட்டு வேலைப்பாடுகளுடன் தேரைக் கட்டி எழுப்புவதுண்டு. மேல் வேலையையும் மரத்தினால் சித்திரவேலைத்திறமை நிரந்தரமாக மிளிரும் அமைப்பைக் கொண்ட இவ்வகை யூர்தியை இரதம் என்று சொல்லு வது மரபில் வந்து விட்டது. பழனி, திருப்பதி போன்ற தலங்களில், தங்க இரதங்களில் , வெள்ளி இரதங்களில் இறைவன் பவனி வரக் காணலாம்.

தேரில் வீற்றிருந்து சகல உபசாரங்களுடன் பவனிவரும் தெய்வத்தைத் தரிசிப்பது இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் பயன் தரும் என நூல்கள் கூறுகின்றன.

# மாநகரமும் கோவிலும் ரதத்தின் மகத்துவமும்

தற்புருஷ சிவாச்சாரியார், கலைச்சுடர்
சிவ பிரம்மஸ்ரீ கு. காண்டீபக் குருக்கள்
(ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான குரு)

*"முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த சுந்தரேஸ்வரர் காக்க"*

இந்து மகா சமுத்திரத்தின் தாய் நாடாகிய புண்ணிய பூமியான பாரத கண்டத்தின் தென்பால் அமைந்த லங்காதீபமாகிய சிவபூமியென போற்றப்பட்ட இலங்கையில் வீணாகானபுரம் என அழைக்கப்படும் ஈழவள நாடாகிய யாழ்ப்பாணத்தில் மணிபல்லவ தீவு என அழைக்கப்படும் காரை மாநகரில் புண்ணிய சேஷத்திரத்தில் ஒன்றாகிய திண்ணபுரம் என்ற சேஷத்திரத்தில் இருதய ஸ்தானமாகிய தில்லைச் சிதம்பரத்துக்கு சமனாக உள்ளது ஈழத்துச் சிதம்பரம். இராமநாதபுரம் திரு உத்தரகோச மங்கைநகர் இராம சேதுபதி மகாராசாவின் மகனாகிய குளக்கோட்ட மகாராஜன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த காலத்தில் துர்வாசர், அகத்தியர், தினகரர், ஆண்டி முனிவர் ஆகிய பெரிய முனிவர்கள் தவஞ்செய்யத சப்த தீவுகளில் ஒன்றாகிய காரை தீவில் வியாவில் என்னும் இடத்தில் குளக்கோட்டு மன்னனால் தன் அரசையும் அரசபடைகளையும் காக்க வேண்டி தனது குல தெய்வமான ஐயனாருக்கு ஏழு நிலைமாடம் கொண்ட பெருங்கோபுரத்தை கட்டி ஆலயத்தில் ஐயனாரை பிரதிஷ்டை செய்தார். ஐயனார் சந்நிதானம் சென்று வழிபட்ட காலத்தின்பின் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தின் போது இடம் பெற்ற போரின் பல இன்னல்கள் நடைபெற்ற காலத்தில் திருஉத்தரகோச மங்கையில் இருந்து தலயாத்திரையாக புறப்பட்ட ஆண்டி முனிவர் கனவில் தோன்றி காரைநகருக்கு வடக்கேயுள்ள அரச மரத்தடியில் ஐயனார் இருப்பதாக காட்சியளித்து மறைந்தார். அதன் பலனாக ஆண்டி முனிவர் அவ்விடம் வந்து தரிசித்து இருந்த வேளையில் அம்பலவி முருகனின் உதவியினாலும் முயற்சியினாலும் 1811ம் ஆண்டளவில் ஐயனாரை பிரதிஷ்டை பண்ணி வழிபட்டு வந்தனர் என்று கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

அதன்பின் 1848 ஆம் ஆண்டில் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வர சுவாமி சோமாஸ்கந்த பரிவார மூர்த்திகளும் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. அதன் பின்னர் 1883ம் ஆண்டு சோழபுரம் ஸ்தபதி ஆகிய குருசாமி என்பவரால் இவ்வாலயத்தில் வைத்து எங்கள் ஆடல்வல்லான் உருவடிவமைக்கப்பட்டது. 23.04.1908 ஆம் ஆண்டு நடராஜர் பிரதிஸ்டை பண்ணப்பட்டது. தேவபாஷை ஆகிய சமஸ்கிருதம் ஆகியவற்றில் இருக்கும் உயிர், மெய், நெடுங்கணக்குகளுக்கு அமைய 51 சுடர்ருடன் கூடிய திருவாசியுடன் நடராஜப் பெருமானும் அவருடன் வியாக்கிர பாதர், பதஞ்சலி முனிவர் அமைந்த இத்திருவுருவம் இங்கு மட்டுந்தான் உள்ளது. தில்லைச் சிதம்பரத்தில்கூட இப்படி இவ் அமைப்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாலயம் 400 பரப்பில் உள்ளது. தில்லைச்சிதம்பரம் 400 ஏக்கரில் உள்ளது. தில்லைச் சிதம்பரத்திற்கு சமனாக ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை, சாந்தி மகோற்சவம் நடைபெற்று வருவது மரபு.

மேலும் இவ்வாலயம் சேதுபதி மகாராசாவின் மகன் குளக்கோட்ட மன்னனால் வரவழைக்கப்பட்ட இராமநாதபுரத்தில் உள்ள திருஉத்தரகோச மங்கையில் இருந்து வந்த கலியாண சுந்தரக்குருக்கள் பரம்பரையே 26 தலைமுறைக்கு மேலாக இக்கோவிலில் நித்திய நைமித்திய பூசைகளை நடாத்தி வருகின்றார்கள். தற்போது உள்ள சிவாச்சாரியார் 64 வருடகாலமாகப் பூசை செய்த ச. கணபதீஸ்வரக் குருக்களின் பிரதம சீடனும் மாணவனும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்புருஷ சிவாச்சாரியார் சிவபூஜாதுரந்தரர் சிவபிரம்மஸ்ரீ ஈஸ்வரக்குருக்கள் அவர்கள் ஆலயத்தை தற்போது வழிநடாத்திக் கொண்டு வருகிறார். இதே போன்று

அம்பலவி முருகன் பரம்பரையினரே பல தலைமுறைக்கு மேலாக இவ்வாலயத்தை பரிபாலித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பலவி முருகர் ஆரம்பத்தில் ஐயனாரைப் பிரதிஷ்டை பண்ணி வழிபட்டு வருங்காலத்தில் இங்கு ஓர் சிவனாலயம் அமைக்க வேண்டும் என்றும் ஐயனாரிடம் வேண்டிக் கொண்டதன் பலனாக 1848ஆம் ஆண்டு சௌந்தராம்பிகா தேவி சமேத சுந்தரேஸ்வர சுவாமி பிரதிஷ்டை பண்ணப்பட்டது. இக்கோவிலின் மரபு ஐயனார் வாசலினால் கோவிலுக்குப் போய் தர்சனம் பண்ணி சிவபெருமான் வாசலினால் வருவதை நாம் இப்பொழுதும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாலயத்தில் இருக்கும் சோமாஸ்கந்தமூர்த்தி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மூர்த்தியாகும். 1963ம் ஆண்டு சோமாஸ்கந்த மூர்த்திக்கு தனிக்கோவில் அமைக்கப்பட்டது. சிதம்பரத்தை அடைந்து சிற்ப ஆசாரியாரைக் கொண்டு சோமாஸ்கந்த மூர்த்தியை உரு அமைப்புச் செய்து தரும்படி அம்பலவி முருகர் தெரிவித்தார். ஆச்சாரியாருக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொடுத்து வேலையைத் தொடங்கி உரு அமைத்த போது இரு முறையாக கரு செவ்வனே பாய்ந்தும் உருசிதைவுற்றதைக்கண்டு பெரியவர் பெரிதும் மனம் வருந்தி திருவருளை வேண்டி தியானித்து வேண்டிய போது, மனதில் எழுந்த தூண்டுதலினால் தாம் காதில் அணிந்திருந்த "பொற் கடுக்கன்களைக் கழற்றி", அவற்றை முன்னரே கொடுத்து விடாது, தமக்காக வைத்திருந்த செயலை நினைத்து, "இவற்றின் பொருட்டோ இவ்வாறாயிற்று! யாவுந் தந்து விட்டேன்"என்று மெய்மயிர் பொடிப்ப ஆனந்தக் கண்ணீர் சொரிய உலையில் இட்டு மறுபடியும் வார்க்கும்படி கூறினார். அப்பொழுது அம்பலவி முருகரின் ஆவியும் இரண்டறக் கலந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்படி அமைந்த மூர்த்தியே எங்கள் கோவிலில் உள்ள சோமாஸ்கந்த மூர்த்தியாகும். சோமாஸ்கந்த மூர்த்தி தனிக்கோவில் பிரதிஷ்டை பண்ணப்பட்ட பின்பு கோவில் பல வகையிலும் வளர்ச்சியடைந்துள்ளது என்பதை முதியோர் கூறுவர்.

எங்கள் ஆதன மூர்த்தியான ஐயனாரை தரிசனம் பண்ணியதுடன் வட கிழக்கே திருப்பியதும் எங்கள் ஆடவல்லானைத் தரிசனம் பண்ணக்கூடியது இக்கோவிலில் மட்டுந்தான் உள்ளது. வேறு எக்கோவிலிலும் இவ்வாறு இல்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அம்பலவி முருகரின் விரதம் இக்கோவிலில் இப்பொழுதும் கடைப்பிடித்து வருகின்றனர். உப்பு இடப்படாத நைவேத்தியங்களேயாகும். இக்கோவிலின் இது விசேட அம்சமாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க புகழ்பூத்த, ஈழத்துச் சிதம்பரத்திற்கு பிரமாண்டமான புதிய சித்திர தேர் திருப்பணியை செய்தவர் முன்னைநாள் இந்து சமய விவகார அமைச்சரும் யாழ்ப்பாணம், கொழும்பு பாராளுமன்ற உறுப்பினருமான காரை மாநகர் பெற்றெடுத்த தவப்புதல்வனாகிய தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் சைவ உலகின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரமாண்டமான புதிய சித்திரத்தேர் திருப்பணியை செய்வதற்கு சிதம்பர தீட்க்ஷிதர் ஆகிய பரமேஸ்வர தீட்க்ஷிதரின் ஆகம முறைப்படியான ஆலோசனையின் படியும் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீன முதல்வரின் ஆசியும், ஆலோசனையும் பெற்று ஜெனா சிற்பக்கூடத்தின் 40 இற்கு மேற்பட்ட சிற்ப ரதம் செய்த பிரதான ஸ்தபதி சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்களால் நடராஜ மூர்த்தியின் சித்திரத்தேர் ஆக்கப்பெற்றது அவர் பெற்ற பெரும் பேறாகும்.

இத்தேர் 39 அடி உயரமும் நாகர வடிவமும் உடைய தேராகும். இத்தேரில் 39 அடி அளவுப் பிரமாண உயரத்திற்கு உள்ள காரணம்.

3 இற்கு தத்துவம்

1. சில்லுக்கு அதிபதியாக விஷ்ணுவும்
2. சிம்மாசனத்திற்குஅதிபதியாக பிரம்மாவும்
3. தேரின் கமல தங்க முடிக்கலசத்திற்கு அதிபதியாக உருத்திரனும் ஆவர் என்பதாகும்.

9 இற்கு தத்துவம்

1. சூரியன்,சந்திரன், அங்காரகன், புதன், வியாழனும், சுக்கிரனும் சனீஸ்வரனும், ராகுவும் கேதுவும் ஆவார்கள். இவர்கள் தான் உலக சஞ்சரியத்தை கலாச்சக்கரமாக ஆட்கொள்பவர் ஆவர்.

2. இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அஷ்டதிக்கு பாலகர்களும் அமைக்கப் பெற்றிருக்கிறார்கள்.

3. இத்தேரில் உள்ள ஆயுதங்கள் வச்சிரம், சக்தி, தண்டம், கட்கம், பாசம், வேயம், கதம், திரிசூலம், சக்ரம், பத்மம் ஆகும்.

4. இத்தேரில் இந்திராணி, சாயாதேவி, காளாகண்டி, யாதாதேவி, கர்ஷினிதேவி, கரிமாதேவி, ஜீவின்யாதேவி, ஜீவோன்மணி ஆகியோரும் உள்ளனர்.

5. அனந்தன், வாசுகி, தட்சகன், காட்கோடகன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகாபத்மன் ஆகிய அஷ்டதிக்கு நாகர்களும் உள்ளார்கள்.

6. இத்தேரில் உள்ள ஆடவல்லானின், சிவதாண்டவங்களில் ஒன்பது வகைப்பட்ட தாண்டவங்கள் உரிய இலக்கணத்தை உடையதாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

7. ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், உமா தாண்டவம், கௌரி தாண்டவம், காளிகா தாண்டவம், திரிபுர தாண்டவம், சங்கார தாண்டவம் ஆகியன இத்தேரில் மிக முக்கியமானவையாகும்.

8. அனந்தன், சூட்மன், சிவதோத்மன், ஏகநேத்திரன், ஏகருத்திரன், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டன், சிகண்டி அஷ்டதிக்கு படைத்தலைவர்கள் ஆவார்கள்.

9. இத்தேரினை தரிசித்தால் கிடைக்கும் பலன்கள் ஆவன.

1. திருவாரூர் – பிறக்க முத்தி
2. காசி – இறக்க முத்தி
3. திருவெண்ணாமலை – நினைக்க முத்தி
4. சிதம்பரம் – தரிசிக்க முத்தி
5. வேதராண்யம் – தீர்த்தமாட முத்தி
6. ஆலவாய் (மதுரை) – கூற முத்தி
7. அவிநாசி – கேட்க முத்தி
8. காஞ்சிபுரம் – வாழ முத்தி

என்பன இத்தேரின் 39 அடி உயரத்தின் தத்துவமாகும்.

இத்தேரில் ஆடவல்லானின் 108 சிவதாண்டவமும், 63 நாயன்மாரும், 25 மகேஸ்வர வடிவமும், ஸ்தல வரலாறும் மகரங்களும், மகர கெண்டிகைகளும் அஷ்டதிக்கு பாலகர்களுக்கு உரிய யாளிகளும், சிருஷ்டிக்கு கர்த்தாவான பிரம்மாவும், இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என்பன நான்கு வகை வேதங்களையும் உணர்த்தும் பாவனையாக நான்கு பிரமாண்டமான அஸ்வங்களும் (குதிரைகளும்) 1008 முத்துமணி வேலைப்பாடுகளுடன் கூடிய ரதத்தின் மகர தோரணங்களும் இவ் ரதத்தின் சிறப்பக்கலையினை வெளிப்படுத்துகின்றன. இத்தேரின் சிறப்பம்சம் என்னவென்றால் நடராஜ மூர்த்தியின் நிலை, நெளிவு, குஞ்சிதபாதவைப்பு – எடுப்பு முதுகு, விலா இவற்றின் அமைப்பும் கண்பார்வையின் அமைப்பும் எல்லாவற்றிலும் எல்லா கலைகளும் சேர்ந்த சிற்பக்கலை இப்புதிய ரதத்தில் பெருக்கெடுத்து ஓடுகிறது. கலைகளின் அதிபதியாக விளங்கும் ஆடல் வல்லானின் சிற்பக்கலையின் சிகரமாக விளங்கும் நடராசர் உருவில் நாம் காண்பது வெறும் சிற்பக்கலை மட்டுமல்ல. இசைக்கலை, நாட்டியக்கலை, விஞ்ஞானக்கலை, மெய்ஞ்ஞானக்கலை அனைத்தையும் இவ் ரதத்தில் கலைகளைக் கடந்தும், கலைகளாயும் விளங்கும் கலாதீதப் பழம்பொருளாயும் இருக்கிறார் என்பதை உணரலாம்.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என பஞ்சகிருத்தியத்தை நடத்துவதற்கு கர்த்தாவானவர் ஆடல்வல்லான் ஆவார். எந்தவொரு ஆலயத்திலும் ரதாரோகணம் என்பது அழித்தல் தொழிலை குறிக்கும் என்பது இவ் ரதப் பவனியில் முக்கியமானது ஆகும்.

இவ் ரதத்தின் ஆடலவல்லான் அமரும் சிம்மாசனம் 5 தளங்களை கொண்டதாகும் என்பது முக்கியமானது ஆகும். தில்லைச் சிதம்பரத்தில் உள்ள ரதத்தின் சிம்மாசனம் 3 தளங்களை கொண்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தேரினை பார்க்கும் அடியார்கள் கனகரதம் (தங்கம்) என அழைக்கத்தூண்டும் வகையில் தங்கக் கலசத்துடன் கூடிய தங்கத் தேராக மார்கழி ஆதிரை உற்சவத்தன்று நடைபெறும் வெள்ளோட்டத்தையும், ரதாரோகணத்தையும் நாம் காணும் கண்கொள்ளாக் காட்சியாகும். தில்லைச் சிதம்பரம் போன்று ஈழத்துச் சிதம்பரத்திலும் பஞ்சரத பவனி நடைபெற்றுவரும் இக் காட்சியை நாம் வர்ணிக்க முடியாது. திருவாவடுதுறை, தர்மபுரம், பேரூர் போன்ற ஆதினங்களும் திருமுருக கிருபானந்த சுவாமியரும், செஞ்சொற்செல்வன், சிங்காரவேலன், திரு. பாஸ்கரன், தொண்டமான் போன்றவர்களும் வருகைதந்து ஆடல் வல்லான் அமைப்பையும் அழகையும் எங்கும் காணமுடியாது என்று வர்ணித்துள்ளனர். 51 சுடருடன் கூடிய அழகிய கூத்தப்பெருமானை ஆயிரம் கண்கொண்டும் பார்க்க முடியாது. ஆனந்தக்கூத்தனாகவும், திரிசடையுடனும், உச்சிக்கொண்டையுடனும் காட்சியளிக்கின்றார் என்று திருவாவடுதுறை ஆதின வெளியீடான மெய்கண்டான் பத்திரிகை சிறப்பாக இச்சைவ உலகிற்கு அறிவித்துள்ளது.

ஈழத்துச்சிதம்பர நூலாசிரியரும், அகில பிராமண குரு சமூக சேவா சங்க போசகரும், சிவானந்த குருகுல பஞ்சாயத்து உறுப்பினரும், வடமொழி, தென்மொழி வல்லுனரும் பல நூல்களின் ஆராய்ச்சியாளரும், ஈழத்து சிதம்பர திருவாதிரை தீர்த்தத்தன்று மாலை பாடப்படும் திருவூடல் நூலாசிரியருமான சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் ஆகியோரால் ஆக்கப்பெற்ற திருவூடல் இக்கோவிலில் இப்பொழுதும் நடைபெறுகிறது. தற்போது அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் உள்ள சிவன் கோயிலில் நடைபெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

*குறிப்பு : எடுத்தாட்கொண்ட நூல்கள் :-*

*1. ஈழத்துச் சிதம்பரம்*

*2. கணபதீஸ்வரக் குருக்களின் கையேடு*

*3. ஆடல்வல்லான் – திருவாவடுதுறை ஆதீன வெளியீடு*

பிரபஞ்சத்தின் அமைப்பே தேர் வடிவம். அதன் அடித்தளத்தில் சிற்பங்களாக சித்தரிக்கப்பட்டு இருப்பனவற்றை அவதானிப்போமேயானால் பிரபஞ்ச உற்பத்தி மானிட வாழ்க்கையின் தொடக்கம் முடிவு ஆகியவற்றினை குறிப்பதாகும். எனவே இவ்வுலக வாழ்க்கையினை தேர்ந்து கொள் என்பதே தேர். ஜீவாத்மாவுக்கு வேண்டியது இறைவனை வேண்டியடைவது வீடு, பேறு இதை அடிப்படைத் தத்துவங்களாக இவ்விழாவையொட்டி ஒரு மலரினை வெளியிடுவது தனிப்பொருத்தமாகும். இக் கைங்கரியத்தை நிறைவுற செய்ய ஆக்கமும் ஊக்கமும் அளித்த பல தொண்டுகளும் ஆற்றிய அன்பர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அழகுறச் சித்திரத் தேரை அமைத்த ஜனா சிற்பக்கலைக்கூட அதிபராகிய ச. ஜெயகாந்தன் அவர்களும், அவரோடு ஒத்துழைப்பு வழங்கிய உதவியாளர்களும் பல தேர்த்திருப்பணிகளை நிறைவேற்றிய திறமையும் அனுபவமும் உடையவர்கள். அவரது கைவண்ணம் இத்தேரில் பிரதிபலிப்பது சிறப்பாக அமையும் என்பதனை குறிப்பிடுகிறோம். நாமும் இத்தேரின் வெள்ளோட்ட பவனியையும் ரதாரோகண பவனியையும் தரிசித்து இப்பூலோகத்தில் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவதற்கு கூத்தப்பெருமானை வேண்டி நிற்கிறோம்.

*சிற்ஷபாஷ நாஜகம் வந்தே சிந்தாதிக பலப் பிரதம்*
*அபர்ண, சொர்ண, கும்பா குஜாஷ் இஷ்ட களேபரம்*
*நிராஜ் கிறுதய பத்மஸ்த்தே திறி கோணே சிவயாஷகா*
*சயோமே குருதே லாஷ்ம் அஷ்ட லட்சுமி பிறயச்சது*

# இரதோற்சவம்

*சாஹித்திய ஸ்ரீமாம்ஸ சிவாகம சிரோன்மணி காஞ்சிபுரம்*
**உமாபதி சிவாச்சாரியார்**

**ஊ**ரில் திருவிழாஎன்றால் அனைவருக்கும் மகிழ்ச்சி தான். அதுவும் தேர்த் திருவிழா என்றால் மக்கள் அடையும் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. தேர்த்திருவிழா என்பது நமது கலாசாரத்தை பறை சாற்றுவது. இன்று மக்களிடையே தேவைப்படும் ஒற்றுமை, சமய நல்லிணக்கம், சகோதரத்துவம் போன்றவை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தேர்த்திருவிழாக்கள் நடத்தினார்கள். ஊர்கூடித்தான் தேரிழுக்க முடியும். நாம் எல்லோரும் கொண்டாடும் தேர்த் திருவிழாவைப் பற்றி நமது ஆகமத்தில் என்ன சொல்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மகோத்சவமானது (திருவிழா) ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் (சம்ஹாரம்), திரோபாவம், அனுக்ரஹம் என்ற பஞ்ச க்ருத்யங்களை செய்யக் கூடியதாகும். திருவிழாக்களில் ஸ்ருஷ்டி என்பது அங்குரார்ப்பணம், கல்யாணம், கொடியேற்றம், ரக்ஷாபந்தனம் முதலியனவாகும்.

ஸ்திதி என்பது வாகனத்தில் பகவானை ஏற்றுதல், ஹோமம், பலி முதலியனவாகும். லயம் (சம்ஹாரம்) என்பது ம்ருத்சங்க்ரணம், ரதாரோஹணம் (தேர்மீது ஏறுதல்) சூர்ணோத்ஸவம் முதலியனவாகும்.

திரோபாவம் என்பது தீர்த்தோத்ஸவம் ஆகும். அனுக்ரஹம் என்பது சந்தியாவாஹனம், தரிசனம் (நடராஜ உத்ஸவம்) இதில் லயம் என்பது அழித்தல் என்ற பொருளல்ல. தீய சக்திகளையும், தீய குணங்களையும், தீய எண்ணங்களையும் அழித்து மனிதர்களைதன் வசப்படுத்தலே லயம் (சம்ஹாரம்) ஆகும். ஆகையால், பரமேஸ்வரன் ரதத்திலே ஆரோஹணம் செய்து மனிதர்களின் தீய எண்ணங்களையும், தீய குணங்களையும், தீயசக்திகளையும் அழித்து தன்வயப்படுத்துவதற்காக ரதோத்ஸவமானது நடைபெறுகிறது. ரதமானது மனிதர்களுடைய உருவங்களாகவும் பாவிக்கப்படுகிறது. அவை எப்படி என்பதைப் பார்ப்போம்!

| | |
|---|---|
| தேரின் சக்கரங்கள் | = பாதங்கள் |
| கீழ் உத்தரம் | = முழங்கால்கள் |
| கீழ் தளம் | = தொடைகள் (ஊறு) |
| இரண்டாவது தளம் | = இடுப்பு (கடி) |
| மூன்றாவது தளம் | = நாபி (தொப்புள்) |
| நான்காவதுதளம் | = வயிறு |
| ஐந்தாவதுதளம் / சுவாமி வைக்குமிடம் | = ஹ்ருதயம் |
| ஸ்தம்பங்கள்(தூண்கள்) | = கைகள் |
| தூண்களின் கொடுங்குகள் (கந்தரம்) | = காதுகள் |
| தேரின் மேல் பாகம் | = முகம் |
| தேரின் மேல் உள்ள கலசம் | = மகுடம் |
| அதன்மேல் பாகத்தில் சாற்றப்படும் வஸ்திரங்கள் | = சிகை(குடுமி) |

ரதம் ப்ரதிஷ்டை செய்யும்போது ஒவ்வொரு அங்கங்களிலும் பல தேவதைகள் பிரதிஷ்டை செய்யப்படுவதுண்டு. அவற்றில் சில:

சக்கரங்களில் சூரிய சந்திரனையும், பதாகங்களில் ஸதருத்ரர்களையும், ரதத்தின் ஹ்ருதய பாகத்தைச் சுற்றிலும் ஹரன், வஜ்ரன், ஏகாங்கன், த்விதண்டகன்

முதலானவர்களையும், ஹ்ருதய ஸ்தானமாக இருக்கக் கூடிய ஐந்தாவது தளத்தின்நான்கு திக்குகளிலும் பிரம்மா, விஷ்ணு, தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தர் போன்றவர்களையும், ரதத்தைச்சுற்றி லோக பாலகர்களையும், கயிற்றில் பாம்புகளையும், குடையில் பாசுபதாஸ்த்ரபத்தையும் ஆவாஹனம் செய்து பிரதிஷ்டை செய்ய வேண்டும். பின்பு சித்ரவஸ்த்ரங்களினால் அலங்காரங்கள் செய்து வாழை, பாக்கு, முதலிய மரங்களைக் கட்டி மாவிலைத் தோரணங்களால் அலங்காரம் செய்து, நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும், பிரம்மாவை சாரதியாகவும், பாவித்து தரிசனம்செய்து சர்வேஸ்வரனின் திருவருளைப்பெற பிரார்த்திக்கிறேன்.

ஊர் உலகத்தின் நன்மையைக் கருதி நாம் தேர் திருவிழாக்களை ஆகமங்களில் சொல்லியபடி செய்வோமானால் எல்லாம் செழிப்படையும் என்று எண்ணி, புதிய தேர்த்திருவிழாவானது நல்ல முறையில் நடந்து எல்லோரும் இன்புற்று வாழ ஸ்ரீ சிவகாமி உடனமர் ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் திருத்தாள் வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.



ஈழத்துச் சிதம்பர அறப்பணிநிலையமும் நித்திய அன்னதான மடமும்

# சிவாலயக்கிரியை மரபில் ரதப்பிரதிஷ்டை

## உத்தரகாரணாகமத்தை அடிப்படையாகக்கொண்ட குறிப்புக்கள்.

*- பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள், பாலகைலாசநாதன்சர்மா -*
*சமஸ்கிருத விரிவுரையாளர்* (B.A.Hons, M.A,M.Phil)
*சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்*

மிகப்புராதனமான இந்துசமய வரலாற்றிலே சிவாலயக் கிரியை மரபு முக்கியமான இடத்தினைப் பெற்றுவருகின்றது. இந்துப்பண்பாட்டின் பல்வேறுபட்ட அம்சங்களுடனும் வரலாற்றுப் பின்னணியிலும், சமயப் பின்னணியிலும், பாரம்பரியப் பின்னணியிலும் பல்வேறுபட்ட மரபுகள் தொன்றுதொட்டு நிலவிவருகின்றன. இவ்வாறு நிலவிவரும் கிரியை மரபுகள் சாஸ்திர விதிகளுக்கு உட்பட்டதாகவும், சில சம்பிரதாயங்களை உள்ளடக்கியதாகவும் நடைமுறையிலே காணப்படுகின்றன. இந் நடைமுறையானது சமய நிலையிலே ஒரு தனியான இடத்தினைப் பெற்று நிலவிவருகின்றது. சிவாலயக் கிரியை மரபை அல்லது ஆலயக்கிரியை முறைகளைப்பற்றி முதலிலே சாஸ்திர ரீதியாக சிவாகமங்களிலேதான் தெளிவாகவும், விரிவாகவும் கூறப்பட்டுள்ளன. இவற்றை மூன்று நிலைகளிலே பின்வருமாறு சிவாகமங்கள் கூறுகின்றன.

கர்ஷணாதி – பிரதிஷ்டாதி – உற்சவாதி – பிராயச்சித்தாந்தம் என்ற ஒழுங்கில் கிரியைமுறைகள் கூறப்பட்டுள்ளன. இங்கு உற்சவம் என்று சொல்லப்படுகின்ற சிவாலயக் கிரியை முறைகளிலே குறிப்பாக வருடாந்த மகோற்சவம், அலங்கார உற்சவம், விசேஷத்தின் உற்சவம் என உற்சவக் கிரியைகளின் கிரமங்கள் விரித்து செல்லுகின்றன. உற்சவ காலத்தின் உயர்ந்த திருவிழாவாகவும், சிறப்புக்குரிய, நாளாகவும் ரதோற்சவம், அல்லது இடத்தினைப் பெற்றுவரும் ரதோற்சவம், அல்லது தேர்த்திருவிழா புராதனமான காலத்தில் இருந்து தமிழர் வாழ்வோடும் இந்துப் பண்பாட்டோடும் ஐக்கியமாகின்றது.

### தேர் பற்றிய ஆரம்ப செய்திகள்

குறிப்பாக தேர் பற்றிய ஆரம்ப செய்திகளை வேத இலக்கியங்களிலே காணமுடிகின்றது. கடையாணி முதலிய தேரின் நுண்ணிய பாகங்கள் பற்றிய குறிப்புக்கள் இருக்கு வேதத்திலேயே காணப்படுகின்றன. யஜுர் வேதத்தின் மிகச் சிறந்த உயர்ந்த பகுதியான ஸ்ரீருத்திரத்திலே "தேரில் செல்பவர்களாகவும், தேரில்லாதவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். தேர்களை ஒட்டுபவர்களாகவும், இழுத்துப்பிடித்து நிறுத்துபவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். தச்சர்களாகவும், தேர்செய்கிறவர்களாகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம் (ஸ்ரீருத்திரம் 4.1, 4.2)" எனக்கூறப்பட்டுள்ளது.

மிகப்பழைமையான கடோபநிஷத்திலே (3.3, 3.4) குதிரை பூட்டிய தேராக இவ்வுடல் உருவகிக்கப்படுகின்றது. இதிஹாஸங்களிலே தேரைப்பயன்படுத்தி வீரப்போர் புரிந்து வெற்றிபெற்ற மன்னர்களுக்கு அதிரதன், மஹாரதன், சமரதன், அர்த்தரதன், தசரதன் போன்ற பெயர்கள் சிறப்பாக வழங்கப்பட்டதைக் காணமுடிகின்றது. பகவான் கண்ணன். அர்ச்சுனனின் தேர்ச்சாரதியாக அமர்ந்து தேரில் இருந்தபடியே கீதையை உபதேசம் செய்தார். புராணங்களிலும் தேர்கள் பற்றிய பல்வேறுபட்ட செய்திகள் இடம்பெறுகின்றன. பூமியையே தேராகக்கொண்டு சிவன் முப்புரங்களையும் எரிக்கப் புறப்பட்ட செய்தி முக்கியமானதொன்றாகும். பிற்காலத்து தமிழ்ப் புராணங்களிலும் திருமுறைகளிலும் இது பெரிதும் கூறப்படுகின்றது.

### சிவாகமங்களில் தேர்

சிவாகமங்களிலே குறிப்பாக காரணாகம உத்தரபாகத்தின் தொண்ணூற்று ஆறாவது படலம் ரதப்பிரதிஷ்டைவிதிப் படலமாகும். இதில் ஐம்பத்திநான்கு

சுலோகங்களில் ரதப் பிரதிஷ்டைக்கான விபரங்கள் தரப்பட்டுள்ளன. காரணம், பிரதிஷ்டாகிரியை, பூஜை, ரத அலங்காரபூஜை, ரதகதி சக்ர விச்சிந்நபலம், ரதஷச்சிந்நகால உற்சவம், ரத உற்சவகால ராஜா மரணம், அந்யத் பீடாநிவாரணம், மாயாவிர்பத்தி பலம் என ரதப் பிரதிஷ்டைக்கான விபரங்கள் காணப்படுகின்றன.

## ரதத்தின் அமைப்பு

ஆலயத்திற்குரிய பொருட்களில் முதலிடம் பெறுவது ரதமாகும். தெய்வங்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டு பவனி வருகின்ற ஊர்த்திகளாக தேர்கள் சிறப்பிக்கப்படுகின்றன. ரதலக்ஷணம் கூறும் ஆகம நூல்களும் ரதத்தின் சில்லுகளைப் பற்றியும், ரதத்தின் பல உறுப்புக்களைப் பற்றியும், அமைப்பினைப் பற்றியும், அளவையும், அதில் விளங்கும் வேலைப்பாட்டைப் பற்றியும் விளக்குகின்றன. ரதத்தின் முக்கிய உறுப்பு சில்லுகளாகும். இவை வட்ட வடிவானவையாகும். இவை பலம் மிகுந்த வளையங்களால் சுற்றிலும் பாதுகாக்கப்படுகின்றன. குக்ஷி, அக்ஷம், சிகை, தந்தம், சித்ரம், கீலம் என்பன ரதத்தின் உறுப்புக்களாகும்.

சால விருட்சம், நாவல், சாரம், சரளம், மகிழ், அர்ஜுனமதூகம், புளி, பர்புரம், வியாக்ரீ, ஷீரிணி, கருங்காலி, கிருசரம், கிருதமாலம், வன்னி ஆகிய மரங்கள் தேர் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இவற்றுட் சில பெயர்கள் எம்மரங்களைக் குறிக்கின்றன என்பதை தெளிவாக அறியமுடியாதிருக் கின்றது. தேருக்கு அடித்தளமான அடிப்படையான விளங்குவது ஆதாரம் என்றும் உபாதாரம் என்றும் பெயர்பெறுவன. இங்கு தேரின் அச்சுபொருத்தப்படும் இதன்மேல் ஒன்பது தளங்கள் உண்டு. ஒவ்வொன்றும் மற்றதைக் காட்டிலும் குறைந்த உயரம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

## ரதத்தின் பிரிவுகள்

ரதத்தின் அமைப்பைக்கொண்டு ரதங்கள் ஏழுவகை களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சதுரவடிவான தேர் *"நபஸ்வன்பத்ரகம்"* என்றும், அறுகோணவடிவானது "பிரபாஞ்சனபத்ரகம்" எனவும் பெயர் பெறும். "விதானபத்ரகம், பவனபத்ரகம், பிருஷதபத்ரகம், சந்திரகபத்ரகம், அநிலபத்ரகம்" என்பன ஏனைய ஐவகைத்தேர்களாகும்.

சதுர வடிவமான தேர் "நாகரம்" எனப்படும். எண்கோணவடிவான தேர் "திராவிடம்" ஆகும். வட்ட வடிவானது "வேசரம்" எனப் பெயர்பெறும்.

## ரதசக்ர அமைப்பு

தேர்கள் பலவகைப்பட்ட சில்லுகளையும், உறுப்புக் களையும் கொண்டு விளங்குவன. யுத்தத்திற்குச் செல்லும் தேர் மூன்று சில்லுகளை உடையது. நித்தியோற்சவத்துக்குரிய தேருக்கு ஐந்து சில்லுகள் உண்டு. மகோற்சவத்துக்குரிய தேருக்கு ஆறு முதல் பத்து வரை சில்லுகள் இருக்கின்றன. இதை அடிப்படையாகக் கொண்டுதான் தேரின் வேதிகைகளின் எண்ணிக்கையும் வேறுபடும். சிவபிரானுக்குரிய தேருக்கு ஒன்பது வேதிகைகள் கூறப்பட்டுள்ளன. ஏனைய தெய்வங்களுக்கு ஐந்து வேதிகைகள் உரியன.

## ரத வேலைப்பாடுகள்

மயிற் பீலிகைகளாலும், சாமரங்களாலும், தோரணங்களாலும் நல்லோசை தரும் சிறிய மணிகளாலும், ஒளி பொருந்திய கண்ணாடிகளாலும், விசிறிகளாலும், மாலைகளாலும் தேர்களின் மேற்பகுதிகள் அலங்கரிக்கப்படவேண்டும். தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங்களின் பெருமையுணர்த் தும் உருவங்கள் செதுக்கப்படல் வேண்டும். கீழே அதிஷ்டானத்தில் சிங்கங்கள், யாளிகள், யானைகள்,. மகரங்கள், நுண்ணிய, மடிப்பு வேலைப்பாடுகள் இடம்பெறுவன. நடனமாடுவோர் பூதங்கள், யாஷர்கள், ஆலயத்தின் புராதன வரலாறுகள், இதிஹாச, புராண, தலபுராணச் செய்திகள் இங்கு சித்திரிக்கப்படுகின்றன.

## ரத வெள்ளோட்டம்

நடைமுறையிலே ஓர் ஆச்சாரி ஆனவர் (தேர் செய்யும் திறமைடைத்தோர்) குறிப்பிட்ட காலத்திற்குள் குறித்த ஆலயத்தின் அமைப்புக்கு ஏற்றவாறு (பிரதான மூர்த்தி,

பிரதான ஸ்தூபி, உற்சவ மூர்த்தி, ஆலயப் பிரமாணம்) தான் நிர்மாணித்த ரதத்தை சம்பிரதாய முறைப்படி தனது தொழிலுக்குரிய சிறப்பான தெய்வம், குலதெய்வம், காவற் தெய்வம், கிராமதேவதைகள், ஆகியோர்களைப், பிரீதிப்படுத்தி ஆச்சாரி ஆனவர் கௌரவப்படுத்தப்பட்டு, தனது திட்பநுட்பத்தை வெளிக்காட்டி குறித்த தேரை மிகப்பொருத்தமான நல்ல முகூர்த்தத்தில் ஆலய சூழலில் வெள்ளோட்ட விழா மூலம் அத்தோரை ஆலயத்திற்கு உரித்தாக்குகின்றார்.

## ரதப்பிரதிஷ்டைக்குரிய கிரியை முறைகள்

குறிப்பிட்ட நல்ல முகூர்த்தத்திற்குரிய நாளில் ரதப் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும். ஓர் ஆலயத்தில் ரதபிரதிஷ்டை செய்யப்படுகின்றது எனில் அச்சிறப்பானது உயிருள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மை பயக்கின்றது. ஆலயமண்டபத்தில் அல்லது ரத மண்டபத்தில் யாகமண்டபம் அமைக்கப்பெற்று பஞ்சகுண்டங்கள் அல்லது ஏக குண்டம் அமைக்கப்பட வேண்டும்.

## கலசங்களில் பூஜிக்கப்படவேண்டிய தேவதைகள்

அந்த யாகமண்டபத்தில் வேதிகை அமைக்கப்பட்டு அதன் மத்தியில் பத்துக் கும்பங்கள் வைக்கப்படவேண்டும். நடுவில் சதாசிவனையும் (அந்தமூர்த்திகளுக்குரிய தேவதை) அஷ்டதிக்குப் பாலகர்களையும் பூஜிக்கவேண்டும் (ஒன்பது தேவதைகள்). பிரதான கும்பத்திற்கு பஞ்சாசன பூஜைசெய்து லயாங்கம், போகாங்கம் செய்யவேண்டும் யாகமண்ட பரிவாரகும்பங்களில் சூரியன், சந்திரன், கணபதி, விருஷபம், தர்மபதி, ஆகியோர்களைப், பூஜித்த பின்பு, பூர்வத்தில் இருந்து ஆரம்பித்து த்விதியாவரணம் தொடக்கம் பஞ்சமாவரணம் வரையுள்ள தேவதைகளை பூஜிக்கவேண்டும். இவ்வாறு பூஜித்த பின்பு அக்கினி குண்டத்திற்குரிய சம்ஸ்காரங்களைச் செய்து பூஜித்த தேவதைகளுக்குரிய ஆகுதிகளை கொடுத்து யஜாதிவரையும் செய்யவேண்டும்.

## ரதத்திற்கு செய்யவேண்டிய கிரியைகள்

பவமான மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு பஞ்சகவ்யத்தினால் ரதத்தை ப்ரோக்ஷித்து சுத்திபண்ண வேண்டும். பஞ்சசாந்தி மந்திரத்தை ஜபம் செய்யவேண்டும். குருவானவர் ஆசாரியை அழைத்து ரதத்திற்குரிய கயிற்றை ரதத்தைச்சுற்றி இழுப்பதற்கு ஏற்றவாறு கயிற்றை பரீட்சிக்கவேண்டும். அக்கயிற்றில் மந்திரநியாசம் செய்து அஷ்டநாகங்களை பூஜித்து ஆவாஹனம் செய்யவேண்டும். ரதத்தின் வேதிகையில் (சுவாமியை எழுந்தருளச் செய்யப்படும் பீடம்) பஞ்சாசனங்களை பூஜித்து நடுவில் குறிப்பிட்ட பிரதான தேவதையை தியானித்து ஆவாகனம் செய்யவேண்டும். லயாங்க, போகாங்க ஆவரண பூஜைகளைச் செய்யவேண்டும். பன்னிரெண்டு ஸ்தபங்களிலும் பன்னிரெண்டு சூர்யர்களையும், நான்கு பக்கங்களிலும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், அநந்தனை ஆவாகனம் செய்யவேண்டும். பட்டிகைகளில் ஏகாதசருத்திரர்களை பூஜிக்கவேண்டும். நான்கு குதிரைகளிலும் நான்கு வேதங்களையும் ஆவாஹனம் செய்யவேண்டும். ஜீவநியாசம், ஷடத்துவநியாசம் செய்யவேண்டும். புவநாத்துவா, பதாத்துவா, கலாத்துவா, தத்துவாத்துவா, வர்ணாத்துவா, ஆகிய தேவதைகளை மந்திரநியாசம் செய்யவேண்டும். காமபீஜத்தை ரதத்தின் முன் ஸ்தாபிக்க வேண்டும். யாகமண்டவத்தில் பூர்ணாகுதி செய்து கலசங்களை எடுத்துவரவேண்டும்.

நல்ல முகூர்த்த லக்கினத்தில் எல்லா மங்கள வாத்தியங்களும் முழங்க நிருத்ய, கீத வாத்தியங்கள் சகிதம், கொடி, குடை, ஆலவட்டங்களுடன், பிராம்மண தேவர்கள் மந்திர கோஷம் செய்ய சாந்நித்தியம் நிறைந்துள்ள மந்திர பூர்வமான கலசங்களை ரதத்திற்கு ப்ரோக்ஷிக்க வேண்டும். இதன்பின்பு தூப, தீப, நைவேத்திய அலங்காரங்கள் செய்து தீபராதனை செய்ய வேண்டும். இதன் பின்பே ரதோற்சவத்திற்குரிய நாளில் தெய்வங்களை ஆரோஹணித்து பவனி செய்யப்பட வேண்டும். ரதோற்சவ தினமானது மிகவும் தெய்வீகம் நிறைந்த சமய, தத்துவ உண்மைகள்

நிறைந்த நாளாக உற்சவங்களிலே சிறப்பிக்கப் படுகின்றது.

## ரத பிரதிஷ்டையின் பலன்கள்

ரதப் பிரதிஷ்டையானது குறைவில்லாது செய்யப்படின் அதன் பலன்கள் அதிகமாகும் எனக்கூறப்பட்டுள்ளது. ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்குச் சிறப்பு, ஆலயத்திற்கு, பெருமை மட்டுமல்லாது நாட்டையாளும் மன்னனுக்கு வெற்றியும் கிட்டும். அத்துடன் நாடு, கிராமம், பிரதேசம் என இடத்திற்கு செல்வச் சிறப்பு, வறுமையின்மை, வியாதிகள் நீக்கம், மக்கள் செல்வப்பேறு, லக்ஷ்மிகடாக்ஷம், யஜமான், ஆலயதர்மகர்த்தா, ரதத்தை செய்வோன், செய்விப்போன், ஆச்சாரி, குரு, பக்தர்கள் என அனைவருக்கும் நீண்ட ஆயுள், சர்வசம்பத் பிராப்தி, ஸ்வர்க்கலோகப் பிராப்தி என நற்பலன்கள் கூறப்பட்டுள்ளன.

## ரதப்பிரதிஷ்டையின் பிரதிகூல பலன்கள்

ரதப் பிரதிஷ்டையை குறைவுபடச் செய்யின் பல பிரதிகூல பலன்களை எதிர்நோக்கவேண்டிவரும். நாட்டிலே அல்லது குறிப்பிட்ட கிராமத்திலே துர்பிக்ஷம் ஏற்படும், வறுமைமேலோங்கும், வியாதிகள் அதிகரிக்கும், கிராமம், அல்லது நாட்டு செல்வச்செழிப்பு பாதிக்கப்படும், அரசனுக்கு அல்லது நாட்டின் தலைவனுக்கு ஆயள்குறையும், பயம், அழிவு, எதிர்பாராத தீங்கு, களவு செய்தல், சத்தியம் தவறுதல் வெற்றியின்மை சர்வகார்யஹீனம், எஜமான், தர்மகர்த்தா, குரு, ஆச்சாரி, பக்தர்களுக்கு மனக்கிலேசம் ஏற்படும், மக்களுக்கு சந்தோஷமான வாழ்க்கை இருக்காது.

## பிராயச்சித்தம்

இவற்றைப் போக்குவதற்கு சில பிரயாச்சித்த கார்யங்கள் செய்யப்படவேண்டும் என கூறப்பட்டுள்ளன. குறிப்பாக சாந்திஹோமம், ஸம்ஹிதா ஹோமம், திசா ஹோமம், என்பன செய்யப்படவேண்டும் என உத்தர காரணாகமம் கூறுகின்றது. அஹோராத்ர மந்திரத்தை ஒரு லட்சம் எண்ணிக்கைக்கு ஜபம் செய்யப்பட வேண்டும் எனவும் ஆயிரம் சங்கைகள் ஹோமம் செய்யப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதினால் மேற்கூறப்பட்ட பிரதிகூலங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு நற்பலன்களை அடையலாம் எனவும் கூறுகின்றது. இதனால் ரதப்பிரதிஷ்டையின் சிறப்பு மேலோங்கப்படுகின்றது. பிற்பட்ட காலங்களில் ரதம் பெற்றிருக்கும் சிறப்பிடம் ஆகமங்களைப் பின்பற்றியெழுந்த சிற்பசாஸ்திர நூல்களிலே "மானசாரம்" என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆலயங்களிலே பயன்படுத்தவேண்டிய தேரின் லக்ஷணங்கள் பற்றி இந்நூலும் விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

சைவசித்தாந்த நூல்களிலும் தேர், உருவக விளக்கங்களாகப் பயன்படுத்தப்படுகிறது. உயிரானது உடலை இயக்கும் தன்மை, ஒரு பெரிய தேர் தரையில் ஊர்ந்து செல்லுதல் போன்றது எனச் சிவஞானசித்தியார் (214, 222) கூறுகின்றது. "ஞானாமிர்தம்" என்னும் சைவசித்தாந்த நூல் ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று உலகமாகிய மாடவீதிகளிலே உழன்று திரிகின்றது என உருவகித்துக் கூறுகிறது.

தென்னகத்திலே பல ஆலயங்களிலே கற்றேர்ச்சிற்பங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல்லவர் காலத்தில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பெற்ற எட்டு ரதக்கோயில்கள் குறிப்பிடத்தக்கன. பஞ்சபாண்டவர் ரதங்கள், கணேசரதம் முதலியன தனிக்கற்களில் உருவாக்கப்பட்டவை.

மனுசோழனுடைய கற்றேர்ச்சிற்பமும் குறிப்பிடத் தக்கது. இது திருவாரூரிலே சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்டது. ஒரிசா மாநிலத்திலுள்ள "கொனாரக்" சூரியனார் கோயிலில் பன்னிரண்டு சக்கரங்களையும் ஏழு குதிரைகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கும். கற்றேர்ச்சிற்பம் 14ம் நூற்றாண்டுக்குரியதென்பர். விஜயநகர

மன்னர்களால் 15ம் நூற்றாண்டில் செய்யப்பட்ட ஒரு கற்றேர் "ஹம்பி" என்ற இடத்தில் உள்ளது. பழைய சில ஆலயங்களில் கருவறை அல்லது அதற்கடுத்த மண்டபம் தேர்போன்ற அமைப்புடன் காணப்படுகின்றது. திருவதிகை, திருக்கடம்பூர் கோயில்கள் இத்தகையன. இதயத்தைக் குறிப்பாகவுள்ள ரதத்தின் நடுத்தட்டு மேலேழு உலகங்களுக்கும் கீழேழு உலகங்களுக்கும் இடையில் காணப்படும் இப்பூவுலகத்தைக் குறிக்கோள்க ளையும் குறித்து நிற்கின்றது. மேல்நோக்கிக் குவிந்து செல்லும் இதன் அமைப்பு மன ஒருமைப்பாட்டையும் சுட்டுகின்றது. இந்த உயர்லட்சியங்களின் மூலம் கிட்டும் உயர் பதவியாகிய வீட்டின்பம், அங்கு கிட்டும் மனச்சாந்தி ஆகியவற்றைக் கவசமும் குடையும் காட்டுகின்றன.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியும், தத்துவ, அடிப்படையும் கொண்ட ரதமானது இன்றைய நமது ஆலயங்களில் மஹோற்சவ காலங்களில் ரதோற்சவம் எனும் தேர்த்திருவிழாவை நடத்துவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது. மஹோற்சவம் ஐந்தொழில் விளக்கம் என்றவகையில் படைத்தலைக் குறிக்கும் அங்குரார்ப்பணம், காத்தலைக் குறிக்கும் ரக்ஷாபந்தனம் முதலிய கிரியைகளுடன் ஆரம்பித்து அழித்தல் தொழிலைக் குறிப்பதாக ரதோற்சவம் நடைபெறுகின்றது. இத்தேர்த்திருவிழாவானது சமூகவியல் பெறுமானத்தையும் பெறுகின்றதைக் காணமுடிகின்றது. ஊர்க் கோயிலிலே தேர்த்திருவிழா என்றால் ஊர் முழுவதும் புனிதமும், உற்சாகமும் அடைகின்றது. தூய்மையும், அழகும் பொலிவும் காணப்பட்டு எல்லோர் மனங்களிலும் மகிழ்ச்சிப் பிரவாகம் பொங்கும். தம்முள் பகை மறந்து ஊர்கூடித்தேர் இழுப்பர்.

இவ்வாறு தத்துவ உட்பொருளும் வரலாற்றுச் சிறப்பும் கலைநயமும் மிக்க ரதோற்சவமானது யாவரது உள்ளங்களிலிருந்தும் அழுக்குகளைப் போக்கி ஆன்மீக ஒளியேற்றி அன்பு மலர் மலர்த்தி எம்மெல்லோரையும் பேரானந்த வாழ்வுக்கு இட்டுச்சென்று இன்பத்திலாழ்த் தட்டும்.

*துணைநூல்.–* காரணாகமம் – உத்தரபாகம்
கொ. ஷண்முகசுந்தர முதலியாரவர்களால்
சென்னை–சிந்தாதிரி
சிவஞானபோதயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது. முதற்பதிப்பு – 200.
கலி – ரு00க. விகாரிவருஷம் தை – மீ.



ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி

# நல்விழாப் பொலிவு காணல்

*"வித்தியாசாகரம்"*
*சிவஸ்ரீ சபா வாஸுதேவக்குருக்கள்*

இப்பூவுலகினிற் பிறந்த ஒவ்வொருத்தரும் சுகபோகமாக வாழவேண்டும் என்று பல்வகையிலும் இறைவனை இறைஞ்சுகின்றார்கள். இறைவனும் ஆன்மாக்கள் மீது வைத்த பெரும் கருணையினால் பல்வகை வழிபாட்டு முறைகளையும் அருளியிருப்பதைக் காணமுடிகின்றது. அடியவர்களும் தம் துன்பங்கள் விலக விரதங்கள் விழாக்கள் என மகிழ்வுடன் அனுஷ்டிக்கின்றார்கள்; கொண்டாடுகின்றார்கள். மக்கள் அனைவராலும் விரும்பிக் கொண்டாடப்படுவன விழாக்களாகும். இங்கு விழா எனக் குறிப்பிடப்படுவன உற்சவங்களேயாகும். அடியார்கள் தங்கள் தங்கள் குல தெய்வங்களின் மற்றும் பிரசித்தம் பெற்ற திருக்கோயில்களின் மகோற்சவங்களை விரும்பிக் கைக்கொள்வதைக் காணமுடிகின்றது. இம் மகோற்சவ காலங்களில் விரதம் இருப்பது அன்னதானம் செய்விப்பது முதலாக பல்வகையிலும் ஈடுபட்டு தம் குறைகளை நிவர்த்தி செய்து கொள்கின்றார்கள். அடியார்களின் நேர்த்திக்கடன்களையும் நிவர்த்தி செய்யக்கூடிய முறையிலும் இவ் விழாக்கள் அமைவுறுகின்றபடியால் இதனை எல்லோரும் விரும்பி அனுஷ்டிக்கின்றார்கள். அதிலும் தேர்த்திருவிழா மிகவும் பிரபல்யமாகக் கொண்டாடப்படுகின்றது. அங்கப்பிர தட்சணம் செய்தல், அடியெடுத்து வணங்கல், காவடி எடுத்தல், சிதறுதேங்காய் உடைத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், தண்ணீர்ப் பந்தல் போடுதல் என அடியார்களின் ஏராளமான நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்து வைக்கின்றது இத்தேர்த்திருவிழா. அடியார்கள் எத்திருவிழாவிற்கு போக முடியாவிட்டாலும் தேர்த் திருவிழாவிற்கு சென்று இறைவனைத் தரிசிப்பார்கள். இந்தளவிற்கு மிகவும் பிரபல்யமாக பேசப்படும் தேர்த்திருவிழாவிற்கு தேர் மிகவும் முக்கியமானதாகும். எனவே நாம் தேர்பற்றியும் உற்சவத்தில் தேர்த்திருவிழாபற்றியும் சற்றுப் பார்ப்போம்.

*மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்*
*கண்ணினாவலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்*
*உண்மை யாமெனி னு கர்முன் வருகென வுரைப்பார்.*

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் அண்ண லாரது விழாக்களை மனவுறுதியோடு நடத்துதல் தரிசித்தல் ஆகும். "விதிப்படி உற்சவங்களை செய்பவர்களுக்கும் செய்விப்பவர்களுக்கும் பாவம் நீங்கும் ஞானம் உண்டாகும், எல்லா மங்களமும் உண்டாகும்" எனவும், "சர்வதோஷநிவர்த்தியின் பொருட்டும், சர்வலோக சுகத்தின் பொருட்டும் சர்வதேவ பிரியமாகவும், சர்வபிராணிகளின் சுகத்தின் பொருட்டும் அரசர்களின் விஜயத்தின் பொருட்டும், எல்லாரையும் இரட்சித்தற் பொருட்டும் உற்சவத்தினை செய்க" எனவும், "புத்தி முத்தியைக்கொடுப்பது, எப்பொழுதும் வெற்றியை உண்டாக்குவது, சர்வசித்தியையுங் கொடுப்பது, இஷ்டகாமிய பலனைத் தருவது" எனவும் சிவவாக்கியமாகிய ஆகமங்கள் உற்சவத்தின் பெருமையைக் கூறுகின்றன.

உற்சவங்கள் சாகல்யம், பாவனம், சாந்தி, மாங்கல்யம் என நான்கு வகைப்படும். துவஜாரோகணாதி தீர்த்தாந்தமான உற்சவம் சாகல்யம் எனப்படும். கொடியேற்றம் மாத்திரமன்றி ஏனைய அனைத்தும் செய்வது பாவனம் எனப்படும். காலையில்

ஓமமும் பலியும் மாலையில் உற்சவமும் செய்வது சாந்தி உற்சவம் எனப்படும். எசமானனும் குருவும் ஒரு தினத்தினை அந்தமாக நியமித்துச் செய்யப்படுவது மாங்கல்யம் எனப்படும்.

1. சௌரம் – 27 நாள்
2. சாந்திரம் – 17 நாள்
3. சாவித்திரம் – 15 நாள்
4. கௌமாரம் – 13 நாள்
5. தைவிகம் – 9 நாள்
6. பௌவனம் – 7 நாள்
7. பௌதிகம் – 5 நாள்
8. கௌணம் – 3 நாள்
9. சைவம் – 1 நாள் எனவும்

இதில் 27 நாள், 17 நாள், 15 நாள் உற்சவங்கள் உத்தமமானது என்றும் அது சௌக்கியத்தினைத் தருவது என்றும், 13 நாள், 9 நாள், 7 நாள் மத்திமமானது என்றும் அது விஜயத்தினைத்தரும் என்றும், 5 நாள், 3 நாள், 1 நாள் உற்சவங்கள் அதமமானது என்றும் செல்வத்தினைத் தருவது என்றும் ஸ்ரீமத் உத்தரகாரணாகமத்தில் சாகல்ய உற்சவத்தினை பாகுபடுத்தி சிறப்பித்துக் கூறுகின்றதைக் காணமுடிகின்றது.

ஆலயங்களில் உற்சவங்கள் செய்யப்படுவது சிவபெருமான் பஞ்சகிருத்தியங்களை உணர்த்தும் பொருட்டேயாகும். அதாவது ஆன்மாக்களது பக்குவத்தன்மைக்கேற்ப மலங்களை நீக்கி முத்திகொடுத்தற் பொருட்டேயாகும். பஞ்சகிருத்தியங் களாவன சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் ஐந்துமாம். பஞ்சகிருத்தியமானது சூக்கும, தூல, அதிசூக்கும பஞ்ச கிருத்தியங்கள் என முத்திறப்படும்.

உற்சவகாலத்திலே செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலான ஐந்தொழிலையும் குறிப்பதாகும். இரதோற்சவமானது சங்காரத்தினைக் குறிப்பதாகும். சங்காரமாவது சூக்கும பஞ்சகிருந்தியத்தில் ஆன்மாக்களின் சஞ்சிதகன் மங்களை பக்குவப்படுத்தல் என்றும், தூலபஞ்ச கிருத்தியத்தில் பிறந்திறந்து வினைப்பயன்களை அனுபவித்தலாலாய இளைப்பு நீங்குதற்காகத் தனுகரண முதலியவற்றை முதற்காரணத்தில் ஒடுக்குதல் என்றும் அதிசூக்கும பஞ்சகிருத்தியத்தில் ஆன்மாக்கள் பாசத்தில் இருந்து பிரிதல் என்று சங்காரத்தினது இயல்பு பற்றிக் கூறுகின்றது.

சங்காரத்தினை உணர்த்தும் தேர்த்திருவிழாவில் இறைவன் அண்டசராசரங்களையெல்லாம் தேராக்கி ஆன்மாக்களைப் பற்றியுள்ள மலங்களையெல்லாம் நீக்குதற் பொருட்டு அதன்மீது அமர்ந்து வீதிவலம் வருகின்ற காட்சி ஒப்பற்ற திருக்காட்சியாகும். பசுபதியாகிய சிவன் சூரியசந்திரர்கள் உருள்களாகவும், மற்றைச்சரம் அசரம் ஆகிய பொருட்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும், அமைந்த தேரில்மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அவ்வம்பின் கூர்மையாகவும் கொண்டு எழுந்தருளி பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களைத் தமது திருபுன்முறுவலால் எரித்தருளினார். திரிபுர சங்கார உண்மைக்காட்சியை உணர்த்தி ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக செய்யப்படுவதே இரதோற்சவமாகும். இரதமானது ஆலயக் கருவறையின் தோற்றமாகும். இராசகோபுரத்தின் வடிவமாக அமைவது சப்பறம் என்னும் சகோபுரம் ஆகும். கோபுரத்திற்கு சமமாக இருப்பதனால் சகோபுரம் எனப்படுகின்றது. ஸ்தூபியின் வடிவமாக அமைந்து காணப்படும் தேரானது ஆலயத்திற்குள் சென்று வழிபாடாற்றமுடியாத வர்களுக்கும் இறைவனின் கருவறையோடு கூடிய தரிசனத்தினைக் கொடுப்பதாகும். இவ்வாறான தேர்கள் சாலவிருட்சம், நாவல், சாரம், சரளம், மகிழ், புளி, கிருசரம், கிருதமாலம், வன்னி ஆகிய மரங்களினால் செய்யப்படுகின்றன. குட்ஷி, அட்ஷம், தந்தம், சித்திரம்,

கீலகம் என பல்வகை உறுப்புக்களுடன் தேர் உருவாக்கப்படுகின்றது. தேருக்கு அடித்தளமாக ஆதாரம் உபாதாரம் என்னும் பகுதிகள் காணப்படும். அதன்மேல் தளங்கள் உருவாக்கப்படும். தேர்களின் அமைப்பினைக் கொண்டு ஏழு வகையாக பாகுபடுத்தலாம். சதுரவடிவான நபஸ்வன் பத்ரகம் என்றும், அறுகோணவடிவானது பிரபாஞ்சன பத்ரகம் என்றும் விதான பத்ரகம், பவன பத்ரகம், பிருஷத பத்ரகம், சந்திர பத்ரகம், அனில பத்ரகம் என வகைப்படும். இதைவிட சதுரவடிவான தேர் நாகரம் என்றும், எண்கோண வடிவானது திராவிடம் என்றும், வட்டவடிவானது வேசரம் என்றும் அறுகோண வடிவானது அந்திரம் என்றும் கூறப்படும் மரபுண்டு. மகோற்சவத்திற்குரிய தேருக்கு ஆறுமுதல் பத்து வரையான சில்லுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவனுக்கு ஒன்பது வேதிகைகள் கொண்ட தேரும் ஏனைய தெய்வங்களுக்கு ஐந்து வேதிகளைக் கொண்ட தேரும் அமைவுற வேண்டும். மயிற் பீலிகைகளாலும், சாமரங்களாலும், தோரணங்களாலும், நல்லோசைதரும் சிறிய மணிகளாலும், ஒளி பொருந்திய கண்ணாடிகளாலும், விசிறிகளாலும், மாலைகளாலும், தேரின் மேற்பகுதி அலங்கரிக்கப்படும். தேரின் கீழ்ப்பகுதியில் உரிய தெய்வங்களின் பெருமையை உணர்த்தும் உருவங்கள் செதுக்கப்படும், சிங்கங்கள், யானைகள், மகரங்கள், நுணுகிய மடிப்பு வேலைப்பாடுகள், நடனமாடுவோர், பூதங்கள், யட்சகர்கள் முதலானோரும் சித்தரிக்கப்படுவர். அதுமட்டுமல்லாது கீழ்ப்பகுதி சித்திர வேலைப்பாடுகளுடனும் மேற்பகுதிக்குச் அழகிய வர்ணசித்திரங்கள் தீட்டப்பட்டு வேலைப்பாடுகள் அடங்கிய சேலைகளினாலும் செய்யப்படும். மேற்பகுதி சேலை சுற்றுவன தேர்கள் என்றும், வேலைப்பாடுடைய மரங்களால் செய்யப்பட்டதை இரதங்கள் என்றும் கூறுவர். இன்றும் சிதம்பரத்தில் சேலைகளால் சுற்றப்பட்ட தேர் இழுக்கப்படுவதைக் காணலாம்.

மகோற்சவங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் தேர்த்திருவிழாப் பொலிவு காண்பது பெரும் பேறாகும். புதிய ரதங்களைப் பிரதிஷ்டை செய்வது பற்றிய முழுமையான விபரங்களை உத்தர காரணாகமம் ரதப்பிரதிஷ்டா விதி என்னும் பகுதியில் தெளிவாகக் கூறுகின்றது.



சித்திரத்தேர்ப்பணியில் ஈடுபடும் சிற்பக்கலைஞர்கள்

# சித்திரத்தேரேறி திருவீதி வலம் வரும் திண்ணபுரத்தான் பாதம் போற்றி

ஆறுமுகம் செந்தில் நாதன்
*முன்னைநாள் செயலாளர் காரைநகர் மணிவாசகர் சபை,*
*முன்னைநாள் செயலாளர் சைவத் தமிழ்ச் சங்கம், சூரிச் சுவிற்சலாந்து,*
*நிர்வாக செயற்பாட்டாளர் அருள்மிகு சிவன்கோவில், சூரிச் சுவிற்சலாந்து*

*அரியபூரணை புட்கலை யாமிரு*
*தெரிவை மார்முலை செங்களபத்தொளி*
*விரவு சுந்தர மேரு வொப் பாம்புய*
*குரிசில் தண்டை குரைகழல் போற்றுவாம்*

(திருச்செந்தூர்ப் புராணம்)

**உ**லகின் ஆட்டமே அந்த ஆடல்வல்லானின் திருநடனத்தில்தான் உள்ளது என்பதனை "ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே" என்ற நாவுக்கரசரின் பாடல் மூலம் காண்க. எனவே அந்தப்பெருமானின் திருநடனத்தை காண்பதற்கு இப்பூவுலகில் உள்ளமக்கள் மட்டுமல்லாது தேவலோகத்தில் உள்ள நாராயணன், பிரம்மா, இந்திரன் உட்பட அனைத்துத் தேவர்களும் வருகின்றார்கள் என்பதனை நகராது நின்ற தேரினை நகர வைப்பதற்காக சேந்தனார் தனது திருப்பல்லாண்டில் "அமரர்குழாத்தில் அணியுடை ஆதிரைநாள் தேரார்வீதியில் தேவர்குழாம் திசையனைத்தும்" என்ற வரியினூடாக உறுதிப்படுத்துகின்றார். தேர்த்திருவிழா என்பது சைவசித்தாந்தம் கூறுகின்ற அழித்தல் தொழிலாகும். இறைவன் ஆன்மாக்களின் மூலமலமாகிய ஆணவமலத்தைச் சங்காரம் செய்கின்றான் என்பது பொருள். சங்காரம் தீமையை அழித்து நன்மையை மேலோங்கச் செய்வது "சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு" அப்பர் தேவாரம் "சலமிலன் பெயர் சங்கரன்" திருவருட்பயன் உமாபதிசிவம்.

சங்கரன் சுகத்தை செய்பவன், மலத்தை சங்கரிப்பவன். இந்தவிடத்து நாம் பிறிதொன்றை கவனித்துக் கொள்ளல் வேண்டும் திருமணமான மணமக்கள் தேர்முடி, தேர்த்திருவிழா பார்த்தல் கூடாது என்ற கருத்து தவறானது. இறைவனது ஆசிர்வாதத்தை, திருவருளை பெறுவதற்கு ஆசாரத்துடன் வருதலே மிகமுக்கியமாகும். பிற்காலத்தில் இப்படியானதொரு தவறான கருத்தை நடைமுறையில் வைத்திருப்பது எமது சைவசமயத்திற்கு நல்லதன்று. இதனை களைதல் வேண்டும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய தமிழ் என்கிறோம். அப்படிப்பட்ட முதன்மையானதும் கன்னியுமான தமிழ் மொழியுடன் பின்னிப்பிணைந்ததே சைவம். ஆகவே இப்படிப்பட்ட பழமையான நீதியான சைவசமயத்திற்கு கறைபடிதல் தவறு சோதிக்க முடியாத சமயம், "ஏதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் மிக்குச் சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி" என்பது ஞானசம்பந்தர் தேவார வாக்கு.

"ஊர் கூடித்தேர் இழுத்தல்" என்பது முதுமொழி ஆனால் இங்கே ஈழத்துச் சிதம்பரத்தானின் தேரை பண்டுதொட்டு நாடுகூடி தேர் இழுக்கின்றனர். இதனை ஏன் குறிப்பிட வேண்டும் என்றால் இவ்வாலயமானது தனி ஒரு கிராம மக்கள் ஆலயமல்ல ஈழமக்களின் ஆலயமாகும். தலத்தின் பெயர், தலபுராணம் அவ்வாறே எடுத்தியம்பியுள்ளது.

*ஐந்தொழில் நாடக மாடிடு மையனு மோர்தேர்மேல்*
*பைந்தொடி யாள் சிவகாமச வுந்தரியோர் தேர்மேல்*
*மந்திர நான்மறை செந்தமிழ் மாமறை வானேற*
*வந்தடி யார் தொழ மாமணி வீதி வலம் வருவார்.*

(விழாவபர்சருக்கம் ஈழத்துச்சிதம்பர புராணம்)

அண்டசராசரங்களை ஒடுக்கி விரித்து குறுகச் செய்பவர் "*ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்*" என்று திருவாசகம் பேசும். எல்லா உலகங்களையும் அங்குள்ள

எல்லா ஜீவராசிகளையும் சிவபெருமான் தானே வழிநடாத்தி அருள்பாலித்து ஆட்க்கொள்கின்றான் என்பதனை தேர்த்திருவிழா உணர்த்துகின்றது. இறைவன் தேர்வடிவானவன் என வேதம் கூறுகின்றது. இருக்கு வேதத்தில் வரும் "ரதேப்பியகா ரதபதிப்பியகா" என அனைத்தையும் இயக்குபவன் இவை உணர்த்துகின்றது. "ரத" என்ற வேதச் சொல்தான் இன்று நடைமுறையில் ரதோற்சவம் என்று கூறுகின்ற தேர்த்திருவிழாவாகும்.

## சாம்பவதீட்சை

சிவபெருமான் தேரில் வருகின்றபோது அளிக்கப்படும் தீட்சைதான் சாம்பவதீட்சை, சமயதீட்சை பெறாதவர்கள் கூட இறைவன் தேரில் வருகின்ற திருக்காட்சியை கண்டு தரிசிப்பது இறைவன் வழங்கும் சாம்பவ தீட்சை. இந்தத் தீட்சையானது அடுத்த வருடம் வரும் தேர்த்திருவிழாவரை செல்லும்படியாகும் என கால எல்லை வகுக்கப்பட்டுள்ளது.

சிவபிரான் தேரில் வருவதுதான் எமது சமய வாழ்வின் ஆரம்பம். இதனை புராணங்கள் கூறுகின்றன. முப்புரங்களையும் எரித்த சிவனுக்கு "முப்புரமெரிசெய்த அச்சிவனுக்கு" தேவர்கள் தேர் அமைத்தவர்கள். அதிலே நான்கு குதிரைகள் தேரை இழுப்பது நான்கு வேதங்களையும் (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்) சாரதி பிரம்மாவையும், சாட்டை பிரணவத்தையும் காட்டுகின்றது. அதேபோன்று இந்த ஈழத்துச் சிதம்பரத்தில் திருநடனம் புரிகின்ற சிற்சபேசனது தேரும் அமைந்துள்ளது என்பதுடன் தேரின் விமானப் பகுதியாகிய மேற்பகுதி சிவப்பு வெள்ளை நிறத் துணியினால் அமைவது மிகவும் மேலானது. சிற்பசாத்திரக்கலைகளில் தேரின் மேற்பகுதி துணியினால் அமைவது பிரமாணம் எனக் கூறுவர். இதற்கு ஒப்பாக தேர் அழகு திருவாரூர் என்று சொல்வதும் திருவாரூரில் இன்றும் தியாகேசப் பெருமான் வீதிவரும் திருத்தேரின் மேற்பகுதி துணிகளினால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளதும் சிதம்பரத்திலே தில்லைக்கூத்தனின் திருத்தேரின் அழகும் அவ்வாறே என்பதை நினைவு கொள்ள வேண்டும். எனவே இத்தனை திருவருள் கொண்ட பெருமை கொண்ட தேர்த்திருவிழாவும், சித்திரத்தேரும் காண்பவர்கள், அகக்கண்களால் பார்ப்பவர்கள் பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றவர்கள் ஆவார்கள் என்பதோடு இந்த ஆலய ஆதீன கர்த்தாக்களாகிய திரு. ஆண்டிஐயா அம்பலவிமுருகன், முருகேசு சுந்தரலிங்கம் ஆகியவர்களின் நிர்வாக காலப்பகுதியில் இப்பணி நடைபெறுவதையும் சித்திரத்தேருக்கு உதவிபுரிந்தவர்கள். சிற்பாசாரியார்கள் என்போரும் மனிதப்பிறவியையும் வேண்டப்பட்டவர்கள் என்பதோடு இம்மலரை வெளியிடுவதற்கு முன்னின்று உழைக்கின்ற அன்பர்கள், அனைவரும் சைவ உலகில் திருவருள் பெற்று இன்புற்றுவாழ ஈழத்துச்சிதம்பரத்தான் அருள்பாலிக்க வேண்டுமென ஆசி வேண்டி நிறைவு செய்கின்றேன்.

*இன்பமே எந்நாளும் துன்பமில்லை*

# காரை ஈழத்துச் சிதம்பர மார்கழித் திருவாதிரை இரதோற்சவம்

பரம்பரை உபயகாரர்

இத்திருக்கோயில் இரதோற்சவம் 1830 ஆண்டுமுதல் இனிதே நடைபெற்று வருகின்றது. இவ் இரதோற்சவ விழாவை காரைநகர் களபூமியில் வாழ்ந்த பேரம்பலம் சண்முகம் அவர்களும் அவரது பிற்சந்ததியினரான கந்தர் அவரைத் தொடர்ந்து ஆறுமுகம் அவரைத் தொடர்ந்து சண்முகமும் (பொட்டர்) பின்னர் கந்தையாவும் அதன்பின்னர் விதானையார் சுப்ரமணியமும் அவரின் மறைவின் பின் அவரின் பிள்ளைகள் ஆகியோர் பரம்பரை பரம்பரையாக நடாத்திவருகின்றனர். இத்தேர்த் திருவிழாவை ஏறக்குறைய 175 ஆண்டுகளாக சந்ததி இடையறாது நிறைவேற்றி வருவது இறைவன் திருவருளே.

சிதம்பர நடராசர் திருக்கோயிலில் உற்சவங்கள் நடைபெறுகின்ற தன்மையைப் போன்று இக்கோயிலான ஈழத்துச் சிதம்பரத்திலும் விழாக்கள் நடைபெற்று வருவது சிறப்பம்சமாகும். சிதம்பர தரிசனத்தை மேற்கொள்ள முடியாத பல அடியார்கள் இச்சிவனை வழிபட்டு ஈடேற்றமடைகின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

நாட்டில் பல்வேறு அசம்பாவிதங்கள் நடைபெற்றபோதும் இச்சிவனின் நாளாந்த பூசைகள் தவறாது தொடர்ந்து நடைபெற்றன. நாட்டின் அமைதியின் பின்பு பல இலட்சம் ரூபாய்கள் செலவில் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு சிறப்போடு திகழ்கின்றது.

திருவெம்பாவை சைவர்களின் முக்கியமான வழிபாடுகளில் ஒன்று. சைவர்கள் திருவெம்பாவையை மிகவும் பக்தி சிரத்தையுடன் விரதமிருந்து அதிகாலையில் கோயில்களுக்குச் சென்று திருவெம்பாவை பதிகத்தைப்பாடி சிவனையும் சக்தியையும் தரிசிப்பார்கள். காரைநகர் சிவன் திருவாதிரை இரத உற்சவத்திற்கு யாழ் குடாநாட்டிலிருந்தும் பல பாகங்களிலிருந்தும் அநேகர் வந்து தரிசித்து அருள்பெறுவார்கள்.

திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் திருவருட் சக்தியைப்பற்றியே பாடியுள்ளார். ஆன்மாவானது மாயை என்ற இருளிலிருந்து நீங்கி திருவருள் நிலையை அடைதல் வேண்டும், என்பதை திருவெம்பாவை எடுத்தியம்புகின்றது.

# ஆடல் வல்லானுக்கு அணியுடை ஆதிரைத் தேர்

திரு. க. பாலசுப்பிரமணியம் சத்திரந்தை,
களபூமி, காரைநகர்.

தரிசிக்க முத்தி தரும் தில்லைச் சிதம்பரத்திற்கு ஒப்பானதாக ஈழத்தின் கண்ணாக விளங்கும் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில். ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் ஆண்டுக்கு மூன்று முறை மாபெரும் வீதியாம் மூன்றாம் வீதியை தேரோடும் சிறப்பாகக் கொண்ட கோயிலாக விளங்குகின்றது.

"ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்" என்ற ஞானசம்பந்தர் வாக்கு சிறப்பிற்கு ஒப்ப ஈடு இணையற்ற வண்ணம் பெருவிழாவாக நடைபெறும் மார்கழித் திருவெம்பாவை 10 நாட்களும் தில்லைச்சிதம்பரம் போன்று இங்கும் .விழா நடைபெறுகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது. இத்தலத்திற்கு ஓர் அழகிய பிரமாண்டமான சிற்பத்தேர் 39 அடி உயரமும் 25 அடி சுற்று வட்டமும் 6 சமயங்களை உணர்த்தும் பாவனையில் 6 சக்கரங்களைத் தாங்கியதுமான நாகர வடிவமைப்புடையது மான எம்பெருமானின் 108 தாண்டவங்களும் 25 மகேஸ்வர வடிவங்களும் 63 நாயன்மார்களின் வரலாறும் அமையப்பெற்றதாய் ஆயிரத்தெட்டு மணி பூணப்பெற்ற நான்கு குதிரைகள் பூட்டப்பெற்று நான்முகன் சாரதியாக அமையப்பெற்று தங்கமுடியுடன் கூடிய சிதம்பரன் தேர் போன்று வர்ணச்சீலை சுற்றப்பட்டு இத்தேர் அழகிய சித்திரவேலைப்பாடுகளுடன் அமையப்பெற்று உள்ளது.

இத்திருத்தேரை 51 சுடரமைந்த திருவாசியுடன் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர் ஆகியோருடன் அமைந்து எழிற் கோலம் கொண்டருளும் நடராஜப் பெருமானுடன் ஏனைய நான்கு தேர்களின் முறையே விநாயகர் சுப்பிரமணியர், ஐயனார், அம்பாள், மாணிக்க வாசகர் போன்ற மூர்த்திகளும் அமர்ந்து பஞ்சரத பவனி கொள்ளும் 9ம் திருவெம்பாவை நாள் சிறப்பானதாகும்.

"இவ்விழாச்சிறப்பினை புலவர் மணி இளம் முருகனார் அவர்கள் ஈழத்து சிதம்பர புராணத்தில் மிக அழகாக" குறிப்பிட்டுள்ளார்.

*மெய்ப்பண்பு மிகுகின்ற வெம்பாவை*
*நாள்பத்தும் மேலாம் காலாந்*
*தெய்வச் சீரலங்கார விழாவந்த*
*திகழ்விப்பார் செப்பு மென்பான்*
*துய்யதிரு நாளன்று சோதிமணித்*
*தேரைந்துந் தூவா நின்று*
*மையறுசீர் வெளிவீதி யிழிந்துவலம்*
*வருவதொப்ப வருமா னன்றே*

என்று இப்பாடல் மூலம் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

சிதம்பரத்தில் தேர் வலம் வருதலை சேந்தனார் திருப்பல்லாண்டில் "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்" எனப் பாடியுள்ளமை இங்கு உற்று நோக்கற்பாலதாகும்.

திருவாரூர் தேரழகு என்பது போன்று இலங்கையில் ஈழத்துச் சிதம்பரம் தேரழகு என்ற பெருமை பெற்றுள்ளது.

இத்திருத்தேர் அமைவதற்கு மூலகாரணமாய் இருந்த முன்னை நாள் இந்து சமய கலாச்சார அமைச்சர் மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் பெருமானின் அருட்கடாட்சம் பெற்றவர் என்றே கூறலாம். அவர் தம் வாழ்வில் ஏனைய தேர்களும் சிற்ப தேர்களாய் அமையப்பெற்று மாமணி வீதியாகிய திருவீதியில் வலம் வரும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

*"ஆதிரை நாளால் அது வண்ணம்"*

# ஈழவளநாட்டின் இணையற்ற திருவிழா

அ. சதாசிவம்,
ஈழத்து சிதம்பர அறப்பணி நிலையம், காரைநகர்

அழித்தல் தொழிலை குறிக்கின்ற தேர்த்திருவிழா ஆகிய இந் நன்நாளில் பஞ்ச கிருத்தியத்திற்கு கர்த்தாவாகிய எம் பெருமான் மும்மலங்களாகிய தீய சக்திகளைக் களைந்து தனது பக்தர்களை காப்பதற்காக கோலாகலமாக நடைபெறும் திருவிழாவே தேர்த்திருவிழா ஆகும்.

இத்தேரை யாழ்ப்பாணம், கொழும்பு பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இந்து சமய விவகார அமைச்சருமான தியாகராஜா மகேஸ்வரனின் அரும்பெரும் முயற்சியினால் இத்தேர்த் திருப்பணி சிறப்பாக நடைபெற்று இத்தேர் வெள்ளோட்ட மலர் வெளியிடுவதிலும் நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இத்தேரான ஈழவள நாடாகிய யாழ்ப்பாணத்திலே உள்ள தேர்களை விட மிகவும் சிறப்பு வாய்ந்ததுமான அழகிய சிற்பங்களை உடையதுமான இச்சிற்பத்தேர் ஒருவருடத்தில் மூன்று முறை மாபெரும் வீதி மூன்றாம் வீதியை வலம் வருவது இக்கோயிலின் சிறப்பம்சமாகும். இத்தேர் வெள்ளோட்ட பவனியையும் ரதா ரோகண பவனியையும் தரிசிக்கும் பக்தர்கள் இப்பூலோகத்திலே பேரானந்தப் பெருவாழ்வு வாழ கூத்தப்பிரான் அருளை வேண்டி யாம் நிற்கின்றோம்.

சுபம் அஸ்து



# சைவ உலகில் வேறு ஒரு சைவ ஆலயங்களிலும் இல்லாதவாறு எல்லாம் அமைந்த சிற்பத் தேரின் ஸ்தபதி

**ஸ்தபதி திரு. சரவணமுத்து ஜெயகாந்தனுடன் ஓர் நேர் காணல்.**
**நேர்கண்டவர் ஈழத்துச் சிதம்பர கூத்தப்பிரான் நிழலில் வாழும் தொண்டர்**

**கேள்வி :** வணக்கம் திரு. ச. ஜெயகாந்தன். எங்கள் ஆலய புதிய சிற்பத்தேர் திருப்பணி எப்பொழுது ஆரம்பமானது? எப்படி? என்று கூறுவீர்களா?

**பதில் :** முன்னாள் இந்து சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திரு. தி. மகேஸ்வரன் அடியேனை அழைத்து தன் குலதெய்வமான வரலாற்றுச் சிறப்புமிக்க ஈழத்துச் சிதம்பரத்தில் நித்தம் நடனம் புரியும் நடராஜப் பெருமானுக்கு 39 அடியில் சிற்பத்தேர் எம் சைவ மரபுப்படி உருவாக்க வேண்டும் என்று பணித்தார்கள். அவரின் ஆணையை ஏற்று 25-01-2005 தைப்பூசத்தன்று ஐயனார், சிவனுக்கு அபிஷேகம், ஆராதனையின் பின் ஆலய பரம்பரை மூத்த சிவாச்சாரியார் பண்டிதமணி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்களின் பூரண ஆசியுடன் கால்கோள் விழா மிகச் சிறப்பாக பக்தி பரவசத்துடன் பல அடியார்கள் முன் ஆரம்பமானது.

**கேள்வி :** எப்படி ஒரு ஆண்டுக்குள் முன் (25 - 01 - 2005 - 10 - 01 - 2006) இவ்வளவு பிரமாண்டமான கண் கவரும் வேலைப்பாட்டுடன் அழகிய தேரை உருவாக்கினீர்கள்?

**பதில் :** அதிசயம் தான். எல்லாம் திண்ணைபுரத்தான் அருள். அத்துடன் திரு. மகேசுவரன் அவர்களின் அன்பு வேண்டு கோளுக்கு இசைய தமிழகம் சென்று திருவாவடுதுறை குருமகாசன்னிதானத்தின் பூரண அருளாசிபெற்று மற்றும் சிதம்பரம் சென்று சிவஸ்ரீ க. பரமேசுவரதீட்சிதரைப் பார்த்து அருளாசியுடன் அவரின் புத்திரர்கள் உதவியாய் சிதம்பரத் தேரைப் பார்வையிட்டு புகைப்படங்களும் எடுத்தோம். மற்றும் தலங்களில் உள்ள தேர்களையும் பார்வையிட்டும் வந்து ஆரம்பித்தேன்.

**கேள்வி :** அமைச்சராக திரு. தி. மகேசுவரன் புனிதமான சேவை செய்யும் காலம் தொண்டைமானாறு சந்நிதியானுக்கு சித்திரத் தேர் செய்ய பணித்தாராமே?

**பதில் :** ஆம். அன்னக் கந்தன், சந்நிதி முருகனுக்கு சித்திரத் தேர் செய்யும் பாக்கியம் பெற்றேன்.

**கேள்வி :** திரு. மகேஸ்வரன் ஈழத்துச் சிதம்பர கூத்தப்பிரான்மேல் இவ்வளவு பக்தி வைக்கக் காரணம் என்ன?

**பதில் :** இவர் திருமணமாகிப்பிள்ளைகள் இல்லாமல் இருந்து நேத்தி வைத்துத் தான் இப்போது எம்பெருமான் அருளால் 3 குழந்தைகள். மேலாக இலங்கைத் தலைநகர் கொழும்பில் ஜிந்துப்பிட்டியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பொழுது 27-03-2004 இவரைச் சுட்ட பொழுதுஐயனார் இவர் உயிரைக் காப்பாற்றினார் என்று அடிக்கடி கூறுவார்.

**கேள்வி :** நீங்கள் சைவ உலகில் அதிக சித்திரத் தேர்கள் உருவாக்கி பெரும் புகழ் பெற்று உள்ளீர்கள் அதனைப் பற்றி சிறிது விளக்க முடியுமா?

**பதில் :** ஆம், இப்ப 40 க்கு மேற்பட்ட தேர்கள் உருவாக்கினேன். முதல் முதல் எனது தேர் கரணவாய் உச்சிப் புவனேசுவரி அம்பாளுக்கு 1987ம் ஆண்டு செய்தோம். அதைத் தொடர்ந்து கொழும்பு கண்டி உட்பட ஈழத்திருநாட்டின் பல சைவ ஆலயங்களுக்கும், லண்டன் மாநகருக்கு மட்டும் 8 சித்திரத் தேர்கள், மலேசியாவுக்கு 3 தேர்கள் உருவாக்கி, பாராட்டும், பல விருதுகளும் பெற்ற பாக்கியம் கிடைத்தது. அத்துடன் சுவாமி உலா வரும் வாகனங்கள், சப்பரங்கள் முதலியனவும் செய்துள்ளேன்.

மேலும் எங்கள் ஈழத் திருநாட்டில் பிரமாண்டமான மாபெரும் சிவன் ஆலயம் ஈழத்துச் சிதம்பரம் பெரும் வீதியை கொண்டது அத்துடன் மூன்று முறை தேர் உற்சவம் நடைபெறுகிறது.

இப்படியான பெரும் வீதி எங்குமே இல்லை. பங்குனி உத்திரம், ஆடிப்பூரம், மார்கழி திருவாதிரை ஒட்டி ஆண்டுக்கு மூன்று முறை தேர் உற்சவம் நடைபெறுகிறது வழக்கம். இனி எம் சிற்பத் தேரும் வீதி உலா வருவது போற்றுதற்கு உரியது. சிதம்பரத்தை பின்பற்றி வரும் ஆலயம் ஈழத்துச் சிதம்பரம், பங்குனி, மார்கழியில் பஞ்சரதபவனி வரும் ஆடியில் அம்பாள் பவனி வருவார், மேலும் காரைநகர் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் சிறப்பாக இருப்பதற்கு மூல காரணம் ஈழத்துச் சிதம்பரம். பாரம்பரியத்தை காப்பாற்றி வரும் சிவன் ஆலயம் இப்பெரும் ஆலயத்தை என்றும் வழிபட்டு மையமாக வைத்துத்தான் திரு. மகேசுவரன் உலக மக்கள் போற்றும் வகையில் சேவை செய்கிறார்கள். திருக்கேதீசுவரம் கும்பாபிஷேகம், நல்லூர் நாவலர் மணிமண்டபம், இப்படிப்பல சேவைகள். மற்றும் 2 வது உலக இந்து மகாநாடு (02 – 05 – 2003 – 08 – 05 – 2003) வரை இப்படியான மகாநாடு அதுவும் 3–05–2003 காலிமுகத்திடலில் நடாத்திய பெருமை அவருக்கு உரியது.

**கேள்வி :** இப் பிரமாண்டமான சிற்பத் தேர் பற்றி கூறுங்கள்.

**பதில் :** 39 அடி உயரம், நாகர வடிவம், 5 தளம், 108 சிவத்தாண்டவங்கள், 63 நாயன்மார்கள், 25 மகேசுவர வடிவம் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற சிறப்புத் தேர் வேறு ஒரு ஆலயத்திலோ, நாட்டிலோ இப்படி அமையவில்லை.

**கேள்வி :** உங்கள் இப்புகழுக்கு உங்களை உலகம் அறியச் செய்தவர் யார்?

**பதில் :** எல்லாம் தெய்வச் செயல். பல சைவ ஆலயங்கள் அறங்காவலர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் ஆதரவு. சிறப்பாக இலண்டன் சிவயோகம் முத்துமாரியம்மன் ஆலய உயர்திரு நா. சீவரத்தினம் அவர்களும் எங்கள்சைவப் பெரியார் திரு கே.கே சுப்பிரமணியம் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். கே. கே. சுப்பிரமணியம் ஒன்று கூறினால் போதும் தமிழகத்திலும் தெரியும். பல ஆதினங்கள் பெருமக்களின் தொடர்பு அவர்களுக்கு உண்டு. எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி அவருக்குப் பெரும் கௌரவம் திருவாவடுதுறையில் இடம்பெறவுள்ளது. அவரும் அவரது துணைவியாரும் தினமும் என்னை சிற்பத்தேரை சிறப்பாகச் செய்ய உற்சாகபடுத்துவார்கள்.

காரைநகர் பெற்ற தவப்புதல்வனான திரு. தி. மகேஸ்வரன் பா.உ அவர்களின் பிறந்தநாளாகவும் அமையும் தினத்தில் (ஜனவரி 10) காரைநகர்ச் சிவன்தேரின் வெள்ளோட்டம் அமைவது இரட்டிப்பு மகிழ்ச்சி. அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துக்கள்.

**கேள்வி :** உங்களை இந்நிலைக்கு ஆளாக்கியவர் யார்?

**பதில் :** என் குரு, என் தந்தை மறைந்த (அச்சுவேலி) காளிப்பிள்ளை சரவணமுத்து அவர்கள், என் அண்ணர் சரவணமுத்து ஜெயராசா (கனடா) நான் என்றும் மறக்க முடியாது.

**கேள்வி :** உங்கள் குடும்பம் பற்றிக் கூறுங்கள்?

**பதில் :** என் மனைவி வனிதா பெரும் உறுதுணை, எனக்கு மூன்று பிள்ளைகள், எனது செல்வமகன் 8 வயது மணிகண்டன் தற்பொழுது சிற்பக்கலை உருவாக்கி வருகிறார், கல்வியும் கற்கிறார்.

**கேள்வி :** புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

**பதில் :** சிரிப்பு. ஆனந்தம்.

**கேள்வி :** கடைசியாக நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**பதில் :** காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் இரத பவனி (வெள்ளோட்டம்) 10 – 01 – 2006 சிறப்பாக நடக்க வேண்டும். மார்கழி திருவாதிரை அன்று 12 – 01–2006 ஆனந்தக் கூத்தன் பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரத பவனி சிறப்பாக நடக்க பிரார்த்தனை செய்கின்றோம்.

மேலாக காரைநகர் அறுகம்புலம் இல்லத்தில் உள்ள 100 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வேப்பமரம்

அரிந்து அதன் பலகை சிற்பத்தேர் சிம்மாசனம் செய்துள்ளேன். திரு. திருமதி கே.கே.சுப்பிரமணியம் அவர்களின் அன்பளிப்பு.

**கேள்வி :** ஈழத்துச் சிதம்பரத்தில் யுத்த அனர்த்தத்தால் தேவஸ்தான தேர்கள் , பெரிய சப்பறம் அழிந்த நிலையில் இருந்ததாமே?

**பதில் :** ஆம், திரு கே.கே. சுப்பிரமணியம் அரிய முயற்சியினால் நஷ்ட ஈடாக புனர்வாழ்வு அமைச்சு 50 இலட்சம் கொடுத்து திருப்பணிச்சபையினர் 4 தேர்களும், சப்பறமும் புனருத்தாரணம் செய்ததன் மேலாக மாணிக்கவாசகர் அன்னதான மடத்தில் குடி கொண்ட கடற்படையினரையும் 3–6–1998 வெளியேற்ற அருந்தொண்டு புரிந்தார். இம்மடம் இப்பொழுது சிறப்பாக நடைபெறுகின்றது.

## சிற்பக் கலைஞர்கள் ஆதரவு

எனக்கு பூரண ஆதரவு தந்த 30 க்கும் மேற்பட்ட சிற்பக் கலைஞர்கள் வழங்கிய ஒத்துழைப்பு ஆதரவு, அர்ப்பணிப்பு என்றுமே மறக்கமுடியாது. இப்புனித கைங்காரியத்தில் எம் ஈழத்திருநாடு தந்த கலைஞர்களும், தமிழக கலைஞர்களும் தந்த ஒத்துழைப்புத்தான் ஒரு வருட கால எல்லைக்குள் நிறைவேற்றி இன்று 10 – 01 – 2006 வெள்ளோட்டம். இவர்கள் எல்லோரையும் வாழ்த்துங்கள். இவர்கள் சேவை மகத்தான சேவை புனித சேவை.

## ஐயனாருக்குச் சிற்பத்தேர்

திரு. மகேஸ்வரன் இனி ஐயனாருக்கும் சிற்பத்தேர் அமைக்க பணித்துள்ளார். ஐயனார் அருளாலும் மக்கள் ஆதரவாலும் அவரின் விருப்பத்தை அடியேன் பூர்த்தி செய்ய காத்திருக்கின்றேன் கால்கோள் விழா தைப்பூசம் அன்று நடைபெற இருக்கிறது. அவர் என் மேல் வைத்து இருக்கும் அளப்பரிய நம்பிக்கைக்கு நான் கடமைப்பாடுடையேன்.

என்னை அறிமுகம் செய்து வைத்தவர் சைவப் பெரியார் கே. கே. சுப்பிரமணியம். மிகச் சிறுவயதாகிய என்னிடம் தொண்டமானாறு சிற்பத் தேரை அமைச்சராக இருந்த பொழுது உருவாக்கும் பொறுப்பை மிகத் துணிவுடன், நம்பிக்கையுடனும் அமைச்சு அதிகாரிகள், வல்லிபுர ஆழ்வார் அறங்காவலர் திரு. அன்னலிங்கம், திரு. கே. கே. சுப்பிரமணியம் முன் ஒப்படைத்தார்கள் நான் என்றுமே மறக்க முடியாது. அவர் இட்ட பணிகளை என்றும் செய்வேன் என்று உறுதி கூறுகிறேன். அத்துடன் திரு. தி. மகேஸ்வரனுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பலர்.

ஆலய சிவாச்சார்யார்கள், ஆதீன கர்த்தாக்கள் மற்றும் அனைவருக்கும் கலைஞர்கள் சார்பில் நன்றி கூறுகிறேன். மறக்க முடியாத தெய்வீகப்பணி.

*ஆடவல்லான் திருவடிகளுக்கு வணக்கம்.*

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஞானச்சுடர் வெளியீட்டிலிருந்து.....

# செல்வச்சந்நிதி ஆலய சித்திரத் தேர்கள் தோன்றிய வரலாறு

முருக பக்தன்

இலங்கைத் திரு நாட்டில் மிகவும் புகழ்மிக்க முருகன் ஆலயம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயம். இது அற்புதமான ஓர் ஆலயம். அன்னதானக் கந்தன் என அகிலமும் போற்றி அழைக்கும் எம் பெருமான் பவனி வருவதற்காக பல இலட்சம் ரூபா செலவில் இவ்வாண்டு இரு புதிய சித்திரத்தேர்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1987 ஆம் ஆண்டு வன்செயலின் போது எம் பெருமானின் தேர் முற்றாக சேதப்படுத்தப்பட்டு எரிக்கப்பட்டது. இச்சம்பவத்தின் காரணமாக எம் சைவ மக்கள் இரத்தக் கண்ணீர் விட்டனர். அதன் பின் நடந்த மகோற்சவ வைபவங்களில் கட்டுத்தேரில் எம்பெருமான் எழுந்தருளி வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தான். 2003ஆம் ஆண்டு தேர் ஊர்வலத்தின் போது கட்டுத்தேர் ஆனது குடைசாய்ந்தது. இவற்றை எல்லாம் அறிந்த முன்னாள் இந்து சமய கலாச்சார அமைச்சரும், முருகபக்தருமான திரு. தி. மகேஸ்வரன் செல்வச்சந்நிதிக்கு புதிய சித்திரத்தேர் ஒன்றை நிறுவமுடிவு செய்து 65 இலட்சம் ரூபாவை ஒதுக்கி 32 அடி உயரத்தில் திராவிட முகப்பத்திர மரபில் தேர் அமைக்க முடிவு எடுத்தார். அன்னதானக்கந்தன் அருளால் அமைச்சரின் ஆலோசகரும் பரோபகார மணியுமான கே. கே. சுப்பிரமணியத்திடம் ஸ்தபதியை தெரிவு செய்யும் பொருட்டு பொறுப்பை ஒப்படைத்தார். திரு. கே. கே. சுப்பிரமணியம் மிகவும் திறமைவாய்ந்தவரும் புகழ்மிக்க வரும் சைவ உலகில் உள்ள சைவ ஆலயங்களுக்கு 25 க்கும் மேற்பட்ட சித்திரத் தேர்களை செய்தவருமான கொழும்பு ஜெனா சிற்பக்கலைக் கூடத்தின் பிரதம ஸ்தபதி திரு சரவணமுத்து ஜெயகாந்தனை தேர்ந்தெடுத்தார்கள்.

19. 11. 2003 தேர்த்திருப்பணிகளை பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் சமய முறைப்படி ஆரம்பித்தார்கள். 5. 2. 2004 செவ்வாய்க்கிழமை கொழும்பிலிருந்து லொறிகளில் வந்த அடித்தளம் அபிஷேக பூசையின் பின்னர் ஸ்தபதி ஜெயகாந்தன், முன்னாள் அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன், ஆலயப் பூசகர்கள், திருப்பணிச்சபையினர், வல்லிபுர ஆழ்வார் அறங்காவலர் சபைத்தலைவர் திரு அன்னலிங்கம், திரு திருமதி கே. கே. சுப்பிரமணியம் முதலானோர் விமான மூலம் வருகை தந்து ஆரம்பவிழாவை சிறப்பித்தனர். சந்நிதியான் ஆச்சிரம சுவாமி மோகனதாஸ் முன்னிலையில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. சந்நிதியான் கருணையினால் எண்கோண வடிவில் அமைந்த இத்திருத்தேர் 32 அடி உயரத்தில் செய்யப்பட்டது. இத்தேரில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆரம்ப கால வரலாறுகள் அருமையாக சித்திரிக்கப்பட்டுள்ளன. இத்திருத்தேரின் முன் பக்கம் மிகவும் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் வீறு கொண்ட நான்கு குதிரைகள் தேரை இழுத்துக் கொண்டு பாயும் பாவனையில் சித்தரித்து அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்தேரின் பெரிய யாளிகள் இலங்கையில் மற்றைய தேர்களில் காணப்பட முடியாத வடிவில் ஸ்தபதி அவர்களின் கைவண்ணத்தில் செதுக்கப்பட்டுள்ளன. மேல் விமானத்தில் 24 கந்தர்வர்கள் பறக்கும் பாவனையில் பொம்மை வடிவில் அமைக்கப்பட்டுள்ளனர். சுமார் 10 மாதகாலத்தில் இப்பெரும் சித்திரத்தேரை அமைத்துத் தந்த ஸ்தபதி சரவணமுத்து ஜெயகாந்தன் எல்லா வற்றுக்கும் முருகன் அருள்தான் காரணம் என கண்ணீர் சொரிந்து கூறுவார். செல்வச்சந்நிதி திருப்பணிச்சபை மூலம் விநாயகப் பெருமானுக்கு 21 அடியில் வட்ட வடிவமான

சித்திரத்தேரை அமைத்ததன் வகையில் ரூபா 18 லட்சம் செலவு செய்துள்ளனர். தேரின் வெள்ளோட்டம் 27-08-2004 வெள்ளிக்கிழமை இனிதே நடைபெற்றது. இம்முறை விநாயகர், முருகன் இருவரும் புதிய தேர்களில் 29-08-2004 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பவனி வந்த காட்சியைக்காண பல்லாயிரம் கண்கள் வேண்டும்.

எங்கள் ஸ்தபதி ஜெயகாந்தன் குடும்பம் சிறந்த ஆன்மீக கலைக்குடும்பம். அவர் ஜெனா சிற்பக்கலைக் கூடத்தை நிறுவி, லண்டன் மாநகருக்கு 7 சித்திரத் தேர்களும், 2 தங்கத்தேர்களும் செய்துள்ளார். இவற்றுள் ரூட்டிங் (Tooting) முத்துமாரியம்மன் சித்திரத்தேர் மிக அழகானது. மலேசியாவில் 3 சித்திரத்தேர், இலங்கையில் கப்பித்தாவத்தை, கொம்பனித்தெரு, செட்டியார் தெரு முத்து விநாயகர் கோயில், கண்டி கட்டுக்கலை பிள்ளையார் கோயில், மயூரபதியில் சிவன் கோயில், தேர்களோடு பலவாகனங்களும், கொடிக் கம்பங்களும், மணவறைகளும் செய்துள்ளார். சிறந்த ஸ்தபதியான இவருக்கு ஸ்ரீலங்கா ஏயர்லைன்ஸ் நிறுவனமும் கௌரவம் அளித்துள்ளது. (Most Travelled Person) குறிப்பிடத்தக்கது. அடக்கம், அன்பு, பொறுமை, கண்ணியம் மிக்க ஸ்தபதி ஜெயகாந்தன் முருகன் அருள் பெற்றவர்.

எங்கள் சைவப் பெரியார் கே. கே. சுப்பிரமணியம் அவர்களின் பெருந்தன்மையினாலும், முயற்சியாலும் முருகன் அருளாலும் 10 மாதத்தில் செல்வச்சந்நிதியான் திருத்தேர் செய்தது பெரும் பாக்கியம் என்று ஸ்தபதி கூறுகின்றார். இதற்காக அவர் திரு. தி. மகேஸ்வரன் திரு அன்னலிங்கம், திரு திருமதி கே. கே. சுப்பிரமணியம் மற்றும் திருப்பணிச் சபையினர், சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள், சிறப்பாக ஆலய நிர்வாகிகள், பூசகர்கள் அனைவரையும் வாழ்த்துகிறார். இவரின் பாரியார் வனிதா மிகவும் உறுதுணையாக இருந்தார். அப்படியே ஸ்தபதியின் சிற்ப ஆசிரியர்களும் தெய்வீக உணர்வுடன் உற்சாகமாக இருந்ததே இத்திருப்பணி 10 மாதத்தில் நிறைவு பெறக் காரணம் எனலாம். எல்லோருக்கும் சந்நிதி முருகன் அருள் பாலிப்பார். இத்திருப்பணியின் மூலம் தேர்கள் இரண்டும் 10 மாதத்தில் நிறைவுபெற்றுள்ளதும், மகோற்சவத்தன்று பிள்ளையார், முருகன் இப்புதிய தேர்களில் பவனி வந்ததும் முழு அற்புதம் என்றால் மிகையாகாது. மௌன வழிபாடுகள் நடைபெறும் ஆலயங்களான கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் முதலியன முருக வழிபாட்டின் தொன்மையினை விளக்குகின்றன. செல்வச்சந்நிதி கந்தப்பெருமானை துதித்து நம் நாட்டில் சாந்தி, சமாதானம் மிளிர பிரார்த்திப்போமாக.

*"எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதியான் மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

குறிப்பு :- *ஈழத்துச்சிதம்பரத்தில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு ஆடல் வல்லவனுக்கும் சித்திரத்தேர் உருவாக்க திரு. தி. மகேஸ்வரன் ஸ்தபதி ஜெயகாந்தன் வசம் பொறுப்பை ஒப்படைத்தார். இத்திருக்கோவிலில் தான் எம்பெருமான் திரிமுடி திருச்சடையாளராக அல்லாமல் உச்சிக்கொண்டையாளராக அமையப்பெற்றுள்ளா ரென்பது தனிச்சிறப்பு.*

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் பிரதம அமைச்சர்

## மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க

அவர்களின் வழிகாட்டுதலுக்கமைய

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரும்,

யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான

## மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன், பா.உ.,

அவர்களினால்

2003 , மே மாதம் 2 ஆம் திகதி முதல் 5ம் திகதி வரை

இலங்கையில் நடைபெற்ற

2 ஆவது உலக இந்து மகாநாட்டு ஞாபகார்த்தமாக

அமைச்சின் பூரண நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட

# ஈழத்துச் சிதம்பர சைவசமய அறப்பணி நிலையம்,

காரைநகர்

திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகாசந்நிதானம்

சீர்– வளர்– சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின்

அருளாணைப்படி சுபானு வருடம் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை

28ம் திகதி [14.12.2003] அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இங்கு தற்போது யாத்திரிகர்கள் தங்க சகல வசதிகளும் உண்டு.

தினமும் அன்னதானம் நடைபெறுகின்றது.

தொலைபேசி இலக்கம்: 021-2225615

# திருநெறி

# ஆடல்வல்லானின் சப்த தாண்டவங்கள் நவ தாண்டவங்கள் நூற்றெட்டுத் தாண்டவங்கள்

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்

திரு. ச. தண்டபாணி தேசிகர்.

சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் நூற்றெட்டு என்றும், அவை அவரால் மாலை வேளைகளில் ஆடப்பட்டன என்றும், அவை கரம், சிரம், பதம், நிலை முதலிய ஆறுறுப்புக்களையுடையது என்றும் பரதசாஸ்திரம் அறிவிக்கின்றது, நாட்டிய சாஸ்திரமோ, இரண்டுக்கு மேற்பட்ட கரணங்கள் கலந்து விளைவது அங்ககாரங்கள். அங்ககாரம் என்பது உடல் உறுப்புகளின் அசைவு, இத்தகைய அங்ககாரங்கள் இருபத்திரண்டு என்று கூறுகிறது. மேலும் நூற்றெட்டுக் கரணங்கட்குரிய இலக்கணங்கள் நாட்டியநூலில் சொல்லிய வண்ணம் சிதம்பரம் கோயில் கோபுரங்களில் செதுக்கப்பெற்றுள்ளன. அவைகள் பெண் வடிவங்கள். அவை கி.பி 13ம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டவை என்பது வரலாற்றாசிரியர்களின் துணிபு. தஞ்சைப் பெரியகோயில் பெருவுடையார் கருப்பக்கிரகத்தின் உட்புறம் மேல்மாடியில் இவைகளை விளக்க இராசராசன் காலத்தில் எண்பதுக்கு மேற்பட்ட உருவங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. சில பெரு அடி அடித்துவிடப் பெற்றுள்ளன அவைகள் இறைவனே நான்கு கரங்களோடு ஆடுவதாக அமைந்துள்ளன. இவை பதினொராம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டவை. இவற்றை நோக்கும்போது இந்த நூற்றெட்டுக்கர ணங்களும் ஆண்கள் ஆடத்தக்கவை. பெண்களும் ஆடிவந்தார்கள் என்பதை உணரலாம்.

கரணங்கள் அனைத்தும் எல்லாராலும் இயற்றத்தக்கன அல்ல. மிக வருந்தி இயற்றத்தக்கனவும் பலவுள. இத்தாண்டவ வகைகள் இப்பெயர்களோடு அனைத்தும் வழங்கவில்லை. சில, பெயர் மாறியும் இயல் மாறியும், கலப்புற்றும் வழங்குகின்றன. நாட்டிய சாஸ்திரம் செய்த ஆசிரியர்கள் பலராகவே, அவர்கள் தத்தம் காலத்து நிகழ்ச்சிகளையும் இணைத்து எழுதினர். அதனால் தேசினி தாண்டவங்களும் பிறவும் கலந்துவிட்டன.

தாண்டவக்கலை சைவத்திற்கு இன்றியமையா தது. தாண்டவத்தின் ஒரு கூறான நாட்டியம் இல்லாத திருக்கோயில்கள் இல்லை. திருக்கடவூர், திருமயிலாடு துறை, திருவுசாத்தானம் முதலான தலங்களில் நாட்டித்திற்கு என்றே பல மங்கையர் மாணிக்கம் என்ற பட்டம் தாங்கியவர்கள். தலைக்கோல் பெற்றவர்கள் நியமிக்கப்பட்ட செய்தியைப் பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. ஆகவே சைவத்திற்கும் நாட்டியத்திற் கும் மிகத்தொடர்பு உண்டு. சிவவழிபாட்டில் நடனக் கலையைச் சாதாரணமாகக் கையாளலாம் என்று பாசுபதசூத்திரமும் சொல்லுகிறது.

தாண்டவம், லாஸ்யம் என நாட்டியம் இருவகைப்படும். இவை ஒவ்வொன்றும், மார்க்கம் தேசி என இருவகைப்படும். தாண்டவம் தட் என்னும் வேர்ச்சொல்லிருந்து பிறந்ததாகக் கூறுவர். தட் என்பதற்கு பூமியை தட்டுதல் என்பது பொருள். பாதங்களால் பூமியைத் தட்டுவதால் விளையும் ஜதியே இதற்குச் சிறந்த அங்கம். ஆதலால் தட்டுதலையு டையது தாண்டவம் என ஆயிற்று என்று கலைக் களஞ்சியம் கூறுகிறது. தண்டுவாகிய திருநந்தி தேவரால் பரவியதால் தாண்டவமாயிற்று என்று முன்னரே கூறப்பட்டது.

இது கால்வீச்சும், கைவீச்சும், நிலையும், சுழற்சியும், ஆகிய இவற்றால் மிகக் கடுமையானது ஆதலின் ஆண்மக்களே ஆடத்தக்கது என்ற ஒரு வரம்பு இருந்தது. மிக மென்மையாய் ஆடத்தக்க கூத்துக்களும் சிலவுள, அவை லாஸ்யம் அல்லது லலிதம் என வழங்கப்பெறும். இந்த லாஸ்ய தாட்டவத்தை அருளிச்செய்தவர் பரதேவதையாகிய பார்வதி என்று சில பிற்காலத்து நூல்கள் கூறுகின்றன. லாஸ்யம் என்பது காமச்சுவையைச் சிறப்பாகக் கொண்டது. இது சுத்த லாஸ்யம், தேசி லாஸ்யம், பரேரணா லாஸ்யம், பிரேங்கணா லாஸ்யம், குண்டலி லாஸ்யம், தண்டிகா லாஸ்யம், கலச லாஸ்யம் என ஏழு வகைப்படும்.

அவற்றுள் சுத்தலாஸ்யம் தட்டணாப்பிரமணம் (வலப்பக்கமாகச் சுழலுதல்) வாமப்பிரமணம் (இடப்பக்கம் சுழலுதல்), லீலாபிரமணம் (விளையாட்டாகச் சுழலுதல்), புஜங்கப்பிரமணம் (பாம்பு போலச் சுழன்றாடுதல்), வித்யுத்பிரமணம் (மின்கொடிபோல் அசைந்தாடுதல்), லதாப்பிரமணம் (கொடிப்போல் அசைந்தாடுதல்), ஊர்த்துவ தாண்டவம் (காலை மேலேத்தூக்கி நின்று ஆடுதல்) என ஏழு வகைப்படும்.

இவற்றுள் வலப்பக்கமாகச் சுழன்றாடுதலாகிய தட்சிணப் பிரமணம் என்பது இடது காலில் நின்று கொண்டு, வலது முழந்தாளை வளைத்துத்தூக்கி, கைகளைக் கர்த்தரி முத்திரையாக அமைத்து, வலப்புறமாகச் சுழன்றாடுவது, இதற்குத்தாளம் மல்லிகாமோதம். கர்த்தரி கையோடு, இடது காலைப் பூமியிலிருந்து எடுக்காமலேயே நகர்ந்து ஆடுவது முதல்கதி. இரண்டாவதான நடை ஹம்ச கதியாகிய அன்னநடை, மூன்றாவதான கதி கிருஷ்ணசார கதியென்னும் கருமானின் நடை. இவ்வண்ணம் முதல் தாண்டவம் தாளத்தோடு சொற்கட்டுக்களோடும் நடிக்கப்பெறும்.

வாமப்பிரமணம் என்பது சுத்த லாஸ்ய தாண்டவத்தின் இரண்டாவது வகை. இதற்கும் முன்சொல்லப்பட்ட வாமப்பிரமணத்திற்குரிய இலக்கணங்கள் அனைத்தும் உண்டு. ஆனால் இடப்புறமாகச் சுழலவேண்டும். இதில் முதலாவதாக கஜகதி என்னும் யானை நடையும், கரி ஹஸ்த கரணமும், வக்கிரபந்தாசாரியும் அதாவது கோணல் நடையும் பயன்படும்.

லீலாப்பிரமண தாண்டவமாவது சிகரமுத்திரைக் கையோடு கூடிய இடதுக்கையைத் தோளின் நடுவில் வைத்து, வலக்கையைப் பதாகை முத்திரையாகப் மடித்து வலது முழங்காலை வளைத்து உயர்த்தி இடதுப்புறமாகச் சுழன்றாடுதலாம்.

புஜங்கப் பிரமணமாவது வலதுக்காலின் பின்புறத்தை இடது முழங்காலின்மீது வைத்து, இடுப்பைச் சிறிது வளைத்து, இடதுக்காலை ஊன்றி, கைகளை நாகபந்த முத்திரையாகப் பிடித்துச் சொற்கட்டுக்களுக்கு ஏற்ப ஆடுதல் தாளம் – அபங்கம், கதி–சிம்மகதி, கரணம்–சிங்கவிக்ரீடிதகரணம். சாரி– உத்ஸ்யந்திதம், ஹஸ்தம்–ரேசிகம்.

வித்யுத்பிரமண தாண்டவமாவது மின்னல் சுழலுவது போல இரண்டு கால்களையும் ஒரே சமயத்தில் தூக்கிக் குதித்து, கால்களை கீழே வைத்து, இடதுகாலைச் சிறிது வளைத்து, கைகளைச் சதுரஸ்ர முத்திரையாகப் பிடித்து, தலையை முன்னும் பின்னுமாக அசைத்து, வலப்புறமாக மும்முறை சுழன்றாடுவது. தாளம் – உத்கட்டிதம்.

லதாப்பிரமண தாண்டவமாவது கொடிபோல சுழன்றாடுவது. அது இடதுக்காலில் நின்றுக்கொண்டு, பாணமுத்திரையோடு கைகளை நீட்டி, வலதுகாலையும் நீட்டி, வலப்புறமாக ஐந்து அல்லது ஏழு முறை சுழன்றாடுவதும், பின்பு வலது முழந்தாளை வளைத்து அம்முறையே சுழன்றாடுதலுமாம். தாளம் – சரபலீலை, கதி – சுககதி, கரணம் – சீர பூஷணம், சாரி– ஸ்யந்திதாசாரி.

ஊர்த்துவதாண்டவமாவது இடதுகாலில் நின்று, மேனோக்கிய பார்வையுடன், வலக்காலை வளைத்து மேலுயர்த்தி வலது காதுக்கருகில் பிடித்துக்கொண்டு, சிகரமுத்திரையோடு கூடிய வலதுகையை மார்பில் வைத்து, சிகர முத்திரையோடு இடதுகையைத் தலைக்குமேல் உயர்த்தி வலதுகாலைப் பிடித்துக் கொண்டு ஆடுவதாம், தாளம்– ஜம்பை, இதில் வியப்புச்சுவை தோன்றச் சொற்கட்டுக்கள் உச்சரிக் கப்படும்.

இவை ஏழும் பரமசிவனால் ஆடப்பட்டன. இவற்றிற்கு ஏற்பப் பார்வதிதேவி தாண்டவ வகைகளான நிகுஞ்சிதம், குஞ்சிதம், ஆகுஞ்சிதம், பார்சுவகுஞ்சிதம், அர்த்தகுஞ்சிதமாகிய ஐவகைத் தாண்டவங்களை ஆடுகிறார் என்று இவற்றின் இலக்கணங்களையும் சேர்த்து நாட்டிய சாஸ்திரமும், பரதார்வணமும் விரிவாகக் கூறுகின்றன.

இவ்வண்ணமே பிரேரணலாஸ்யம் பேருணி என வழங்கப்பெறுவதாய், பிரமஸ்தானகத்தில் நின்று, கைகளைக் கபித்த சிகர முத்திரைகளாகப் பிடித்துக்கொண்டு, அபஸ்யந்தித சாரியால் நடிப்பது.

பிரேங்கணலாஸ்யம் கரைமகள், இறைவன்முன் ஆடிக்காட்டியது. கபித்தம் கடகாமுகம் ஆகிய முத்திரைகளுடன் சங்கர கரணமும் சம உத்ஸரித மத்தளிசாரியும் அமைய நடிப்பது.

குண்டலிலாஸ்யம் என்பது திருமாலால், நாராயண கரணமும் மத்தளிகாசாரியும், உத்தானவஞ்சித முத்திரைக் கையும், வைஷணவ ஸ்தானகமும் அமைய ஆடப்பெற்றது. தாளம் – லக்ஷ்மீசம்.

தண்டிகாலாஸ்யம் திருமகளால் கபித்த முத்திரையும், வைகாச ஸ்தானகமும் அமைய ஆடப்பெற்றது. தாளம் – விஜயானந்தம்.

கலச லாஸ்யமாவது திருமகள் கருட புலுத கரணமும், ஏடகாகிரீடித சாரியும் அமைய ஆடியது.

இவைகளில் கல்சலாஸ்யம் குடக்கூத்து எனவும் தமிழ்நூல்களில் வழங்கப்பெறும். ஆனால் இவற்றுக்கு உரிய இலக்கணங்கள் வேறுவகையாகக் கூறப்பெற்றுள் ளன. இவ்வாறே பாண்டரங்கத்துக்கூத்து பாரதியாடிய பாரதியரங்கத்து ஆடப்பெற்றது. என்பதற்குத் துர்க்கையாடிய இடுகாட்டுள் இறைவன் பாண்டரங்கத் கூத்தாடினர் என்று உரையாசிரியர் அடியார்க்குநல்லார் உரைகண்டார். ஆகவே தேசிலாஸ்ய வகைகளுக்கும், சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்ற பதினொரு வகை ஆடல்களில் சிலவற்றிற்கும் பெயராலும், இலக்கணத் தாலும் ஓரளவு ஒற்றுமையிருந் தலும் ஏதோ சில தவறுகள் இடையே எப்போதோ கலந்திருக்கின்றன என்பதும் மிக ஆழ்ந்து ஆராய்தற்கு உரியன. சிவன் ஆடிய கூத்தாராய்ச்சிக்கு அவை தேவையின்மையின் விடுத்து, இறைவன் ஆடிய ஐவகைத் தாண்டவம், ஏழுவகைத் தாண்டவம், பத்துத் தாண்டவம், பதினாறு தாண்டவம், நூற்றெட்டுத் தாண்டவம் ஆகிய இவற்றைப் பற்றி ஆராய்வோம்.

## நவதாண்டவம்

நூற்றெட்டுத்தாண்டவங்களில் ஒன்பது தாண்டவங்களின் இலக்கணங்களைச் சிற்பரத்னம் என்னும் நூலும், காசியப்பசிற்பமும் கூறுகின்றன. ஆனால் அவை எண்வகையால் தாண்டவங்களைக் குறிக்கின்றனவே அன்றி அவைகட்குப் பெயர் கூறவில்லை. அவ்விலக்கணங்கள் எவ்வகைத் தாண்டவத்திற்குப் பொருத்தமோ அதனைக்கொண்டு ஒருவாறு நிச்சயித்து இங்கு எழுதப்படுகின்றது.

### 1. ஆனந்த தாண்டவம்

இத்திருவுருவமே பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் காணப்பெறுவன. இதன் அளவு உயர்ந்த பக்கம் பன்னிரண்டு அம்சமுதல்

இழிந்தபக்கம் ஒன்பது அம்சம்வரை இருக்க வேண்டும். அம்சம் என்பது அளவின்நிலை. வலதுகையில் விரல்நுனி நெஞ்சுக்கு நேரே அமைய வேண்டும். இடது உள்ளங்கையிலாவது, நடுவிரலின் நுனியிலாவது, நடுவிரலின் நடுக்கணுவி லாவது, தீயகல் விளங்க வேண்டும். அதன் மணிக்கட்டில் பாம்பு கங்கணமும் அமைக்க வேண்டும். மற்றொரு இடதுகையை டோலஹஸ்தமாகச் செய்ய வேண்டும். ஊன்றிய வலது காலின் முழந்தாளுக்கும், தூக்கிய திருவடியாகிய இடக்காலின் முழங்காலுக்கும் இடைவெளியும் உயரமும் பதினாறங்குலம் இருக்க வேண்டும். பின்புறம் சடைகள் ஆழமாகப் பரந்து தொங்க வேண்டும். அதில் பாம்புகள் சுழன்றுகிடக்கச் செய்தல் வேண்டும். சிரத்தில் மகுடம் புனைதல் வேண்டும். அதில் பாம்பு, கபாலம், ஊமத்தப்பூ, இவைகள் விளங்குதல் வேண்டும். மகுடத்தின் வலப்புறம் பிறை, கழுத்தில் உருத்திராக்கம் கபாலமாலை, முப்புரிநூல், புலித்தோலாடை இவற்றை அணிவித்தல் வேண்டும். வலது கால் சிறிது மடித்து முயலகன்மேல் ஊன்றப்பட்டிருக்கும். முயலகன் நான்குதால அளவினனாய், கைகளையும் கால்களையும் விரித்துக்கொண்டு வலக்கையில் பாம்பைப் பற்றிக் கொண்டும், கீழ்நோக்கிய முகத்துடன் விளங்குபவனாக அமைத்தல் வேண்டும். அவனுக்குக் கீழ் பதினாறு அங்குலமுள்ள பதுமபீடம், அப்பீடத்தைப்போல நான்கு மடங்கு அகலமுள்ள பிரபை வட்டவடிவமாக அமைத்தல் வேண்டும். பிரபையைச் சூரிய மண்டலம் போல ஒளிக்கதிர் உடையதாகச் செய்தல் வேண்டும். பக்கத்தில் சிவகாமிசுந்தரியையும் அமைக்க. இதுவே ஆனந்த நடன அமைப்பு.

2. மேற்கூறியதுபோலவே எல்லா அமைப்புக்களையும் செய்து வலதுபுறம் சடைநுனியில் நடராசமூர்த்தியின் அளவாகிய அங்குலத்தால் பதினாறங்குல உயரம் கங்கையை அமைக்க. கங்காதேவி பெண்களுக்கேற்ற உயரம் அழகுள்ளவளாகவும் மார்புக்கெதிராகக் கைகளை அஞ்சலியாகப் பிடித்திருப்பவர்களாகவும் செய்ய வேண்டும். இது இரண்டாவது வகை மூர்த்தி. இது கங்காவிஸர்ஜன தாண்டவம் எனப் பெயர் பெறும் எனச் சில நூல்கள் தெரிவிக்கின்றன.

3. முதலிற் கூறிய வண்ணம் எல்லா அவயவங்க ளும் அமைந்து, முயலகன் மேல் இடதுகாலை ஊன்றி வலது காலைத்தூக்கி நிற்க அமைக்கப்படுவது. இது கால்மாறி ஆடிய மூர்த்தியாகும்.

4. முதலிற் கூறிய வண்ணம் எல்லாம் அமைந்து, சடை மட்டும் வட்டச்சடையாகவோ படர்சடையாகவோ அமைக்கப்படுதல் வேண்டும்.

5. இடதுகாலைச் சிறிது வளைத்து முயலகன் மேல் ஊன்ற வைத்து, வலதுகாலைத் தண்டபாதமாக மகுடத்திற்குமேல் ஒருமாத்திரை உயரமுள்ளதாகத் தூக்கி அமைத்தல் வேண்டும். இம்மூர்த்திக்கு எட்டுக்கரங்கள் உள்ளன. வலதுகை நான்கிலும் அபயம், சூலம், பாசம், உடுக்கை, இவைகளும் இடதுகை நான்கிலும் கபாலம், தீயகல், தண்டம், கரிகரமாகிய குறுக்காக நீட்டியகை அமைத்தல் வேண்டும். தோள்கள் பக்கத்திற்கு அவ்வாறங்குலம் உள்ளதாக இருத்தல் வேண்டும் என்பதற்கு நிருத்தாங்கம் ஆறுடன் கூடி என்று பொருள்கொண்டு இடர்ப்படுவர். இந்நடனத்தில் நிருத்தாங்கள் ஆறு இல்லாமையும் அறியத்தக்கது. காசியப்பசிற்பம் தோள்பட்டையின் குறுக்களவு பதினாறங் குலம் என்று கூறுகிறது. இது பன்னிரண்டங்குலம் எனக்கூறுகிறது. இதுவே இன்றும் சிற்ப ஆசாரத்தில் உள்ளது. அங்கம் – அங்குலம். இந்த நடனமூர்த்திக்குக் கண் இரண்டேதான். இது ஊர்த்துவ தாண்டவத்தின் ஒருவகையாகும்.

6. பாதங்களை ஐந்தாவது மூர்த்திக்கு உள்ளவாறே அமைத்து, கைகளைப் பதினாறாகவும், அவற்றுள் வலக்கை எட்டிலும் அபயம், உடுக்கை, வச்சிரம், சூலம் இவற்றையும், பாசம், மழு, தடி, பாம்பு இவற்றையும், இடக்கை எட்டில் இரண்டைக் கரிஹஸ்தமாகவும், முழங்கால் வரை நீண்டு தொங்குவதான லதாஹஸ்தமாகவும் அமைத்து, மற்றைக் கைகளில், தீ, மிதுனம், வளையம், கொடி, மணி, கபாலம் இவற்றையும் அமைக்க வேண்டும். இந்த நடனமூர்த்திக்கு கண் இரண்டேதான். இதுவும் ஊர்த்துவதாண்டவ வகையைச் சார்ந்ததே.

7. மூன்று கண்கள், எட்டுக்கைகள், பரந்தசடை, இடதுபாதம் வளைக்கப்பட்டு (குஞ்சித பாதமாக) முயலகன் மேல் வைக்கப்பெற்றிருக்கும். வலது பாதம் கீழே ஊன்றப்பட்டுக் கட்டைவிரல் நுனி மட்டும் உயர்த்தப்பெற்றிருக்கும். வலக்கைகள் நான்கிலும் அபயம், சூலம், பாசம், உடுக்கை ஆகிய இவைகளும், இடக்கை நான்கிலும் இரண்டு தீயகலையும் கபாலத்தையும் ஏந்தியிருக்கும். ஒன்று வியப்பைக் காட்டும் குறிப்பில் இருக்கும் (விஸ்மிதஹஸ்தம்). மற்றொன்று கரிஹஸ்தமாகக் குறுக்கே நீட்டப் பெற்றிருக்கும். தொங்கவிட்டும் இருக்கலாம். இடப்பக்கத்தில் பார்வதிதேவி எழுந்தருளியிருப்பர்.

8. இது ஏழாவது நடனம் போன்றதே. ஆனால் கைகள் ஆறு. வலக்கை மூன்றில் அபயம், உடுக்கை, சூலம் இவைகள் காணப்படும். இடது கைகளில் ஒன்றில் கபாலம், ஏனைய விஸ்மித ஹஸ்தம், கரிஹஸ்தம் இம்முத்திரைகள் அமைய விளங்கும்.

9. கை நான்கு, கண்மூன்று, பரந்த செஞ்சடை,வலதுகை அபயமுத்திரை, உடுக்கை இடதுகை தீயகல், கரிஹஸ்தம், ஊன்றிய இடதுகாலின் கீழ் முயலகன் இல்லை. வலதுகால் சிறுவிரல் முன்னுள்ள பீடத்தில் பொருந்தியிருக்கும், வலதுகாலும் அழகாய்ச் சிறிது மடங்கியிருக்கும்.

இவ்வண்ணமன்றிச் சிறப்பியின் தியானபலத்தையும், அந்தந்தத் தல வரலாறுகளை ஒட்டியும், சில தலங்களில் இவ்விலக்கணங்களிற் சிறிது மாறி உள்ளன.

## ஏழு வகைத் தாண்டவங்கள்

### 1. ஆனந்த தாண்டவம்

நான்கு கை, மூன்று கண், பரந்தசடை, பொன்னிறம், மயில்தோகை முடியின் வலதுபக்கம் பிறை, ஊமத்தமலர், வலச்சடையின் நுனியில் கங்கை, வலக்காதில் மகர குண்டலம், இடக்காதில் இலை இவற்றை உடையவராக, பூணூல் அணிகள் பலவும் தரித்தவாரக, புலித்தோலாடை புனைந்தவராக, கால்களில் கிங்கிணி மாலை புனைந்தவராக, வலக்கை அபயமாகவும், இடக்கை குறுக்காக நீட்டியும், வலக்கையில் உடுக்கையும் இடக்கையில் தீயகலும் உடையவராக, வலக்காலை முயலகன்மேல் ஊன்றி, இடக்காலை மேலேதூக்கி வலப்பக்கமாக நீட்டியாடுவது என்று தியானம் கூறுகிறது.

### 2. சந்தியா தாண்டவம்

நான்கு கை, மூன்று கண், ஜடாமகுடம், வலதுகைகளில் அபயம், உடுக்கை, இடது கைகளில் மயில்தோகை, விஸ்மிதஹஸ்தம், இடது காலினடியில் முயலகன் இன்றி, இடதுகாலை வளைத்து முன்விரலைப் பீடத்தில் ஊன்றி, வலதுகாலைத் தூக்கி இடப்பக்கமாக வளைத்துநீட்டி, பாம்புகங்கணம் தரித்து ஆடும் நடனமாம்.

### 3. உமா தாண்டவம்.

ஒருமுகம், முக்கண், ஜடாமண்டலம், பொன்னிறம், ஆறுகைகளில் வலக்கை மூன்றில் முறையே அபயம், உடுக்கை, சூலம் இவைகளையும், இடக்கை மூன்றில் கபாலம். விஸ்மிதஹஸ்தம், இடதுபக்கம் நீட்டிய கஜஹஸ்தம் இவற்றையும் தாங்கி இடப்பக்கத்தில் உமாதேவியுடனும், ஜடையில் கங்கையுடனும் எல்லா அணிகளுடனும் புலித்தோலையுடுத்து நடிப்பது.

### 4. கௌரிதாண்டவம்

சாந்தமான தோற்றம், நான்கு கை, செந்நிறம், புன்னகைபூத்த முகம், கபாலம், கொக்கிறகு, ஊமத்தம்பூ, எருக்கம்பூ, பிறைமதி இவற்றை அணிந்த சடாமுடி, பரந்தசடை, பாம்புவளை இவற்றை அணிந்து, முயலகன்மேல் வலதுகாலை ஊன்றி, இடதுகாலை வளைத்து வலக்கைகளில் அபயம், உடுக்கை இவற்றைத் தாங்கி, இடது கைகளில் தீயகல், வியாளம்(புலி) இவற்றை ஏந்தி இடப்பக்கத்தில் கௌரித்தேவியுடனும் வலப்பக்கத் தில் நந்திபகவானுட னும், விரிந்து பரந்ததும் மகுடமாகச் சுற்றப்பட்டதுமான திருச்சடையுடன், முடியை இடப்பக்கம் சாய்த்து நின்றாடுவது.

### 5. காளிகாதாண்டவ மூர்த்தி

ஒருமுகம் முக்கண், பரந்தசடை, எட்டுக்கை, இவற்றுடன் வலக்காலைத்தூக்கி, இடக்காலை முயலகன் மீது ஊன்றி, வலக்கையில் அபயம், உடுக்கை, சூலம், பாசம் இவற்றை ஏந்தி, இடக்கையில் கபாலம், தீயகல், மணி இவற்றைத் தாங்கி, ஒரு கையைக் கஜஹஸ்தமாக வலப்பக்கம் குறுக்கே நீட்டி ஆடுதல். இதுவே சில நூல்களில் சண்டதாண்டவம் என்றும் கூறப்படுகின்றன.

### 6. திரிபுரதாண்டவ மூர்த்தி

பதினாறு கைகள், இடது பக்கத்திலே கௌரிதேவி, வலது பக்கத்தில் அஞ்சலித்த கையுடன் முருகன், அபயம், தமருகம், வச்சிரம், சூலம் இவற்றை ஏந்தி, இடக்கைகள் எட்டிலும் புஸ்தகம், வரதம், கேது, கேடகம், கடகம், கபாலம் இவைகளைத் தரித்து, ஏனைய அங்கங்களை முன்னைய நிருத்தம்போல அமைத்தும் ஆடுபவர். இத்தகைய வடிவுடைய கூத்தப்பெருமான் திருவுருவம் எத்தலத்தில் உள்ளது என்பது அறியக்கூடவில்லை.

### 7. சங்காரதாண்டவம்

மூன்றுகண், எட்டுக்கை, பரந்தசடை, வளைந்த இடதுகாலை முயலகன்மீது ஊன்றி, தூக்கிய வலக்காலை அமைத்துப் புலித்தோலை மேலாடையாகத் தொங்கவிட்டு, வலது கையில் அபயம், சூலம், பாசம், தமருகம், இவற்றை ஏந்தி, இடது கையில் கபாலம், அக்கினிபாத்திரம் இவற்றைத் தரித்து, ஒரு கையைக் கஜஹஸ்தமாக வலப்பக்கம் நீட்டி, நந்தி வலப்பக்கத்திலும் கௌரி இடப்பக்கத்திலும் நிற்க ஆடும் தாண்டவம். ஏனைய உறுப்புக்கள் ஏனைய நடனங்களில் அமைந்தன போலவே.

முற்கூறிய ஏழு அல்லது ஒன்பது வகையான தாண்டவங்களுடன் மகாசங்காரதாண்டவம் என்ற ஒன்றையும் கூட்டிப் பத்தாகச் சில சிற்பநூல்கள் தெரிவிக்கின்றன. உமாதேவியுடன் கைபிணைய நின்றாடும் தாண்டவத்தையும் சேர்த்து பத்தென்று கூறும் தமிழ்ச் சிற்பநூலும் உண்டு. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து எண்ணும்போது ஆகம பேதங்களாலும், புராண வரலாற்று மாறுபாட்டாலும், சிவயோகியின் தியான வேறுபாட்டாலும், சிற்பியின் சிந்தனைத்திறம் செய்திறம் இவற்றாலும் ஒரேவகையான நடனம் பலவகையாகக் காட்சியளிக்கின்றன எனலாம். சிலவற்றுள் அங்ககார கரண இணைப்புக்களாலும் சில மாற்றங்கள் பரதசாத்திரமுறையாக அமைந்துள்ளன. சிற்ப சாஸ்திரிகள் தாண்டவபேதம் பதினாறு என்றும் கூறுகின்றனர். ஆனால் அவற்றின் பெயரும், தியானசுலோகமும் கூறுகின்றிலர். சோடசகணபதி சோடச சுப்பிரமணியம் என்பன போலச் சோடச தாண்டவமும் கூறுகின்றனரோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

பரதசூடாமணி என்னும் நூல் பஞ்சகிருத்திய தாண்டவங்களாக அகோரதாண்டவம், ஊர்த்தாண்டவம், ஆச்சார்யதாண்டவம், ஆனந்ததாண்டவம், சௌந்தர்ய தாண்டவம் என ஐந்து தாண்டவங்களைச் சிவபெருமான் ஆடினார் என்று அறிவிக்கிறது. இப்பெயர்கள் தாண்டவங்களின் பயன்களைப் பற்றியும், சுவைகளைப் பற்றியும் விளைந்தன எனலாம். முற்கூறப்பெற்ற நூல்களில் ஆனந்த தாண்டவமே பஞ்ச கிருத்தியங்களை

யும் இயற்றுதலின் அதுவே பஞ்சகிருத்திய தாண்டவமாக அறிவிக்கப்பெற்றுள்ளது. இந்நூலால், ஆனந்த தாண்டவம் அநுக்கிரகமாகிய அருளல் ஒன்றையே குறிப்பாகக் கொண்டது என்றும், பஞ்சகிருத்திய தாண்டவம் ஐந்தொழிலையும் அவற்றிற்கு உரியவர்கள் இயற்ற அருள் வழங்குவது என்றும் அறியக்கிடக்கிறது.

பரதசார சங்கிரகம் என்னும் நூல் அற்புத தாண்டவம், அநவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம், பிரளய தாண்டவம், சங்கார தாண்டவம் என்ற ஐந்தை அறிமுகப்படுத்துகிறது. இவைகளும் முற்கூறியவற்றுள் அடங்குவனவே.

## நூற்றெட்டுத் தாண்டவபேதங்கள்

1. தலபுஷ்பபுடம்

இடது பக்கத்து மார்பிற்கு நேராக, புஷ்பபுட முத்திரை பிடித்து, கால்நுனிகளால் சஞ்சரிப்பவராக, சிறிது வணங்கிய பக்கத்தையுடையவராக நடிப்பது, புஷ்பபுடத்தோடு இடதுபக்கமாக இருப்பதால் இது தல புஷ்பபுடம் என்னும் பெயர்பெற்றது.

2. வார்த்திதம்

இருமணிக்கட்டுகளை வளைத்து, தொடையின் பக்கத்தில் கைகளைத் தொங்கவிடுவது.

3. வலிதோருகம்

கிளிமூக்குப்போல் கையைமடக்கி அவற்றை உட்புறமாக இருபக்கமும் வளைத்து, தொடைகளையும் வளைத்து நிற்கும் நிலை.

4. அபவித்தம்

சதுரஸ்ரமாக நின்று, கைகளைத் திருப்பிக் கொண்டு சமகாலத்தில் எடுத்து வைக்கப்பெற்ற சாரியைச் செய்து, கையையும் சுகதுண்டமாகச் செய்து தொடையின் பின்புறம் வைப்பதும், இடது கையைக் கடகாமுகமாகச் செய்து மார்பின் மேல் வைப்பதும் ஆம்.

5. சமநகம்

கால்களை நகங்கள் நேராகத் தெரியும்படி வைத்து கொடிபோலத் துவண்டு தொங்குகிற கைகளுடன், உடல் வளையாமலும் நிமிராமலும் இயல்பாக இருப்பது.

6. லீனம்

கழுத்தையும் தலையையும் முன்பக்கம் நீட்டி வளைக்கப்பட்ட தோற்பட்டையோடு பதாகாஸ்தத்தை மார்பின் நேரே பிடிப்பது.

7. ஸ்வஸ்திகரேசிதம்

ஸ்வஸ்திக கரத்தை வீசியும், இடுப்பில் வைத்தும் நடிப்பது.

8. மண்டல ஸ்வஸ்திகம்

சதுரஸ்காலில் நின்று, முன்னோக்கி உத்வேஷ்டித வர்த்தனையாற் சென்று, ஊர்த்துவமண்டலி வர்த்தனை யால் ஸ்வஸ்திகம் அமைய நடிப்பது.

9. நிகுட்டம்

தன் தோளுக்கும் சிரத்திற்கும் இடையில் கைகளைத் தூக்கியும் தாழ்த்தியும், கால்களையும் அவ்வாறே செய்தலாம். கைகளால் செய்யப்பெறும் நிகுட்டம் அலபல்லவ முத்திரையோடு கூடிய கையில் சிறுவிரலைத் தூக்குதலும், தாழ்த்தலுமாகிய முறை; கால்களுக்கோ உத்கடித பாதத்தால் அடையாளம் செய்யப்பெற்ற முறையில் நிற்பது. உத்கடிதபாதமாவது கால்நுனியில் நின்று, குதிக்காலைப் பூமியில் தட்டுவது. அங்ஙனம் தட்டும்போது இடது கையை உயர்த்தும்போதும் தாழ்த்தும்போதும் இடது குதிக்காலைத் தட்ட வேண்டும். வலதுகையை உயர்த்தும்போது வலது குதிகாலைத் தட்ட வேண்டும்.

10. அர்த்தநிகுட்டகம்

கைகளைச் சிரத்தின் மேல் வைத்து, கைகளை விரலுக்கு விரல் நேராகக் குவித்து, பாதிவளைய இருப்பது.

11. கடிச்சின்னம்

வண்டுபோன்ற சாரியால், இருபக்கமும் சுழன்று, மண்டல ஸ்தானத்தில் நின்று, தோள்பட்டையின் உச்சியில் பல்லவமுத்திரைக் கையை வைத்தலாம்.

பல்லவஹஸ்தம் – எல்லா விரல்களையும் நீட்டி கட்டைவிரலை மட்டும் குறுக்கியதாகிய பதாகா முத்திரையோடுகூடிய இருகைகளையும், மணிக்கட்டிலிருந்து தொங்கவிட்டு, விரல்நுனியை அசைப்பது, வண்டுசாரி – பிரமரிசாரி எனப்படும். இது வண்டுபோல் சுழன்று சுற்றுதலாம். மண்டல ஸ்தானம் – பாதங்களை ஒன்றற்கொன்று நான்கு சாண்தூரத்தில் வைத்துக் கொள்வது.

12. அர்த்தரேசிதகம்

அல்பத்ம முத்திரையோடு கூடிய இரு கைகளையும் சுழற்றி, இடது பக்கம் இடக்கையைச் சூசிஹஸ்தமாக நீட்டி, கால்களைச் சிறிது பார்சுவமாக வளைப்பது.

13. வக்ஷஸ்வஸ்திகம்

கால்களை ஸ்வஸ்திகமாக வைத்து, கைகளையும் மார்பிற்கு மேல் ஸ்வஸ்திகமாக வைப்பது.

ஸ்வஸ்திகாபாதம் – பாதங்களை மாறிச் சிறுவிரலோடு சிறுவிரல் பொருந்த வைப்பது.

ரோசிதஹஸ்தம் – மணிக்கட்டோடு மணிக்கட்டு பொருந்தக் குறுக்காக வைப்பது.

14. உந்மத்தகம்

கால்களைத் தொட்டிபோல் வளைத்து, கைகளையும் நன்றாக நீட்டி, மணிக்கட்டிலிருந்து முன்கையைத் தொங்கவிட்டு நடிப்பது.

15. ஸ்வஸ்திகம்

கை, கால்களைச் சுவஸ்திகம்போல அமைத்து நடிப்பது.

16. பிருஷ்டஸ்வஸ்திகம்

முன்போலக் கைகளையும் கால்களையும், ஸ்வஸ்திகமாக அமைத்துத் திரும்பி, முகத்தை மட்டும் சபைக்குக் குறுக்காக வைத்து நிற்பது.

17. திக்ஸ்வஸ்திகம்

முன்போலவே பிருஷ்ட ஸ்வஸ்திகமாக நின்று பக்கங்களிலும் முன்பும் அசைந்து நடக்கின் அது திக்ஸ்வஸ்திகமாம்.

18. அலாதகம்

அலாதபாதமாக நின்று, வலது கையை அதன்மேல் வைத்து முழந்தாளைத்தூக்கி நின்று ஆடுவது.

19. கடீஸமம்

ஸ்வஸ்திக நிலையிலிருந்து பிரிந்த பாதத்துடன் கைகளை உந்திக்கு நேராக இடுப்பில் வைத்து, பக்க நோக்காகச் சாய்ந்து நின்று ஆடுவது.

20. ஆக்ஷிப்தரேசிதம்

இடது கையை மடக்கி மார்புக்கு நேராக வைத்து, வலது கையை ரேசித ஹஸ்தமாகத் தொங்கவிட்டு, முழங்கால்களை மடக்கி நின்று ஆடுவது.

21. விக்ஷிப்தாக்ஷிப்தகம்

வலது காலை வீசி நின்று, வலது கையை வீசி, இடது கை கால்களை முன்போல வைத்து ஆடுவது.

22. அர்த்தஸ்வஸ்திகம்

கால்களை ஸ்வதிஸ்மாக வைத்து, வலது கையைக் கரிஹஸ்தமாக இடுப்பில் வைத்து, இடது கையைப் பாதி ஸ்வஸ்திகமாக மார்பின்மேல் வைத்து ஆடுவது.

23. அஞ்சிதம்

கால்களை மாறிவைத்து, வலது உள்ளங்கால் வெளியில் தெரியும்வண்ணம் வைத்து, இடது கையைச் சூசியாக மூக்கு நுனியை நோக்கி நீட்டி, வலது கையைக் குறுக்காக இடது பக்கம் நீட்டி நின்று ஆடுவது.

24. புஜங்கத்ராஸிதம்

காலை வளைத்து உயரத்தூக்கி, முக்கோண வளைவாகத் தொடையை வளைத்து, இடுப்பு

முழந்தாள்களையும் வளைத்து நின்று ஆடுவது. அதாவது பாம்பைக்கண்டு அஞ்சி ஓடுவது போன்ற நிலை. வலது கையைத் தோலஹஸ்தமாகவும் இடது கையைக் கடகாமுகமாகவும் வைத்துக்கொள்வது.

25. ஊர்த்துவஜாநு

வலது முழந்தாளை மார்பினளவாக உயர்த்தி அதற்கேற்ப வலதுகையையும் வீசி நின்று, இடது கையை இடது தோளுக்கு நேராகக் கடகாமுகமாகப் பிடித்து நின்று ஆடுவது.

26. நிருஞ்சிதம்

தேளின் கொடுக்குப்போலக் காலை வைத்து, கையைப்பக்கத்தில் தொங்கவிட்டு, இடது கையை மூக்கின் நேராகப் பிடித்து ஆடுவது.

27. மத்தமல்லி

வலது கால் நுனியை ஊன்றி, இடதுகாலைக் குறுக்காக அமைத்து, வலது கையைத் தொடைக்குமேல் வைத்து, இடது கையைக் கடகமுகமாக மார்பிற்சேர்த்து மத்தளக்காரன்போல நின்று ஆடுவது.

28. அர்த்தமத்தமல்லி

முற்கூறியவாறு நின்று, இடது கையை மட்டும் வீசிநின்று ஆடுவது.

29. ரேசிதநிகுட்டிதம்

வலது கையை வீசி, வலது காலை மடக்கி வாமஹஸ்தத்தைத் தோலஹஸ்தமாகக் கொண்டு நின்று ஆடுவது.

30. பாதாவித்தகம்

சூசிபாதமாக நின்று, நாபிக்கு நேரே கைகளை அமைத்து, இரண்டாவதாகிய பாதத்தை, அபவித்தக ரணமாக வைத்து அதாவது தொடைகளால் சுழற்றி நடித்தல், சூசுபாதம் – குதிகாலைத் தூக்கிக் கால் நுனியை ஊன்றிநிற்றல், அபிவித்தகரணம் – தொடைகளை வலயமாகச் சுழற்றுதல்.

31. வலிதம்

இடது கையைத் தொடையில் சர்ப்பசிரசுபோல வளைத்துவைத்து, சூசிபாதமாகப் பிரமரிசாரியைச் செய்து அதாவது வண்டுபோல் சுழன்று ஆடுவது.

32. கூர்ணிதம்

வலது கையைப் பக்கவாட்டாக உயர்த்தித் திருப்பி, இடது கையைத் தோலஹஸ்தமாகத் தொங்கவிட்டு, ஸ்வஸ்திக நிலையிற் பிரிந்தது போல் பாதத்தை வைத்து ஆடுவது.

33. லலிதம்

வலது கையைக் கரிஹஸ்தமாக நீட்டி, இடது கையைத் தலைக்கு நேராக வளைத்துப் புறந்தெரியும் படியாக நீட்டி, பலமுறை தரையைத் தட்டும் பாதத்துடன் ஆடுவது.

34. தண்டபட்சம்

வலது முழந்தாளை மார்புக்கு நேராக உயர்த்தி, இடது முழந்தாளைத் தாழ்த்தி, கொடிப்போலக் கைகளை இருமருங்கும் துவளவிட்டு நடிப்பது.

35. புஜங்கத்ரஸ்தரேசிதம்

வளைந்த காலைத்தூக்கி, கைகளை இடதுப்பக்கத்தில் பாம்புப்போலத் தொங்கவிட்டு நடிப்பது.

36. நூபுரம்

முற்கூறிய வண்ணம் லதாரேசிதமாகக் கைகளை இருமருங்கும் நீட்டி ஒரு காலை மற்றொரு காற் சிலம்பின் மேல் வைத்து நடிப்பது.

37. வைசாகரேசிதம்

கைகால்களை வளைத்து, இடுப்பு, கழுத்து இவைகளையும் வளைத்து, சுழன்று ஆடுவது, ராகுலர் என்பவர் கழுத்து முதலிய அங்கங்களைத் தனித்தனியே சுழற்றுதலும் வளைத்தலும் செய்வது என்பர். வைசாகம் – மூன்றரையடி இடைவெளி இருக்கும்படியாகக் கால்களை வைத்துக் கடகாமுக முத்திரைக் கையுடன்

ஆடுவது. இந்த இரண்டும் சேர்ந்தமையால் இப்பெயர் பெற்றது.

38. பிரமரகம்

திரிகபாதத்தால் வளைந்து நின்று, இடது கையை அஞ்சிதமாக அமைத்து வலது கையைச் சதுரமாக வைத்து நின்று ஆடுவது. திரிகம்—வளைந்த காலைத்தூக்கி, ஊன்றிய காலைச் சிறிது மடக்கி முழந்தாள்கள் ஸ்வஸ்திகம் போல அமையும்படி வைத்து நிற்பது.

39. சதுரகம்

வலது காலைக் குட்டிதமாக அமைத்துச் சதுரம் அமையக் கைகளை இருமருங்கும் நீட்டி நின்று ஆடுவது.

40. புஜங்காஞ்சிதகம்

கால்களைப் பாம்பு ஓடுவதுபோல அமைத்து, வலது கையைத் தொங்கவிட்டு தாண்டவம் ஆடுவது.

41. தண்டகரேசிதம்

தண்டம்போலக் கைகளை நீட்டியும் வளைத்தும் வைத்து, தண்டபாதசாரியால் நடிப்பது.

42. விருச்சிககுட்டிதம்

தேள் கொடுக்கைப்போலக் காலை மடித்துக் கைகளைத் தோளின் முன்பரிசினிபோல வைத்த நின்று ஆடுவது.

43. கடிப்பிராந்தகம்

வளைந்த பாதத்தைத் தூக்கி முழந்தாளை மேனோக்கியதாகச் சிறிது உயர்த்தி நிற்பதாகிய சூசிபாதத்துடன், ஒரே காலத்தில் இடுப்பை வளைத்து ஆடுவது. இடுப்பு வளைந்தாடும்போது கைகளும் அதனை ஒட்டிச்சுழல வேண்டும்.

44. லதாவிருச்சிகம்

இடது காலைச்சிறிது மடக்கி ஊன்றி, வலது காலைத் தேள் கொடுக்குப்போலப் பின்புறம் வளைத்து நீட்டி, இடது கையைக் கொடிப்போல நீட்டித்து துவளவிட்டு நின்று ஆடுவது.

45. சின்னம்

வைசாக ஸ்தானத்தில் கைகளை அலபத்ம முத்திரையாகப் பிடித்து இடுப்பில் வைத்து கொண்டு நின்று ஆடுவது.

46. விருச்சிகரேசிதம்

காலைத் தேள்போல வைத்து இருகைகளையும் ஸ்வஸ்திகமாக அமைத்து, இருமருங்கும் நீட்டி நின்று ஆடுவது.

47. விருச்சிகதம்

தோள் சிரம் இவற்றிடைக் குறிக்கும் கரிஹஸ்தக் கைகளுடன் கால் பின்பக்கம் வளைந்திருக்க, தூரத்தில் வளைந்த பின்பக்கத்துடன் நின்று ஆடுவது.

48. வ்யம்ஸிதம்

வளைந்த வலதுகாலை ஐந்தடி அகற்றி வைத்து நிற்கும் ஆலீடஸ்தானத்தில் நின்று கைகளை மார்பிற்கு நேரே மடக்கிப் பிடித்து, மேலும் கீழுமாகச் சுழன்று ஆடுவது.

49. பார்சுவநிகுட்டகம்

கைகளை ஸ்வஸ்திகமாகப் பக்கங்களில் அமைத்து, நிகுட்டிதபாதகமாக நின்று ஆடுவது.

50. லலாடதிலகம்

வலது காலை விருச்சிகபாதம் போல நெற்றிற்கு நேரே தூக்கி இடது கையால் பிடித்துக்கொண்டு நெற்றியில் பொட்டு வைப்பது.

51. கிராந்தகம்

பின்பக்கம் சாய்ந்து நின்று, வளைந்த காலைத் தூக்கி முன்பக்கம் விசிறி நின்று காற்படத்தைத் தரையில் தட்டுதலாகிய அதிக்ராந்தசாரியில் நின்று, கைகளை மார்புக்கு நேராக அமைத்து நின்று ஆடுவது.

52. குஞ்சிதம்

முதலில் வலது காலை வளைத்து, வலது கையையும் வளைத்து, இடது காலைத் தூக்கி நின்று ஆடுவது.

53.. சக்ரமண்டலம்

முன்பாவது பின்பாவது கைகால் நுனிகளைப் பூமியில் ஊன்றி உடலை வளைத்து, சக்கரத்தின் வட்டம்போல இருந்து நடிப்பது.

54. உரோமண்டலம்

ஸ்வஸ்திகமாக வீசப்பட்ட பாதத்துடன், அபவித்தநிலையில், கைகளை வட்டமாக மார்பில் அமைத்து நின்று ஆடுவது.

55. ஆக்ஷிப்தம்

ஆக்ஷிப்தசாரியாகப் பக்கவாட்டில் சிறிது சாய்ந்த கைகளால் சதுரமாக கடகாமுகக் கையுடன் நின்று ஆடுவது.

56. தலவிலஸிதம்

உயரத் தூக்கிய வலது காலுடன் பதாகக் கையையும் இருபக்கங்களிலும் தோளுக்கு மேலாக உயர்த்தி நின்று ஆடுவது.

57. அர்க்கலம்

கால் நுனியால் நின்றுகொண்டு பின்புறமாகச் சாய்ந்து கைகளைத் தரையில் ஊன்றி வளைந்து நிற்பது. இந்நடனத்திற்கு ஒரே சமயத்தில் இருகைகளும் அலபல்லவமாகச் சிறிது முன் நீட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.

58. விட்சிப்தம்

கை, கால் இரண்டையும் ஒரே பக்கமாகப் பின்னாகவாவது, பக்கங்களிலாவது நீட்டி ஆடுவதாம்.

59. ஆவர்த்தம்

மடக்கியகாலை நீட்டி விரைவாக மீட்டும் திருப்பி, பிரயோகத்திற்கு ஏற்றாற் போலக் கைகளைத் திருப்பி ஆடுவதாம்.

60.டோலாபாதம்

வளைந்த காலைத் தூக்கி, ஒரு பக்கத்திலிருந்து மற்றப் பக்கத்திற்குத் தொங்கவிட்டு அசைந்து நின்று ஆடுவதாம்.

61. விவிர்த்தம்

இடதுகாலையும், தன் உடலையும் சிறிது வளைத்துத் தூக்கி, கைகளை இரு மருங்கும் விசிறி, பிரமரி ஹஸ்தமாக வைத்து நிருத்தம் செய்வது.

62. விநிர்த்தம்

சூசிஹஸ்தமாக வலது காலைத் தொடைப் பக்கத்தில் வளைத்து, ஸ்வஸ்திகம் போல் வைத்து, மற்றொரு காலைத் திருப்பும்போது தொடை திரும்பும்படி பக்கத்தில் ஹம்ஸபட்சம் அமையச் சுற்றி ஆடுவது.

63. பார்சுவக்ராந்தம்

காலை முன் வீசி, அதற்குத்தக ஏற்றவாறு கைகளையும் வீசி, நின்று நடிப்பது.

64. நிஸ்தம்பிதம்

வலது காலை வளைத்து, குதத்தின் சமீபமாக வைத்து உயர்த்தி, கடகமுக ஹஸ்தமாக ஒருகையை அமைத்து, வலது கையை லலாடதிலகமாகச் செய்து நடிப்பது.

65. வித்யுத் பிராந்தம்

வலது காலைக் குதத்திலிருந்து நன்றாக வளைத்துப் பின்புறமாக உயர்த்தி, இடது கையை இடது காலின் இடுப்பு ஓரமாக முன்புறம் தொங்கவிட்டு, வலது கையை விசிறி நடிப்பது.

66. அதிக்ராந்தம்

தன் உடலுக்கு முன்னாக அதிக்ராந்த சாரியாக நடந்து பிரயோகத்திற்குத் தக்கவாறு கைகளை அமைத்து நின்று ஆடுவது.

67. விவர்த்திதகம்

கை கால்களை ஆக்ஷிப்தமாக அமைத்து இருந்து பிரமரி ரீதியாகத் திரும்பித் திரும்பி நடிப்பது.

68. கஜகிரீடிதகம்

வளைந்து கட்டிய இடக்கையைக் காதுக்கு நேராகப் பிடித்து, வலது கையை லதாஹஸ்தமாக அமைத்து, டோலாபாதசாரியால் நின்று ஆடுவது.

69. தலஸம்ஸ்போடிதம்

விரைவாக காலைத்தூக்கி முன்னாக வைத்து, கைகளைத் தல சம்ஸ்போடிதகரமாக் வைத்து நடிப்பது.

70. கருடப்லுதகம்

விருச்சிகபதமாக நின்று, லதாரேசிதககரமாக நின்று ஆடுவது.

71. கண்டசூசி

சூசிபாதமாக, பக்கத்தில் வளைய நின்று ஒருகையை மார்பில் வைத்து, மற்றொரு கை கண்டத்தில் சுட்டும்படி வைத்துக் கொண்டு நின்று ஆடுவது.

72. பரிவிர்த்தம்

சூசிபாதமாக மற்றொரு காலைத் திருப்பி, பதாகையாகக் கைகளை இருபக்கமும் சிரத்தில் சுட்ட வைத்து ஆடுவது.

73. பார்சுவஜாநு

ஒரு காலைச் சமமாக வைத்து, ஒரு காலைத் தொடையின் பின்னாக அமைத்து, முஷ்டிஹஸ்தமாகக் கையை மார்பில் வைத்து மற்றொரு கையைப் பக்கமாக வீசி நின்று ஆடுவது.

74. கிருத்ராவலீனகம்

இடது காலைப் பின்புறமாக வளைத்து வலது காலைத்தூக்கி முன்வைத்து, கைவீசி நின்று ஆடுவது.

75. சன்னதம்

சூசிஹஸ்தமான கைகளைக் கட்டிக் கொண்டு, கால்களை வளைத்து விரல்நுனியைப் பூமியில் ஊன்றச்செய்து ஆடுவது.

76. சூசி

கால் நுனிகளால் நின்று, சூசிஹஸ்தமாகக் கைகளைப் பிரயோகத்திற்குத்தக மார்பிற்கு நேராக அமைத்து ஆடுவது.

77. அர்த்தசூசி

வலது கையை அலபத்மமாகத் தலைக்கு நேரே பிடித்து, சூசிக்குச் சொன்னதுபோல நின்று ஆடுவது.

78. சூசிவித்தம்

சூசிபாதமாக நின்று, வலதுகையை இடுப்பிலும், இடது கையை மார்பிலும் அமைத்து நின்று ஆடுவது.

79. அபக்ராந்தம்

தொடைகளை வளைத்து, வளைந்த காலைத் தூக்கிப் பக்கங்களில் வளையவைத்து, பிரயோகத்திற்குத்தக, கைகளை அமைத்து ஆடுவது.

80. மயூரலலிதம்

விருச்சிகபதம் அமைத்து, கைகளை ரேசிதமாக வைத்து, பிரமரியாகவும் சுழன்றும் மயில்போல் ஆடுவது.

81. சர்ப்பிதம்

வளைத்து வீசப்பட்ட கால்களுடன் தலையையும் சாய்த்து நின்று, அதற்குத்தக கைகளை ரேசிதமாக வைத்து மாறிமாறி அவ்வாறே இருமருங்கும் ஆடுவது.

82. தண்டபாதம்

வலது காலைப் பின்பக்கமாகத் தூக்கி, இடது காலைத் தரையில் நுனிக்காலால் தட்டி நின்று, சிலம்பு ஒலிக்க, இடது கையை உயரத்தூக்கி, வலது கையைத் தொங்கவிட்டு நின்று ஆடுவது.

83. ஹரிணப்லுதம்

முழந்தாளை வளைத்துத் தூக்கி கைகளைப் படத்தில் காட்டியபடி இடப்புறமாகத் தோளுக்கு நேராகத் தொங்க விட்டு ஆடுவது.

## 84. பிரேங்கோலிதம்

பாதங்களை வளைய வைத்துக் கொண்டு கைகளைத் தோலாகரமாகப் பக்கத்திற்குப் பக்கம் திருப்பி, பிரமரிசரியாகத் துள்ளிக் குதித்து ஆடுவது.

## 85. நிதம்பம்

மேல் நோக்கிய விரல்களுடைய பதாக முத்திரையோடு கூடிய கைகளால் தலைவரை கொண்டு சென்று, பின்பு திரும்பிய கைகளால் மேலிடத்துச் சென்று திரும்பியதாகக் கைகளை அமைத்து, சுற்றிலும் பார்க்கக்கூடியதாகப் பதாகக்கையை அமைத்து, பின்பு உடம்பை நோக்கியதாகக் கையைத் தொங்கவிட்டு நிதம்ப நிருத்த ஹஸ்தத்துடன் ஆடுதல்.

## 86. ஸ்கலிதம்

இடது காலைச் சமபதமாகவும் வலது காலை வளைத்தும், வலது கையை ஹம்ஸபட்சமாகவும் இடது கையைத் தொங்கவிட்டும் இவ்வண்ணம் மாறிமாறி நடிப்பது.

## 87. கரிஹஸ்தம்

வலது கால் குதியைச் சாய்த்து ஊன்றி இடது காலைச் சிறிது மடங்க வைத்து, லதாஹஸ்தமாக அமைந்த ஒரு கையைத் தூக்கி, ஒரு பக்கத்திலிருந்து ஒரு பக்கம் அசைத்து, பின்பு திரிபதாக முத்திரையாகக் காதோரத்தில் ஒரு கையை அமைத்து நின்று ஆடுவது.

## 88. பிரஸர்ப்பிதகம்

ஹஸ்தமாகவும், லதாஹஸ்தமாகிய நிருத்த ஹஸ்தமாகவும் கைகளை அமைத்து, வளைந்த கைக்கு எதிராகவுள்ள காலால் மெதுமெதுவாக பூமியைத் தட்டிக்கொண்டு நடந்து வருவது.

## 89. சிம்ம விக்ரீடிதம்

அலாத சாரியை முன்னர் விரைவிற்செய்து, அதனை ஒட்டி கைகளையும் வட்டமாகச் சுழற்றி ஆடுதல், இது சிங்கத்தின் கையை அடித்தல் போலிருப்பதால் இப்பெயர் பெற்றது.

## 90. ஸிங்காகர்ஷிதகம்

விருச்சிகபாதமாக நின்று, வலது கையை வளைத்து ஸ்வஸ்திகமாக அமைத்து, இடது கையைப் பதாகையாகத் தொடைக்கு நேரே தொங்கவிட்டு ஆடி, மீண்டும் இடது காலையும் அதற்கு ஏற்பக் கைகளையும் அமைத்து நின்று ஆடுவது.

## 91. உத்ருத்தம்

பாதங்களையூன்றி முழங்கால் இடுப்பு இவை திரும்பும்படியாக அமைத்து, கைகளையும் முறுக்கி நின்று ஆடுவது.

## 92. உபசிருதகம்

வளைந்த காலைத் தூக்கி ஆட்சிப்தசாரியை அமைத்து, இடது பக்கமாகத் திரும்பி, கைகளைத் திரும்புவதால் உடலை வணங்கச் செய்து, கைகளையும் லதாஹஸ்தமாகத் தொங்கவிட்டு நின்று ஆடுவது.

## 93. தலஸங்கட்டிதம்

கால்களைத் தோலாபாதமாக இருமருங்கும் வளைத்து வைத்து, கைகளைப் பதாகை முத்திரையாகப் பிடித்து, கீழ்நோக்கி இரண்டையும் சேர்த்துப்பிடித்து நின்று, இடது கையை இடுப்பிலும் வலது கையை ஹம்சபட்சமாகவும் பிடித்துச் சுழன்று ஆடுவது.

## 94. ஜநிதம்

காலை இருமருங்கும் வளைய வைத்து, வலது கையை முஷ்டிஹஸ்தமாக மார்புக்கு நேரே பிடித்து இடது கையை லதாஹஸ்தமாகத் தொங்கவிடுவது.

## 95. அவகித்தகம்

ஜநிதத்தைப்போல நின்று, கைகளை மார்புக்கு நேரே மடக்கி, நெற்றி மார்பு இவற்றிற்கு நேராக முறையே பிடித்து, தளிர் ஒன்றுக்கொன்று நேராக இருப்பது போலக் கைகளை அமைத்து மெதுவாக ஆடுவது. வேறு சிலர் கிளிமூக்குப் போலக் கைகளை மார்புக்கு நேரே அணைத்து நின்று ஆடுவது என்பர்.

96. நிவேசம்

கைகளை மார்புக்கு நேராகப் பிடித்து மார்பைத் தாழ்த்தி, மண்டல ஸ்தானமாக நின்று ஆடுவது.

97. ஏலகாக்கிரீடிதம்

வளைந்த வணங்கிய உடலமைப்போடு தலசஞ்சர பாதங்களால் தூக்கி அசைத்து, துள்ளி விழுவது.

98. ஊருத்விருத்தம்

வலது கையைச் சிறிது திருப்பித் தொடையில் வைத்துக்கொண்டு முழங்காலை வளைத்துச் சிறிது தூக்கி ஆடுவது.

99. மதஸ்கலிதம்

கைகளைத் தோலகஸ்தமாகவும் சிரத்தைச் சிறிது வளைத்தும் கால்கள் இரண்டையும் வளையவைத்தும் ஆடுவது.

100. விஷ்ணுக்கிராந்தம்

கால்களை முன்னர் வீசியும், ஆகாயத்தை நோக்கி வளைத்தும், கைகளை ரேசிதமாகவும், அமைத்துநின்று ஆடுவது.

101. ஸம்ப்ராந்தம்

கைகளை மடக்கி இடுப்புக்கு நேராக வளைத்துக் கொண்ட தொடைகளையும் அவ்வாறே வளையவைத்து நின்று ஆடுவது.

102. விஷ்கம்பம்

அபவித்தகரமும் நிகுட்டிபாதமும் அமைய இடது கையை மார்பில் வைத்துக்கொண்டு நின்று ஆடுவது.

103. உத்கட்டிதம்

பாதங்களைச் சதுரம்பட வளைத்து, முன்காலால் நின்றும் கைகளைத் தலசங்கட்டிசதமாக வைத்தும் பக்கத்தைச் சிறிது வணங்கி நின்று ஆடுவது.

104. விருஷபக்கிரீடிதம்

கைகளை அலாதகஹஸ்தமாகச் செய்து கால்களை வளைத்து நின்று ஆடுவது.

105. லோலிதம்

கைகளை மார்புக்கு நேராக மலர்ந்த தாமரைப்போல அமைத்து, கால்களை ஸ்வஸ்திமாக வைத்து, சிறிது சாய்ந்த முகத்தோடு ஆடுவது.

106. நாகாபஸர்ப்பிதம்

கைகளில் வலதுகையை மார்புக்கு நேராக வைத்து, இடது கையைச் செவிக்கு நேராக வைத்து, வலது காலை முழங்கால் வரையில் மடக்கி, இடது காலைப் பின்புறமாகக் கழுத்துவரையில் தூக்கி, பாம்பு அசைவது போல அசைந்து ஆடுவது.

107. சகடாஸ்யம்

கால் கை உடல் இவற்றை வண்டிச்சக்கரம் போல அமைத்து, முகத்தைத் திரிபதாகைபோல் அமைத்து நடிப்பது.

108. கங்காவதரணம்

ஆகாயத்திலிருந்து கங்கை கீழே இறங்குவதுபோல இருகைகளையும் பூமியில் ஊன்றி, உடலைப் பின்புறமாக வளைத்து, கால்களை இடுப்புவரை நேரே தூக்கி ஆடுதல்.

இந்த நூற்றெட்டுப்பேதங்களும் சாரிகளுக்கும் வழங்கப்படுகின்றன. ஆகையால் சாரிகளாலேயே இவைகளுக்குப் பெயர் அமைந்தது எனல் பொருந்தும்.

உ

சிவமயம்

# அறுபத்து மூவர் திருநட்சத்திரங்களும் தொண்டுகளும்

*ஆகம சிற்பக்களஞ்சியக் கலைமணி*

*திருவிடைமருதூர், எஸ். நாராயணசுவாமி*

*திருவாவடுதுறை ஆதீனம்*

| நாயன்மார் பெயர் | குலம் | நாடு | ஊர் | வழிபாடு | திருநட்சத்திரம் |
|---|---|---|---|---|---|
| அதிபத்தர் | நுளையர் | சோ | நாகைப்பட்டினம் | லி | ஆவணி – ஆயில்யம் |
| அப்பூதியடிகள் | அந்தணர் | சோ | திங்களூர் | கு | தை – சதயம் |
| அமர்நீதியார் | வணிகர் | சோ | பழையாறை | ச | ஆனி – பூரம் |
| அரிவாட்டாயர் | வேளாளர் | சோ | கணமங்கலம் | லி | தை – திருவாதிரை |
| ஆனாயர் | இடையர் | மழ | மங்கலவூர் | லி | கார்த்திகை – அத்தம் |
| இசைஞானியார் | ஆதிசைவர் | நடு | திருநாவலூர் | லி | சித்திரை – சித்திரை |
| இடங்கழியார் | அரசர் | கோ | கொடும்பாளூர் | ச | ஐப்பசி – கார்த்திகை |
| இயற்பகையார் | வணிகர் | சோ | காவிரிப்பூம்பட்டினம் | ச | மார்கழி – உத்திரம் |
| இளையான்குடி மாறர் | வேளாளர் | -- | இளையான்குடி | ச | ஆவணி – மகம் |
| உருத்திர பசுபதியார் | அந்தணர் | சோ | திருத்தலையூர் | லி | புரட்டாசி – அசுவதி |
| எறிபத்தர் | தெரியாது | சோ | கருவூர் | லி | மாசி – அத்தம் |
| ஏயர்கோன் கலிக்காமர் | வேளாளர் | சோ | திருப்பெருமங்கலம் | லி | ஆனி – ரேவதி |
| ஏனாதிநாதர் | சான்றார் | சோ | எயினனூர் | ச | புரட்டாசி – உத்திராடம் |
| ஐயடிகள் காடவர்கோன் | அரசர் | தொ | காஞ்சிபுரம் | லி | ஐப்பசி – மூலம் |
| கணநாதர் | அந்தணர் | | சீகாழி | கு | பங்குனி – திருவாதிரை |
| கணம்புல்லர் | தெரியாது | -- | இருக்குவேளூர் | லி | கார்த்திகை – கார்த்திகை |
| கண்ணப்பர் | வேடர் | தொ | உடுப்பூர் | லி | தை – மிருகசீரிடம் |
| கலிக்கம்பர் | வணிகர் | நடு | திருப்பெண்ணாகடம் | ச | தை – ரேவதி |
| கலியர் | செக்கார் | தொ | திருவொற்றியூர் | லி | ஆடி – கேட்டை |
| கழறிற்றறிவார் | அரசர் | மலை | கொடுங்கோளூர் | லி | ஆடி – சுவாதி |
| கழற்சிங்கர் | அரசர் | -- | -- | லி | வைகாசி – பரணி |
| காரியார் | தெரியாது | சோ | திருக்கடவூர் | லி | மாசி – பூராடம் |
| காரைக்கால் அம்மையார் | வணிகர் | சோ | காரைக்கால் | ச | பங்குனி – சுவாதி |
| குங்குலியக் கலயர் | அந்தணர் | சோ | திருக்கடவூர் | லி | ஆவணி – மூலம் |
| குலச்சிறை யார் | தெரியாது | பா | மணமேற்குடி | கு | ஆவணி – அனுடம் |
| கூற்றுவர் | அரசர் | -- | களந்தை | லி | ஆடி – திருவாதிரை |
| கோச்செங்கட் சோழர் | அரசர் | சோ | -- | லி | மாசி – சதயம் |
| கோட்புலியார் | வேளாளர் | சோ | நாட்டியத்தான்குடி | லி | ஆடி – கேட்டை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சடையனார் | ஆதிசைவர் | நடு | திருநாவலூர் | லி | மார்கழி – திருவாதிரை |
| சண்டேசுரர் | அந்தணர் | சோ | திருச்சேய்ஞலூர் | | தை – உத்திரம் |
| சத்தியார் | வேளாளர் | சோ | வரிஞ்சியூர் | ச | ஐப்பசி – பூரம் |
| சாக்கியர் | வேளாளர் | -- | திருச்சங்கமங்கை | லி | மார்கழி – பூராடம் |
| சிறப்புலியார் | அந்தணர் | சோ | திருஆக்கூர் | லி | கார்த்திகை – பூராடம் |
| சிறுத்தொண்டர் | மாமாத்திரர் | சோ | செங்காட்டங்குடி | ச | சித்திரை – பரணி |
| சுந்தரர் | ஆதிசைவர் | நடு | திருநாவலூர் | கு | ஆடி – சுவாதி |
| செருத் துணையார் | வேளாளர் | சோ | தஞ்சாவூர் | லி | ஆவணி – பூசம் |
| சோமாசிமாறர் | அந்தணர் | சோ | திருவம்பர் | கு | வைகாசி – ஆயிலியம் |
| தண்டியடிகள் | தெரியாது | சோ | திருவாரூர் | லி | பங்குனி – சதயம் |
| திருக்குறிப்புத் தொண்டர் | ஏகாலியர் | தொ | காஞ்சிபுரம் | ச | சித்திரை – சுவாதி |
| திருஞான சம்பந்தர் | அந்தணர் | சோ | சீகாழி | கு | வைகாசி – மூலம் |
| திருநாவுக்கரசர் | வேளாளர் | நடு | திருவாமூர் | க | சித்திரை – சதயம் |
| திருநாளைப் போவார் | புலையர் | சோ | ஆதனூர் | லி | புரட்டாசி – உரோகிணி |
| திருநீல கண்டர் | குயவர் | சோ | சிதம்பரம் | ச | தை – விசாகம் |
| திருநீலகண்ட யாழ்ப்பாணர் | பாணர் | நடு | எருக்கத்தம்புலியூர் | கு | வைகாசி – மூலம் |
| திருநீலநக்கர் | அந்தணர் | சோ | சாத்தமங்கை | லி | வைகாசி – மூலம் |
| திருமூலர் | இடையர் | சோ | சாத்தனூர் | கு | ஐப்பசி – அசுவதி |
| நமிநந்தியடிகள் | அந்தணர் | சோ | ஏமப்பேறூர் | லி | வைகாசி – பூசம் |
| நரசிங்கமுனையரையர் | அரசர் | நடு | -- | ச | புரட்டாசி – சதயம் |
| நின்றசீர் நெடுமாறர் | அரசர் . | பா | மதுரை | கு | ஐப்பசி – பரணி |
| நேசர் | சாலியர் | | காம்பீலி | ச | பங்குனி – உரோகிணி |
| புகழ்ச்சோழர் | அரசர் | சோ | உறையூர் | ச | ஆடி – கார்த்திகை |
| புகழ்த் துணையார் | ஆதிசைவர் | -- | செருவிலிபுத்தூர் | லி | ஆவணி – ஆயிலியம் |
| பூசலார் | அந்தணர் | லி | திருநின்றவூர் | – | ஐப்பசி – அனுஷ்டம் |
| பெருமிழைக் குறும்பர் | தெரியாது | -- | பெருமிழலை | கு | ஆடி – சித்திரை |
| மங்கையர்க் கரசியார் | அரசர் | பா | மதுரை | கு | சித்திரை – உரோகிணி |
| மானக் கஞ்சாறர் | வேளாளர் | -- | காஞ்சாறூர் | ச | மார்கழி – சுவாதி |
| முருகர் | அந்தணர் | சோ | திருப்புகலூர் | ச | வைகாசி – மூலம் |
| முனையாடுவார் | வேளாளர் | சோ | திருநீடூர் | ச | பங்குனி – பூசம் |
| மூர்க்கர் | வேளாளர் | தொ | திருவேற்காடு | ச | கார்த்திகை – மூலம் |
| மூர்த்தியார் | வணிகர் | பா | மதுரை | லி | ஆடி – கார்த்திகை |
| மெய்ப்பொருளார் | அரசர் | நடு | திருக்கோவலூர் | ச | கார்த்திகை – உத்திரம் |
| வாயிலார் | வேளாளர் | தொ | திருமயிலாப்பூர் | லி | மார்கழி – ரேவதி |
| விறன் மிண்டர் | வேளாளர் | மலை | செங்குன்றூர் | ச | சித்திரை – திருவாதிரை |

குறிப்பு நாடு : கோ–கோனாடு, சோ–சோழநாடு, தொ–தொண்டை நாடு, நடு–நடு நாடு, பா–பாண்டி நாடு, மலை–மலைநாடு, மழ–மழ நாடு.

வழிபாடு : கு–குரு வழிபாடு, லி–லிங்க வழிபாடு, ச–சங்கம (அடியார்) வழிபாடு.

தொகையடியார் :

தில்லைவாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதுந் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆகிய ஒன்பதின்மர் ஆவர். இவர்களுள் தில்லைவாழந்தணர் தில்லையில் (சிதம்பரத்தில்) உள்ள தீட்சிதர்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார் ஆதிசைவர், ஏனையோர் ஊர், குலம் முதலியன அறிவதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை.

## *அறுபத்துமூவரின் தொண்டுகள்*

### கோயில் தொண்டு செய்தவர்கள்

| | | |
|---|---|---|
| மூர்த்தி நாயனார் | – | சந்தனக்காப்பு |
| நமிநந்தி அடிகள் | – | விளக்கெரிப்பு |
| கூற்றுவ நாயனார் | – | பூசைகள் நடத்தினவர் |
| கணம்புல்ல நாயனார் | – | விளக்கெரிப்பு |
| முருக நாயனார் | – | பூமாலை கட்டியவர் |
| திருநாளைப்போவார் நாயனார் | – | தோலும் வாரும் நரம்பும் கோரோசனை(ஓர் மருந்து)யும் கொடுத்து வந்தவர், நந்தியை விலகச் செய்தவர், தீ மூழ்கியவர். |

### பாடிப்பதம் பெற்றவர்

| | | |
|---|---|---|
| நீலகண்ட யாழ்ப்பாணர் | – | யாழ்வாசித்துப் பாடினார், மதுரைக் கோவிலுள் சிவனார் கட்டளைப்படி நுழைந்தவர். |
| ஆனாய நாயனார் | – | குழல் வாசித்து முத்தி பெற்றவர், பஞ்சாட்சரத்தைக் (சிவநாமாக்கரம் ஐந்து) குழலில் வாசித்தவர், சிவனால் ஆட்கொள்ளப்பட்டவர். |

### மனக்கோயில் கட்டியவர்கள்

| | | |
|---|---|---|
| பூசலார் நாயனார் | – | மனத்தால் கோவில் கட்டியவர் |
| வாயிலார் நாயனார் | – | மனக்கோயிலில் வழிபட்டவர் |

### மந்திரம் செபித்த அடியார்கள்

| | | |
|---|---|---|
| உருத்திர பசுபதியார் | – | கழுத்தளவு நீரில் நின்று உருத்திர மந்திரம் செபித்தவர் |
| சிறப்புலி நாயனார் | – | பஞ்சாட்சரம் ஓதினவர், யாகம் செய்தவர். |
| சோமாசி மாறர் | – | பஞ்சாட்சரம் ஓதினவர், சிவனடியாரை ஆதரித்தவர் |
| திருமூலர் | – | திருமந்திரம் பாடியவர் |

## அடியார்க்குத் தொண்டு செய்தவர்கள்

| | | |
|---|---|---|
| அப்பூதி அடிகள் | – | அப்பரை வழிபட்டவர் |
| கணநாத நாயனார் | – | சம்பந்தரை வழிபட்டவர் |
| புகழ்த்துணை நாயனார் | – | பொற்காசு பெற்றுத் தொண்டு செய்தவர் |
| இடங்கழி நாயனார் | – | நெல் தந்து அடியார்க்கு உதவியவர் |
| நேச நாயனார் | – | அடியார்க்கு ஆடை நெய்து தந்தவர் |
| நரசிங்க முனையரையர் | – | அடியார்க்கு அன்னமிட்டவர் |
| பெருமிழலைக் குறும்பர் | – | அடியார்க்கு அன்னமிட்டவர், சுந்தரரை வழிபட்டவர் அவருக்கு முன் கயிலை சென்றவர் |
| சடையனார் | – | சிறந்த அடியவர் |
| இசை ஞானியார் | – | சிறந்த அடியவர் |
| கூற்றுவநாயனார் | – | சிறந்த அடியவர் |

## சமணரோடு போரிட்டவர்கள்

| | | |
|---|---|---|
| மூர்த்தி நாயனார் | – | எலும்பும் தேயச் சந்தனம் அரைத்தவர், சந்தனக்காப்பு, சமணர் துன்பம், வட அரசன் தடை, அவன் இறக்க, இவர் அரசர் ஆனார், இவரால் சைவம் பரவியது. |
| நமிநந்தி அடிகள் | – | சமணர் நீரால் விளக்கெரி என்றதும் அங்ஙனமே செய்து, சமணர் வாயை அடக்கியவர். |
| தண்டிகள் (கண் இல்லாதவர்) | – | குளம் வெட்ட முயற்சி, சமணர் பரிகசிப்பு, கண் பெற்றுச் சமணரைத் திருவாரூரில் இருந்து விரட்டியவர் |
| அப்பர் | – | சமணராலும் மகேந்திரவர்மனாலும் பல துன்பங்கட்கு ஆளானவர். |
| சம்பந்தர் | – | சமணரை வாதிட்டுத் தோற்கடித்தவர் |
| மங்கையர்க்கரசியார் | – | சம்பந்தர்க்கு உதவி செய்தவர் |
| குலச்சிறை நாயனார் | – | சம்பந்தர்க்கு உதவி செய்தவர் |

## கோவில் கட்டிய அடியார்கள்

| | | |
|---|---|---|
| கோச்செங்கட்சோழர் | – | பலகோவில்களைக் கட்டியவர், சிதம்பரம் கோவிலைக் கட்டியவர், தீட்சிதரை வரவழைத்து மாளிகை கட்டித் தந்தவர். |
| காரிநாயனார் | – | மூவேந்தர் மீது கோவை பாடிப் பணம் பெற்றுக் கோயில்கள் கட்டியவர். |

## தலங்களைத் தரிசித்தவர்களும் பாடினவர்களும்

| | | |
|---|---|---|
| காரைக்கால் அம்மையார் | – | சிவனைப் பாடிக் கயிலாயம் சென்றவர், பாடியவர் |
| ஐயடிகள் காடவர்கோன் | – | பல தளிகள் தரிசித்து வெண்பாக்களைப் பாடியவர் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். |
| கழற்சிங்க நாயனார் | – | பல தளிகளில் தொண்டு செய்தவர், மனைவியின் கையை வெட்டியவர். |
| அப்பர் | – | பல தலங்களைத் தரிசித்துத் திருமுறைகள் பாடியவர் |
| சம்பந்தர் | – | பல தலங்களைத் தரிசித்துத் திருமுறைகள் பாடியவர் |

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணர் | – | பல தலங்களைத் தரிசித்துத் திருமுறைகளுக்கு யாழ் வாசித்தவர். |
| சுந்தரர் | – | பல தலங்களைத் தரிசித்துத் திருமுறைகள் பாடியவர் |
| சேரமான்பெருமாள் நாயனார் | – | பல தலங்களைத் தரிசித்துத் திருமுறைகள் பாடியவர் |
| விறன்மிண்டர் | – | பல தலங்கள் தரிசித்து அடியாருடன் இருந்தவர், திருத் தொண்டத்தொகை பாடத் தூண்டியவர் (பாடாதவர்) |

## சிவவேடத்திற்கு மதிப்பீந்து சிவனடி சேர்ந்தவர்கள்

| | | |
|---|---|---|
| மெய்ப்பொருள் நாயனார் | – | பகைவன் முத்தநாதன் அடியாராக வந்து குத்திக் கொன்றான் |
| ஏனாதி நாயனார் | – | பகைவன் அதிசூரன் விபூதி அணிந்து வந்து கொன்றான். |

## செயற்கரிய செய்தவர்கள்

| | | |
|---|---|---|
| கண்ணப்ப நாயனார் | – | கண்ணிடந்து அப்பினவர் |
| புகழ்சோழ நாயனார் | – | பகைவர் தலைகளுள் ஒன்று அடியார் தலை எனக் கண்டதும் தீயில் வீழ்ந்து இறந்தவர் |
| சிறுத்தொண்ட நாயனார் | – | மகனை அறுத்து அமுது படைத்தவர் |
| குங்கலியக் கலய நாயனார் | – | தாலி விற்றுக் குங்கிலியம் வாங்கியவர், சாய்ந்த லிங்கத்தை நிமிர்த்தியவர் |
| திருநீலநக்க நாயனார் | – | லிங்கத்தின் மீது விழுந்த சிலந்தியை அப்புறப்படுத்திய மனைவி அசூயை செய்தனள் என்று அவளைத் துறந்து பின் கடவுள் கூற அவளை ஏற்றார், சம்பந்தரோடு சோதியிற் கலந்தவர். |
| கலியநாயனார் | – | திருவிளக்குப் பணி செய்தவர், மனைவியை விற்க முனைந்தார், உதிரத்தால் விளக்கு எரித்தார். |
| சண்டேச நாயனார் | – | மணலைப் பிடித்து லிங்கமாக வழிப்பட்டவர், தந்தை காலை வெட்டியவர். |
| கழற்சிங்க நாயனார் | – | திருவாரூரில் தம் மனைவி பூ மோந்ததால் செருத்துணை நாயனார் மூக்கரிய, இவர் அவள் கையை வெட்டினவர். |
| அரிவாட்டாயர் (அரிவாள்தாய நாயனார்) | – | பிரசாதம் சிந்திப்போகக் கழுத்தை அரிய முயன்றவர், அவர் கையைச் சிவனார் பற்றிக் கொண்டார். |
| கலிக்கம்ப நாயனார் | – | வேலையாள் பாதம் துலக்க நீர் விடத் தாமதித்த மனைவியின் கையை வெட்டியவர். |
| கோட்புலி நாயனார் | – | சிவநெல்லைத் தின்றதற்காக உறவினரைக் கொன்றவர், வாளோடு கயிலை சென்றவர். |

## சிவபிரானால் சோதிக்கப் பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| இயற்பகை நாயனார் | – | மனைவியை அடியவருடன் அனுப்பியவர், தடுத்த உறவினரைக் கொன்றவர். |
| திருநீலகண்ட நாயனார் | – | திருவோட்டுச் சண்டை, மனைவியையும் இவரையும் சிவனார் கூட்டுவித்தார். |
| இளையான்குடி மாற நாயனார் | – | விதைத்ததைக் குற்றி வீட்டு உத்திரம் முதலியன கொண்டு சமைத்தவர். |

| | | |
|---|---|---|
| அமர்நீதி நாயனார் | – | கோவணச் சண்டை – தராசில் அவர், மனைவி, மகன் ஏறி நின்றனர். |
| திருக்குறிப்புத் தொண்டர் | – | அடியார் தந்த ஆடையை மழையால் மாலையில் உணர்த்திக் கொணரக் கூடாமையின் உயிரை மாய்க்க முயன்றவர், சிவனார் அவரைப் பிடித்துக் காப்பாற்றினார். |
| அதிபத்த நாயனார் | – | முதல் மீன் சிவனுக்கென விட்டவர், மீனே கிடைக்காமல் ஒரு பொன் மீனே முதலில் கிடைக்க அதையும் சிவனுக்கே விட்டவர். |
| மானக்கஞ்சாறர் | – | ஏயர்கோன் மாமனார், ஒரே மகள் கூந்தலை அடியவர்க்கு அறுத்துக் கொடுத்தவர் |
| ஏயர்கோன் கலிக்காம நாயனார் | – | சூலைநோயால் வருந்திச் சுந்தரரைக் காண மறுத்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்றவர், இறுதியில் சுந்தரரால் நோய் நீக்கப் பெற்று இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர். |

## அழுத்தமான சைவப்பற்றுடையவர்கள்

| | | |
|---|---|---|
| எறிபத்த நாயனார் | – | புகழ்ச் சோழர் யானை மாலையை அறுக்க, அதனைக் கொன்றவர், பாகர் முதலியவரையும் கொன்றவர். |
| சக்தி நாயனார் | – | சிவனடியாரை இகழ்பவரின் நாவை அறுத்தவர் சூதாடிப் பெற்ற பொருளைச் சிவனடியாருக்கு அமுதளிக்க உதவினார், சூதாட்டத்தில் தவறான ஆட்டம் ஆடுபவரைக் குத்துபவர், |
| நந்தனார் | – | நந்தி விலகச் செய்தவர், சிதம்பரத்தைத் தரித்தவர் |
| முனையடுவார் நாயனார் | – | போர் செய்து வந்த பணத்தைக் கொண்டு சிவன் அடியார்க்கு உணவு படைத்தவர். |

*இவ்வாலயத்தை ஸ்தாபித்த அம்பலவி முருகர் "கந்தன்","சங்கரன்" என்னும் பெயர்களுடைய இரண்டு எருதுகளை வளர்த்து வந்தார். அவர் பெயர் சொல்லிக் கூப்பிட்டால் செய்யவேண்டியதென்ன என்று கேட்பன போல் அவ்விரு எருதுகளும் அவர் முன் ஓடிவந்து நிற்கும். அவை இக்கோவில் திருப்பணிக்கு பெரிதும் உதவியாயிருந்து வந்தன எவ்வளவு பெரும் பாரத்தையும் தம் களைப்பையும் பொருட்படுத்தாது இழுத்துக் குறித்த இடத்திற்குச் சேர்ந்து வரும் தன்மையன.*

# மார்கழி நீராடல் - பாவைக் கருத்துக்கள்

*வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்*

**மா**ர்கழி சிறப்புடைய மாதம். செல்லுகின்ற நெறிக்கு கைவிளக்காய் ஒளிகாட்டும் மாதம். வடமொழியில் இம்மாதத்திற்கு 'மார்க்க சீர்ஷ' என்று பெயர் - உலக இன்பங்களாகிய திருமணம், வீடு குடிபுகுதல், புதுமனைக்கு அத்திவாரமிடல் போன்ற இலௌகிக காரியங்கள் இம் மாதத்தில் நடைபெறுவது இல்லை - உலகியல் இன்பங்களை ஒதுக்கிவிட்டு, இறையியலைச் சிந்திக்கச் செய்யும் மாதம். அதனால்தான் புருஷோத்தமன் "மாதத்தில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று அருளுகின்றான்.

கல்வியில் சிறந்தவன் சூரியன். சொல்லின் செல்வனாகிய அஞ்சனா புத்திரன் ஒன்பது வியாகரணங்களையும் கதிரவனிடமிருந்தே அறிந்து "நவவியாகரண பண்டிதன்" என்று புகழ் பெற்றான். சுக்ல யஜூர் வேதத்தை யாக்ஞவல்கிய மகரிஷிக்கு அருளியவன் பகலவனே. அத்தகைய கல்வி வல்லான் கல்விக் கடலாகிய தேவகுரு வியாழபகவானின் வீட்டில் (தனுர் இராசியில்) சஞ்சரிக்கும் மாதம். தீட்சைக்கு உரிய மாதம். மார்கழி திருவெம்பாவைக் காலத்தில் பன்னிரு திருமுறைகளுக்கும் காப்பிட்டுவிட்டு திருவாசகத்தை மட்டுமே ஓதுகின்ற மாதம். சைவத்தின் காவலராகிய நாவலர் பெருமானும் மார்கழி முழுவதும் திருமுறைகளை ஓதாது திருவாசகத்தை மட்டுமே ஓதவேண்டும் என்று விதித்திருக்கும் நியதியைப் பார்க்குமிடத்து மார்கழி மாதத்தின் புனிதத் தன்மையை உணர்கின்றோம்.

மற்றைய காலங்களைப் போலல்லாது மார்கழி வைகறைப் பொழுதில் ஆலயங்களில் பூசை வழிபாடு நடக்கின்றது. இது தேவர்களுக்குரிய அதிகாலைப் பொழுது. இந்தப் புலரிப் பொழுதில் நடக்கின்ற பூசைக்கு கோடி நாட்கள் நடக்கும் பூசையும் ஈடாகாது. இந்த வைகறை வழிபாட்டைச் செய்து சிவனை வழிபட்டவர்கள் இந்திர போகம் எய்தப் பெற்று இந்திரனுடைய நாட்களில் கோடி நாட்கள் சிறப்புற்று வாழ்வார்கள். (ஒரு தேவ ஆண்டு 366 மனித ஆண்டுகளைக் கொண்டது.)

*"சாப கத பாது திவஸாந்திய நிசிகாலே*
*ஆதிசிவ தேவ்யாஸஹ ஏகதின பூஜா*
*ஏகதின பூஜாபலம் கோடி தினே நாஸ்தி*
*இந்த்ரபதி இந்த்ர சிவ கோடி தினவாஸம்"*

என்று சிவாகமப் பாடலொன்று கூறுகின்றது.

தண் பாண்டி நாடு தந்த இரு கொற்கை முத்துக்கள் திருவாதவூரிலே தோன்றிய மணிவாசகப் பெருந்தகையும் ஸ்ரீ வில்லிபுத்தூர் பெற்றெடுத்த பொற்கொடி ஆண்டாள் நாச்சியாரும் ஆவர்.

முக்திப் பெருவாசகமாகிய திருவாசகத்தின் பெருமையை

*"கற்பாந்த காலம் கடவாக் கடல்கடக்கத்*
*தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்*
*உருவா சகங் கொண் டுரைத்த தமிழ்மாலைத்*
*திருவாசகம் என்னும் தேன்"*

என்னும் பாடல் தெரிவிக்கின்றது.

கோதைத் தமிழின் உயர்வை

*"பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடிகாட்டும்*
*வேதம னைத்துக்கும் வித்தாகும் - கோவைத் தமிழ்*
*ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை*
*வையம் சுமப்பதும் வம்பு"*

என்று ஒரு பாடல் சுட்டுகின்றது.

பாண்டிநாடு தந்த தெய்வப் பெரியோர்கள் இருவருமே பாவைப் பாடல்களைத் தந்து உதவியிருக்கின்றனர். திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் இரண்டுமே "மார்கழி நீராடலை" மிக

உயர்வாகப் பேசுகின்றன. மார்கழி நீராடலை சங்க நூல்கள் "தைந்நீராடல்" என்றே குறிக்கின்றன. முற்காலங்களில் மாதங்களை இன்று போல் கதிரவன் வழியாகக் கணக்கிடவில்லை. சந்திரனின் கதியை அநுசரித்தே கணக்கிட்டனர். இதனை மாதத்தைத் திங்கள் என்று குறிப்பிடுவதனால் உணரலாம். ஒவ்வொரு மாதமும் அநேகமான மாதங்கள் பௌர்ணமியுடன் நிறைவு பெறும்.

இதனைப் 'பூர்ணிமாந்த முறை' என வடநூலார் கொள்வர். மார்கழி பௌர்ணமியில் முடியும் மார்கழி நீராடலைத் 'தைந்நீராடல்' என்றே வழங்கி வந்தனர். பரிபாடல் கலித்தொகை முதலிய சங்க இலக்கியங்கள் இந்நீராடற் சிறப்பை மிக விரிவாகவே பேசுகின்றன. இதனை 'அம்பா ஆடல்' என்றும் கூறுவர்.

மார்கழி திங்களில் சிவபெருமானுக்கு ஆதிரை விழா எடுத்தலும், அந்நாட்களில் உலகு செழிக்க அந்தணர் தீ வேட்டலும் இல்லறத்தவராகிய ஆடவரும் பெண்டிரும் தாம். தாம் விரும்பியவற்றைப் பெற ஆனந்தக் கூத்தனை வேண்டி நிற்பர். முதுபார்ப்பனியர் சொல்வழியே இளமகளிர் நோற்றலை மேற்கொள்வர் எனப் பரிபாடல் கூறுகின்றது.

*"கனைக்கும் அதிக்குரல் கார்வானம் நீங்க*
*பனிப்படு பைதல் விதலைப் பருவத்து*
*ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து*
*மாயிருந் திங்கள் மதிநிறை ஆதிரை*
*விரிநூலந்தணர் விழவு தொடங்க*
*புரி நூலந்தணர் பொலங்கலம் ஏற்ப*
*வெம்பா தாக வியனில வரைப்பென*
*அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்*
*முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட*
*பனிப் புலர்பு ஆடிப் பருமணல் அருவியின்*
*ஊதை ஊர்தர உறைகின்ற வேதியர்*
*நெறி நிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பின்*
*தையல் மகளிர் ஈரணி புலர்தர"*

என்று தொடர்கின்றது.

*"வையெயிற் றியர்நாப்பண் வகையணி பொலிந்து நீ*
*தையனீராடிய தவந்தலைப் படுவாயோ"*

என்று கலித்தொகை கூறும்.

*"நறுவீ யைம்பான் மகளிராடும்*
*தைஇத் தண்கயம் போல்"* என்பது ஐங்குறு நூறு.

*"வான் பெய னனைந்த புறத்த நோன்பியர்*
*தையூ ணிருக்கையில்"* என்று கூறுவது நற்றிணை.

எனவே இம் மார்கழி நீராடலின் நோக்கம், நல்ல கணவரைப் பெற்று இல்வாழ்வு சிறக்கவும், நாடு மலிய மழை பெய்து நாடு சிறக்கவும். ஒவ்வொரு நாளும் வைகறையில் எழுந்து கூட்டமாகச் சென்று இறை புகழ் பாடி நீராடி நோன்பு செய்தலேயோகும்.

திருப்பாவை, திருவெம்பாவை நூல்கள் இரண்டுமே மார்கழி நோன்பின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் அற்புத கண்ணின் கருமணிப் பாவைகள் ஆகும். இவ்விரு பாவைகளும் வேறு வேறு தெய்வச் சார்புடைய வாயினும் ஒரு பொதுக் குறிப்புடையன என்பது அறிஞர் பெருமக்களுடைய கருத்து.

அர்த்த நாரீஸ்வரராகிய இறைவனை விட்டு நீங்காத பரா சக்தியருளால் ஏவப்பெற்ற மனோன்மணி என்றும் சக்தி பக்குவர்களான உயிர்களை

*"மல இருளுற்று உறங்காமல் மன்று பரிபாகர் அருள் செலமுழுக"*

வருமாறு தூண்டுகின்றது. இரும்பாய் இருந்த நம்மைப் பொன்னாக மாற்றுகின்றன இரு பாவைகளும்.

பரமான்மாவாகிய இறைவனைத் தலைமகனாகப் பெற்று பேரின்ப வாழ்க்கையில் தலைப்படுதற்கு விரும்பும் கன்னிப் பெண்ணாகத் தம்மை பாவித்து திருவாதவூரரும் பெரியாழ்வார் பெற்றெடுத்த பொற்கொடியும் பாவைப் பாடல்களைப் பாடுகின்றனர். ஆன்மநாயகனாகிய இறைவனை அடைதற்கு உரிய பக்குவம் முதிர்ந்த உயிர்களைக் கன்னிப் பெண்களாகவும், ஆணவமல இருளில் பிணிப்புண்டிருத்தலை உறங்கிக் கிடத்தலாகவும், மலவாற்றல் ஒழியப் பெறும் நிலையைத் துயில் நீத்தலாகவும், மலபரிபாகம் அடையப் பெற்ற உயிர்கள் அந்நிலைக்குத் தகுதியுடைய ஆன்மாக்களை அன்பு நெறிப்படுத்தி இறையருளில் நோய்வித்தற்கு அழைத்தலையே நீராட அழைத்தலாகவும் அமைத்துக் கொண்டு இருவரும் பாடுகின்றனர்.

மனித நாகரிகத்தின் தோற்றுவாய் நீர்வளம் மிக்க ஆறுகளுக்கு அடுத்துள்ள ஊர்களே என்பது ஆராய்ச்சியாளர்களது முடிவு. நோன்பினை மேற்கொள்பவர் முதலிலே நீராடி உடற்றூய்மை பெற்ற பின்னரே வழிபாட்டில் ஈடுபடுவர்.

மார்கழி மாதம் பனிமிகுந்த காலம். பொய்கையில் குடைந்து நீராட வேண்டுமென்றால் நடுக்கும் குளிரைத் தாங்குகின்ற உடல் உறுதியும் மன உறுதியும் தேவை. ஆலயங்களில் வைகறைக் கால வழிபாடு மார்கழி மாதத்தில் மட்டும் தான்.

திருவெம்பாவை முதல் எட்டுப் பாடல்களில் பெண்கள் ஒரு வரையொருவர் துயில் எழுப்புகின்றனர். ஒன்பதாவது பாடல் விண்ணப்பப் பாடல். சிவனடியார்களே தங்கள் கணவராக வேண்டும் என்ற பிரார்த்தனை ஒலிக்கின்றது. பத்தாவது பாடல் நீராடப் போகும் கன்னியர் இறைவனின் பரத்துவ நிலையை அதிசய வினாவாக்கி விடை காண்கின்றனர். பதினொன்று முதல் பதினைந்தாம் பாடல் முடிய தாமரைப் பொய்கையில் சிவசிந்தனை யறாமல் நீராடும் நங்கையர்களைக் காண்கின்றோம்.

குளத்தில் குளிக்கும் குமரிகளுக்கு கருங்குவளை மலரும் செங்கமல மலரும் மலராகத் தோன்றவில்லை. மாதொரு பாகனாகத் தோன்றுகிறது. என்னே! அவர்களது மனப்பக்குவம். பதின்மூன்றாம் பாடல் அருமையான கருத்துச் செறிவுள்ள பாடல்.

*"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்*
*அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்*
*தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்*
*எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த*
*பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்*
*சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்*
*கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்*
*பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்"*

கருங்குவளை போன்ற கண்ணையும், செந்தாமரை போன்ற முகத்தையும் அழகிய வளையல்களையும் (குருகு) ரீங்காரம் செய்யும் வண்டுகள் நிறைந்த பூமாலையையும் கொண்டபடியால் பொய்கை உமாதேவியாகத் தோன்றுகின்றது. அதே பொருட்கள் சிவனுக்கும் உரித்தாகின்றன.

கருங்குவளை போன்ற கண்டமும் செந்தாமரையையொத்த திருமேனியும் கொக்கிறகும் (குருகு) பின்னிக் கொண்டிருக்கும் பாம்புகளும், உள்ளதால் பொய்கை சிவபெருமானாகவும் தோற்றம் அளிக்கின்றது. மாதொருபாகனாகத் தடாகம் காட்சி தருகின்றது.

இப்பாடலில் மேலும் ஒரு சிறப்பு தீக்ஷை வகைகளை உணர்த்தி இருப்பது. கருங்குவளை – கண், சக்ஷு தீக்ஷை; செங்கமலப் போது – திருக்கரம் – திருவடி – ஸ்பரிச தீக்ஷை; குருகினம் – பறவைகளின் ஒலி; வாசக தீக்ஷை;

"திருநோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால் தம்மைச் சார்வாருடைய மலங்களைப் போக்குவதால் அருட் சக்தியோடு கூடிய இறைவன் மடுவுக்கு உவமையாயினான். இப்படி எண்ண எண்ண இனிமை தருகின்றது திருவெம்பாவை.

பதினாறாம் பாடல் மழைப் பாடல். மழையை அன்னை பராசக்தியின் அவ்யாஜ கருணைக்குப் பொருத்துகின்றார். பாரதி பாடுவான்.

*"மழை பொழிந்திடும் வண்ணத்தைக் கண்டு நான்*
*வானிருண்டு கரும்புயல் கூடியே*
*இழையும் மின்னல் சரேலென்று பாயவும்*
*ஈரவாடை இரைந்தொலி செய்யவும்*
*உழையெலாம் இடையின்றி வானநீர்*
*ஊற்றும் செய்தி உரைத்திட வேண்டுங் கால்*
*மழையும் காற்றும் பராசக்தி செய்கை காண்*
*வாழ்க தாய்! என்று பாடும் என் வாணியே!*

முன் அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழியும் மழை அருளாளர்களின் மனதில் கடவுட் சிந்தனையைக் கால் கொள்ள வைக்கின்றது. மார்கழி நீராடலால் வரும் பயன்கள் இரண்டு. ஒன்று நாடு மலிய மழை பொழிவது – இரண்டாவது கன்னியர்கள் சிவனடியார்களைக் கணவனாகப் பெறுவது. முதலாவது பொது – பின்னையது சிறப்பு. பதினேழாம் பாடல்

அன்னை கோதாட்ட ஐயன் அருளும் திறம் சுட்டப்படுகின்றது. பதினெட்டாம் பாடல் விண்ணும், மண்ணும் காண்பரிய விராட் சொரூபனைக் காட்டுகின்றது. பத்தொன்பதாம் பாடல் பிரார்த்தனைப் பாடல் இருபதாம் பாடல் அட்டமூர்த்தி உருவனான இறைவனுக்கு படைத்துக், காத்து, அழித்து, கரந்து அருள் செய்யும், ஐந்தொழில் வல்லோனுக்கு எண்முறை போற்றி கூறி நிறைவு செய்கின்றது.

திருப்பாவை:-

இனி கோதைத் தமிழை, கோதில்லாத் தமிழை சிறிது நோக்கினால் திருப்பாவைத் துயிலெழுப்பும் பத்து பாசுரங்களில் பத்து நாயகிகள் அன்ன நடையிட்டு வருகின்றார்கள். அத்தனை நாயகிகளையும் ஆண்டாள் கோபியர் ஆக்குகின்றாள். ஸ்ரீவில்லிபுத்தூர் ஆயர் பாடி ஆகின்றது. பெரியாழ்வார் மனை நந்த கோபன் மனை ஆகின்றது. ஆண்டாள் வைஷ்ணவத்தின் உயிர் நிலையான மூன்று முக்கிய நெறிகளைக் கடைப்பிடித்தாள். முதலாவது அநந்ய சேஷத்துவம் (திருமாலையன்றி வேறெவர்க்கும் எப்பொருளுக்கும் அடிமையாகாமை) இரண்டாவது அநந்ய சரணத்துவம் (திருமாலையன்றி வேறெவரையும் எப்பொருளையும் உபாயமாகப் பற்றாமை) மூன்றாவது அநந்ய போகத்துவம் (திருமான்றி வேறெவராலும் எப் பொருளாலும் போகம் துய்க்காமை). ஆண்டாள் அரங்கன் மீது கொண்ட காதல் வைராக்கியக் காதல்

*"என்புருகி இனவேல் நெடுங்கண்கள் இமைபொருந்தா*
*பலநாளும்*
*துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்*
*தோணிபெறாது உழல்கின்றேன்*
*அன்புடை யாரைப் பிரிவுறு நோயது நீயும் அறிதி குயிலே!*
*பொன்புரை மேனி கருளக் கொடியுடைப் புண்ணியனை*
*வரக்கூவாய்"*

இனிக் கோதையின் சங்கத் தமிழ் மாலையில் பானைச் சோற்றுக்குப் பருக்கைச் சோறு பார்ப்போம்.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்" என்று பாவைப் பாசுரம் தொடங்குகின்றது. சுக்கில பக்ஷ பௌர்ணமியாக அந்த நாள் நோன்பு நோற்க ஏற்றதாய் அமைகின்றது. இப்பாடலில் "நாராயணன் நமக்கே பறை தருவான்" என்பதால் அக்ஷ்டாக்ஷரச் சிறப்பு உபதேசிக்கப்படுகின்றது. இரண்டாவது பாடலில் "வையத்து வாழ்வீர்காள்" என்று அழைத்து நோன்பிற்குரிய விதித்தனவும், விலக்கியனவும் கூறப்படுகின்றது. இதனை வடமொழியில் ஆனுகூல்ய சாங் கல்பம், பிராதி கூல்ய வர்ஜனம் என்பர். உய்கின்ற ஆறுவழிகளை தெரிவிக்கின்ற பாடல். செய்ய வேண்டிய ஆறினையும் ஆனுகூல்ய சங்கல்ப்பமாக்குகின்றது. பரமன் அடிபாடல் நீராடல் ஐயமிடல், பிச்சையிடல், எண்ணல், உகத்தல். தவிர்க்க வேண்டிய ஆறும் பிரதிகூல்ய வர்ஜனம், நெய் உண்ணாமை, பால் உண்ணாமை, மையிடாமை, மலர் சூடாமை, செய்யாதன செய்யாமை, தீக்குறளைக் கூறாமை. நோன்பு காலத்தில் நல்லவற்றை செய்தால் மட்டும் போதாது. தீயவற்றை விலக்கவும் வேண்டும்.

மூன்றாவது பாடல் வாமன அவதார வைபவம். ஈரடியால் மூவுலகும் அளந்தமை. மிகப்பெரிய ஆலமரம் மிகச்சிறிய விதைக்குள், தெண்ணீர்க் கயத்து சிறுமீன் சினையினும் நுண்ணிய விதையில் அடங்குவது போல மிகப்பெரிய புருஷாகாரம் அந்தக் குள்ள வாமனத்துள் அடங்கிய அதிசயம். அவ்வதிசயனைப் பாடி நீராடினால் ஒன்பதுநாள் வெயிலும் ஒரு நாள் மழையுமாக திங்கள் மும்மாரி பொழியும். பசுக்கள் குடங் குடமாகப் பால் சொரியும்.

நான்காவது பாடல் – மழைப்பாடல்

*"ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்*
*ஆழியுட் புக்கு முகந்துகொ டார்த்தேறி*
*ஊழி முதல்வ னுருவம் போல் மெய்கறுத்துப்*
*பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்*
*ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து*
*தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்*
*வாழ உலகினில் பெய்திடாய் – நாங்களும்*
*மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"*

மழையை மாயவனாகக் காண்கின்றாள் கோதைப் பிராட்டி. இப் பாடலில் நான்கு உவமைகளைக் கூறுகின்றாள். மழை பெய்தல் என்ற உண்மையை உவமிப்பதால் மெய் உவமை மின்னுதல் முழக்குதல்

வினை உவமை. வாழப் பெய்திடல் பயன் உவமை; ஊழி முதல்வன் உருவம் போல் கறுத்து என்று உருவத்தைக் கூறுவதால் உருவ உவமை. இப்பாடலில் காணப்படும் நயம். மழை பொழிய வேண்டவில்லை. "வாழ உலகினில் பெய்திடாய்" என்று அதிகாரமாக ஆணையிடுகின்றார்கள் பாவைப் பெண்கள்.

*"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"*
என்பது பொய்யாமொழியல்லவா!

ஐந்தாம் பாடல் "மாயனை மன்னு வடமதுரை மைந்தனை" என்ற பாசுரத்தில் 'தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை' என்ற வரிகள் உளங்கொளத் தக்கது "சந்தாஸாம் மாதா" என்று பேசப்படுவது காயத்திரி மந்திரம். அம்மந்திரத்தின் நடுப்பகுதியான "பர்க்கோ தேவஸ்ய" என்ற தொடரை விளக்கம் செய்தவன் நாம் வணங்கும் தாமோதரன். தாம – உதரன் – பக்தியாகிய கயிற்றினால் யசோதை கட்டிய கயிற்றின் தழும்பை வயிற்றில் உடையவன். நாம் செய்த பிழைகள் அனைத்தையும் மன்னிப்பான் – நின்றனவும் தீயினில் தூசாகும். ஆறாவது பாடலிலிருந்து பதினைந்தாம் பாடல் வரை திருப்பள்ளியெழுச்சிப் பாசுரங்கள்.

பதினெட்டாம் பாசுரம் உந்து மத களிற்றன். இப்பாசுரம் இராமானுஜர் உகந்த பாசுரம் என்று ஸ்ரீவைஷ்ணவர்களாலே போற்றப் பெறுவது.

இராமானுஜர் துறவியானதால் இல்லந்தோறும் பிக்ஷை ஏற்று உண்பார். அப்படி வரும் பொழுது திருப்பாவைப் பாசுரங்களைச் சொல்லிக் கொண்டே செல்வது அவர் வழக்கம்.

ஒரு நாள் பெரியநம்பி திருமாளிகை வாசலில் பாவைப் பாடலைப் பாடிக்கொண்டு நிற்கையில் பெரிய நம்பியின் புதல்வி அழகே உருவான அத்துழாய் விரைந்து வந்து கதவை திறந்தார். கைவளை ஒலி செய்யக் கதவைத் திறந்த அத்துழாயைக் கண்ட எம்பெருமானார் மூர்ச்சித்து விழுந்து விட்டார். திகைத்து நின்ற அத்துழாய் தந்தையிடம் நடந்ததைக் கூற உண்மை அவருக்குப் புரிந்து விட்டது. ஓஹோ! "உந்துமத களிற்றன் என்ற பாசுரம் பாடிக் கொண்டிருந்தவருக்கு" செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய் என்னும் பொழுது நீ சென்று கதவைத் திறந்திருக்கிறாய். உன்னையே நப்பின்னையாக நினைத்து மயக்க முற்று விட்டார்" என்று அத்துழாய்க்கு உண்மையைப் புரியவைத்தார். இதனை வைணவ ஆலயங்களில் இருமுறை பாடுவார்கள்.

இருபத்து நான்காம் பாடல் போற்றிப்பாடல் – திருவடிகளுக்கு பல்லாண்டு இசைக்கின்றார். ஆறுபோற்றிகள் அறுசுவையாய் இனிக்கின்றது. வைணவர்கள் இதனை மங்களா சாசனப் பாட்டு என்று உச்சி மேல் கொள்வர்.

இருபத்தேழாம் பாடல் – நோன்பு நிறைவேறிய மகிழ்ச்சியில் சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பாடகம் என்று பலப்பல ஆபரணங்களை அணிந்து பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து உண்டு மகிழ்கின்றனர். மாயவனைஅனுபவித்து மகிழ்கின்றனர்.

இருபத்தொன்பதாம் பாடல் வேண்டு கோட்ப் பாடல் "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம். உனக்கே நாம் ஆட்ச் செய்வோம். மற்றை நம் காமங்கள் மாற்று என்று வைகுந்த வாசனிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். இதுவே பாவை நோன்பின் உயிர் நிலைத் தத்துவம்.

முப்பதாம் பாடல் *"எங்கும் திருவருள் பெற்று இன்புற வேண்டும்"* என்ற ஆசியின் நிறைவு "லோகா சமஸ்தா சுகினோ பவந்து" என்ற பரந்துபட்ட உள்ளத்தின் பொதுநல விழைவு. சங்கத் தமிழ்மாலை உலகப் பொதுநெறி.

திருவெம்பாவை திருப்பாவை இரு பாவைகளுமே நமது கண்ணின் கருவிழிப் பாவைகள். அநுபவத்திற்கு நம்மை ஒளிகாட்டி அழைத்துச் செல்லும் ஒளி விளக்குகள்.

# மார்கழித் திருவெம்பாவை மகிமை

-கம்பவாரிதி இ. ஜெயராஜ் -

உலகை உய்விக்க,
திருஅவதாரம் செய்தவர் நம் திருவாதவூர்ப் பெருமான்.
தனிவாசகமாய்த் திகழும் திருவாசகம் தந்த மணிவாசகர்
நம் முன்னைத்தவத்தால் இம்மண்ணிற் பிறந்தார்.
பாண்டியனிடம் மந்திரியாய்ப் பதவி வகித்த இம்மகான்,
குதிரை வாங்கச் சென்றபோது குருந்தமரநிழலில்,
அவ் ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்டார்.
இந்நல்லவருக்காக நரியைப் பரியாக்கி,
நம் நாயகன் திருவிளையாடல் செய்தனன்.
ஐயன் கருணையில் ஆழ்ந்து அகமுருகி,
அன்பினால் மணிவாசகர் செய்த நூலே திருவாசகமாம்.
அத்திருவாசகத்திற்கு உருகாதார் நெஞ்சம்,
ஒருவாசகத்திற்கும் உருகாது என்பது உலகவழக்கு.
விரிந்த நம் சைவநூல்கள் உரைக்கும் பொருளெலாம்,
திருவாசகத்துள் திருந்த அடங்கிநிற்றல் கண்கூடு.
தெய்வப்புலவர் திருவள்ளுவர்தம் திருக்குறளைக் கற்றார்,
எங்ஙனம் தமிழ் நூல்கள் முழுவதும் ஆட்சி கொள்வரோ,
அங்ஙனமே திருவாசகத்துள் மூழ்கித் திளைத்தார்,
நம் திருமுறை முழுவதன் தெளிவும் பெற்றாராய்த் திகழ்வர்.
திருவாசகத்தின் பெருமையுணர்ந்த,
நல்லைநகர் தந்த நம்நாவலர்,
மார்கழிமாதத்தில்,
மற்றைய திருமுறைகளுக்குக் காப்புக்கட்டி,
திருவாசகத்தைத் தினமும் ஓதுதல் நம்கடன் என்றனர்.
நம் குருமுதல்வனாம் நாவலர்தம் வாக்கினைப் போற்றி,
இம்மார்கழி மாதம் முழுவதும்,
திருவாசகச்சிந்தனையில் திளைப்போம்.

※ ※ ※

மார்கழி மாதத்தில் திருவாசகத்தேனை உட்கொள்ள,
நம் நாவலர் பணித்ததேன்?
திருவாசகத்தினைச் சிந்திப்பதன்முன்,
இம்மார்கழி மாதத்தின் மாண்பு அறிய வேண்டாமா?
மாதங்களில் நான் மார்கழியாகிறேன் என்று,
கீதையில் கண்ணன் உரைத்தான்.
இம்மாதத்தின் மகிமைதான் என்ன?
அதை முதலில் அறிந்து கொள்வோம்.

※ ※ ※

இருளாயும், ஒளியாயும் படைக்கப்பட்டது இவ்வுலகு.
இவ்வுலகின் அனைத்து விடயத்திலும்,
இவ் இருளும் ஒளியும் உண்டு.
வறுமை இருள் ; செல்வம் ஒளி..
மடமை இருள் ; அறிவு ஒளி.
சீற்றம் இருள் ; அன்பு ஒளி.
துன்பம் இருள் ; இன்பம் ஒளி.
இங்ஙனமாய் அனைத்திலும் பரவிய,
இவ்விருளும் ஒளியும்
ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு வாரத்திலும்
ஒவ்வொரு மாதத்திலும்
ஒவ்வொரு ஆண்டிலும்
பதிந்திருக்கிறது.
ஒருநாளில் பதிந்திருக்கும்
இருளையும் ஒளியையும் பகல் இரவு என,
தெளிவுறத் தெரிந்திருக்கும் நாம்
வாரம், மாதம், வருடம் என்பவற்றில்,
அவை பொருந்தியிருக்குமாற்றை,
தெளிவுற அறிந்தோம் அல்லோம்.
அறிதல் நம்கடன் அன்றோ?

※ ※ ※

ஒருநாளானது ஒளியில் தொடங்கி இருளில்
முடியுமாப்போலவே,
ஒருவாரமும் ஒளியில் தொடங்கி இருளில் முடிகின்றது.
ஒளியான முதல்நாளே ஞாயிற்றுக்கிழமை.
ஞாயிறு - சூரியன், கிழமை - உரிமை.
ஒளியான சூரியனுக்குரிமையான நாளில் தொடங்கும் வாரம்,
பின் சூரியனிற் குறைந்த ஒளிகொண்ட திங்களுக்குரிய
வாரமாகி,

பின் அதனிலும் ஒளி குறைந்த செம்மைநிறம் கொண்ட,
செவ்வாய்க்குரிய வாரமாய்த்தொடர்ந்து நிறைவில்,
இருளான சனிக்குரிமையான நாளில் முடிவடைகின்றது.
இதுவே ஒளியில் தொடங்கி இருளில் முடியும் வாரஒழுங்கு.

⁂ ⁂ ⁂

அதுபோலவே ஒருமாதமும்,
ஒளியாலும் இருளாலும் இரண்டு படப் பிரிக்கப்படுகிறது.
திங்கள் என்பது மாதத்திற்கான மற்றொரு பெயர்.
அப்பெயர் சந்திரனையும் குறித்து நிற்கிறது.
அதனால்,
ஒரு மாதமானது,
சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாகக்கொண்டே,
அமைக்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்கின்றோம்.
சந்திரனின் ஒளிக்காலத்தையும், இருட்காலத்தையும்,
அடிப்படையாகக் கொண்டே,
ஒரு மாதம் இருபகுதிகளாய் பிரிக்கப்படுகின்றது.
சந்திரன் பூரண ஒளி பெற்று நிற்கும் பூரணை நாளிலிருந்து,
மெல்ல மெல்ல ஒளி குன்றத்தொடங்குகின்றது.
அது முற்றாய் ஒளி குன்றிப்போகும் நாள் அமாவாசையாம்.
இவ்விரண்டு நிகழ்வினதும் தொகுப்பான நாட்களே
ஒருமாதம் எனப்படுகின்றது.
அமாவாசை தினத்திலிருந்து ஒளிவளர்ந்து பூரணைவரை
வரும் நாட்கள்,
ஒரு மாதத்தின் ஒளிநாட்களாய்க் கருதப்பட்டு,
அந்நாட்கள் அம் மாதத்தின் பூர்வபக்கம் எனப்படுகின்றது.
அதுபோலவே பூரணைநாள் தொடங்கி ஒளிகுறைந்து,
அமாவாசை வரை வரும் நாட்கள் ஒருமாதத்தின் இருள்
நாட்களாய்க் கருதப்பட்டு,
அந்நாட்கள் அம்மாதத்தின் அபரபக்கம் எனப்படுகின்றன.
பூர்வபக்கம், அபரபக்கம் எனும் இவையே,
ஒருமாதத்தின் ஒளி, இருள் பகுதிகளாம்.

⁂ ⁂ ⁂

இவ் ஒளியிருள் அடிப்படையிலேயே,
ஓராண்டினையும் ஆன்றோர் இரு பகுதிகளாய்ப் பிரித்தனர்.
ஓராண்டு என்பது சூரியனின் இயக்கம் கொண்டு
கணிக்கப்படுவது.
அதனால்,
சூரியனின் ஒளிகூடிய ஆறுமாதங்கள்,
சூரியனின் ஒளிகுறைந்த ஆறுமாதங்கள் என,
ஓராண்டு இருபகுதிகளாய்ப் பிரிக்கப்படுகின்றது.
அப்பிரிவுகளே உத்தராயணம், தெட்சணாயணம்
எனப்படுகின்றன.
ஓராண்டில் சூரியனின் ஒளிமிகுந்த காலம் உத்தராயணம்
ஆகும்.
இருள்சூழ்ந்த காலம் தெட்சணாயணம் ஆகும்.
ஆறாறு மாதங்களாய் இவ்விரு பகுதிகளும்
வகுக்கப்படுகின்றன.
தையிலிருந்து ஆனிவரையிலான காலம்,
ஓராண்டின் ஒளிபொருந்திய உத்தராயணப் பகுதியாகும்.
ஆடியிலிருந்து மார்கழிவரையிலான காலம்,
ஓராண்டின் இருள்பொருந்திய தெட்சணாயணப் பகுதியாகும்.
இதுவே ஒளி, இருள் அமைப்பில் ஓராண்டு பிரிக்கப்படும்
முறைமை.

⁂ ⁂ ⁂

இவ்வடிப்படையை முதலில் நாம் தெரிந்துகொள்ளுதல்
வேண்டும்.
இருளும் ஒளியும் தம்மைத் தெளிவாய் வெளிப்படுத்தி,
நம் அறிவால் அறியப்படுவன.
இவ்விருநிலை தவிர,
இருள் முடிந்து ஒளி தோன்றும்போதும்,
ஒளி முடிந்து இருள் தோன்றும்போதும்,
இருளும், ஒளியும் கலப்பதான ஓர் நிலை தோன்றும்.
இவ்விருளும், ஒளியும் கலந்துதோன்றும் நிலை,
தனித்த ஒளி போன்றோ தனித்த இருள் போன்றோ,
தெளிவுற அறிவால் விளங்கப்படாது,
இருளும் ஒளியும் கலந்ததான நிலையாய்,
அறிவை மயக்கி நிற்கும்.
ஒளியும், இருளும் சந்திப்பதான இந்நிலையையே,
சந்தி என்கிறது நம்சமயம்.
இருளும் ஒளியும் மயங்குவதான அச்சந்தி நிலையில்,
நம் அறிவும் மயக்கமுறும்.
அறிவு மயக்கமுறும் அவ்வேளைகளில்,
சாத்வீக இராசத குணங்கள் குன்றி,
பிழைகளுக்குக் காரணமான தாமசகுணம் மிகும்.
அக்குணத்தால் காமம் முதலிய பண்புகள் அதிகரிக்கும்.
அதை நோக்கியே மாலைப்பொழுதை,
காமம் மலரும் பொழுதாய் வள்ளுவர் உரைக்கின்றார்.
**காலையரும்பி பகலெலாம் போதாகி**
**மாலை மலரும் இந்நோய்** என்பது குறள்.
இரவும் பகலும் மயங்குவதான இப்பொழுதில்,
நம் அறிவும் மயக்கமுறுவதால்,

அவ்வேளையில் இறைவனைத்தொழுது,
மயக்கத்துள் அழுந்தி மாளாமல் இருக்க முயல்வது,
அறிவுடையார் கடன்.
அதனால்த்தான்,
இருளும் ஒளியும் சந்திப்பதான அச்சந்தி நிலையில்,
வழிபாடு செய்ததன் அவசியத்தை உணர்த்தி,
நம் ஆன்றோர் சந்தியாவந்தனம் எனும் முறைமையை
உருவாக்கினர்.

✲✲ ✲✲ ✲✲

இச்சந்தியாவந்தனம் பலவகையதாகும்.
இருளும் ஒளியும் கலப்பதான சந்திநிலை,
ஒருநாளில் வெளிப்பட இருமுறை தோன்றும்.
இரவுநீங்கி உதயம் நிகழும்போது தோன்றுவது ஒன்று.
பின் பகல்நீங்கி இருள்தொடங்கும்போது நிகழ்வது
மற்றொன்று.
முதலதை காலைச்சந்தி என்றும்,
இரண்டாமதை மாலைச்சந்தி என்றும் உரைப்பர்.
இதைவிட வெளிப்படத்தோன்றாது,
சூக்குமஉணர்வு பெற்றாரால் உணரப்படும்,
ஓர் சந்தியும் உண்டு.
அது முதற்சந்திகள் போல அல்லாது,
வெளிப்பட்ட ஒளியிலும், இருளிலும் தோன்றாது,
தனித்த ஒளிநிலையிலேயே தோன்றும்.
காலை புலர்ந்து மதியமாகி,
பின் மாலை பிறக்கும் நேரமாகிய,
பகலின் உச்சிப்பொழுதிலும்,
சூக்குமமான ஓர் ஒளியிருள் கலப்பு உண்டு.
அஃது உள்ளுணர்வு மிகுந்தாரால் உணரப்படும்.
எனவே ஒருநாளில் மூன்று சந்திகள் தோன்றுகின்றன.
இம்மூன்று சந்திகளிலும் சந்தியாவந்தனம் இயற்றுவது,
ஒழுக்கமுடையாரின் மாண்பு.

✲✲ ✲✲ ✲✲

இங்ஙனம் நிகழும் சந்திகளில்,
இருளிலிருந்து ஒளிக்குச் செல்லும்போது உண்டாகும்
சந்தி,
உயர்ந்ததாம்.
இருளான தாமசகுணத்தில் இருந்து,
ஒளியான சாத்வீககுணத்திற்கு செல்கையில்,
தாமசம் மிகக்குன்றி சாத்வீகம் மிகஉயர்ந்து நிற்றலால்,
இச்சந்தி உயர்ந்ததாய்க் கருதப்படுகிறது.
ஒளியிலிருந்து இருளுக்குச் செல்கையில் ஏற்படும்
சந்தியின்போது,
சாத்வீகம் மிகக்குன்றி தாமசம் மிகவுயர்ந்து நிற்குமாம்.
அதனால் இச்சந்தி குறைவுற்றதாய்க் கருதப்படுகின்றது.
இவ்விரு சந்திகளின் இயல்புநோக்கி,
சாத்வீக சந்தி சிறப்பு வழிபாட்டிற்கு உரியதாகவும்,
தாமசச்சந்தி பொதுவழிபாட்டிற்கு உரியதாகவும்
கருதப்படுகின்றன.
உச்சிச்சந்திவேளை,
காலைச்சந்தியின் உயர்ந்ததாயும்,
மாலைச்சந்தியின் தாழ்ந்ததாயும் கருதப்படுவதுண்டு.

✲✲ ✲✲ ✲✲

ஒருநாளில் வரும் சந்தி வழிபாடுகள் போல,
வாரத்திலும் வழிபாடு இயற்றுதல் அவசியம்.
அதுநோக்கியே சந்திவாரமாகிய சனி வாரத்தில்,
நீராடும் வழக்கம் உண்டாயிற்று.
சனிநீராடு என ஔவை வகுத்ததும் இது நோக்கியே.
இவ்வாரச் சந்தியில் வெள்ளி சனிச்சந்தி
தாமசச்சந்தியாகவும்,
சனி ஞாயிறுச்சந்தி சாத்வீகச் சந்தியாகவும்
கொள்ளப்படுகின்றன.
தாமசச்சந்தி ஆதலால் சனிக்கிழமை நம் மரபில்,
மங்கல காரியங்களுக்குத் தவிர்க்கப்படுகிறது.

✲✲ ✲✲ ✲✲

இதுபோலவே மாத சந்திகளான,
அமாவாசை, பூரணை தினங்களும்,
வழிபாட்டுக்குரிய தினங்களாம்.
இவற்றுள் அமாவாசை தினம்,
சாத்வீக சந்தியாதலால் அத்தினம்,
வழிபாட்டிற்கு மிக உகந்த தினமாம்.
இக்காரணம் நோக்கியே அமாவாசை தினத்தை,
நல்ல காரியங்களுக்குரிய,
மங்கல தினமாகக் கருதும் வழக்கமும் உருவாகிற்று.

✲✲ ✲✲ ✲✲

நாள்,வார, மாதச் சந்திகளைப்போலவே,
ஆண்டுச் சந்திகளும் வழிபாட்டுக்குரியவை.
தை மாதத்திலிருந்து ஆடி மாதம் வரையிலான,
உத்தராயண மாதங்கள் ஒளி மாதங்கள் எனக்கண்டோம்.
அதுபோலவே ஆடியிலிருந்து மார்கழி வரையிலான,

தெட்சணாயன மாதங்கள் இருள் மாதங்களாம்.
முன்சொன்ன அடிப்படையில்,
ஆடிமாதச்சந்தி தாமசச்சந்தியாகவும்,
மார்கழி மாதச்சந்தி சாத்வீகச் சந்தியாகவும்
அமைகின்றன.
ஓராண்டின் மார்கழிமாத சந்தியே,
சாத்வீகம் அதிஉச்சம் பெற்ற காலமாகும்.
அக்காலத்தில் செய்யும் வழிபாடு மிக உயர்ந்ததாய்க்
கருதப்படுகிறது.

ஃ ஃ ஃ

அதனாலேயே சாத்வீகம் மிகநிறைந்த மார்கழி
மாதத்தினை,
கீதையில் கண்ணன் தன்வடிவாய் உரைத்தனன்.
திருவெம்பாவை, திருப்பாவை போன்ற விரதங்கள்,
மார்கழி மாதத்தில் அமைந்ததுவும் அதுநோக்கியே.
இவ்விரு விரத காலங்களிலும் பாடப்படும்,
திருவெம்பாவை, திருப்பாவை என்னும் தோத்திரங்கள்,
துயிலெழுப்பும் பாணியில் அமைக்கப்பட்டிருப்பதன்,
பொருத்தப்பாட்டினையும் கண்டுணர்க.

ஃ ஃ ஃ

ஆடி மாதச்சந்தி தாமசச்சந்தி ஆதலால்,
ஆடி மாதம் நம் வழக்கத்தில் பீடை மாதமாய்க்
கருதப்படுகிறது.
கணவன், மனைவியர் இம்மாதத்தில் இணையாது பிரித்து
வைக்கப்படுவர்.
தாமச காலத்தில் உருவாகும் குழந்தை,
துர்க்குணங்கள் நிறைந்ததாய் உருவாகுமாதலின்,
அக்காலம் தம்பதியர்க்கு தவிர்க்கப்பட்டது.
அதுபோலவே இம்மாதத்தில்,
நல்ல காரியங்களைச் செய்யாதொழிவதும் வழக்கிலுள்ளது.

ஃ ஃ ஃ

மார்கழி மாதம் சாத்வீகச் சந்திமாதம் எனக்கண்டோம்.
மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்
காலமே,
அச்சந்தி முகூர்த்தமாம்.
அத்திருவாதிரை நட்சத்திரத்தினை நிறைவாகக்கொண்டு,
முன் பத்துநாட்கள் திருவெம்பாவை விரதம்
அனுஷ்டிக்கப்படும்.
இத்திருவாதிரை நட்சத்திரத் தினத்தில்,
சிவனாலயங்களில் ஆருத்திரா தரிசனம் நிகழ்த்தப்படும்.
ஆருத்ரை என்பது திருவாதிரை நடசத்திரத்தினைக்
குறிக்கும் ஓர்சொல்.
அந் நட்சத்திரத்தில் நிகழும் தரிசனம் என்பதால்,
அச் சிவதரிசனம் ஆருத்ரா தரிசனம் எனப்பட்டது.

ஃ ஃ ஃ

இவ் ஆருத்ரா தரிசனத்தினத்தில்,
சிவனாலயங்களில் நடேஸ்வர மூர்த்திக்கு,
பெரும் அபிஷேகங்கள் நிகழ்த்தப்படும்.
ஓர் ஆண்டின் உத்தராயண, தெட்சணாயண காலங்கள்,
தேவருலகில் ஒரு பகல்இரவாய் கருதப்படுவன.
தெட்சணாயண நிறைவு மாதமான மார்கழி மாதமே,
தேவர்தம் காலைச்சந்தி வழிபாட்டுக்காலமாம்
அதனால்தான் அக்காலம் எவர்க்கும் வழிபாட்டிற்குரியதாம்.

ஃ ஃ ஃ

மேற்சொன்ன நாள், வார, மாத, ஆண்டுச்
சந்திகளைப்போலவே,
ஊழிக்காலமும் பின் உலகு உதிக்கும் காலமும்,
இருள் ஒளிக்காலமாய்க் கருதப்படுகின்றன.
ஊழிக்காலத்தில் இறைவன் உலகனைத்தையும் ஒடுக்கி,
தன் ஐந்தொழிலையும் உள்வாங்கி அமைதியுற்றிருப்பன்.
பின் அவ் ஊழிக்கால முடிவுச்சந்தியில்,
தன் ஐந்தொழில் நடனம் புரிந்து,
உலகை மீண்டும் உருச்செய்வன்.
இங்ஙனம் இறைவன் உலகை உருச்செய்ய,
ஐந்தொழில் நடனம் புரியும்வேளையும்,
இம் மார்கழிமாத திருவாதிரை நட்சத்திர வேளையாகவே
கருதப்டுகிறது.
அதுநோக்கியே மார்கழித் திருவாதிரையின்போது,
ஆலயங்களில் நடராஜமூர்த்திக்கு அபிஷேகமும்,
தொடர்ந்து உற்சவத்தில் ஐந்தொழில் நடனமும்
நிகழ்த்துவிக்கப்படுகிறன.
இம் மார்கழி திருவாதிரை உற்சவத்தின்போது,
வீதியுலா வரும் நடராஜ மூர்த்தியை,
கண்ணாடியில் தரிசனம் செய்யும் வழக்கம் ஒன்று உண்டு.
இறைவனது விம்பமே இவ்வுலகாம்.
இவ்வுலகின் ஊடாகவே உண்மை இறைதரிசனம் கிட்டும்.
இத் தத்துவத்தை உணர்த்தவே நடராஜ விம்பத்தை,

கண்ணாடியில் தரிசிக்கும் வழக்கம்,
இம்மார்கழித் திருவாதிரை உற்சவத்தில்
அமைக்கப்பட்டுள்ளது.

ஃஃஃ

இருளில் தீயவையும் அவற்றின் அலைகளும் வெளிப்படும்.
இரவை விஷஜந்துக்களும், தீயோரும் விரும்புதலின்
காரணம் இதுவே.
அஃது அவர்க்குரிய காலமாம்.
இத்தீய வெளிப்பாடு நம்உயிர் உடல்களுக்கும் உண்டு.
ஆதலால் தான் இருளிலிருந்து ஒளிக்குச் செல்லும்
காலத்தில்,
உடல் தூய்மை, உயிர்த்தூய்மை செய்தல் அவசியமாகிறது.
அதுநோக்கியே இருளிலிருந்து ஒளிக்கு வரும்போது,
காலையில் நீராடி உடலைச் சுத்தம் செய்தும்,
பின்வழிபாட்டால் மனதையும், உயிரையும் சுத்தம் செய்தும்,
தூய்மையுற முயற்சிக்கிறோம்.
இம்முயற்சி சந்தி வழிபாடுகளில் அவசியமாய்க்
கருதப்படுகிறது.

ஃஃஃ

அவ்வடிப்படையிலேயே மார்கழிமாத நீராடலும்,
நீராடலினின் பின் இறைவனைப் போற்றுதலுமாகிய,
வழிபாட்டுமுறை உண்டாயிற்று.

ஃஃஃ

மார்கழி மாத ஆண்டுச் சந்தியில்,
இருள்நீங்கி ஒளியுள் செல்லத் தலைப்படும்போது
கடைப்பிடிக்கப்படும்,
நீராடுதல் இறைவனை வழிபடுதல்,
எனும் இரு செயல்களையும் குறித்து,
நம் மணிவாசகப் பெருமானால்
இயற்றப்பட்டதே, திருவெம்பாவை எனும் தேன் தமிழமுது.
புறஇருள் நீங்கத்தோன்றும்,
ஒளி அனுபவத்திற்கு,
தம்மை உடல்மன ரீதியாக தயார் செய்யும் பொருட்டு,
பெண்கள் ஒருவரையொருவர் துயில் எழுப்புவதாயும்,
பின் ஒன்றாய் நீர்நிலை அடைந்து,
இறைவனின் பெருமைபாடி நீராடுவதாயும் அமைந்தவை
திருவெம்பாவைப் பாடல்கள்.

ஃஃஃ

வெளிப்படையான இச்செய்தியினூடு,
குறிப்பினால் மிகப்பெரும் தத்துவ உண்மையை,
மணிவாசகர் நமக்கு உணர்த்துகிறார்.
ஆணவ இருளில் ஆன்மாக்கள் மூழ்கிக் கிடக்கின்றன.
அவ்விருளில் இருந்து விழிப்படைந்த ஆன்மா,
ஒளி நோக்கிச்செல்ல மற்றைய ஆன்மாக்களையும்
தயார்படுத்துகிறது.
அங்ஙனம் சுத்தமடைந்த ஆன்மாக்கள் ஒன்றிணைந்து,
இறை சக்தியின் அருட்புனலுள் மூழ்கி,
சுத்தமடைந்து,
இறையைச்சார அருட்சக்தியிடம் வேண்டி நிற்கின்றன.
இக்கருத்தையே திருவெம்பாவைப் பாடல்கள் மூலம்,
தெள்ளுதமிழ் திருவாசகம் நமக்கு உணர்த்துகிறது.

ஃஃஃ

இத்திருவெம்பாவைப் பாடல்கள்,
பெண்களால் பாடப்படுவதாய் அமைக்கப்பட்டிருப்பதாலும்,
அங்ஙனம் பாடும் பெண்கள்,
**அன்னவரே என்கணவர் ஆவார்**
**அவருவந்து சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்,**
**எங்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க** என்பதுவாய்
நல்ல கணவனை தாம் அடைதல் வேண்டி பாடுமாப்போல்,
சில பாடல் வரிகள் அமைந்திருப்பதாலும்,
இத்திருவெம்பாவை வழிபாடு,
பெண்களுக்கே உரியது என்றும்,
திருமணம் வேண்டிப் பெண்களால் செய்யப்படுவதே
இவ்வழிபாடு என்றும்,
தத்துவப்பொருளறியாது சிலர் மயங்கி உரைப்பர்.

ஃஃஃ

அக்கருத்து தவறாம்.
நம் தத்துவச் சிந்தனைமரபில்,
இறைவன் ஒருவனே ஆண்மகனாம்.
ஆன்மாக்கள் அனைத்தும் பெண்ணிலைப்பட்டனவே.
அவ் இறைத்தலைவனைக் கலந்து பேரின்பமுறுவதே,
ஆன்மாக்கள் அனைத்தினதும் ஒத்த குறிக்கோள்.
பேரின்பம் பெறுதற்காய் அத்தலைவனான இறைவன்,
தம்மை வந்து ஆண்டுகொள்ளானோ? என,
பெண்ணிலைப்பட்ட ஆன்மாக்கள் தவித்து நிற்கும்.

ஆளும் இறைவனை ஆணாயும்,
ஆளப்படும் ஆன்மாக்களைப் பெண்ணாயும்,
கருதுவது நம் தத்துவமரபு.
இம்மரபு பற்றியே

சிறையாரும் மடற்கிளியே இங்கேவா
தேனொடுபால்
முறையாளே உனத்தருவன் மொய் பவழத்தொடு
தரளம்
துறையாரும் கடற்றோணி புறத்தீசன் துலங்கும்
இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால்
பேசாயோ

எனச் சம்பந்தப்பெருமானும்

முன்னை அவளுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

என வாகீசப்பெருமானும்

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவர்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன்
பெருந்துறையான்
காட்டாதெனவெல்லாம் காட்டிச் சிவன் காட்டி
தாட்டாமரை காட்டி தன்கருணைத்தேன் காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்தான் கொண்டாண்டவா பாடுதுங்காண்
அம்மானாய்

என மணிவாசகப்பெருமானும்,
பெண்ணிலை நின்று பெருமான் திருவடியடையும் பேறு
உரைத்தனர்.
சுந்தரனார் சிவனேயான தன்மை பெற்று,
தம்பிரான் தோழனாய் திகழ்ந்தாராகலின்,
பெண்ணிலை நின்று பாடினார் அல்லர்போலும்.

இம்மரபுநிலை பற்றியே திருவெம்பாவைப் பாடல்கள்,
பெண்களால் பாடப்படுவனவாய் அமைக்கப்பட்டன.
அப்பாடலில் வரும் பெண்கள்,
ஆன்மாக்களையே குறித்து நிற்கின்றனர்.
ஆதலால் இத்திருவெம்பாவைப் பாடல்களும்
திருவெம்பாவை வழிபாடும்,
அனைவருக்கும் உரியது என்று அறிந்து கொள்ளலாம்.
இவ்வுண்மை அறிந்து இவ்வுயர்ந்த வழிபாட்டை,
சிறந்ததான இம்மார்கழி மாதத்தில்,
அனைவரும் கடைப்பிடிப்போமாக!

இக்காரணங்களை மனங்கொண்டே,
மார்கழி மாதத்தில்,
மற்றைய திருமுறைகளைக் காப்பிட்டு,
திருவாசகத்தினை ஓதிமகிழ்க என்றுரைத்தனர்,
நம் நாவலப்பெருந்தகை.

இத்தெய்வத் திருவெம்பாவைப் பாடல்களை,
இறைத்தன்மை கொண்ட மார்கழி மாதத்தில்,
ஒவ்வொரு தினத்திலும் வருவதாய அதிகாலைச்சந்தியில்.
வந்தனத்தோடு பாடிப் பரவுவோமாகில்,
நம்ஆன்ம இருளும் அகலும் என்பது திண்ணம்.

# தவநெறி

சு. குஞ்சிதபாதம்,
*திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை*
*தமிழ்நாடு*

தவம் என்பது என்ன? இக்கேள்விக்குத் திருவள்ளுவப் பெருந்தகை நேரடியாக விடை பகர்கின்றார்.

*உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்(கு) உரு*

என்பது தவத்திற்கு அப்பெருமகனார் தரும் வரையறை. தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதும், பிற உயிர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாதிருப்பதுமே தவவாழ்வு என்று குறிப்பிடுகின்றார். இந்த விளக்கத்தைப் பார்க்கும்போது பொறுமையோடும் அன்போடும் வாழ்தலே தவநெறி எனவும் இறைவழிபாடு என்பது தவநெறியோடு சேர்த்துக் குறிப்பிடப் பெறவில்லை என்றும் தோன்றலாம். ஆனால் திருவள்ளுவப் பெருமானின் பிற குறட்பாக்களையும் இணைத்து நோக்குவோருக்கு இறைவழிபாட்டு நெறியே தவநெறி என்பது தெளிவாகப் புலனாகும்.

*தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்*
*அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு*

என்னும் குறளைச் சிந்தித்தால் உண்மை விளங்கும். யாரெல்லாம் தவநெறியில் ஒழுகுகின்றனரோ அவர்களே தம் கடமையினைச் செய்வோராவர் என்பது கருத்து. இதற்குத் தம் கருமம் செய்வார் தவஞ்செய்வார் எனக் கூட்டித் தமது உலகியற் கடமைகளைச் செய்வோரே தவஞ்செய்வோராவர் என உரைப்பாரும் உளர். ஆனால் இவ்வாறு கொள்ளுதல் வள்ளுவர் கருத்திற்கு முரணானது என்பது அடுத்த அடியால் தெளிவாக விளங்கும். அதாவது தவஞ்செய்வோரை மட்டும் இக்குறட்பா குறிப்பிடவில்லை. தவஞ் செய்யாதாரைப் பற்றியும் குறிப்பிடுகிறது. தவஞ் செய்யாதோர் எப்படிப்பட்டவர் எனில் ஆசை கொண்டு அவத்தினைப் பெருக்குவோராவர். எனவே உலகப்பற்றுக் கொண்டு செயல்படுவோர் யாவரும் பிறவிக்கு ஏதுவாகிய வினைகளை ஈட்டுவோராவர். இதுவே அவம் எனப்படும். உலகப்பற்று நீங்கிச் செயற்படுவோரே தவநெறியினர் என்பது தெளிவாகும். உலகப்பற்று கொள்ளவில்லை எனில் எந்தப் பற்றினைக் கொள்வது? ஒன்றினும் பற்றுக் கொள்ளாது வாழ்ந்தால் வாழ்வில் அர்த்தம் உண்டா? என்ற கேள்விகள் எழுவது இயற்கையே. இதற்கும் வள்ளுவப் பேராசான் விடை கூறியுள்ளார். பற்றுக பற்றற்றான் பற்றினை என்பது அவர்தம் திருவாக்கு. ஒன்றையும் சாராமல் சுதந்திரமும், பேரறிவும், பெருந்தொழிலும், பேரருளும் கொண்டு விளங்குபவன் இறைவன். உயிர்களாகிய நாமோ சார்ந்ததன் வண்ணம் விளங்குவோர் (மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு). எனவே பேரறிவு கொண்ட இறைவனே நாம் பற்றுக்கொண்டு சார வேண்டிய பொருள். ஆதலால் இறைப்பற்றுக் கொண்டு இறைசார்பு நிலையில் முன்னேறிச் செல்வதே வாழ்வின் குறிக்கோளாக விளங்க வேண்டும். ''கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை'' என்னும் குறட்கருத்தால் எட்டு வான் குணத்து ஈசனே நாம் சார வேண்டிய இறைவன் என்பது தெளிவாகும்.

தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசாங்களினீங்குதல், பேரருளுடைமை, அளவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை ஆகிய எட்டுப் பெருங்குணங்களும் சிவபெருமானுக்கே உரியவை என்று சிவாகமங்கள் முழங்குகின்றன. சிவாகமத்தைக் கண்டே பரிமேலழகரும் உரை கூறியுள்ளார். ஏனைய நூல்கள் கூறும் எட்டு குணங்கள் இறை இலக்கணத்தை முழுமையாக உரைக்க வல்லன அல்ல.

ஆதலால் தன் வயத்தனாதல் முதலிய எட்டு குணங்களை உடைய சிவபெருமானே முழுமுதற் பரம்பொருள். அவனருளிச் செய்த வேதசிவாகமங்களே முதனூல்கள். சிவாகமவழிவந்த திருமுறைகளும், சாத்திரங்களுமே நம் சிந்தனைக்குரிய நூல்கள். இந்நூல்கள் காட்டும் வழியில் நடப்பதே தவநெறி சார்ந்த வாழ்வு எனத் தெளிந்து சைவ பெருவாழ்வு வாழ்ந்து உய்வோமாக!

# ஒன்றியிருந்து நினைமின்கள்

சித்தாந்தரத்தினம் கலாநிதி க. கணேசலிங்கம்

எந்தச் செயலையும் ஈடுபாட்டுடன் செய்தல் வேண்டும். அதில் மனம் ஒன்ற வேண்டும். அப்பொழுதுதான் அச்செயலை நன்கு முடித்து வெற்றி காண முடியும்.

வாழ்வில் துன்பம் துயரம் நீங்கி அமைதியும் நலனும் பெற இறை சிந்தனையும் வழிபாடும் தேவை. பிற சிந்தனைகளின்றி மனமொன்றா இறைவனை நினைக்க வேண்டும்; வழிபடவேண்டும். இங்ஙனம் இருந்தால் எமக்கு எந்தக் குறையும் நேராது. இது அப்பர் அடிகள் தரும் அறிவுறுத்தல் 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை.' என்பது அவரின் திருவார்த்தை.

## அடியவருக்கு அல்லல் இல்லை

இன்ப துன்பம் கலந்தது உலக வாழ்வு. இரண்டுமே என்றும் நீடிப்பதில்லை. நாம் பெறும் செல்வமும் இழப்பும் இன்பமும் நோயும் இறப்பும் முன்னரே எம்முடனிருந்து அனுபவத்துக்கு வருகின்றன. ''பேறு இழவு இன்பமொடு பிணி மூப்புச் சாக்காடு என்னும் ஆறும் முன் கருவுட் பட்டது'' என்று சிவஞானசித்தியார என்னும் சித்தாந்த நூல் கூறுகிறது. இவற்றினால் வரும் இன்பதுன்ப அனுபவங்களின் பின் வாழ்வு முடிகிறது. எடுத்த பிறவியில் இன்பத்தை விட துன்பம் பெரிதாகத் தெரிகிறது. பலவித குறைகளால் மனப்பயம் ஏற்படுகிறது. முடிவில் மரண பயமும் வேதனையும் மேலோங்கிக் கலங்க வைக்கின்றன.

வாழ்வில் உண்டாகும் இத்துன்பியல் நிகழ்வுகளிலிருந்து விடுபடுவதற்கு இறையருளைத் தவிர வேறெதுவும் துணைபுரிவதில்லை. பேரின்பப் பொருளான சிவபரம்பொருளை நாடுவதே ஒரே வழி. சிவனடியாராக இருந்த மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த காலனைக் காலாலுதைத்து அருள்புரிந்தவர் சிவபெருமான். அவருக்கு அடிமைபூண்டு வழிபடுவதால் வாழ்வின் துயரும் பயமும் நீங்கும். இதனை அப்பர் அடிகள் பின்வருமாறு கூறி உணர்த்துகிறார்.

"கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவர்க்காய்"

## உயிரின் வளர்ச்சி

எமது குறைகளுக்கான முலகாரணம் ஆணவ மலம் என்பது ஞானிகளின் கருத்து. நான், எனது என்ற கர்வம், எமக்குள்ள அறியாமை ஆகிய வாழ்வின் தீக்கூறுகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்தது ஆணவம். செம்பிற் களிம்பு போல், நெல்லில் உமிபோல், உயிருடன் இயற்கையாகச் சேர்ந்திருப்பது இது. இதனால் ஆணவத்துக்குச் சகசமலம் என்று ஒரு பெயர் உண்டு. சகசம் – இயற்கையாகச் சேர்ந்தது;. மலம் – அழுக்கு.

நாம் பல பிறவிகள் எடுத்து விட்டோம். இனியும் எடுக்கவுள்ளோம். பிறவிகள் எடுக்க முன் உயிர் இருந்த ஒரு தனி நிலை உண்டு. அது கேவலம் எனப்படும். கேவல நிலையில் உயிர் ஆணவத்துடன் சேர்ந்து, தனது ஆற்றல்களை வெளிப்படுத்த முடியாமல் இருந்தது. உயிரின் இந்த நிலையை, ''காரிருளில் கண்ணிலாக் குழவி'' போல் இருந்த நிலை என்று தாயுமானவர் விளக்குவார். தன்னையும் அறியாமல், தனக்கு மேலுள்ள தலைவனையும் அறியாமல் உயிர் ஆணவப் பிடியில் இருந்த அவல நிலை இது. இந்த நிலையைப் போக்கி, உயிரை உய்விக்கத் திருவுளம் கொண்ட கருணையே வடிவான இறைவன், உயிருக்குப் பிறவிகள் கொடுக்கிறான் எடுத்த பிறவிகள் ஒவ்வொன்றிலும் உயிர் செயல் புரிந்து, அனுபவம் பெற்று, அறிவு

விளக்கம் பெறுகிறது. உயிரின் அறிவு சிறிது சிறிதாக விளக்கமுற, அதனைப் பற்றிய ஆணவத்தின் பிடி சிறிது சிறிதாகத் தளர்கிறது. இறுதியில் ஆணவப்பிடியிலிருந்து உயிர் முற்றாக விடுபட்டு இறைவனைச் சார்கிறது; சிவனருளில் தோய்ந்து சிவானந்தத்தை அனுபவிக்கிறது.

## சிவனின் அருட் செயல்

உயிரின் இந்த ஆன்மீக வளர்ச்சிக்குத் துணைநின்று சிவப்பேறு பெறச் செய்வது சிவனின் திருவருளே. படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்ற ஐந்தும் அவனின் திருவருட் செயல்கள் அவனின் இந்த ஐந்தொழிலையும், படைத்தல், காத்தல், அழித்தல், என்று முத்தொழிலாக வகுப்பதும் உண்டு. இதில், காத்தலில் மறைத்தலும், அழித்தலில் அருளலும், அடக்கப்பட்டுள்ளன.

சிவனின் ஐந்தொழிலைக் குறிப்பது அவனின் திருநடனம். ஆடும் கூத்தனாக அவன் புரியும் ஐந்தொழில் இடைவிடாது நடைபெறுகிறது; எங்கும் நடைபெறுகிறது; என்றும் நடைபெறுகிறது. ஆன்மா விலும் அவன் ஆடுகிறான். ஆன்மா ஆணவ இருளில் தனித்திருந்த கேவல நிலையிலும் அவனின் ஆட்டம் நிகழ்ந்தது. ''நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே'' என்ற மணிவாசகரின் சிவபுராணத் தொடர் இதனைக் குறிப்பது. (நட்டம்– நர்த்தம்–நடனம்)

நடராசப் பெருமானின் திருவடிவம் ஆன்மாக்களுக் காக அவன் செய்யும் ஐந்தொழிலைக் குறிப்பது. அவனின் வலது திருக்கை ஒன்றிலுள்ள உடுக்கு படைத்தலைக் குறிக்கிறது. அமைந்த கரமாக உள்ள வலது திருக்கை காத்தலைக் குறிக்கிறது. ஊன்றிய திருவடி மறைத்தலைக் குறிக்கிறது. இடது திருக்கை ஒன்றிலுள்ள நெருப்பு அழித்தலைக் குறிக்கிறது. தூக்கிய இடது திருவடி அருளலைக் குறிக்கிறது. அவனின் இடது திருக்கை ஒன்றின் விரல் இந்தத் திருவடியைக் காட்டி, அவனின், அருளே எமக்குக் கதி, என்று உணர்த்துகிறது. ஊன்றிய பாதத்தின் கீழ் உள்ள முயலகன் ஆணவத்தைக் குறிப்பது. முத்தியில் உயிரைப் பிடித்த ஆணவம் ஆற்றல் இழந்து நிற்பதை இது குறிக்கிறது.

சிவனின் அருட் செயலான ஐந்தொழில் உயிர் பெறுவதற்காக என்றும் நிகழ்கிறது. அவனின் அருளாகிய சக்தி பிறவிகள் தோறும், எம்மைத் திருத்தித்திருத்தி (பேதித்து) வளர்க்கிறாள். இதனை மாணிக்கவாசக சுவாமிகள் பின்வருமாறு விளக்குகிறார்

''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி.... ''

## எங்கும் திருநட்டம்

கோயில் என்றால் சிதம்பரம் என்னும் சிறப்புமிக்கது சிதம்பரத்து நடராசர் கோயில். தில்லை என்பது சிதம்பரத்துக்குரிய இன்னொரு பெயர். அங்கே சிற்றம்பலத்தில் சிவனின் திருநடனம் நடைபெறுகிறது. சைவமக்கள் தமது வாழ்நாளில் ஒரு முறையாவது சிதம்பரம் சென்று ஆடும் பெருமானை வழிபடவேண்டும். அப்பர் அடிகள் பின்வருமாறு கூறி இதனை உணர்த்து கிறார்.

*''சென்று தொழுமின்கள் சிற்றம்பலத்து நட்டம்''*

தொழுதல் என்பது எமக்காக இறைவன் செய்யும் அருட்செயல்களை நினைத்து அவனுக்கு நன்றி செலுத்துவதாக அமைய வேண்டும். அவன் எமக்காகப் புரியும் ஐந்தொழிலை எண்ணி உருக வேண்டும்.

சிற்றம்பலம் என்றால் ஞானவெளி என்பது பொருள் சித் – ஞானம்; அம்பலம் – வெளி. சிதம்பரம் என்பதன் பொருளும் இதுவே அம்பரம் – அம்பலம். இறைவனும் அவன் அருளாகிய சிவசக்தியும் எங்கும் உள்ளனர். சிதம்பரமும் சிவனின் திருநடனமும் எங்கும் உண்டு. பின்வரும் திருமந்திரத் தொடர் இதனை விளக்குகிறது.

*''எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி*
*எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்''*

அப்பர் அடிகள் தனது சிதாகாசத்தில் சிவனின் ஆட்டத்தைக் கண்டு அனுபவித்த அருளாளர். அவனின் திருக்கோலமும் ஆகும் பொற்பாதமும் காண்பதற்காகவே மனிதப் பிறவி எடுக்கவேண்டும் என்று தனது ''குனித்த

புருவமும்'' என்று தொடங்கும் தேவாரத்தில் கூறுகிறார். அவர் சிதம்பரத்துக்கு வந்த பொழுது, ஆகும் பெருமானின் திருப்பார்வை *"நீ எப்பொழுது இங்கு வந்தாய்?"* என்று குறிப்பால் கேட்பது போல் அவருக்குத் தெரிகிறது. இதனை அவரே சொல்கிறார்.

*"எங்கு வந்தாய் எனும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே"*

இறைவனின் திருவுள்ளத்தை அறிந்து போற்றும் ஆற்றல் அருளாளருக்கு உண்டு.

## வழிபடு தெய்வம்

ஞான வடிவாகவும் பரிபூரண ஆனந்தமாகவும் இருப்பவன் சிவன். அவனே சைவர்களின் முழுமுதற் கடவுள். சிவனும் சிவமூர்த்தங்களுமே சைவர்கள் தொழவேண்டிய திருவடிவங்கள். சிறு தேவர்களும் பிறதேவர்களும் சிவனருளால் நிலைத்திருப்பவர்கள். அவர்களை வழிபடுவதால் எந்தப் பலனும் கிடைப்ப தில்லை. அவர்களின் வழிபாடு ஆன்மீக வளர்ச்சிக்கு இடையூறாக இருப்பதுமுண்டு. இதனாலேயே "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்'' என்று அப்பர் அடிகள் உரைக்கிறார். சிவனை வழிபடாமல் பிறதெய்வங்களை வழிபடுபவரைக் காணத் தான் அஞ்சுவதாக மாணிக்கவாசகர் கூறுகிறார்.

சிவநெறியைப் பெருநெறியாகக் கொள்ள வேண்டியவர்கள் சைவமக்கள். அவர்கள் சிறுதெய்வங்களை வழிபடுதல் பேதமை. இது தவிர்க்கப்பட வேண்டியது.

வாழ்வில் ஊனமாக அமைந்த குறைகள் நீங்கி வாழ்வாங்கு வாழ்ந்து நன்னிலை அடைவதற்கு சைவ நெறியில் நின்று சிவ வழிபாடு செய்தல் வேண்டும். திருக்கோயில் சென்று தொழ வேண்டும். மனமொன்றிச் சிவனை என்றும் நினைக்கவேண்டும். இது அருளாளர் அனுபவத்தில் கண்டு காட்டிய திருநெறி.

*"ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை*
*கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவர்க்காய்ச்*
*சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்*
*என்றுவந் தாயெனும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே"*

*(அப்பர் தேவாரம்)*



# இந்து மதம் – சனாதன தர்மம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்
ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர்

இப் பூமியில், மனித இனவரலாறு, மனித நாகரிக வரலாறு ஆகப் பரிணமிப்பதற்கு ஆதாரமாக இருந்தது சமயம். சமயம் என்பதைக் குறிக்கும் சொல்லாக மதம் எனும் சொல்லும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மனம் உள்ளவன் மனிதன். மனத்துடன் சம்பந்தப்பட்டவை மதி; அறிவு மற்றும் விவேகம் முதலிய ஆற்றல்கள்; மன உணர்வுகள்; விழுமியப் பண்புகள் என்பன.

மனிதன், மனித வடிவம் பெற்று, மனித இன வரலாறு தொடங்கிய காலத்தில், அடிப்படைத் தேவைகளாக இருந்தவை உணவு, நீர், தங்குமிடம் என்பவையே . அவற்றைப் புற உலகிலிருந்தே மனிதன் பெற்றுக் கொண்டான். காடுகளில் அலைந்து திரிந்து இலைதழைகள், காய்கனிகள், கிழங்குகள் முதலிய வற்றைச் சேகரித்தும், மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடியும் தனது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்து கொண்டான். இலைதழைகளாலும், மரப்பட்டைகளாலும், தோல்களாலும் மானத்தை மறைக்க வேண்டிய உடைத் தேவையைப் பூர்த்தி செய்தான். மர அடிகளையும், கற்குகைகளையும் தங்குமிடங்களாகப் பயன்படுத்தினான்.

இத்தகைய மனித வாழ்க்கைக்கும்,விலங்கு வாழ்க்கைக்கும் இடையே அத்துணைவேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. உண்ணுதல், உறங்குதல், இனப்பெருக்கம் செய்தல், அலைந்து திரிதல், மெலியாரை வலியார் ஆக்கிரமித்தல் என்பன விலங்கின் இயல்புகள். அத்த

மனிதர்கள் சேர்ந்து கூடிவாழ்தல் முறைமை யினால் அவர்கள் விலங்குகளிலிருந்து வேறுபட்டவர்கள் எனக் கூறப்படுகிறது. விலங்குகளுள்ளும் கூட்டமாகச் சேர்ந்து வாழுகின்ற விலங்கினங்களும் உள்ளனவே. பௌதிகச் சூழ்நிலை வென்று வாழும் தன்மையினர்; சமூக, அரசியல் அமைப்புகளுடனான சமூகச் சூழலை அமைத்து வாழுகின்ற இயல்பினர் என்றெல்லாம் மனிதரின் சிறப்புக்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இவையெல்லாம் விலங்குகளிடமில்லாமையினால், மனித இனம், விலங்கினத்திலிருந்து வேறுபட்டது என்று விளக்கிக் காட்டுகின்றனர். இவ்வாறு கூறுபவர்களும் மனிதர்கள்தான் ''தன்னைப் புகழாத கம்மாளன்'' இல்லைஎன்பது பழமொழி அவ்வாறே, மனிதர்கள் எல்லோருமே இதற்கு விதிவிலக்காவர் அல்லர். தம்மை உயர்த்திப் பேசுவது, புகழ்ந்துரைப்பது மனிதப் பழக்கம். அது மனித இயல்புக்கு மாறானது என்பது உணர்ந்து கொள்ளப்படவேண்டியது.

விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வன போன்ற பிற உயிரினங்களின் வாழ்க்கை முறைகள், ஒழுங்கு அமைப்பு முறைகள் என்பனவற்றை உற்று நோக்குபவர்களோ, ஆராய்ந்து பார்ப்பவர்களோ மிகமிகக் குறைவு. அவற்றை ஆராய்ந்து பார்த்தால், அவை களிடமும் சிறப்புக்கள் பல இருப்பதை அறிய முடியலாம். அவற்றிடமிருந்தும் நல்ல படிப்பினைகளை மனிதர் தெரிந்து கொள்ள இயலும் சில வேளைகளில், மனிதரிலும் சிறப்புற்ற நிலையில் அவை காணப்படலாம்.

பொதுவாகப் புற உலகினை அல்லது பௌதிகச் சூழலைத் தமதாக்கிக் கொள்ளுந் திறத்தால் மனிதன் பிற உயிரினங்களை விட, உயர்ந்து விட்டான் என்ற நிலைப்பாட்டினையே பெரிதும் மதித்து, அந்தத் திறன் மனித இனத்தில் தோன்றி, வளர்ச்சி பெறவும், பயன்களை நல்கவும் தொடங்கிய நன்னாளே, மனித நாகரிக வரலாற்றின் தொடக்கம் என்று கொள்ளப்பட்டு வருகின்றது. விவசாய அடிப்படையிலான ஆற்றங்கரை நாகரிகங்கள் இவ்வாறே தோன்றின. இதனை விஞ்ஞானம் சார்ந்த நாகரிகம் எனலாம். விஞ்ஞான நாகரிகம் இற்றைவரை பல சாதனைகள் படைத்துள்ளது

என்பதை மறுப்பதற்கில்லை. புற உலக சம்பந்தப்பட்ட நாகரிகம்,முழுமையான ''நயக்கத்தக்க நாகரிகம்'' என்று கொள்வதற்குமில்லை.

மனிதனுக்கு புற உலகு போன்று, அக உலகு ஒன்றும் இருக்கின்றது. அது மனத்துடன் சம்பந்தப் பட்டது. மனம் உள்ளவன்தான் மனிதன் என்று முன்னர் கண்டோம். மனம் மூன்று நிலைகளில் பரிணாம வளர்ச்சி பெறுகின்றது. மனிதனிடம் விலங்குமனம் காணப்படும் போது விலங்காக உள்ளான்; மனிதமனம் ஆக வளர்ச்சி பெறும்போது ''மானுடன்'' ஆக விளங்குகிறான்; தெய்வீக மனம் ஆக மலர்ச்சியடையும் போது தெய்வீக நிலையை எய்துகிறான். புற உலகினை வெளியரங்கம் என்றும் அக உலகினை உள்ளரங்கம் என்றும் கொள்கின்றனர்.

அக உலகு ஆன மனத்தின் செம்மையில், உள்ளரங்கத்தின் சீர்மையில், அகத்தின் அழகில்தான் மனிதனின் நயக்கத்தக்க நாகரிகம் தோன்றி வளர்கின்றது. நயக்கத்தக்க நாகரிகம் மெய்ஞ்ஞானம் தழுவியது; மானுடம் நோக்கியது ஆன்மீகம் சார்ந்தது. எனவே விஞ்ஞான உலகியல் நாகரிகம், முழுமையான மனித நாகரிகமாகப் பூரணம் பெறுவதற்குத் தேவைப்படுவது ஆன்மீக நாகரிகம்.

மனித நாகரிக வரலாறு, முழுமையான நிலையில் மலரத் தொடங்கியது எப்பொழுது என்று நோக்கில், புற உலக ஆராய்ச்சியுடன், ஆன்ம விசாரணையும் இணைந்த பொழுது என்பது தெளிவாகும். வெளிச்சூழல் எனும் வெளியரங்கத்தை தமக்கேற்றவாறு அமைத்துக் கொள்ள முடிந்தமை போன்று, மனம் எனும் உள்ளரங்கத்தையும் மனிதன் வெற்றி கொண்டு தமதாட்சியின்கீழ் கொண்டுவருதல், இயலாத காரியம் அன்று என்பதையும் மனிதன் உணரத் தொடங்கினான். தமது சிந்தனையாற்றலை வளப் படுத்தினான். சிந்திக்கும் திறன் மனிதனிடம் மாத்திரம் உண்டு, மனிதனில் மாத்திரம் தான் அதனை விருத்தி செய்ய முடியும், விலங்குகளிலோ அல்லது பிற உயிரினங்களிலோ அவ்வாறு செய்யமுடியாது, என்பதே மனித இனத்தின் எல்லாச் சிறப்புக்கும் அடித்தளமாக உள்ளது.

சிந்தனைத்திறன், மனித இனத்தின் உலகியல் சார்ந்த விருத்திகளுக்கும்; ஆன்மீகம் சார்ந்த வளர்ச்சி களுக்கும் காரணமாக உள்ளது. ஆன்மீக வளர்ச்சியே மனிதனை, மானுடனாக உருவாக்குகின்றது.

''மானுடம்'' என்பது மனித நலப் பண்புகள் யாவும் ஒருங்கிணைந்த நிலை. சிந்தனையின் விளை வாக மனிதன் பெறுவது மெய்யறிவு. மெய்யறிவின் பயனாக மனிதன் ''சமயி'' ஆகின்றான் ''சமயி'' யில் சமய அறிவும், சமய ஒழுக்கமும் சங்கமிக்கின்றன. சிந்தனையின் பயன் அறிவு; அறிவிற்குப் பயன் ஒழுக்கம் அறிவும் ஒழுக்கமும் ஒருசேரப் பெற்றவன் தான் மானுடன். மனிதன், மானுடனாக முயற்சித்த காலை, சமயம் தொடங்கிற்று எனலாம். மனிதனில் ஏற்பட்ட சமயவளர்ச்சி, மனிதனின் ஆன்மீக நாகரிக வரலாறு ஆகும்.

மனித நாகரிகம் என்பது மனிதனின் உலகியல் நாகரிகம் ஆன்மிக நாகரிகம் ஆகிய இரு துறைகளையும் உள்ளடக்கியதாக உள்ளது. நாகரிகம் என்பது அறிவு என்றும், அறிவு என்பது சிந்தனையின் விளைவு என்றும், சிந்திக்கும் திறன் மனிதனுக்கு மாத்திரமே உண்டு என்றும் காண்கின்றோம். அறிவு ஆனது புற உலகு சார்ந்த விஞ்ஞான அறிவாகவும், ஆன்மீக உலகு சார்ந்த மெய்ஞ்ஞான அறிவாகவும் வளர்ந்து வந்துள்ளது.

மேலை நாடுகளின் நாகரிக வளர்ச்சி, புற உலகை ஆராய்ந்து அறிவதில் ஆர்வமுடைத்ததாய் அத்தகைய அறிவிற்கு முதன்மை தருவதாய் விளங்கிற்று. அதனால் விஞ்ஞானம் வளர்ந்தது. கீழை நாடுகள் குறிப்பாக இந்தியா, ஆன்மீகத்தை ஆராய்ந்து அறிவதிலும், ஆன்ம விசாரணைக்கு முதன்மையளிப் பதிலும் முன்னின்றது. அதனால் மெஞ்ஞானம் வளர்ந்தது. இந்த அடிப்படையிலேயே இந்தியாவில் சமயம் தோன்றி வளர்ந்தது.

இந்தியாவின் சமயம் சனாதன தர்மம். அது இந்து சமயம் எனக் காலப்போக்கில் அழைக்கப் படலாயிற்று. இவ்வாறு முதன் முதலில் அழைத்தவர்கள் யார் என்பதையும் அறிய வேண்டாமா?

"இந்து" எனும் சொல்லை கிரேக்க வரலாற்றுக் காலத்தில், இந்து நதியின் கிழக்குக் கரைக்கு அப்பால் உள்ள பிரதேசத்தில் வாழுகின்ற மக்களைக் குறிக்க, கிரேக்கர்களும் மேற்கு ஆசியமக் களும் பயன்படுத்தினர் என வரலாறு கூறுகின்றது. அதைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் வழங்கிய சமயத்தையும் குறிப்பதாயிற்று. இந்து சமயம் என அதன் பின்னரே அழைக்கப்படலாயிற்று. "இந்து" எனும் சொல் கிரேக்க வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் வழக்கில் இருந்ததற்கு ஆதாரமில்லை. எனினும் அச்சொல் குறிக்கும் சமயம் மிகத் தொன்மையானது. இந்து சமயம் ஏனைய பெயர் பெறுவதற்கும் முன்னர், அச்சமயம் "சனாதன தர்மம்" எனப்பட்டு, பாரதமக் களிடையே வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்து மதத்திற்கு மிகப் பொருத்தமான பெயர் "சனாதன தர்மம்" என்பதேயாகும்.

மனித வாழ்க்கை உயர்வும் சிறப்பும் பெறு வதற்கு வாழ்க்கையில் ஓர் உன்னத ஒழுங்குமுறைமை தேவை. தர்மத்தை உணர்ந்து, அதன் வழி தமது, கடமைகள் பொறுப்புக்கள், நடத்தைகள் எவை எனத் தெளிந்து, அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதால், வாழ்க்கையில் ஒழுங்கு முறைமை பேணப்படுகிறது. எனவே "தர்மம்" என்றால் நல்லனவற்றை வாழ்க்கையில் நிலை நிறுத்துவது எனப் பொருள்படும். அல்லன வற்றைக் களைதல் என்பதும் அதிலிருந்து பிறக்கின்ற இன்னோர் கருத்து இந்த உலகில், நமது சமுதாயத்தில், நமது குடும்பத்தில், நம்மில், வாழ்க்கை ஒழுங்கினைப் பேணுவதற்குத் துணைநிற்பது தர்மம். தர்மம் இன்றேல் அவ்விடத்தில் காணப்படுபவை, குழப்பம், அமைதி யின்மை, அநர்த்தங்கள், அழிவுகள் ஆகும்.

சனாதன தர்மம் என்பது "என்றும் நிலையான நித்தியமான, முக்காலங்களிலும் உண்மையான தர்மம் அல்லது அறம் சார்ந்த நீதி நெறிமுறை" எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இந்த மனித வாழ்விற்குரிய நீதி நெறிமுறை அனைத்து மக்களுக்கும் பொதுவானவை.

அண்டங்கள் யாவற்றையும் படைத்துக் காத்து வருகின்ற இறைவனின் தலைமையை ஏற்று, நீதி நெறிமுறையின் வரம்பிற்குட்பட்டு, வாழ்க்கையைச் சீராகவும், செம்மையாகவும் மக்கள் நடத்துவதற்கு சனாதனதர்மம் வழிவகை கூறுகிறது. மனிதரின் உலகியல், ஆன்மீக ஒழுக்க விதிமுறைகளையும், நடை முறைகளையும் வரையறை செய்து தந்துள்ளது. சனாதன தர்மம் ஒரு வாழ்க்கை நெறி. அதன் அடிப் படையில் வாழ்ந்து வருபவர்கள் இம்மையில் இன்ப வாழ்வும், மறுமையில் மோட்சம் எனும் பேரின்பமும் பெறுவர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

'சனாதன தர்மம்' அதன் பிரதான நோக்கமாக, மனதைத் தூய்மைப்படுத்துவதையும், உயர்ந்த வாழ்க்கை நெறி முறைகளைப் பயிற்சி செய்வதையும், உயர்ந்த வாழ்க்கை நெறி முறைகளைப் பயிற்சி செய் வதையும் வற்புறுத்துகின்றது. மனிதனின் மனதையும் அங்கு எழுகின்ற எண்ணங்களையும், அவற்றின் விளைவான அறிவையும் உயர்நிலைக்குக் கொண்டு வந்து; செயல்களையும் செம்மையும் நேர்மையும் நிறைந்தனவாக்கி, சமூக வாழ்வில் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படச் செய்வதும், அதன்வழி அவனின் ஆன்ம ஈடேற்றம், ஆன்ம விடுதலை, பேரானந்தப் பெரு வாழ்வு என்பவற்றிற்கு இட்டுச் செல்வதும் சனாதன தர்மத்தின் இலட்சியம் ஆகும்.

சனாதன தர்மம், மனத்தூய்மையை அதிகம் வற்புறுத்துவதற்குக் காரணம், நன்கு தூய்மையாக்கப் பட்டு மலர்ச்சி பெற்ற மனத்தில்தான் ஒரே பரம்பொருள் என்ற எண்ணம் உதயமாகி அறிவுப் புலனுக்கு எட்டும் என்பதால் ஆகும். மாசுகள், சலனங்கள் நிறைந்த மனதில் பரம்பொருள் பற்றிய அறிவோ, கடவுள் பற்றிய சிந்தனையோ தோன்ற வாய்ப்பு இல்லை. அதற்குப் பதிலாக, ஐயங்கள் சந்தேகங்களும் நம்பிக்கையீனங் களும் தோன்றுகின்றன. இவை வாழ்க்கையை வளம் படுத்துவனவல்ல.

சனாதன தர்மம், ஆன்மீக நேயத்தையும், ஆன்மீக ஒருமைப்பாட்டினையும் வற்புறுத்துகிறது. இயற்கையில் பலவேறுபாடுகள் இருக்கின்றன. இவ் வேற்றுமைகள் இயற்கைக்கு மாறானவையல்ல. உலகம் என்றாலே அங்கு வேற்றுமைகள் உண்டு என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இவ் வேற்றுமை களுள் உள்ள ஓர் ஒற்றுமையும் இழையோடுகின்றது. என்பதும் உணர்தற்பாலது. அதுவே ஆன்மீக ஒற்றுமை அல்லது ஆன்மீக ஒருமைப்பாடு. எல்லாப் படைப்பின் ஊடாக உள்ள ஒரே தொடர்பு, ஒரே ஒற்றுமைதான் ஆன்மீக ஒருமைப்பாடு. எல்லா உயிர்களிடத்தும் ஒரே

ஆன்மா வியாபித்திருக்கிறது இந்த உலகம் முழுவதிலும் ஒரு கடவுள் நீக்கமற நிறைந்திருக்கிறார். அந்தப் பரம் பொருளை அடைவதை நோக்காகக் கொண்டே, அரிய மானுடப் பிறவி வாய்க்கப் பெற்றுள்ளது. இம்மானுடப் பிறவியில் எய்த முடியாத இப் பேற்றினை வேறு எந்தப் பிறவியிலும் எய்துவது, அத்துணை சாத்தியமான தில்லை. மானுடப் பிறவிக்குரிய அந்த நல்லவாய்ப் புத்தான், தர்மத்தை உணரும் தன்மை. அந்தத் தர்மமே, பரம்பொருளை அடைவதற் குரிய சீரிய வழியாகும். அந்தத் தர்மவழி வலியுறுத்துவது ஆன்மீக நேயம்.

எல்லா உயிர்களிடமும் ஒரே ஆன்மா நிறைந்தி ருக்கின்றது என்ற உயரிய தத்துவத்தைப் புரிந்து கொண்ட மனிதன், சகலரிடத்தும் அன்புள்ளவனாகத் தான் இருப்பான்; எவ்வுயிரையும் இம்சிக்கவோ, துன்புறுத்தவோ மாட்டான்; எவருக்கும் இடைஞ்சலா கவோ, இடையூறாகவோ இருக்கமாட்டான்; பகைமை, பொறாமை, கோபம் என்பவை அவனை நெருங்கு வதில்லை இந்நிலையில், ஆன்மீக நேயம் உறுதியாகி விடுகிறது.

இத்தகைய சனாதன தர்மம், உலகில் முதன் முதலில் பாரத தேசத்திலேயே தோன்றியது. அதனுடன் தோன்றியதுதான் மனித ஆன்மீக நாகரிகம். மனித நாகரிகம் நயக்கத்தக்க நாகரிகமாக அமைவதற்கு ஆன்மீக நாகரிகம் வழிவகுத்தது.

இந்து மதம், உலக மதங்களுள் மிகவும் பழைமையானது, தொன்மையானது என்று கொள்ளப் படுகிறது. ஆரம்பத்தில் இந்துமதத்திற்கு இருந்த பெயர்தான் சனாதன தர்மம். இம் மதம், ஆதிகாலத்தி லிருந்தே வழங்கி வருகிறது. பல சமயப் பிரிவுகள் இந்து மதத்திலிருக்கின்றன. வேதக் கொள்கைகள் எனும் வைதிகக் கொள்கைகள் ஆகமக் கொள்கைகள், சமணக் கொள்கைகள், பௌத்தக் கொள்கைகள், வைணவக் கொள்கைகள் எனப் பல்வேறு கொள்கை களுக்கும் மூலமும் முதலுமாக இந்து மதமே விளங்கு கிறது. இந்து மதத்தின் தொடக்கமான சனாதன தர்மம், வேத காலத்திற்கு முன்பிருந்த காலத்தில் பாரதமக்களி டையே நிலவி வந்துள்ளது. எல்லோருக்கும் பொருத்த மான தர்மத்தையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் வழங்கியது. பின்னர் வேத காலத்தில், வேதங்கள், ஸ்மிருதிகள் ஆகியவற்றில் அவை இடம் பெறச் செய்யப்பட்டன.

வேதங்கள், ஸ்மிருதிகள், இந்தியாவில் ஆரியர்கள் குடியேறியதன் பின்னரே இயற்றப்பட்டன. இற்றைக்கு ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன்னர், தற்போதைய துருக்கி நாட்டிற்கு அணித்தாகவுள்ள பிரதேசத்திலிருந்து சிந்து வெளியினுட் பிரவேசித்து, ஆங்கு ஏற்கனவே நாகரிகமாக வாழ்ந்த மக்களை, இடம் பெயரச் செய்து, அங்கும், அதனையடுத்துள்ள இந்து – கங்கைச் சமநிலப்பரப்புக்களிலும் குடியேறினர். இந்தியாவில் ஆரியர் குடியேறிய பின்னர் வேதங்கள் தொகுக்கப்பெற்றன; ஸ்மிருதிகள் எழுதப் பெற்றன. இந்து மதத்தின் மூல ஆதாரங்கள் ஆக வேதங்கள் ஆகின. சனாதன தர்மம், வேதங்களில் இடம் பெறுவதற்கு முன்னரே பாரத மக்களிடையே அது வழங்கி வந்தமை கருத்தில் கொள்ளற்பாலது.



# கோமாதா குலம் காப்போம்

கலாபூஷணம் சைவஸ்தாபகர் சு. செல்லத்துரை
இளவாலை

*"ஆக்களி னுறுப்பெலாம் அமரர் வைகுவார்*
*ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்*
*ஆக்களே இறைவனுக்கு ஐந்துநல்கு மற்(று)*
*ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்"*
(ஈழத்துச் சிதம்பரபுராணம்)

சைவமக்களாகிய நாம் காலையில் எழுந்து காலைக்கடன் முடித்து விட்டுச் சிவ சிவா என்று அணிவதற்குத் திருநீறு தருவது பசு. காலைத் தேனீருக்குப் பால் தருவது பசு. நண்பகல் உணவுக்குப் போஷாக்கு நிறைந்த தயிர், மோர், நெய் தருவது பசு.

தன் குழந்தைக்குப் பால் தருவார் மாதா; குழந்தை முதல் முதியோர் வரை எல்லார்க்கும் பால் தருவாள் கோமாதா. மாதாக்களுக்கெல்லாம் அரசி கோமாதா. சைவசமயத்தவரின் எல்லாச் சுபகருமங்களிலும் முன்வைத்து வணங்கப்படும் பெருமைக்குரியது கோமாதா.

நம் முன்னோர் கோமாதா எனப் போற்றி வணங்கிய பசுக்குலத்தின் பெருமை மறந்து, பசுக்குலத்தைப் பாதுகாக்காமல் விடுவது மட்டுமல்ல அதனைத் தமக்கு உணவாக வெட்டியுண்ணும் கொடிய பழக்கம் வேரூன்றி வரும் இவ்வேளையில் பசுக்குலத்தின் பெருமையைச் சிந்தித்துச் செயற்படவைக்கும் நோக்கத்துடனேயே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

எமது கருத்தன்றித் தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமானின் நோக்கிலும் வாக்கிலும் கோமாதாவின் பெருமையைக் காணலாம். எமது வேதம், ஆகமம் திருமுறைகள் முதலான அனைத்து நூல்களும் பசுவின் பெருமை பேசுகின்றன.

சைவக்கிரியைகள் அனைத்தினதும் தொடக்கத்தில் நடைபெறும் புண்ணியாசனத்திற்குரிய பாலைத் தருவது பசு. பாலின்றி பூசையில்லை.

கோயிலில் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யுமுன் கருவறையில் எழுந்தருளிச் சகல தெய்வங்களினதும் ஆசியை நல்குவது பசு. சிவாலய பூசையில் கோபூசை செய்து தரிசிக்கப்படுவது பசு. சிவபூசையின் நிறைவான கபில பூசைக்குரியது பசு.

புதுவீடு அமைக்கும்போது தான சுத்திக்காக அங்கு கட்டப்படுவது பசு; திருமணத்தின் போது மாங்கல்ய தாரணம் செய்த மணமக்களுக்குத் தரிசனமாவது பசு; அபரக்கிரியையில் அந்தியேட்டி முடித்து வருபவருக்கு வீட்டுவாயிலில் தரிசனமாவது பசு.

இவ்வண்ணம் நம்வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளுக்கும் உடனிருந்து எம்வாழ்வைப் புண்ணிய நெறிப்படுத்த வல்ல பெருமை பசுவுக்கு எப்படி அமைந்தது என்ற இரகசியத்தைத் தெய்வப்புலவர் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் மனுநீதிகண்ட சோழன் வரலாறு சண்டேசுர நாயனார் புராணம், திருமூலநாயனார் புராணம், ஆனாய நாயனார் புராணம் முதலாமிடங்களில் திட்ப நுட்பமாகச் சொல்லும் திறம் காணலாம்.

## எல்லாத்தேவர்க்கும் இடமாவது

எல்லாத் தேவர்களும், தெய்வங்களும், முனிவர்களும் புண்ணிய தீர்த்தங்களும் பசுவில் அமர்ந்திருக்கும் பான்மையைச் சண்டேசுர நாயனார் புராணத்தில் கூறுகின்றார்.

*தாங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத்*
*தகைமையன*
*பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும்*
*பொருந்துவன*
*துங்க அமரர் திரு. முனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத*
*அங்கம் அனைத்தும் தாமுடைய அல்லவோ நம்*
*ஆனினங்கள்.*

எனப் பாடுகின்றார்.

நம் ஆனினங்கள் அனைத்தும் பொங்கும் புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன – புனித தீர்த்தங்களாகிய யமுனை, கங்கை, கோதாவரி, சரஸ்வதி முதலானவை பசுவின் கொம்பின் நுனியிலும் கோசல கோமயத்திலும் என்றும் இருக்கின்றன.

துங்க அமரர் முனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத அங்கம் – இந்திரன் முதலான தேவர்களும் முனிகள் கணங்கள், மற்றும் உருத்திரர்கள் முதலாய தெய்வங்கள் எல்லாம் உறுப்புக்கள் தோறும் என்றும் பிரியாது நிலைபெற்றிருக்கின்றன.

ஆதலால் பசுவை வணங்கினால் அத்தனை தெய்வங்களின் ஆசியும் கிடைக்கும் என்பதாலேயே எங்கள் கருமங்கள் அனைத்திலும் கோமாதா முன் வைக்கப்படுகின்றாள் என்னும் உண்மையை அறிகிறோம்.

## வேதவாக்கு

இவ்வுண்மையைப் பதிவாக்காகிய வேதத்தின் முதற் பகுதியாயுள்ள பிரசித்தி பெற்ற ருக் வேதத்தில் காணமுடிகிறது. அதில் வரும் பசு பற்றிய ஒரு மந்திரம் மாதா ருத்ராணாம் – பசு உருத்திரர்களது அன்னை ஸ்வஸா ஆதித்தியானாம் – பசு ஆதித்தியர்களின் சகோதரி
துஹிதா வசூனாம் – அவள் வசுக்களின் மகள் அம்ருத ஸ்யநாபிம் – அமிர்தத்தின் ஊற்றுமையம்
மகாம் அநாகாம்
அதிதிம் வதிஷ்ட அநாகாம் – ஒரு பாவமுமறியாத அப்பிராணியும் எமது வீட்டு விருந்தாளியுமாகிய
காம் – பசுவை
மாவதிஷ்ட – கொல்லற்க

இனிச் சாம வேதத்தில் பசுவைப் பற்றிய ஒரு சுலோகத்தையும் பார்க்கலாம். சாம வேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன.

*"நீவிர் புண்ணிய மானவர்கள்*
*நீங்கள் நன்றாக வாழுங்கள்*
*நன்றாகப் பாலைப் பொழியுங்கள்*
*காலையும் மாலையும் பால்தரும் நீவிர் கன்றுகளுடனும்*
*காளைகளுடனும் இன்னும் பொலிவீராக.*
*இங்கேயுள்ள நீர் நிலைகள் உமக்கு*
*வற்றாத ஊற்றாக*
*இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக*
*வளம் பெருக்குவீராக"*

மனித குலம் வாழ்வதற்காகப் பசுக் குலத்தை வாழ்த்துவதை "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" எனும் ஞானசம்பந்தர் வாழ்த்திலும் காண்கின்றோம்.

## பஞ்சகௌவியம்

சுவாமிக்கு அபிஷேகத்துக்குரிய பஞ்சகௌவியங் களைத் தரும் மேன்மையை இன்னொரு பாடலில் சொல்கிறார்.

*"மேயவேணித் திருமுடிமேல் விரும்பி ஆடி அருளுதற்காம் தூய திருமஞ்சனமைந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள் தாம்."*

சிவபெருமான் தனது திருமுடிமேல் விரும்பி ஆடி அருளுதற்குரிய தூய திருமஞ்சனமாகிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய பஞ்ச கௌவியத்தை உரிமையுடன் சுரந்து தருவதால் பசுக்களைச் சுரபிகள் என்று அழைக்கின்றார். வேறெந்த உயிரினத்துக்கும் இந்தப் புண்ணியப் பேறில்லை என்பதைச் சேக்கிழார் "உரிமைச் சுரபிகள்" எனச் சுட்டும் பாங்கு உவக்கத்தக்கது.

இவ்வுண்மையை நாயன்மார்களது கோதனத்திரு முறைகளில் பரக்கக் காணலாம். திருஞான சம்பந்தப் பெருமான் தனது தேவாரங்களில்

"ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலம்

"ஆனிடை ஐந்தும் உகந்து ஆடினான்...
"பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவார்.....
"நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மென்னீரே"
என்றும்

அப்பர் சுவாமிகள்

"பாலொடு நெய்தயிர் தேன் ஆடிகண்டாய்....."
"ஆனிடை ஐந்தும் வைத்தார்....."
"ஆனெய் ஆறென ஆடுகின்றான்முடி"
"ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்"
என்றும்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

"நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல் பூசை செய்யலுற்றார்..."
எனவும் பாடிப் பரவுவதைப் பார்க்கலாம்.

## நீறுதரும் மூலம்

சைவசமய சின்னங்களில் தலையாயது திருநீறு. நீறுதரும் மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் கோமாதா என்பதை சேக்கிழார் சுவாமிகள் அழகாகச் சொல்லுவார்.

"சீலமுடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத்
தேவருடன்
காலமுழுதும் உலகினத்தும் காக்கும் முதற்காரணமாகும்
நீலகண்டர் செய்யசடை நிருத்தர் சாத்தும் நீறுதரும்
மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் என்றால்
முடிவென்னோ."

தெய்வீகச் செழுமை மிக்க கோக்குலங்களுக்குச் சிறப்பைத் தரும் தகைமை என்னவென்றால் தேவருலகம் முதலான அண்டசராசாரங்களையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் ஐந்தொழிற்கும் முதற் காரணமாயுள்ள நீலகண்டராகிய சிவபெருமான் அணிகின்ற திருநீற்றின் மூலப்பொருளான கோமயம் அவதாரம் செய்யும் தெய்வீக மூர்த்தமாகப் பசு இருப்பதே ஆகும்.

## திருநீறு சிவப்பேறு

சுத்தமான பசுவின் சாணியை அக்கினியினாலே சுட்டு வருவது திருநீறு. அது பசுவாகிய ஆன்மாவின் ஆணவம் கன்மம் மாயை முதலான மலங்களைச் சிவமாகிய அக்கினியினாலே சுட்டுவருவது சிவப்பேறு. திருநீறு சமன் சிவப்பேறு. தன்னை அணிபவர்க்குச் சிவப்பேற்றைத் தரவல்ல திருநீற்றின் மூலப் பொருளாய் சாணியைத் தரும் பசுவினை ஒரு மூர்த்தியாகவே சேக்கிழார் காட்டுகிறார்.

பசுவின் இத்தனை பெருமைக்கும் காரணம் சிவபெருமான் முதல் அனைத்துத் தெய்வங்களும் தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் பசுவின் இருத்தலேயாகும் என்பதை முன்னமே சொல்லியுள்ளார்.

உலகியலில் கூடப் பசுப்பால் போலப் பூரண சத்துணவு வேறொன்றுமில்லை. பால் பூரண சத்துணவாயிருப்பதற்குக் காரணமும் இதுவேயாகும் என்பதை உய்த்துணரலாம்.

## விடைத்தேவர் குலம்

சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளும் விடைத் தேவர் குலமன்றோ இச்சுரபி குலம் என வியப்பதைப் பார்க்கலாம்.

*உள்ளுந்தகைமை இனிப்பிறவேறுளதோ*
*உமைமான்மறிக்கன்று*
*துள்ளுங்கரத்தார் அணிபணியின் சுடர் சூழ்மணிகள்*
*சுரநதிநீர்*
*தெள்ளும் சடையார் தேவர்கள் தம் பிராட்டியுடனே*
*சேரமிகைக்*
*கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன்றோ*
*இச்சுரபிகுலம்*

எனப் பாடுவார்.

தருமதேவதையே சிவனுக்கு இடபவாகனமானது. இடபமான விடைத் தேவரைத் தந்த பெருமை கோமாதாவுக்குள்ளது. கோக்குலம் தரும சொரூபம் என்பதை வேதாகம சாஸ்திரங்களில் மட்டுமல்லாமல் உலகியலிலும் காணலாம்.

நாம் எமது உணவுக்காகாதெனக் கழித்துவிடும் தவிடு, வைக்கோல், கஞ்சி, கழுநீர், புண்ணாக்கு, புல், இலை, குழை என்பவற்றையுண்டு அதிசயிக்கத்தக்க

வகையில் பூரண சத்துணவாகிய பாலையும் பாற் பொருட்களையும் உணவாகவும் மருந்தாகவும் தருகிறது. அதுமட்டுமல்ல அதன் கழிவாகிய சாணியையும் சலத்தையும் கூட இயற்கை உரமாகவும், கிருமி நாசினியாகவும் தருகிறது. எருதுகள் வண்டியிழுத்தும் வயல் உழுதும், செக்கிழுத்தும் சூத்திரம் இறைத்தும் தம் உடல் உழைப்பு முழுவதையும் தருகின்றன. எனவே விடைத் தேவர்குலம் தரும தேவதையின் அவதாரம் என்பதை உணரவைக்கும் தெய்வப்புலவரைப் போற்றி வணங்காதிருக்க முடியுமா?

பெரியபுராணத்தில் திருவாரூர்த் திருநகரச் சிறப்புக் கூறுகையில் தன் மகனின் தேர்ச்சில்லுட் புகுந்து இறந்த பசுவின் கன்றுக்காகத் தன்மகனையே தேர்ச்சில்லில் இட்டு நெரித்த செய்தியைக் கூறும் போது

*ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதும்*
*உணரான்*
*தருமந்தன் வழிச் செய்கை கடனென்று தன்மைந்தன்*
*மருமந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்*
*அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோதான்"*
எனப் பாடுவார்.

## கோகுலசாலை ஆனாயர் புராணம்

பசுக்குலம் மேய்க்கும் போது புல்லாங்குழலில் பஞ்சாட்சரம் இசைத்துச் சிவப்பேறு பெற்ற ஆனாயநாயனார் புராணத்தில் கோகுலசாலைகளின் அமைப்பைக் கூறுகையில்.

*கன்றொடு பால்மறை நாகு கறப்பனபாலாவும்*
*புன்றலை மென்சினை ஆனோடு நீடுபுனிற்றாவும்*
*வென்றி விடைக்குல மோடும் இனந்தோறும் வெவ்வேறே*
*துன்றி நிறைந்துள சூழலுடன் பல தோழங்கள்*
எனப் பாடுகிறார்.

கன்றுகள் வேறாகவும் நாகுகள் வேறாகவும், பாற்பசுக்கள் வேறாகவும், இளங்கன்றுகளுடன் கூடிய பசுக்கள் வேறாகவும், சினைப்பட்ட பசுக்கள் வேறாகவும், காளைகள் எருதுகள் வெவ்வேறாகவும் தொழுவங்களில் காட்சி தருவதைக் காட்டி நேர்த்தியாகப் பசுக்குலத்தை ஓம்பவேண்டிய பண்பையும் காட்டும் அருமைப்பாடு போற்றுதற்குரியது.

## கோபுரம்

கோசாலையும் கோபுரம் எனப்படும் என்பதைச் சிவதரு மோத்திரத்திலிருந்து நாவலர் பெருமான் எடுத்துக் காட்டுகின்றார். கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பது யாவருமறிந்த உண்மை. இதில் கோயிலின் முகப்பிலுள்ள தூலலிங்கமாகிய கோபுரம் மட்டுமன்றிக் கோசாலையும் கோபுரம் எனப்படும் என்பதை அறிய வைக்கின்றார். கோ – பசு, புரம் – இடம், ஆகவே கோபுரம் என்பது பசுக்கள் தங்குமிடம் எனப்பொருள் தரும். பெண்கள் இருக்குமிடம் அந்தப்புரம் என்பதுபோல கோகுலம் தங்குமிடம் கோபுரம் ஆகும்.

சிவதரு மோத்திரம் பன்னிரண்டியல்களில் ஒன்றாகிய கோபுர இயலில் கோசாலை அமைக்கும் முறைபற்றி 228 பாடல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில்,

*சாலை யானினந் தங்கச் சமைத்தவர்*
*காலகாலன் புரத்தைக் கலப்பர்தா*
*மேலவேண்டிய யாவையுமின்புறும்*
*வேலை வெங்கதி ரோற்கும் விதித்ததே.*
எனக் கோசாலை அமைத்துக் கோகுலத்தை ஓம்புவோர் கால காலனாகிய சிவபெருமானின் திருவடிப்பேறாகிய பேரின்பத்தை பெறுவர் எனும் உண்மை பேசப்படுகிறது.

இவ்வுண்மையைச் சேக்கிழார் திருமூலநாயனார் புராணத்தில் வைத்து உணர்த்துகின்றார். பசுக்களை மேய்ப்பவனாகிய இடையன் இறந்ததால் பசுக் கூட்டங்கள் அவனைச் சூழ்ந்து நின்று கதறி அழுகின்றன.

*"மற்றவன் தன் உடம்பினைஅக் கோக்குலங்கள்*
*வந்தணைந்து*
*சுற்றிமிகக் கதறுவன சுழல்வன மோப்பனவாக*
*நற்றவ யோகிகள் காணா நம்பர் அருளாலேஆ*
*உற்றதுயர் இவைநீக்கி ஒழிப்பன் என உணர்கின்றார்"*

பசுக்குலங்கள் பட்டதுயர் ஒழிப்பதற்காக சுந்தரமுனிவர் மூலன் எனும் இறந்த இடையன் உடலிற்புகுந்து திருமூலராகி மூவாயிரந்தமிழ் எனும் திருமந்திரம் கிடைப்பதற்கு ஏதுவாகிய பசுவின் பெருமை கூறும் திருமூலர் புராணம் பாடுவார்.

திருமூலர் சுவாமிகள் "யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை" எனப்பாடி பசுவுக்கு உணவளித்தல் ஒவ்வொருவர்க்கும் கடன் எனும் அருமைப்பாட்டை உணர்த்தினார்.

இவ்வாறாகச் சேக்கிழார் சுவாமிகள் தனது தெய்வப்புலமையால் கோக்குலத்தின் பெருமையை
அங்கம் அனைத்தும் தெய்வங்கள் தாமுடைய ஆனினங்கள் – என்றும்
தூயதிருமஞ்சனமைந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள் – என்றும்
நீறுதரும் மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் – என்றும்
விடைத்தேவர் குலமன்றோ இச்சுரபி குலம் – என்றும்
கோக்குலத்தின் தெய்வீகத் திருமிளிரும் அருமை பெருமைகளைக் கூறிக் கோக்குலத்தைக் காக்கும் முறையை
ஆ இனந் தோறும் வெவ்வேறே அமைந்துள்ள தொழுவங்கள் எனக்கூறிப், பசுக்காத்தலின் இன்றியமையாமையை
*"ஆ உற்றதுயர் நம்பர் அருளாலே நீக்குவேன்"* என்றும்
*"தருமந்தன் வழிச் செல்கை கடனென்றும்."*

தனது நோக்கில் கோமாதா குலத்தைப் போற்றுவதைப் பார்த்தோம். இத்தகு தெய்வீகத் திருவுருவங்களாய் கோக்குலத்தின் இன்றைய நிலையை – எங்கள் மனிதகுலத்தின் இழிநிலையை நினைக்க நெஞ்சு பதறுகிறதே.

சிவபூமியாகிய ஈழத்திலே பசுக்கொலைக்கஞ்சிப் பரதேசம் போன ஞானப்பிரகாச முனிவர் அவதரித்த இந்த மண்ணிலே இன்று என்ன நடக்கிறது. சிவகதிதரவல்ல தெய்வப்பசுவையும், விடைத்தேவர் குலத்தையும் கொன்று தின்கிறார்களே. உடல்வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப் பாவத்தைத் தேடுகிறார்களே திருநீறுபூசும் சைவ சமயத்தவர்களும் உணர்கிறார்களே.

*கோபூசை செய்தென்றும் கோயில்தோறும்*
*கும்பிட்டு வாழ்ந்த மக்கள் கோலம் மாறி*
*கோகுலத்தைக் கொல்களத்தில் வெட்டிவீழ்த்திக்*
*கொன்றுதின்னும் கொடுமையினைச் சகிக்கலாமோ.*

*தாமாகத் தாவரநல் லுணவை யுண்டு*
*தமதுழைப்பும் தகுபயனும் தந்துவாழும்*
*கோமாதா குலத்தினையே கொன்று தின்னும்*
*கொடுமையினைப் போக்கிடவே திரண்டுவாரீர்.*

பூசைக்குப் பாலும் சிவசிவா என்று அணியத் திருநீறும் தீபத்துக்கு நெய்யும் தந்து முத்திக்கு வழிப்படுத்தும் கோமாதாக்களையும் இடபமாய விடைத்தேவர்களையும் கொன்று தின்னாமற் காப்பதை ஒவ்வொருவரும் எமது சைவப் பணியாகக் கொள்வோம்.

*வாழிய ஆனினம் வழுத்திகு தெய்வமாய்*
*வாழிய ஆனினம் வளம்நிறை நிதியமாய்*
*வாழிய ஆனினம் வாழ்வுநேர் அமுதமாய்*
*வாழிய ஆனினம் வையகம் வாழவே.*

வணக்கம்

# மார்கழி மாதத் திருவெம்பாவை

கே.கே.சுப்பிரமணியம்

சிவபெருமானுக்குரிய விழாக்களுள் திருவாதிரை விழாவே தலையாயது. இருபத்தேழு நட்சத்திரங்களுள் திருவாதிரையே சிவபெருமானுக்கு உரியது. இது பௌர்ணமியோடு சேர்ந்து வருவது மார்கழித் திங்களிலேதான். அதனால் திருவாதிரைத் திருவிழா மார்கழி மாதத்தில் கொண்டாடப் பெறுகின்றது. ஆகவே, திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்கள் சைவர்களுக்கு மிகச் சிறந்த நோன்பு நாட்களாகும். இந்தப் பத்து நாட்களிலும் திருமுறை களைக் காப்பிட்டு வைத்துத் திருவெம்பாவை ஒன்றை மட்டுமே ஓதுதல் சைவ மரபாய் உள்ளது.

மார்கழித் திங்கள் மற்றைய திங்கள்களை விட மிக மேலானது. அதற்குக் காரணம், அது தேவர்கட்கு வைகறைப் பொழுதாக இருப்பதேயாகும். அதனால் இத்திங்கள் முழுவதும் விடியலில் எழுந்து நீராடி, சூரியோதயத்திற்கு முன்பே வழிபாடுகளை முடிக்க வேண்டியது இன்றியமையாததாகும். மார்கழித் திங்கள் முழுவதிலும் இந்நியமங்களை இவ்வாறு தவறாமற் செய்தால் ஆண்டு முழுவதும் செய்தபயன் உண்டாகும். மார்கழி வழிபாடு விடியல் வழிபாடாதல் பற்றி, தொலைவில் உள்ள தலங்கட்கு யாத்திரை செய்வதாயின் மற்றைய காலங்களில் செய்வதல்லது மார்கழி மாதத்தில் செய்யாது ஆன்மார்த்த மூர்த்தியின் வழிபாட்டிலே ஈடுபட வேண்டும். மார்கழி மாதம், வழிபாட்டிற்கே உரிய மாதம் என்பது பற்றியே மற்றைய உலகியல் நிகழ்ச்சிகளில் ஒன்றையும் இதில் இயற்றுதல் கூடாது என்று பெரியோர்கள் விலக்கியுள்ளார்கள். இம்மாதம் பீடுடைய (பெருமையுடைய) மாதமே தவிர பீடை மாதமல்ல. மாயூரம் (அம்மை, மயில் வடிவமெடுத்து இறைவனைப் பூசித்ததால் மாயூரம் எனப்பெற்றது) என்பது வழக்கத்தில் மாயவரம் என வழங்கப்படுகிறது. யாரும், மாய வரம் கேட்க மாட்டார்கள். இது போன்றே பீடுடைய மாதத்தைப் பீடை மாதம் என அறியாமல் வழங்குகின்றனர்.

மார்கழி மாதம் முழுவதுமே சிறந்தது என்றாலும் திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்களும் மிகவும் சிறந்தனவாகும். இப்பத்து நாட்களிலும் 'திருவெம்பாவை ஒன்றையே ஓதுதல் வேண்டும்' என்று முன்னோர் விதித்திருப்பதற்குத் தக்க காரணம் இருத்தல் வேண்டும். திருவாசகத்தில் திருவெம்பாவை ஒரு தனிச் சிறப்புடையது என்பது, சிவபெருமான் மாணிக்கவாசகரைத் திருக்கோவையார் பாடும்படி கேட்டபொழுது, 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று கேட்டதாகச் சொல்லப்பட்டு வரும் செவிவழிச் செய்தியால் அறியலாகும்.

திருவெம்பாவையின் தத்துவப் பொருள் மனோன்மணி முதலிய சக்திகள் ஒன்பதின்மருள் ஒருத்தி மற்றொருத்தியை எழுப்ப பின்பு இருவரும் சேர்ந்து மூன்றாமவளை எழுப்ப, இவ்வாறே எல்லாச் சக்திகளும் எழுந்து பிரபஞ்ச சிருட்டியாகிய உலகத் தோற்றத்தை நிகழ்த்துவது என்பர். அதற்கேற்ப இதன் இறுதிப்பாடலில் சைவத்தில் சிறப்பாகச் சொல்லப்படும் இறைவன் தொழில் ஐந்தும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஐந்தொழில்கள் திருமுறைகளில் வேறு எந்த இடத்திலும் இவ்வளவு தெளிவாகக் காணப்படவில்லை. மக்களாயினும், தேவராயினும் அவரவர்கட்கு அமைந்த விடியற்காலமே அன்றாடச் சிருட்டிபோல அமைவது. அது கருதித்தான் போலும் பிரபஞ்ச சிருட்டி, மற்றும் திதி முதலியவற்றைக் கூறும் திருவெம்பாவையையே இந்தப் பத்து நாட்களிலும் ஓதல் வேண்டும் என்று முன்னோர்கள் விதித்துள்ளார்கள்! இன்னும் இத்திருவெம்பாவையில் உலக வாழ்க்கைக்கு வேர்போல உள்ள பெண்களின் நலத்திற்கும், மற்றும் உலக பொது நலத்திற்கும் ஆவன பல அமைந்துள்ளமை காணலாம்.

திருவெம்பாவையை மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் அருளிச் செய்தார் என்பது வரலாறு. அதற்கேற்ப இதில் திருவண்ணாமலையைப் பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. முதற் பாடலே, "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை" என்று தொடங்குகின்றது. சிவபெருமான், திருமாலும் பிரமனும் ஆகிய இருவராலும் அடிமுடி அறியப்படாத சோதியுருவாய்த் தோன்றியது திருவண்ணாமலையிலே என்பது உலகம் அறிந்தது.

*"பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்;*
*போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே"*

என்பதிலும் இக்குறிப்பு அமைந்துள்ளது. "மால் அறியா, நான் முகனும் காணா மலை" என்பது முன் சொன்னவற்றிலும் சற்று வெளிப்படையாக உள்ளது. "அண்ணாமலையான் அடிக் கமலம் சென்றிறைஞ்சும்" என்ற தொடர் திருவண்ணா மலையில் இது பாடப்பெற்றது என்பதை வெளிப்படை யாகவே குறிக்கின்றது எனலாம்.

"முதற் பாடலிலே சோதியை யாம்பாட" என்பதில் 'யாம்' என்றது ஒருத்தியே தன்னை உயர்வு பற்றிப் பன்மையாகக் கூறினாள் எனக் கொள்ளுதல் தத்துவக் கருத்துக்கும் பொருந்துவதாய் இருக்கும். எவ்வாறெனில், 'மனோன்மணி' என்னும் சக்தி ஒருத்தியே முதலில் தானே எழுந்து, பின் 'சர்வபூத தமனி' என்னும் சக்தியை எழுப்புவதாகச் சொல்லப்படுகின்றது. இதில், 'யாம் பாடக் கேட்டேயும் வளருதியோ" என்று சொல்லிப் பின்பே, "வன்செவியோ நின் செவிதான்" என்றமையால் முதலில் கேட்டுக்கொண்டே உறங்கினாள் என்று நினைத்துப் பின்புதான் நமது பாட்டு அவளது காதில் விழவில்லை; அப்படி உறங்குகிறாள் என்று, எழுப்ப வந்தவள் அறிந்தாள் என்பது தெரிகின்றது. இன்னும், 'உன் காது செவிடோ' என்று சொல்லாமல் 'வன் செவியோ' என்று இனிமையாகக் கூறிய நயம் அறிந்து இன்புறத்தக்கது.

"முத்தன்ன வெண்ணகையாய்" என்ற பாடலில் "பத்துடையீர்" என்பதற்கு, 'பற்று பத்து என வந்தது' என்றும் சொல்வதுண்டு. என்றாலும், 'அடியார் இலக்கணம் பத்தும் உடையீர்' என்பதுதான் சிறப்பாக இருக்கும். இறைவனிடத்து மெய்யன்புடைய அடியவர்க்கு உள்ள புறத்திலக்கணம் பத்து, அகத்திலக்கணம் பத்து என்று சொல்லப்படுகின்றது. புறத்திலக்கணம் செய்கையாக நிகழும். அவை;

விபூதி உருத்திராக்கம் அணிதல், குருவை வணங்கல், சிவனைத் துதித்தல், சிவநாமத்தை எப்பொழுதும் சொல்லுதல், சிவ பூசை செய்தல், சிவ தருமம் (சரியைத் தொண்டு, ஆலயத் திருப்பணி முதலியவை) செய்தல், சிவபுராணம் படித்தல் கேட்டல், ஆலய வழிபாடு செய்தல், சிவனடியாரிடத்தில் அல்லாது பிறரிடத்தில் உணவுகொள்ளாமை, அடியார்க்கு வேண்டுவன கொடுத்தல் என்பன.

அகத்திலக்கணம் பத்தாவன:

சிவபெருமானைத் துதிக்குமிடத்துக் கண்டம் விம்முதல், சொல் தடுமாறல், இதழ் துடித்தல், உடல் நடுங்கல், மயிர்க்கூச்செறிதல், உடல் வியர்த்தல், நாவெழாமை, கண்ணீர் அரும்பல், வாய்விட்டு அரற்றல், தன்வசம் இழத்தல் என்பன,

இவ்வாறு உபதேசகாண்டத்தில் சொல்லப் பட்டுள்ளது. இவற்றை உடைய அடியவர் வழிவழி அடியவரான பழவடியாராய் இருத்தல் இன்னும் சிறப்பு என்பதை, "பழவடியீர் பாங்குடையீர்" என்னும் தொடர்கள் உணர்த்துகின்றன.

எழுப்பப்படுகின்ற பெண்ணொருத்தி "வண்ணக் கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ" என்று கேட்பதும், "நாளை வந்து உங்களை நானே எழுப்புவன்" என்று முதல் நாட் சொல்லியவள் மறுநாளும் உறக்கத்தினின்று எழாமையும், தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பவளாகிய மிக்க அன்புடைய ஒருத்தியும் ஒருநாள் வன்னெஞ்சப் பேதையர் போல், எழுப்ப எழுப்ப வாளாகிடத்தலும் போல்வன உறக்கத்தின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றன.

நீர் நிரம்பிய மடு, பெருமானும் பெருமாட்டியும் போலக் காணப்படுதலைக் கூறுகின்ற "பைங்குவளைக் கார்மலரால்" என்ற பாடலில் இறைவன் குருவாகி வந்து நயன தீட்சை முதலிய தீட்சைகளால் ஆன்மாக்களின் மலங்களைப் போக்கும். குறிப்பு அமைந்துள்ளது."காதார் குழையாடப் பைம்பூண் கலன் ஆட" என்னும் தொடர்கள் பெண்கள் அணிகலன்களோடே நீராடல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. "சீதப்புனலாடி" என்பதனால், விடியற் காலையில் தண்ணீரிலேதான் முழுக வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. விடியற் காலையில் குளிர்ந்த நீரில் முழுகுவதால் நலன்கள் பல உள்ளன. தண்ணீரில் குளிக்கும்போது குளிர் இருக்கும். குளித்த பின்னர் குளிர் இராது. ஆனால் வெந்நீரில் குளிக்கும் பொழுது குளிர் இராது. பின்பு குளிர் உண்டாகும். தண்ணீரில் குளிப்பதால் காமம் முதலிய குற்றங்கள் உண்டாகமாட்டா. இப்படிப் பல நன்மைகள் உண்டு. இப்பாடலில் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்பது இறைவன் எல்லாருக்கும் ஒரேவகையாக அருள் செய்யாமல் அவரவர்கள் தரத்திற்கு ஏற்பப் பலவகையாக அருள்செய்து ஆட்கொள்ளுதலை விளக்குகின்றது. இந்தப் பேதம் (வேறுபாடு) ஆன்மாக்களின் இயல்பு பற்றி

உண்டாகின்றதேயன்றி இறைவன் இயல்பு பற்றி உண்டாகவில்லை.

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என்ற பாடல் இறைவன் கால எல்லையைக் கடந்தும், "பாதளம் ஏழினுங் கீழ்" என்னும் பாடல் இட எல்லையைக் கடந்தும் நிற்றலை உணர்த்துகின்றன. பெண்கள் சிவபக்தி உள்ளவர்களே தங்களுக்குக் கணவராக வருதல் வேண்டும் என்றும் கேட்கும் பாடல்கள் சைவ மாந்தரும் மகளிரும் இவ்வாறு இருத்தல் வேண்டுமென்று மாணிக்கவாசகர் விரும்புகின்றார் என்பதைக் காட்டும். அவர்கள் தங்களுக்காகவும் வேண்டுதல் செய்வதை, இறைவன் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அருள் வள்ளலாய் இருத்தலை விளக்கும் இறுதிப்பாடல் அவனது ஐந்தொழில்களையும் நன்கு எடுத்து ஓதி 'அவை அனைத்தையும் செய்வன அவனது திருவடிகளே' என அத்திருவடிகளின் சிறப்பை வியந்து போற்றி செய்தலும், "போற்றி யாம் மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்" என்று மார்கழி நீராட்டை எடுத்துக் கூறி முடிப்பதும் மார்கழி நோன்பிற்கு மிகமிகப் பொருத்தமாய் அமைவனவாகும்.'

திருவாசகத்தின் பெருமையை சிந்திக்க முற்படும் பக்தர்களுக்கு ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியும் சிற்றம்பலத்து ஆடும் கூத்தனும் ஆகிய இறைவன் எல்லா நலன்களையும் அருள்வானாக.

## சிற்பத்தேர் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெற

# வாழ்த்தியவர்கள்

1. ரொறன்ரோ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு டாக்டர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜய குமார குருக்கள் [ஐயாமணி]
2. கனடா ஸ்ரீ துர்க்கா தேவி அம்பாள் தேவஸ்தானம்.
3. அவுஸ்திரேலியா Dr. சோமஸ்கந்த சிவாச்சார்யார் [சுன்னாகம்]
4. கனடா மேடுபுரம் ஸ்ரீ மகா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்.
5. முருகதாஸ் ஆறுமுகம்பிள்ளை நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பாளர் – கனடா
6. ஆதி அருள் நெறி மன்றம் டாக்டர் ஆதி கணபதி சோமசுந்தரம் – கனடா.
7. காரை யூலியன் மலாயா கோலாலம்பூர் மலேசியா.

பாரத நாட்டின் தில்லைச் சிதம்பரத்தில் பேர் போன்ற எம் புகழ் மிக்க ஈழத்து சிதம்பரத்தில் சைவ சமயத்தை பேணி காப்பதற்கு காலஞ்சென்ற நீதியரசர் திரு. க. நடராசா கே. சி அவர்களின் பாரியார் பண்டிதை திரு. தங்கம்மா நடராசா அவர்கள் தாய் குலத்துக்கு என பல லட்சம் ரூபா செலவில் "சிவ ஆச்சிரமம்" ஒன்றை வடக்கு வீதியில் அமைத்துள்ளார். இது போன்ற ஆச்சிரமம் இலங்கையில் வேறு எங்கும் காணமுடியாது.

மெய் வருத்தம் பாராது பசி நோக்காது, கண் துஞ்சாது சித்திரத் தேர் வேலைகளை தினம் கவனித்து வருகின்ற திரு. T. மகேஸ்வரன் M.P அவர்களும் சைவப் பெரியார் கே. கே சுப்பிரமணியம் அவர்களையும் சைவ உலகத்தவர் என்றும் பாராட்ட வேண்டியவர்கள். எம் ஆசிகள் வாழ்த்துக்கள்.

புலவர்மணி கலாநிதி
*சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரகுருக்கள்*

# தேர்த்திருப்பணிக்கு நிதி உதவி அளித்த அடியார்கள்

| அடியார் விபரம் | ரூபா |
|---|---|
| 1. திரு. தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் பா. உ [கொழும்பு மாவட்டம்] | 18,50,000 |
| 2. திரு. தியாகராசா ஞானேஸ்வரன் [லண்டன்] | 150,000 |
| 3. திரு. தியாகராசா துவாரகேஸ்வரன் (Eswaran Traders, Jaffna) | 300,000 |
| 4. திரு. திருமதி சிவஞானம் குடும்பத்தினர் – காரைநகர் [அநுராதபுரம்] | 10,00,000 |
| 5. திரு. திருமதி நல்லதம்பி யோகநாதன் குடும்பம் [காரைநகர்] | 500,000 |
| 6. திரு. கந்தசாமி பாலகிருஷ்ணன் குடும்பம் [பாலையா] (U.K) | 700,000 |

தேர் திருவிழா உபயகாரர்
அமரர் கந்தையா சுப்பிரமணியம் குடும்பம் [விதானையார்]

| | |
|---|---|
| 7. சுப்பிரமணியம் அப்புலிங்கம் | 136, 000 |
| 8. சுப்பிரமணியம் சண்முகலிங்கம் | 300,000 |
| 9. சுப்பிரமணியம் சிவலோகன் | 20,000 |
| 10 திருமதி சிவசோதி புஸ்பலீலா | 10,000 |
| 11 திருமதி புஸ்பராணி கணபதிப்பிள்ளை | 10,000 |
| 12.ஜெகதீசன் சுதர்சன் | 100,000 |
| 13.கிருபானந்தன் திலகவதி | 100,000 |
| 14.சுப்பிரமணியம் ராசலிங்கம் | 5,000 |
| 15. சிவலோகன் மயூரன் | 5,000 |
| 16. Dr. பரமசாமி (Australia) | 14,000 |
| 17. சண்முகசுந்தரம் [செல்லமுத்து Tex] நெல்லியடி | 100,000 |
| 18. கந்தசாமி நந்தகுமார் [கலைமகள் களஞ்சியம் யாழ்ப்பாணம்] | 100,000 |
| 19. தில்லையம்பலம் மகாதேவன் | 100,000 |
| 20. மகாதேவன் விக்னேஸ்வரன் | 100,000 |
| 21. பரஞ்சோதி குடும்பம் [செம்பாடு] | 50,000 |
| 22. சோமசுந்தரம் குடும்பம் [கமலநாதன் U.K] | 50, 000 |
| 23. நாகேந்திரம் (U.K) | 200,000 |
| 24. Bombay மணியம் | 50,000 |
| 25. விக்னேஸ்வரா [ரூபா களஞ்சியம்] | 100,000 |
| 26. உலகநாதன் [பசறை] | 5,000 |
| 27. வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் [யாழ்] | 200,000 |
| 28. குமாரசாமி சுந்தரமூர்த்தி [கம்பளை] | 100,000 |
| 29. சுந்தரமூர்த்தி அருணகிரிநாதன் [கம்பளை] | 100,000 |

| | |
|---|---|
| 30. தேவராஜா [மலர் Tex ] | 25,000 |
| 31. யோகநாதன் தனலட்சுமி | 25,000 |
| 32. பொன்னுடையார் நாகலிங்கம் | 25,000 |
| 33. சீமாட்டி ஜவுளி சமுத்திரம் [திரு. திருமதி சற்குணராசா குடும்பம்] | 25,000 |
| 34. ச. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் யாழ்ப்பாணம் | 100,000 |
| 35. கனகசபை அருள் நேசர் குடும்பம் [சிவநேசன் Tax] | 25,000 |
| 36. அ.க. செல்வரத்தினம் | 10,000 |
| 37. க. சிவபாலன் | 10,000 |
| 38. க. கற்பகநாதன் | 10,000 |
| 39. வைத்திலிங்கம் பரமநாதன் குடும்பம் | 25,000 |
| 40. K. K. சுப்பிரமணியம் குடும்பம் | 50,000 |

தேர்வடம் அன்பளிப்பு

| | |
|---|---|
| 41. தில்லைநாதன்சுதன் [தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை] | 25,000 |
| 42. மார்க்கண்டு சரஸ்வதி [தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்] | 23,250 |
| 43. மார்க்கண்டு சரஸ்வதி | 1,750 |
| 44. குமாரசாமி சிவகுமார் [S.S. Enterprises - Kaizer Street Col-11] | 50,000 |
| 45. பொன்னம்பலம் கந்தசாமி [பிள்ளையார் வர்ணச் சோலை – கிளிநொச்சி] | 10,000 |
| 46. ஜெயகிருஸ்ணா சுண்ணாகம் | 50,000 |
| 47. கனகசபை தர்மகுலசிங்கம் | 10,000 |
| 48. சுரேந்திரன் நகைக்கடை | 10,000 |
| 49. பேரம்பலம் கமலாதேவி [தேசிய சேமிப்பு வங்கி– பருத்தித்துறை] | 25,000 |
| 50. பரமசாமி அமிர்தலிங்கம் | 25,000 |
| 51. தனம் ரெக்ஸ்ரைல்ஸ் [யாழ்ப்பாணம்] | 10,000 |
| 52. நல்லையா சுஜீதரன் [தேசிய சேமிப்பு வங்கி – பருத்தித்துறை] | 25,000 |
| 53. கப்புத்தளை சுந்தரம் [காரைநகர்] | 10,000 |



# நன்றிகள்

**கா**ரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்துக்கு புதியதாய் ஒரு சிற்பத்தேர் அமைக்கத் திருவருள் பாலித்தது. திருவருட் செயலால் அத்திருப்பணியில் ஈடுபட்ட பெருமக்கள் அநேகர். அப்பெருமக்களை தன் அன்பால் அரவணைத்து ஒன்று கூட்டி அப்பணிக்கு ஆளாக்கியதோடமையாது தன் பொருளையும், காலத்தையும், செல்வாக்கையும் தாராளமாய்ச் செலவழித்தவர் கௌரவ தி. மகேஸ்வரன் பா.உ. அவர்கள். அவருக்குப் பக்கத்துணையாக விளங்கிய அன்பர் பலர். அவற்றுள் நல்லையா சிவப்பரன் [கண்ணன்]. திரு. ந. யோகநாதன் அவர்கள், திரு. வே.தர்மகுலசிங்கம் [K.V.C. Textile - 3ம் குறுக்குத்தெரு, கொழும்பு –11] அவர்கள் , திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

பணமாகவும், பொருளாகவும் காரைநகர் மண்ணில் பிறந்த பேரன்பும் பெரும் மதிப்புக்குரிய சிவபக்தர்கள் வழங்கிய பணம், பொருள் உதவி புரிந்த பெருமக்கள் அநேகர். தேர்த் திருப்பணிக்காக அர்ப்பணித்தனர். காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினர் கொழும்பில் இருந்து எம் திருத்தலத்துக்கு தேர்ப்பாகங்களை கொண்டு செல்ல வழங்கிய ஒத்தாசை என்றும் மறக்க முடியாது. அத்துடன் ஈழத்துச் சிதம்பரம் திருப்பணிச் சபையினரது ஒத்துழைப்பும் பாராட்டுக்குரியது.

திருவருளால் வாய்த்த கலாவல்லபத்தினால் எம்மனோரின் ஆவலையும், வள்ளல்களின் பொருளையும் அருளும் அழகும் வாய்க்கப்பெற்ற திருத்தேராக மாற்றியவர் ஸ்தபதி சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்கள் சேவை மறக்க முடியாது.

திருத்தேர் வெள்ளோட்ட மலர் ஒன்று சிறப்புற அமைய வேண்டுமென ஊக்கமளித்தவர் காரைநகரின் மூதறிஞர் ஈழத்துச் சிதம்பர சிவாசாரிய திலகம் சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள்.

திருத்தேர் வெள்ளோட்ட மலருக்கு திருவாவடுதுறை ஆதீனம், நல்லை ஆதீனம், உள்ளிட்ட ஆதீனங்களின் அருளாளர்கள் ஆசியும், உதவியும் நல்கினார்கள். அறிஞர்கள் பலர் ஆக்கங்கள் வழங்கினார்கள்.

மாணிக்கவாசகர் அன்னதான சபையினருக்கும்,

தமிழீழ ஆயப் பகுதியினர் இத்தேர் திருப்பணிக்கு பூரண வரி விலக்கு அளித்து உதவி செய்துள்ளவர்களுக்கும், இதற்கு சிபார்சு செய்த யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறையினருக்கும், நிதித்துறையினருக்கும், இதற்கு உதவி புரிந்த சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தினருக்கும்.

அறப்பணிநிலையத்தினை வழிநடாத்தும் அன்பின் திரு. அ.சதாசிவம் அவர்களுக்கும் தொண்டு செய்யும் அனைவருக்கும் நன்றிகள் பல.

மலர் வெளியீட்டுப் பணியில் அருண்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன் அவர்களும், விரிவுரையாளர் க. இரகுபரன் அவர்களும் ஆலோசனையும் ஒத்துழைப்பும் நல்கினர்.

மலரை அழகுற அச்சேற்றித் தந்தவர்கள் யூனி ஆர்ட்ஸ் நிறுவனத்து உரிமையாளர் திரு. P. விமலேந்திரன் அவர்களும் அங்கு பணியாற்றும் ஊழியர்களும்.


இன்னும் ஆடல்வல்லானின் அருட் பணியில் துணைநின்ற அனைத்துப் பெருமக்களுக்கும் மேன்மேலும் நடக்கின்ற சிவப்பணிக்கு உறுதுணை புரிய எல்லாம் வல்ல கூத்தப் பெருமான் அருள் புரிவாராக.

எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"*

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்.
காரைநகர்– 10-01-2006

ஆ. அம்பலவி முருகன்
து. சுந்தரலிங்கம்
(ஆதீனகர்த்தாக்கள்)





ஈழத்துச் சிதம்பர இராஜகோபுரங்களின்
கம்பீரமான தோற்றம்



மார்கழித் திருவாதிரை பஞ்சரத பவனி

வடிவமைப்பும், அச்சுப்பதிப்பும் யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட், கொழும்பு 13. தொ.இல.: 2330195